பக்கங்கள் : முப்பது

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2036 கார்த்திகை 26 ஞாயிற்றுக்கிழமை (11.12.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 15

# இந்திய நேரடி உதவி, பங்களிப்புடன் பலாலி விமானத் தளம் விஸ்தரிப்பு!

## அதுவரை சமாதான நாடகத்தை இழுத்தடிக்க அரசுத்தரப்பு திட்டம்

கொழும்பு,டிசெம்பர்11

இலங்கை இராணுவத்தின் முழுத் தேவைகளையும் நிறைவுசெய்யத்தக்க வகையில் பலாலியில் உள்ள விமானத்தளம் விஸ்தரிக்கப்படவிருக்கின்றது. அதற்கான உதவியையும் பங்களிப்பையும் நேரடியாக இந்தியா வழங்குகின்றது.

தேவை ஏற்படும் சமயங்களில் யாழ்.குடாநாட்டில் உள்ள படையினருக்கு அவசர, அவசிய இராணுவ உதவிகளைப் பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் பலாலி விமானத் தளம் முழு அளவில் விஸ்தரிக்கப்படும்.

விரைந்து மேற்கொள்ளப்படவிருக்கும் இந்த நடவடிக்கை பூர்த்தியடையும் வரை இலங்கை அரசு விடுதலைப் புலிகளுடன் யுத்தம் ஒன்றை ஆரம்பிக்காது. அதுவரை சமாதான நாடகம் இழுத்தடிக்கப்படும் என விடயமறிந்த வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

உயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் பலாலியைச் சூழப் படைத் தரப்பினால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் தமிழர்களின் தாயகப் பிரதேசம் இந்த விமான நிலைய விஸ்தரிப்பின் கீழ் நிரந்தரமாக ஆக்கிரமிக்கப்பட்டுவிடும் என்று அஞ்சப்படுகின்றது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அரசு பதவியேற்றதைத் தொடர்ந்து கொழும்பு அதிகாரப் போக்கு இந்தியப் பக்கத்துக்கு அதிகம் வளைந்து கொடுக்கும் நிலைமை ஏற்பட்டிருப்பதாக அவதானிகள் சுட்டுகின்றனர்.

(02ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் ஈ.பி.டி.பி அலுவலகம் குண்டு வெடிப்பில் பலத்த சேதம்

### பொறுப்பாளர் உட்பட நான்கு உறுப்பினர்கள் காயம்



திருகோணமலை,டிசெ.11

திருகோணமலை உள்துறைமுக வீதியில் அமைந்துள்ள ஈ.பி.டி.பி. அலுவலகத்தில் நேற்று முற்பகல் 11.30 மணியளவில் குண்டு வெடித்தது. இதனால் அலுவலகம் பலத்த சேதமடைந்தது.

இக்குண்டுவெடிப்பில் அந்த அமைப்பின் திருகோணமலை மாவட்டப் பொறுப்பாளர் ஞானப்பிரகாசம் அன்ரு படுகாயம் அடைந்தார். திருகோணமலை வைத்திய சாலையில் சேர்க்கப்பட்ட அவர் பின்னர் அங்கிருந்து கொழும்பு தேசிய வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

அந்த அலுவலகத்தில் தங்கி இருந்த ஈ.பி.டி.பி அமைப்பின் உறுப்பினர்களான வேலாயுதம் ரகுநாதன்(வயது 38), யோசேப் ஏபிரகாம்(வயது 58), ஞானப்பிரகாசம் பூலோகராசா(வயது31)

(20ஆம் பக்கம் பார்க்க)

## கிரானில் நேற்று இருவர் சுட்டுக்கொலை!

மட்டக்களப்பு,டிசெ.11

வாழைச்சேனை கிரான் பகுதியில் நேற்று சூட்டுக் காயங்களுடன் இருவரது சடலங்கள் மீட்கப்பட்டன.

மட்டக்களப்பு - வாழைச்சேனை வீதியில் கிரானைச் சேர்ந்த விவசாயியான சந்திரசேகரம் ஜீவானந்தன் (வயது 28) என்பவர் கை, கால், கண்கள் கட்டப்பட்ட நிலையில் சடலமாகக் கிடக்கக் காணப்பட்டார். அதேயிடத்தைச் சேர்ந்த டிராக்டர் சாரதியான கிருஷ்ணபிள்ளை சசிகரன் (வயது 31) என்பவர் அவரது வீட்டுக்குச் சமீபமாக சடலமாகக் காணப்பட்டார்.

இவர் சுடப்பட்டபோது தனது கையில்

(20ஆம் பக்கம் பார்க்க)

# விடாது கொட்டித் தீர்த்த கனமழையால் பெரு வெள்ளம்! ஆயிரக்கணக்கானோர் நிர்க்கதி! இயல்புநிலை ஸ்தம்பிதம்!

யாழ்ப்பாணம்,டிசெ.11

குடாநாட்டின் பல பகுதிகளிலும் பலத்த காற்றுடன் விடாது கொட்டித்தீர்த்த கனமழையினால் பெருவெள்ளம் ஏற்பட்டிருக்கின்றது. தாழ்ந்த பிரதேசங்களும் வயல்நிலங்களும் வெள்ளக்காடாகியுள்ளன. வெள்ளம் புகுந்ததால் ஆயிரக்கணக்கான குடும்பங்கள் வீடுகளை விட்டு ஓடி வேறு இடங்களில் தஞ்சம் புகுந்துள்ளன.

## புயல் அபாயம் நீங்கியது

'பானூஸ்' எனும் புயல்காற்று குடாநாட்டின் கிழக்குக் கரைக்கு அப்பால் நிலைகொண்டு பின்னர் நகர்ந்து கரையைக் கடந்தது. இதன் போது நேற்றுமுன்தினம் இரவு முதல் நேற்று முழு நாளும் வீசிய கடும் காற்றினால் பயிரழிவும், மின், தொலைபேசி சேவைகளில் பாதிப்பு ஏற்பட்டிருக்கின்றன. இருபத்திநான்கு மணித்தியாலங்களுக்கு மேலாக மக்களின் இயல்புவாழ்வு ஸ்தம்பிதம் அடைந்திருக்கின்றது. மக்கள் குளிரில் விறைத்தபடி வீடுகளில் முடங்கிக்கிடக்கிறார்கள்.



ஆர்ப்பரிக்கும் கடல் அலைகள்.

கடும்மழை, இடி, மின்னல், காற்று என்பன நேற்று அதிகாலைமுதல் பலமணி நேரங்களுக்கு விடாது நீடித்தன. முற்பகல் 8 மணிக்கும் நண்பகல் 12 மணிக்கும் இடைப்பட்ட - சுமார் 4 மணித்தியாலயத்திலேயே மழை கொட்டோ கொட்டென்று கொட்டித் தள்ளியது. இதனால், குடாநாட்டின் கரையோரப் பிரதேசங்களிலும் ஏனைய தாழ்ந்த பகுதிகளிலும் கிடுகிடுவென வெள்ளம் புகுந்து நிறைந்தது. வீடுகளுக்குள்ளும் வெள்ளம் நுழைந்தது. கடல் கொந்தளித்து ஆர்ப்பரித்ததால் கடல் நீரும் கரையோரக் கிராமங்களுக்குள் புகுந்தது.

கடும் மழை வெள்ளம் காரணமாக சுமார் ஆயிரம் குடும்பங்கள் இடம்பெயர்ந்து பாடசாலைகளில் தஞ்சமடைந்தள்ளன என்று நேற்று முன்கொண்டு உத்தேசமாக மதிப்பிடப்பட்டுள்ளது என்று அரச அதிபர் கே.கணேஷ் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம், நல்லூர், சண்டிலிப்பாய், கோப்பாய், பருத்தித்துறை, காரைநகர், வேலணை ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளில் தாழ்ந்த பகுதிகளில் உள்ள மக்களே இடம்பெயர்ந்துள்ளனர் என்றும் - அவர்களுக்கு சமைத்த உணவு வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்றும் - அரச அதிபர் மேலும் தெரிவித்தார்.

காக்கைதீவுக் குடியிருப்புக்குள் வெள்ளம் மற்றும் கடல்நீர் புகுந்ததால், அப்பகுதியைச்சேர்ந்த 68 குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளன. அவர்கள் ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணியம் வித்தியாலயத்தில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் ஏற்பாட்டில் அவர்களுக்கு சமைத்த உணவு வழங்க ஏற்பாடாகியிருந்தது. முள்ளி, 3ஆம் கட்டைஆகிய பகுதிகளிலிருந்து 225 குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளன.

இதேவேளை -

வடமராட்சியில் ஆழிப்பேரலை அனர்த்தத்தில் சிக்குண்டு உயிர்தப்பி நலன்புரி முகாம்களிலும், தற்காலிக வசிப்பிடங்களிலும் தங்கியுள்ள குடும்பங்கள் மழையால் பெரும் பாதிப்பைச் சந்தித்துள்ளன. பல பகுதிகளில் தற்காலிக வசிப்பிடங்களுக்குள் வெள்ளம் புகுந்துவிட்டது.

(20ஆம் பக்கம் பார்க்க)



வடமராட்சியில் வெள்ளக்காடாகக் காட்சி தரும் இடைத் தங்கல் முகாம்.

## மின்னல் தாக்கி ஐவர் காயம்!

நேற்றுப் பரவலாக இடம் பெற்ற இடி மின்னல் தாக்குதல்களில் இரண்டு வயதுக் குழந்தை உட்பட ஐவர் காயமடைந்திருக்கின்றனர். இவர்கள் சிகிச்சைக்காக யாழ்.ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருக்கின்றனர்.

பொம்மைவெளிப் பகுதியில் இடம்பெற்ற சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்தவர்களான ஆர்.சதீஸ்குமார்(வயது35), எஸ்.பகீரதன் (வயது11) ஆகியோரும் -

வேலணை மேற்கில் இடம்பெற்ற சம்பவத்தில் வேலணை, 7ஆம் வட்டாரத்தைச் சேர்ந்தவர்களான பி.சுவேந்திரன் (வயது30), சு.கலைச்செல்வி(வயது28) மற்றும் இவர்களது குழந்தையான பத்மப்பிரியா ஆகியோரும் காயமடைந்தனர்.

இவர்களின் வீட்டு முற்றத்தில் நின்ற தென்னை மரத்தில் இடி வீழ்ந்த போதே இவர்களுக்கு காயம் ஏற்பட்டதாகக் கூறப்படுகின்றது.

(ஐ-12-190)



படங்கள் : நேசன், சுந்தரலிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# குடாக்கடல் திடீரெனக் கொந்தளித்தது; கரையோரப் பகுதிக்குள் நீர் புகுந்தது!

## அகப்பட்ட பொருள்களுடன் மக்கள் இடம்பெயர்வு

யாழ்ப்பாணம்,டிசெ.11

நேற்று முற்பகல் அடைமழை விடாது பெய்து கொண்டிருந்தவேளையில் யாழ். நகருக்கு அருகே குடாக்கடல் திடீரெனக் கொந்தளித்ததால் கரையோரப் பகுதிகளுக்குள் வெள்ளம் புகுந்தது.

பண்ணை மற்றும் யாழ். நகர கரையோரப் பகுதிகளை அண்டிய கிராமங்களுக்குள் வெள்ளம் புகுந்ததால் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர்.

காலை சுமார் 9 மணியளவில் இடியுடன் கூடிய அடைமழை பொழியத் தொடங்கியது.

சில மணிநேரத்தின் பின்னர் பண்ணைக் கடல் சீற்றம் கொண்டு கொந்தளித்ததையடுத்து பண்ணைக் கடற்கரையோரத்தை அண்டிய நாவாந்துறைப் பகுதி குடியிருப்புக்குள் கடல்நீர் புகுந்தது. இதனையடுத்து அப்பகுதிகளில் வசிக்கும் நூற்றுக்கணக்கான குடும்பங்கள் கையில் கிடைத்த பொருள்களுடன் கால்நடையாகவும் வாகனங்களின் உதவியுடனும் இடம்பெயர்ந்தனர். இவர்கள் உறவினர் வீடுகளிலும் நாவாந்துறைப் பகுதியிலுள்ள பாடசாலைகளிலும் தஞ்சம் புகுந்தனர். மழையின் கோரத்தால் சிறுவர்கள், முதியோர்கள் அனைவரும் நனைந்து விறைத்த நிலையில் குளிரில் நடுங்கிக்கொண்டே பாடசாலைகளில் தஞ்சம் புகுந்தனர்.

காக்கைதீவு, பொம்மைவெளி, கல்லுண்டாய், வசந்தபுரம் மற்றும் குருநகரில் சில பகுதிகளில் மழை நீர் வீடுகளினுள் புகுந்ததனால் அப்பகுதிகளில் இருந்தும் மக்கள் இடம்பெயர்ந்து சென்று பாடசாலைகளிலும் தேவாலயங்களிலும் தஞ்சம் புகுந்தனர். கொட்டடி வில்லூன்றிப் பகுதி நீரில் மூழ்கிக்காணப்பட்டது.

காங்கேசன்துறை வீதி, பொலீஸ் நிலைய வீதி, பண்ணை வீதி, முற்றவெளிப்பகுதி, குருநகர் ஆகிய தாழ்ந்த பகுதிகள் நீரில் மூழ்கின.

மழை வெள்ளத்தினால் நாவாந்துறை, காக்கைதீவு, வசந்தபுரம், குருநகர் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த சுமார் 500 குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளன என்று உத்தேசமாக மதிப்பிடப்படுகிறது. இடம்பெயர்ந்தோரின் சரியான எண்ணிக்கை விவரம் உடனடியாகக் கணிப்பிடப்படவில்லை.

பண்ணைக் கடற்கரையோரத்தில் படையினர் அமைத்திருந்த காவலரண்களுக்குள்ளும் கடல் நீர் உட்புகுந்தால் படையினரும் அங்கிருந்து வெளியேறினர்.

(மற்றொரு செய்தி 3ஆம் பக்கத்தில்)

(ஐ-7)

## கரவெட்டிப் பிரதேச செயலகத்தின் கட்டடத் திறப்பு விழா

யாழ்ப்பாணம்,டிச.11

வடமராட்சி தெற்கு-மேற்கு பிரதேச செயலகத்திற்கு புதிதாக அமைக்கப்பட்ட கட்டடத் திறப்பு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நாவலர்மடம் கரவெட்டியில் நடைபெறவுள்ளது.

பிரதேச செயலர் சி.சத்தியசீலன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக யாழ்.மாவட்ட அரசஅதிபர் கே.கணேஸ், வடக்கு-கிழக்கு வீடமைப்பு புனர்நிர்மாணத் திட்டப் பணிப்பாளர் செ.பத்மநாதன், பிரதிப் பிரதம செயலாளரும் (நிதி) நீர்ப் திட்ட இணைப்பாளருமான கே.மகாலிங்கம் ஆகியோர் கலந்துகொள்வர்.

கௌரவ விருந்தினர்களாக யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களும், சிறப்பு விருந்தினராக கட்டடங்கள் திணைக்கள பிரதம பொறியியலாளர் க.குகநேசனும் கலந்து கொள்வர். (சிறப்பிதழ் உள்ளே)

(3-204)

# இந்திய நேரடி உதவி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்தப் பின்னணியிலேயே பலாலி விமானத்தள விஸ்தரிப்பிலும் நேரடியாக இந்தியப் பங்களிப்பு இடம்பெறும் சூழ்நிலை ஏற்பட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது.

பழுதடைந்திருக்கும் பலாலி விமான நிலையத்தின் ஓடுபாதையைத் திருத்தி அமைக்கும் திட்டம் முன்னைய சந்திரிகா அரசினால் ஆரம்பிக்கப்பட்டது. ஆனால், அப்போது அந்தத் திட்டத்திற்கு உதவியளிப்பதற்குப் புதுடில்லி அரசு நிபந்தனை விதித்ததாகச் செய்திகள் வெளியாகின.

இந்திய உதவியுடன் இந்த ஓடுபாதையை விஸ்தரிப்பதாயின் இலங்கை இந்திய விமானங்களைத் தவிர வேறு விமானங்கள் பலாலியில் தரையிறங்குவதற்கு இடமளிக்கப்படமாட்டாது என்ற உறுதியை இலங்கை அரசு வழங்கவேண்டும் என அப்போது இந்தியா கோரியது என்பதும் -

அதற்கு இணங்க மறுத்த சந்திரிகா அரசு, தனது அரசின் நிதியிலேயே பலாலி விமானத் தள ஓடுபாதைப் புனரமைப்பை மேற்கொள்ளத் தீர்மானித்து, அந்த வேலைகளை ஆரம்பித்து, அது தற்போது நடைபெற்று வருகின்றது என்பதும் - தெரிந்தவையே.

இந்தநிலையிலேயே புதிதாகப் பதவியேற்ற ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அரசு இந்தியப் பக்கம் கூடுதலாகச் சாய்ந்திருக்கின்றது.

நாட்டில் அரசுப் படைகளுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் திடீரென யுத்தம் ஒன்று வெடித்தால் யாழ்.குடாநாட்டை அரசுப் படைகள் தொடர்ந்து தக்கவைத்திருப்பது கேள்விக்குரியது எனக் கருதப்படும் நிலையில் அத்தகைய இக்கட்டு ஏற்பட்டால் மேற்கொள்ளக்கூடிய அவசர நடவடிக்கைகள் குறித்து கொழும்பு அரசின் புதிய நிர்வாகிகள் புதுடில்லியுடன் ஆலோசனை கலந்தனர் என்றும் கூறப்படுகின்றது.

புதுடில்லியிலும் கொழும்பிலும் பல மட்டங்களில் நடைபெற்ற பல்வேறு சுற்றுப் பேச்சுகளின் அடிப்படையில் பலாலி விமானத் தளத்தை உயர்தரத்தில் விஸ்தரிப்பதற்கு புதுடில்லி நேரடியாக இணங்கியது என்று கூறப்படுகின்றது.

தற்போதைய திட்டத்தின்படி பலாலி விமானத் தளத்தை உயர்தரத்தில் விஸ்தரிப்பதற்கு இந்தியா 4 மில்லியன் அமெரிக்க டொலர்களைச் (40 கோடி ரூபாவை) செலவு செய்யும். சிவில் பொறியியலாளர்கள் என்ற கோதாவில் இந்திய விமானப்படையின் பொறியியலாளர்களும் புனரமைப்பு வேலைகளில் நேரடியாக ஈடுபடுத்தப்படுவர் எனத் தெரிகின்றது.

இந்திய உதவியுடன் விஸ்தரிக்கப்படும் பலாலி விமானத்தளத்தை இந்திய, இலங்கை விமானங்களைத் தவிர வேற்று நாட்டு விமானங்கள் பயன்படுத்தக் கூடாது என்று தனது முன்னைய நிபந்தனையை இந்தியா இப்போதும் விதித்தது என்றும் அதனை இலங்கையின் புதிய அரசு ஏற்றுக்கொண்டுவிட்டது என்றும் தெரியவருகிறது.

பலாலி விஸ்தரிப்பைத் துரிதமாக மேற்கொண்டு முடிக்கும் வரை யுத்தத்தை தொடங்கவிடாமல் காலத்தை இழுத்தடிக்கும் திட்டத்தில் இலங்கை அரசுத் தரப்பு இருப்பதை கொழும்பு அவதானிகள் உறுதிப்படுத்தினர்.

புலிகளின் தாக்குதலினால் யாழ். குடாநாடு புலிகள் வசம் வீழும் நிலைமை ஏற்பட்டால் இந்தியாவிடமிருந்து அவசர உதவிகளைப் பெற்றுக்கொள்வது குறித்தும் உடன்பாடு ஏதும் எட்டப்பட்டிருக்கக் கூடும் எனச் சந்தேகிக்கப்பட்டது.

அடுத்த வாரத்தில் இலங்கையின் புதிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தமது முதலாவது வெளிநாட்டு விஜயத்தைப் புதுடில்லிக்கு மேள்கொள்ளவிருக்கின்றார். அப்போது இந்த விடயம் குறித்து இறுதி இணக்க நிலை எட்டப்படக்கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஒருதலைப்பட்சமாக தமிழ் மக்களின் தாயகபூமியை உயர்பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் ஆக்கிரமித்து அதில் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலத்தை விமானத்தள விஸ்தரிப்பு என்ற பெயரில் கபளீகரம் செய்யும் அரசின் உத்தேச திட்டம் தமிழர் தரப்பில் பெரும் எதிர்ப்புணர்வையும் சீற்றத்தையும் உருவாக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்தியா வசமுள்ள பெரிய இராணுவ விமானங்கள் தரையிறங்கக் கூடியதாக நீண்ட ஓடுபாதை, நவீன தொழில்நுட்ப வசதிகள், உயர் பாதுகாப்பு ஆகியவை கொண்டதாக பலாலி விமானத்தளம் விஸ்தரிக்கப்படும் போது அச்சுற்றாடலில் உள்ள தமிழர்களின் ஆயிரக்கணக்கான ஏக்கர் காணிகள் சுவீகரிக்கப்பட்டுவிடும் எனச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

இந்திய உதவியுடன் பலாலி விமானத் தளத் தரைப்பகுதி புனரமைக்கப்படுகின்றது என்று மேலோட்டமாக ஒரு தகவலை நேற்று முன்தினம் கொழும்பில் பாதுகாப்புப் படைத் தளபதிகளின் செய்தியாளர் மாநாட்டில் கூட்டுப்படைகளின் தளபதி அட்மிரல் தயா சந்தகிரி வெளியிட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

முன்னர் பலாலி விமானத்தள ஓடுபாதையைப் புனரமைக்கத் திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால், இப்போது முழு விமானத் தளமுமே இந்தியாவின் நேரடிப் பங்களிப்போடு விஸ்தரிக்கப்படும் சூழ்நிலை ஏற்பட்டிருக்கின்றது.

இதேவேளை -

பலாலி விமானத்தளம் இந்தியாவின் நேரடிப் பங்களிப்புடன் மீள விஸ்தரிப்புச் செய்யப்படுவது பற்றிய தகவல் நேற்றுமுன்தினம் படைத்தளபதிகள் கூட்டிய செய்தியாளர் மாநாட்டில் சாடைமாடையாக வெளியிடப்பட்டதை அடுத்து கொழும்புக்கான இந்தியத் தூதர் நிருபமா ராவ் நேற்று முற்பகல் ஜனாதிபதியைச் சந்தித்துப் பேசினார் என்று கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

பலாலி விமானத்தளம் இந்தியாவின் நேரடியான பங்களிப்புடன் புனரமைக்கப்படுவது பற்றிய செய்தியைப் பகிரங்கப்படுத்தவேண்டாம் என்று இந்தச் சந்திப்பின் போது இந்தியத் தூதர் ஜனாதிபதியிடம் கேட்டுக்கொண்டார் என்றும் -

இதையடுத்து இது தொடர்பான செய்தியைப் பகிரங்கப்படுத்தி பரபரப்பை ஏற்படுத்த வேண்டாம் என்று தென்னிலங்கையின் பிரதான ஊடகங்களிடம் அரசின் தலைமையினால் உரிமையுடன் கோரப்பட்டது என்றும் அறியவந்தது.




# தொலைத்தொடர்பு, மின்சார சேவைகளும் ஸ்தம்பித நிலையில்

யாழ்ப்பாணம்,டிசெ.11

குடாநாட்டில் நேற்று வீசிய பலத்த காற்றுக்காரணமாக மின்சாரம், தொலைத்தொடர்புச் சேவைகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன.

கடும் காற்றுக் காரணமாக பல இடங்களில் மின் இணைப்பு வயர்கள் உராய்ந்து வெடித்துச் சிதறின, மரங்கள், மின்வயர்கள் மேல் வீழ்ந்தன. இதன் காரணமாக பல இடங்களில் மின்சார விநியோகம் பாதிக்கப்பட்டுள்ளன என்று யாழ்.பிராந்திய மின் பொறியியலாளர் எம்.அமுதலிங்கம் தெரிவித்தார்.

மின்சாரசபை ஊழியர்கள் துரிதமாக திருத்த வேலைகளை மேற்கொண்டுள்ளனர் என்றும் விரைவாக மின்விநியோகத்தை சீராக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என்றும் அவர் மேலும் கூறினார்.

யாழ்.நகரப்பகுதிக்கான மின்விநியோக மார்க்கத்தில் தட்டாதெருப் பகுதியில் மின் கம்பிகள் சேதமடைந்தன என்றும்-

அவை சீர்செய்யப்பட்டு நகருக்கான மின் விநியோகம் நேற்றிரவு முதல் வழங்கப்பட்டது என்றும் நகர மின்பொறியியலாளர் எஸ்.குகதாசன் தெரிவித்தார்.

தொலைத்தொடர்புச் சேவைகளும் நேற்றுப்பாதிக்கப்பட்டிருந்தன.

கிளிநொச்சி, பருத்தித்துறைக்கான சேவைகளும் யாழ்.புறநகர்ப் பகுதிக்கான சேவைகளும் பாதிக்கப்பட்டன என ரெலிக்கொம் பிராந்திய முகாமையாளரான என்.சரவணபவன் தெரிவித்தார்.

திருத்தவேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும்- பொரும்பாலும் இன்று சேவைகள் வழமைக்கு திரும்பலாம் என்றும் - அவர் மேலும் கூறினார். (ஐ-3)

# இந்தியக் கடற்படையின் கிழக்கு பிராந்தியத் தளபதி வருகின்றார்

## போர்க் கப்பல்களின் ஒத்திகைக்கும் ஏற்பாடு

கொழும்பு,டிசெ.11

இந்தியாவின் கிழக்குப் பிராந்தியக் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் சுரேஸ் மேத்தா நாளை இலங்கை வருகின்றார்.

அவருக்கு எதிர்வரும் செவ்வாய்க் கிழமை இராணுவத் தலைமையகத்தில் அணி வகுப்பு மரியாதை வழங்கப்பட இருக்கின்றது.

படைத் தளபதிகளுடன் அவர் அன்று விசேட கலந்துரையாடல்களை நடத்துவார்.

இதேவேளை -

இந்தியக் கடற்படையின் பாரிய யுத்தக் கப்பல் ஒன்றும் துணைக் கப்பல்களும் நாளை கொழும்புத் துறைமுகத்திற்கு வரவிருக்கின்றன. இவை இலங்கைக் கடற்படையின் கப்பல்களுடன் இணைந்து ஒத்திகை நடவடிக்கையில் ஈடுபடவுள்ளன. நாளையும் நாளைமறுதினமும் கொழும்பு கடற்பகுதியில் இந்த ஒத்திகை நடைபெறும்.

இதற்கிடையில் -

கொழும்புக்கான இந்தியத் தூதர் நிருபமா ராவ் நேற்று முற்பகல் 10 மணியளவில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சந்தித்து ஒரு மணி நேரம் பேச்சு நடத்தியுள்ளார்.

அப்போது கலந்துரையாடப்பட்ட விடயங்கள் என்னவென்பது வெளியிடப்படவில்லை.

(ஐ-3)

# இந்திய அணி பலமான நிலையில்!

இந்திய - இலங்கை அணிகளுக்கு இடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் முதல் இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடும் இந்திய அணி மூன்று விக்கெட்டுக்களை இழந்து 245 ஓட்டங்களைப் பெற்று பலமான நிலையிலுள்ளது.

இவ்விரு அணிகளுக்கும் இடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டி நேற்று புதுடில்லியில் ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இந்திய அணி முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கியது. நேற்றைய ஆட்டநேர முடிவில் இந்திய அணி மூன்று விக்கெட்டுக்களை மட்டும் இழந்து 245 ஓட்டங்களைப் பெற்றது. இதில் சச்சின் டெண்டுல்கர் மற்றும் சௌரவ் கங்குலி ஆகியோர் ஆட்டமிழக்காமல் முறையே 100, 39 ஓட்டங்களைப் பெற்றனர். வி.வி.எஸ்.லக்ஸ்மன் 69 ஓட்டங்களையும் அணித் தலைவர் ராகுல் ராவிட் 30 ஓட்டங்களையும் அணிக்காகப் பெற்றனர்.

பந்து வீச்சில் சுழல்பந்து வீச்சாளர் முரளிதரன் 2 விக்கெட்டுக்களையும் சமிந்தவாஸ் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

நேற்று நடைபெற்ற போட்டியில் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கர் தனது 35 ஆவது சதத்தைப் பூர்த்தி செய்துள்ளார். இதன் மூலம் டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் அதிகூடிய சதங்களைப் பெற்றவர் என்ற சாதனையை நிலைநாட்டியுள்ளார். 125 ஆவது டெஸ்ட் போட்டியில் சச்சின் இந்தச் சாதனையை ஏற்படுத்தியமை குறிப்பிடத்தக்கது.

இதற்கு முன்னர் 125 போட்டிகளில் கலந்துகொண்ட சுனில் கவாஸ்கர் 34 டெஸ்ட் சதங்களைப் பெற்றவர் என்ற சாதனையை நிலைநாட்டியிருந்தார். அவரது சாதனை நேற்று சச்சினால் முறியடிக்கப்பட்டது.

(ஐ-6)

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், டிசெ.1

வதிரி வடக்கு மெதடிஸ்த மிஷன் தமிழ் கலவன் பாடசாலையின் பரிசளிப்புவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல்2.30 மணிக்கு கல்லூரியின் ஆராதனை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அதிபர் கி.இராஜதுரை தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக கல்வியியற்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி த.கலாமணி முதன்மை விருந்தினராகக் கலந்துகொள்வர்.

கரவெட்டி கோட்டக் கல்வி அதிகாரி க.அம்பலவாணர், பருத்தித்துறை கோட்டக் கல்வி அதிகாரி த.அரியரத்தினம், யாழ்.அபிவிருத்திநிதிய ஒன்றியம், (யாழ்.அலையன்ஸ் டெவலப்மென்ற் ரஸ்ற்) செய்திட்ட அலுவலர் சி.திருக்குமரன், பருத்தித்துறை வை.எம்.சி.ஏ.செயலாளர் டி.எம். வேதாபரணம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொள்வர். (எ-204)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

# கோட்டபாய வழியில் சென்று கோட்டைவிடப் போகும் மஹிந்த

யுத்த நிறுத்த உடன்பாட்டை செம்மையாக நடைமுறைப் படுத்துவதில் எழுந்துள்ள சிக்கல்கள் குறித்து அரச படைகள் மற்றும் புலிகளின் உயர் மட்டத் தலைவர்கள் ஒன்று கூடிப் பேச வேண்டியதன் அவசரமும் அவசியமும் வலியுறுத்தப்பட்டிருக்கின்றது.

"யுத்த நிறுத்தச் சூழல் தகர்ந்து போகும் ஆபத்து மிக நெருங்கிக் கொண்டிருக்கின்றது. அண்மைக் காலத்தில் இராணுவ நெருக்குவாரங்கள், பொதுமக்கள் கொல்லப்படுதல், பொதுமக்கள் - இராணுவ முறுகல் போன்றவை தீவிரமடைந்து கொண்டிருக்கின்றன.

" இரு தரப்பினதும் (அரசு, புலிகள் ஆகிய தரப்புகளினதும்) உயர்மட்டக் குழுக்கள் நேரடியாகச் சந்தித்து யுத்த நிறுத்த உடன்பாட்டைச் செம்மையாக நடைமுறைப்படுத்துவதற்கான - பலப்படுத்துவதற்கான - முயற்சிகளில் விரைந்து - உடனடியாக - தீவிரமாக - இறங்க வேண்டியது அவசியமாகும். காலத்தின் கட்டாயமாக அது இருக்கின்றது. யுத்த நிறுத்தச் சூழ்நிலையைத் தக்க வைப்பதாக இருந்தால் இது அவசியமானதாகும்" - இவ்வாறு விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் சுட்டிக்காட்டியிருக்கின்றார். நோர்வேத் தரப்பு ஊடாக இலங்கை அரசுத் தரப்புக்குத் தற்போதைய நிலைமை குறித்து அவர் தெரிவித்திருக்கும் இந்தத் தகவலின் அர்த்தப் பரிமாணம் - ஆழம் - இலங்கையில் புதிய அரசியல் தலைமைக்குப் புரிந்திருக்குமா என்பது சந்தேகமே. கொழும்புத் தலைமையிடம் இருந்து வெளியாகும் பிரதிபலிப்புகள் நிலைமையின் ஆழத்தை - மோசத்தை - அது இன்னும் தெளிவாகப் புரிந்துகொள்ளவில்லை என்பதையே காட்டுகின்றன.

நிலைமையைச் சீர்குலைத்து, இழுத்தடித்து சிக்கலுக்குள்ளாக்குவதா என்பது இலங்கை அரசுத் தலைமையையும் படைத்தரப்பையும்தான் பொறுத்தது என்றும் தமிழ்ச்செல்வன் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

தீர்க்கமான முடிவு ஒன்றை அரசு விரைவாக எடுத்து, சந்தர்ப்பத்தைச் சரியாகப் பற்றிப் பிடித்து பிரச்சினைகளைச் சுமூகமாகத் தீர்த்துக்கொள்ள வேண்டும் என்பதுதான் புலிகளினதும் மக்கள் அனைவரினதும் எதிர்பார்ப்பாக இருக்கின்றது என்றும் தமிழ்ச்செல்வன் தமது பக்க நிலையை தெளிவுபடுத்தியிருக்கின்றார். ஆனால், அப்படியான ஒரு முடிவை எடுக்க கொழும்புத் தலைமை தயாரா என்பதுதான் கேள்வி.

இராணுவ ரீதியாகவும் களநிலைமை அடிப்படையிலும் உள்ள யதார்த்தப் புறச்சூழ்நிலைகளை கருத்தில் எடுத்து அதனடிப்படையில் தீர்மானங்களை முன்னெடுக்க வேண்டிய கொழும்பு அரசியல் தலைமை, அதனை ஒதுக்கிவிட்டு தென்னிலங்கை அரசியல் அரங்குக்கு ஏற்ற வகையில் வடக்கு - கிழக்கு கள நிலைவரத்தைக் கையாள முனைகின்றது.

செய்து கொண்டுள்ள யுத்த நிறுத்த உடன்பாட்டின்படி தான் நிறைவுசெய்ய வேண்டிய கடப்பாடுகளை மேற்கொள்ளாமல், அவற்றைப் புறமொதுக்கிச் செயற்படுவதும் -

யுத்த நிறுத்த உடன்பாட்டில் கூறப்பட்டுள்ள தனது பொறுப்புகளை நிறைவேற்றாமல் இருக்கும் அதேசமயம் அந்த யுத்த நிறுத்த உடன்பாட்டையே மாற்றியமைக்கப் போவதாக ஒருதலைப்பட்சமாக அறிவிப்பதும் -

அனுசரணைப் பணிவகிக்கும் நோர்வேத் தரப்புடன் முரண்டு பிடிப்பதும் -

யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைமைப் பொறுப்பை நோர்வேயிடமிருந்து பிடுங்கி 'சார்க்' நாடு ஒன்றிடம் அதைக் கையளிக்க ஒரு தலைப்பட்சமாக முயற்சிப்பதும் -

புலிகளைவிட படைபலத்திலும், ஆயுத பலத்திலும், மனோ பலத்திலும் அரச படைகள் விஞ்சி நிற்பதாகவும் யுத்தம் மீள மூண்டால் விடுதலைப் புலிகளை ஒரேயடியாக ஓரம் கட்டி தோற்கடித்து விடுவோம் எனவும், படை உயர் அதிகாரிகளைக் கொண்டு அறிவிக்கவைப்பதும் -

கள யதார்த்த நிலைமையைப் புரியாமல் புதிய அரசு மேற்கொள்ளும் - பயணிக்கும் - 'தப்பான பாதையை' எமக்கு உணர்த்துகின்றன.

இப்படித்தான் சுமார் பதினொரு ஆண்டுகளுக்கு முன்னர் அமைதித் தீர்வு காண்பதற்கான அருமையான சந்தர்ப்பம் ஒன்று அப்போது புதிதாகப் பதவியேற்ற ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவிற்கு வழங்கப்பட்டது. ஆனால், அவர் புதிதாக அதிகாரத்தை ஏற்றதும் அவரைச் சூழ்ந்துகொண்ட அதிகார வர்க்கம் அவரை பிழையாக வழிநடத்தி, குழப்பியதால் அமைதி முயற்சிகள் மூலம் இனப்பிரச்சினைக்குச் சமாதான தீர்வுகாணும் பொன்னான வாய்ப்பை அவர் கோட்டை விடவேண்டியதாயிற்று. நிலைமையைப் புரிந்து கொண்டு தனது பாதையை அவர் நேர்சீர்செய்ய முயன்றபோது விவகாரம் அவரது கையை மீறி, கைக்கு மேல் போய்விட்டது.

காலச் சக்கரம் உருண்டு மீண்டும் அதே நிலைமை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் வந்திருக்கின்றது.

லெப்டினன்ட் கேணல் தரத்தில் இராணுவத்தை விட்டு வெளியேறி, சுமார் ஒன்றை தசாப்தகாலம் வெளிநாட்டில் வசித்த கோட்டபாய ராஜபக்ஷ - ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் சகோதரர் - இப்போது திடீரென நாட்டுக்குள் வந்து குதித்து, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் பதவியைப் பிடித்திருக்கின்றார். வெளிநாட்டுத் தூதர்களை எல்லாம் பாதுகாப்பு அமைச்சுக்கு அழைத்து தொடர் மந்திராலோசனைகளை நடத்துகின்றார். உள்நாட்டு யுத்தம் ஒன்றை ஒட்டி, வெளிநாட்டின் இராணுவ உதவிகளைப் பெற்றுக்கொள்வதற்கான முன்னேற்பாடுகளில் அவர் முழுமூச்சில் ஈடுபட்டிருக்கின்றார் என்று கேள்வி.

முன்னர் இராணுவத் தொண்டர் படையில் லெப்டினன்ட் கேணல் தரத்தில் இருந்த அனுருத்த ரத்வத்தை இராணுவ சேவையின் பணியில் தொடராமலேயே ஜெனரல் தர நிலை உயர்வைப் பெற்றதோடு பிரதிப் பாதுகாப்பு அமைச்சராகி, ஜனாதிபதி குமாரதுங்க தலைமையிலான அரசை பிழையாக வழிநடத்தி, முழு நாட்டையுமே கொடூர யுத்தத்தில் மூழ்கடிக்க வைத்தார்.

அதுபோன்று, இப்போதும் மஹிந்த ராஜபக்ஷவின் அரசையும் இராணுவ விடயங்களில் "கயிற்றைக் கொடுத்து" நாட்டைப் பெரும் யுத்தத்தில் வீழ்த்தச் செய்வதற்கு, பதினைந்து வருடங்கள் வெளிநாட்டில் இருந்துவிட்டு வந்து குதித்திருக்கின்றார் ஒரு லெப்டினன்ட் கேணல். படையில் பணியைத் தொடராமலேயே அவருக்கும் ஜெனரல் தர நிலை உயர்வு விரைவில் என்கிறார்கள்.

இராணுவத் தீர்வில் நாட்டம் காட்டி தென்னிலங்கைக்கு மட்டுமல்லாமல் முழு இலங்கைத் தீவுக்குமே கேடு விளைவிக்கும் முயற்சிகள் கொழும்பில் ஏற்கனவே முழு வீச்சில் ஆரம்பமாகி விட்டன என்றும் கூறப்படுகின்றது. மொத்தத்தில் இவை நல்லதற்கல்ல என்பது மட்டும் திண்ணம்.

# பண்ணையில் கடல் கொந்தளிப்பு; தீவகப் போக்குவரத்தில் பாதிப்பு!

## படையினரின் காவலரண்களை அள்ளிச் சென்றது கடல்

யாழ்ப்பாணம்,டிசெ.11

நேற்று முற்பகல் வீசிய புயற்காற்று, கடும் மழை மற்றும் கடற்கொந்தளிப்பு, கடற்பெருக்கு காரணமாக தீவுப்பகுதிகளுக்கான போக்குவரத்தில் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

கடற்கொந்தளிப்பு தொடர்வதாலும், பிரதான வீதியின் இரு மருங்கிலும் கடல் அலைகள் பலமாகத் தாக்கிவருவதனாலும் யாழ்.- ஊர்காவற்றுறைப் பிரதான வீதியில் - குறிப்பாக, யாழ். பண்ணைச் சந்தியில் இருந்து அல்லைப்பிட்டிச் சந்திவரையிலான பகுதியில் எந்தநேரமும் போக்குவரத்து துண்டிக்கப்படலாம் என அச்சம் தெரிவிக்கப்படுகிறது.

நேற்றுக்காலை வீசிய புயற்காற்று காரணமாக, யாழ். - பண்ணை வீதியில் கடற்படையினரால் நிறுவப்பட்டிருந்த காவலரண்கள் பலவும் பலத்த சேதமடைந்தன. சில இடங்களில் காவலரணங்கள் கடல் நீருடன் அள்ளிச் செல்லப்பட்டும் உள்ளன. அத்துடன், யாழ். - ஊர்காவற்றுறைப் பிரதான வீதியில் இருபக்கங்களிலும் கடற் படையினரால் தொடராக நிறுவப்பட்டிருந்த முள்கம்பி வேலிகள் பாறி வீழ்ந்துள்ளதுடன், அவை பிரதான வீதிக்கும் இழுத்து வரப்பட்டுள்ளன. இதேவேளை - கனத்த மழையால் பண்ணை கடற்பரப்பில் நீரின் கொள்ளளவு அதிகரித்ததுடன், கடும் புயலால் கடல் கொந்தளிப்பு ஏற்பட்டு யாழ். ஊர்காவற்றுறைப் பிரதான வீதியின் இரு மருங்கும் பலத்த சேதமடைந்துள்ளது. கடல் நீர் வீதியின் ஒரு கரையில் இருந்து மறுகரைக்கு மேவிப் பாய்ந்துவருகின்றது. இதனால் வீதியில் பரவலாக பாரிய பள்ளங்கள் ஏற்பட்டுள்ளதுடன், வீதியும் பலத்த சேதமடைந்துள்ளது.



வீதியின் மையப் பகுதிக்கு வந்துள்ள படையினரின் முட்கம்பி வேலி

வீதியின் சில பகுதிகளில் கடல் நீர் தேங்கி நிற்பதால் வீதி விபத்துக்கள் ஏற்படக் கூடிய ஏதுநிலை உருவாகியுள்ளதாகவும் செய்திகள் தெரிவித்தன. (எ-7)

## யாழ். நகர வெள்ளக்காட்சிகள்...



குருநகர் ஐந்துமாடிக் கட்டடப் பகுதி...



குருநகரில் ஒரு வீதியில்...



நாவாந்துறை பிரதான வீதியில்...



யாழ். பிரதம தபாலகத்துக்கு அருகில்...





யாழ். கே.கே.எஸ். வீதியில்...





கொட்டடி நமசிவாய வித்தியாலயத்தில் இடம்பெயர்ந்த மக்கள்...

படங்கள்: பிரபா

## நாளை

கார்த்திகை 27
திங்கட்கிழமை
12.12.2005
திதி: துவாதசி
முன்னிரவு : 10.41 வரை
நட்சத்திரம் : அச்சுவினி
முற்பகல் : 09.39 வரை
சோமவார விரதம்
சுபநேரம் : 12.20 - 01.50
ராகுகாலம் : 10.30 - 12.00
(யாவும் பழைய நேரப்படி)

# 50 மாணவர்களுக்கு இன்று ஊக்குவிப்புப் பரிசு

கட்டைவேலி-நெல்லியடி ப.நோ.கூ. சங்கம், 2005 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு ஊக்குவிப்பு நிதியை வழங்கவுள்ளது. இந்த நிதி வழங்கும் நிகழ்வு இன்று.காலை 9.30 மணிக்கு நெல்லை முருகன் திருமண மண்டபத்தில் நடைபெறவுள்ளது. சங்கத்தின் தலைவர் த.சிதம்பரப்பிள்ளை தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் வைத்திய கலாநிதி சி.கதிரவேற்பிள்ளை பிரதம விருந்திராகக் கலந்து கொள்வார். வடமராட்சியைச் சேர்ந்த பாடசாலைகளின் 50 மாணவர்கள் ஊக்குவிப்பைப் பெறுவதற்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (3-240)

## உதயவாக்கு

எல்லாச் சமயங்களையும் மதிக்க வேண்டும். எந்த ஒரு சமயமும் ஒரே கடவுளிடம் இட்டுச்செல்லும் பாதையாகும்.
- பாபா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'மினி' ரெனிஸ் போட்டியில் வெற்றியடைந்த மாணவர்கள்

யாழ்ப்பாணம், டிசெ.11

பாடசாலைகளுக்கு இடையே அண்மையில் புனித பத்திரிசியார் கல்லூரியில் இடம் பெற்ற 'மினி ரெனிஸ்' போட்டியில் ஆண்கள் பிரிவில் புனித பத்திரிசியார் கல்லூரி மாணவர்களும் பெண்கள் பிரிவில் சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவிகளும் முதல் மூன்று இடங்களையும் பெற்றுள்ளனர்.

அவர்களின் விவரம் வருமாறு:-

ஆண்கள் பிரிவு: முதல் இடம்- விஜயராஜ். இரண்டாம் இடம்: நிலோஜன். மூன்றாம் இடம்- நிதர்சன். பெண்கள் பிரிவு: முதலாம் இடம்- பிரியங்கா, இரண்டாம் இடம்: மியூரியல் மூன்றாம் இடம்- திவ்வியா

(த-190)


யாழ் மண்ணில் புதுப்பொலிவுடன்

அறுசுவை உணவுகளுக்கு நாடவேண்டிய ஒரே இடம்

SKY LINE RESTAURANT

இஸ்கை லயின் போசனசாலை

உங்கள் தேவைகளை பூர்த்தி செய்யும் ஒரே இடம்



திருமணம், பிறந்தநாள் போன்ற வைபவங்களுக்கு தேவையான உணவுப்பண்டங்களை எங்களிடம் ஓடர் செய்வதன் மூலம் உங்களின் பணத்தை மிகுதிப்படுத்திக்கொள்ளலாம். ஓடர் செய்யப்படும் உணவுகள் உங்களின் வைபவ இடத்திற்கே கொண்டுவந்து தரப்படும்.

இல.198, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

தொ.பே.: 021 222 7539



கொம்பிளான் 200 கிறாம்

COMPLAN 200 Grams



இரண்டு போத்தல்களைக் கொள்வனவு செய்வதன் மூலம் ஒரு அழகான "COMPLAN CUP" ஒன்றினை இலவசமாகப் பெறுங்கள்

எல்லா மருந்து விற்பனை நிலையங்களிலும், ஏனைய கடைகளிலும், எமது யாழ் முகவர் :-

குகன் ஸ்ரோர்ஸ்

இல.180, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

போன்ற இடங்களிலும் பெற்றுக் கொள்ளலாம்.



23 ஊட்டச்சத்து மிக்க ஒரு அத்தியாவசிய ஆரோக்கிய பானம்.

வனிலா, சொக்கிளேற் ஆகிய இரு சுவைகளில் பெற்றுக் கொள்ளலாம்.

கையிருப்புச் சொற்பமே

(43613)

ஏகவிநியோகஸ்தர்கள்:-

டெல்மேஜ் டிஸ்ரிபியூட்டர்ஸ் பிறைவேற் லிமிட்டெட்.

இல.101, வினாயலங்கார மாவத்தை,

கொழும்பு-10.



## அரியாலை அபிவிருத்திச் சங்கம்

### தரம் 5 இற்கான புலமைப்பரிசில் - 2006

### மாணவர்கள் தெரிவு

மேற்படி பரிசில் திட்டத்திற்கு மாணவர்களைத் தெரிவு செய்வதற்கான பதிவுகள் பின்வரும் அட்டவணைப்படி மேற்கொள்ளப்படவுள்ளன.

17/12/2005 சனிக்கிழமை பி.ப 2. மணி - 5. மணி

18/12/2005 ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2. மணி - 5. மணி

பதிவுகள் ஆ.வ.வீதியில் அமைந்துள்ள சங்கப் பணிமனையில் இடம்பெறும். பதிவு செய்வதற்கு மாணவர்களை அழைத்து வரும் பெற்றோர்/பாதுகாவலர் பின்வருவனவற்றைத் தவறாது எடுத்து வரவேண்டும்.

1) குடும்பப் பங்கீட்டு அட்டை

2) 2005 ஆம் ஆண்டிற்குரிய பாடசாலை மாணவர்கள் தேர்ச்சி அறிக்கை

பதிவு செய்துகொள்வதற்கான தகைமைகள்

1) அரியாலைப் பிரதேசத்தில் நிரந்தரமாக வசிப்பவர்கள்.

2) அரியாலைப் பிரதேசத்தை நிரந்தர வசிப்பிடமாகக் கொண்டு தற்போது இடம்பெயர்ந்து வசிப்பவர்கள்.

அரியாலை

11-12-2005 (43778) நிர்வாகம்.



ENGLISH மொழியா? உங்கள் பிரச்சினை

இன்றே தபால் மூல ஆங்கிலப் பாடநெறியில் இணையுங்கள்

நீங்கள் இருக்கும் இடத்தில் இருங்கள் நாம் அங்கு உங்களுக்கு ஆங்கில கல்வியை குருகிய காலத்தில் (அடிப்படையில் இருந்தே) கற்பிக்கின்றோம்

Free இதோ இலவச அழகிய குடை

எமது எந்த ஒரு பாடநெறியிலும் இணையும் அணைத்து மாணவ / மாணவிகளுக்கு அழகிய குடை ஒன்றும் 2006ம் ஆண்டுக்கான வர்ண கலண்டர் ஒன்றும் முற்றிலும் இலவசமாக வழங்கப்படும் (முந்துங்கள்)

மேலதிக விபரங்களுக்கு சுயவிலாசத்துடன் 5.00 பெறுமதியான 3 முத்திரைகள் அனுப்பி பெறுங்கள்

UNION EDUCATIONAL INSTITUTE

P.O. BOX 143, KANDY, SRI LANKA. TEL: 0773 123 523

சில கல்வி நிலையங்கள் போன்று மாணவர்களிடம் பணத்தை அறவிடுவது அல்ல எமது நோக்கம்



வீட்டில் இருந்தவாறே ஆங்கிலம் கற்க முடியும்

இலகுவான முறையில் ஆங்கிலம் கற்க வேண்டுமானால் E.L.I. யின் தபால் மூல ஆங்கில பாடநெறிகள் தான்

அழகிய ரீ.சேர்ட் இலவசம்

* பாடநெறியைத் தொடரும் உங்களுக்கு இலவச டீசேர்ட் ஒன்று
* இலவச 30 day's Easy Way English புத்தகம்
* 2006ம் ஆண்டு அழகிய வர்ண கலண்டர்

என்பன அனைவருக்கும் இலவசமாக வழங்கப்படும்

மேலதிக விபரங்களுக்கு 5.00 பெறுமதியான 3 முத்திரைகள் அனுப்பி பெறலாம்.

THE ENGLISH LANGUAGE INSTITUTE

P.O. BOX 83, KANDY. Tel: 0777-220002



4வது வருடத்தில் BBS இன் 4 வளாகங்கள்



யாழ்ப்பாணம் கோயில் வீதி | யாழ்ப்பாணம் கண்டி வீதி | பருத்தித்துறை கிராமக் கோட்டடி | மானிப்பாய் ஆலடிச்சந்தி

Year 1-5 English Medium

Week End Classes நடாத்தப்படும்.

ஆங்கிலம், கணிதம், சுற்றாடல், பாடல்கள் ஆகிய பாடங்கள் நடைபெறுகின்றன. மேற்கூறப்பட்டயாவும் எமது யாழ் நகர் வளாகங்களில் நடாத்தப்படுவது போன்று மானிப்பாய் வளாகத்திலும் சிறந்த கொழும்பில் பயிற்றப்பட்ட ஆசிரியர்களினால் நடாத்தப்படும்.

ஆங்கில மொழி மூலமான பாலர் பாடசாலை

வயது 2+ முதல் வயது 3 வரை Play Group

வயது 3+ முதல் வயது 4 வரை Montessori

வயது 4+ முதல் வயது 5+ வரை Pre-School

விசேட அம்சங்கள்

* ஆங்கில மொழிமூலமான சிறந்த கற்பித்தல்.
* தமிழ் கட்டாய பாடமாக கற்பிக்கப்படும்.
* பிள்ளைகளின் தனிப்பட்ட திறமைகளை வெளிப்படுத்தும் வருடாந்த நிகழ்வுகள்.
* முன்பள்ளியை பூர்த்தி செய்யும் மாணவர்கள் சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்படுவார்.

BBS ஆல் நடாத்தப்படும் மற்றைய ஆங்கில மொழி பாடநெறிகள்

Diploma in English

Certificate in English

IELTS

5+ to 14+ சிறார்களுக்கு

PRE-FOUNDATION

FOUNDATION

LOWER INTERMEDIATE

INTERMEDIATE

UPPER INTERMEDIATE

BRITISH BUSINESS SCHOOL

இல:140, கோவில் வீதி, யாழ்ப்பாணம். | பருத்தித்துறை சாலை, கிராமக் கோட்டடி, புலோலி. | இல:174, கண்டி வீதி, யாழ்ப்பாணம். | இல:252, ... ஆலடிச்சந்தி ...

HOT LINE : 021-222-5796 e-mail: british.businessschool@gmail.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரொமேனியாவில் அமெரிக்காவுக்கு நிரந்தர இராணுவத்தளம்!

முன்னர் சோவியத் கூட்டான 'வார்ஸோ' ஒப்பந்த நாடுகளில் ஒன்றான ரொமேனியாவுடன் இராணுவ ஒப்பந்தம் ஒன்றை அமெரிக்கா செய்து கொண்டிருப்பது பழைய கம்யூனிஸ்ட் நாடுகளுக்குள் சாதுரியமாக நுழைந்து அந்த நாடுகளால் தனது செல்வாக்கை விஸ்தரித்துக்கொள்ள எடுக்கும் முயற்சியாகப் பார்க்கப்படுகின்றது.

ஐரோப்பிய நாடுகளுக்கு விஜயம் மேற்கொண்டிருந்த அமெரிக்க இராஜாங்க அமைச்சர் டாக்டர் கொண்டலிஸா ரைஸ் அம்மையார் ரொமேனியாவில் நிரந்தரமான அமெரிக்க ராணுவத் தளங்களை நிறுவுவதற்கான ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொண்டார். முன்னாள் 'வார்ஸோ' ஒப்பந்த நாடு ஒன்றுடன் அமெரிக்கா செய்துகொண்டுள்ள இவ்வாறான ஒப்பந்தம் இதுவே முதலாவது ஆகும். ரொமேனியன் வெளியுறவு அமைச்சர் ராஸ்வான் உங்குரெனுவும், டாக்டர் கொண்டலிஸாரைஸும் இவ்வொப்பந்தத்தில் கைச்சாத்திட்டார்கள்.

ஒப்பந்தம் கைச்சாத்தானதன் பின்னர் ரைஸ் அம்மையார் செய்தியாளர்களிடம் பேசியபோது, "கம்யூனிஸம் இங்கே வீழ்ச்சியுற்று 16 ஆண்டுகளின் பின்னர் இவ்வாறான ஒப்பந்தம் ஒன்றை நாம் செய்து கொள்வதானது குறிப்பிடத்தக்க சம்பவமாகும்.




ரொமேனிய அதிபர் டிரெயான் பாசெஸ்குவுடன் அமெரிக்க ராஜாங்க அமைச்சர் கொண்டலீஸா ரைஸ்

ரொமேனியாவும் - அமெரிக்காவும் நண்பர்களாக இருப்பது மிகப்பொருத்தம் மட்டுமல்ல, எமது இருநாட்டுப்படைகளும் ஆயுதம் தரித்த சகோதர சகோதரிகளாகவும் இருக்கப் போகிறார்கள்'' என்று கூறினார்.

இதேசமயம் பல்கேரியாவும் தனது படைத் தளங்கள் தொடர்பாக அமெரிக்காவுடன் ஒப்பந்தம் ஒன்றைச் செய்துகொள்ள பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டுவருகின்றது.

***

### 1,000 ஆவது மரணதண்டனை

''இங்கே இருக்கும் எல்லாரையும் இறைவன் ஆசிர்வதிப்பாராக''

என்று தன்கடைசி வார்த்தைகளைக் கூறிக்கொண்டு மரணதண்டனையை ஏற்றுக் கொண்டார் அமெரிக்காவில் கடந்தவாரம் மரணதண்டனை நிறைவேற்றப்பட்ட கென்னத் பொய்ட் என்பவர்.

அமெரிக்காவில் 1976ஆம் ஆண்டு மரண தண்டனை மீண்டும் அறிமுகப்படுத்தப்பட்டதன் பின்னர் அந்தத் தண்டனைக்குள்ளான 1,000 ஆவது நபராவார் கென்னத். 1988ஆம் ஆண்டு தனது மனைவி ஜுலியையும் மாமனார் தோமஸ் கிரி என்பவரையும் கொலை செய்தமைக்காக குற்றவாளியாகக் காணப்பட்டு 11 வருடகாலம் சிறையிலிருந்து வந்தவர். கென்னத்திற்கு விஷ மருந்து ஏற்றி வட கரோலினாவிலுள்ள மத்திய சிறையில் மரணதண்டனை நிறைவேற்றப்பட்டது. அமெரிக்க உச்ச நீதிமன்றம் மரணதண்டனையை மீண்டும் அமுல்படுத்த உத்தரவிட்டதின் பின் நிறைவேற்றப்பட்ட ஆயிரமாவது மரணதண்டனை என்பதால் இது உலக பிரசித்தி பெற்றுவிட்டது.

***

### முதலாவது முகமாற்று அறுவைச் சிகிச்சை

உலகிலேயே முதன்முதலாக முகத்தை மாற்றி அமைக்கும் அறுவைச் சிகிச்சையொன்றை பிரெஞ்சு விஞ்ஞான மருத்துவர்கள் வெற்றிகரமாக செய்து முடித்திருக்கிறார்கள்.

நாய்களால் கடிக்கப்பட்ட 38 வயதான ஒரு பெண்ணுக்கு இந்த முகமாற்று அறுவை சிகிச்சை அளிக்கப்பட்டது. உதடுகள், நாடி மற்றும் மூக்கின் ஒரு பகுதி ஆகியவற்றை நாய்கள் கடித்துக் குதறிவிட்டதால் இந்த முகமாற்று அறுவை சிகிச்சை தேவைப்பட்டது. அப்பெண்ணின் முகத்தைமாற்றி அமைக்க டாக்டர்கள் இறந்துபோன கொடையாளி ஒருவரிடமிருந்து திசுக்கள், தசைகள், நாளங்கள் போன்றவற்றை எடுத்து பொருத்தி பெண்ணின் முகத்தைத் திருத்தி அமைத்துள்ளார்கள்.

இந்த அறுவைச் சிகிச்சையை மேற்கொண்ட மருத்துவக் குழுவின் தலைவர் பேராசிரியர் ஜீன் - மைக்கல் டுமொனார்ட் சிகிச்சை வெற்றியளித்திருப்பது குறித்து மகிழ்ச்சி வெளியிட்டுள்ளார். 'நோயாளி மிகநல்ல நிலையில் உள்ளார். சிகிச்சை இயல்பாகவிருக்கிறது'' என்று அவர் கூறியுள்ளார்.

இச்சிகிச்சையின் வெற்றி அமெரிக்க, பிரிட்டிஷ் வைத்திய வட்டாரங்களிலும் வரவேற்கப்பட்டுள்ளது.

சிகிச்சைக்கான முகத் திசுக்கள் இறந்துபோன கொடையாளி ஒருவரிடமிருந்து எடுக்கப்பட்டவை எனவும். தன் உடம்பின் பல பகுதிகளைத் தானம் செய்திருந்த ஒருவரின் குடும்பத்தவர்களின் அனுமதியோடு இந்ததிசுக்கள் எடுக்கப்பட்டனவென்றும் தெரிவிக்கப்பட்டது.

இறந்துபோன ஒருவர் புன்னகை செய்ய முடியுமா? ஆனால், அவருடைய அவயவங்கள் இன்னொருவருக்குப் பொருத்தப்பட்டு அந்தப் புன்னகை வெளிப்படப்போகிறது என்று டாக்டர் ஒருவர் கூறினார்.

***

### அல்கெய்டாவை பின்லேடனே வழிநடத்துகிறார்

அல்கெய்டாத் தலைவர் ஓஸாமா பின்லேடன் பற்றி பலவிதமான செய்திகள் வெளிவந்து கொண்டிருந்தபோதிலும்

அமெரிக்க நிர்வாகத்துக்கும் பல்வேறு மேற்கத்தேய நாடுகளுக்கும் 'சிம்மசொப்பனமாக'' இருந்துவரும் ஓஸாமா பின்லேடன் இன்னமும் உயிருடன்தான் இருக்கிறார். மேற்கு நாடுகளுக்கெதிரான போராட்டங்களைத்திட்டமிட்டுச் செயல்படுத்துவதில் ஈடுபட்டுவருகிறார்.

இந்தத் தகவலை அவ்வமைப்பின் பிரதித் தலைவர் அய்மான் அல் - சாவாஹ்ரி கடந்த புதன்கிழமை வெளியிட்டார். அவர் கூறியதாவது:-

''எல்லா முஸ்லிம்களுக்கும், முகாய்தீன்களுக்கும் மகிழ்ச்சியான ஒரு செய்தி விடுக்கின்றேன். அல்கெய்டா வளர்கிறது; விஸ்தாரமடைகிறது; பரவியும் வருகிறது என்பதற்காக இறைவனுக்கு நன்றி தெரிவிக்கின்றோம். அல்கெய்டாவின் இளவரசர் ஷெயிக் ஓசாமா பின்லேடன் இப்போதும் அதன் ஜிசாத்தை வழிநடத்திச் செல்கின்றார் - இறைவனுக்கு நன்றி.''

சாவாஹ்ரியின் பேட்டி இணையத்தளமொன்றில் வெளியாகியுள்ளது. எங்கிருந்து பேட்டியளிக்கப்பட்டது என்பது தெரியவில்லை. ஆனால், பின்லேடனும் அவரது இரண்டாம் நிலைத் தளபதி சாவாஹ்ரி உட்படப் பல சகாக்கள் பாகிஸ்தானுக்கும் ஆப்கானிஸ்தானுக்கு மிடையிலான எல்லைப் பகுதியில் எங்கோ ஒளித்திருப்பதாகக் கருதப்படுகின்றது.

ஓஸாமா பின்லேடன் ஒருபோதும் உயிருடன் பிடிபடமாட்டார். அந்த வகையில் அவர் ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறார்.

புதிதாக வெளிவந்துள்ள நூல் ஒன்றில் இத்தகவல் இடம் பெற்றுள்ளதாம்.

பீட்டர்பேர்ஜன் என்ற சி.என்.என். நிறுவன நிபுணர் எழுதியுள்ள "எனக்குத் தெரிந்த ஓஸாமா பின்லேடன்'' என்ற நூலில் 50 பேருக்கு மேற்பட்டவர்களின் பேட்டிகள் இடம் பெற்றுள்ளன. பின்லேடனின் முன்னாள் மெய்ப்பாதுகாவலர் அளித்துள்ள பேட்டியில் ''ஷேக் ஓஸாமா என்னிடம் ஒரு பிஸ்டலையும் அதற்குரிய இரண்டு தோட்டாக்களையும் கொடுத்திருந்தார். நாங்கள் சுற்றிவளைக்கப்பட்டால் அல்லது அவர் பிடிபட நேர்ந்தால் தம்மைச் சுட்டுக்கொன்று விடும்படி கூறியிருந்தார்'' என்று தெரிவித்துள்ளார்.

***

## நீதிமன்றில் சதாம் நடத்தும் நாடகம்

### சதாம் ஹுசைன் விசாரணை

முன்னாள் ஈராக்கிய சர்வதிகாரி சதாம் ஹுசைன் ஈராக் நீதிமன்றம் ஒன்றில் விசாரிக்கப்பட்டு வருகிறார் அல்லவா? இந்த விசாரணைகளின்போது அவர் நடந்து கொள்ளும் விதம் சிலசமயங்களில் கோமாளித்தனமாகவும் சில சமயங்களில் பரிதாபமாகவும் சில சமயங்களில் அவருக்கு நியாயம் செய்யப்படவில்லை யென்று கோபமுறுவது போலவும் தென்படுவதைப் பத்திரிகைச் செய்திகளின் வாயிலாகக் காண்கின்றோம். எந்த வகையில் பார்த்தாலும் அவர் கையறு நிலையில் இருக்கிறார் என்பது மட்டும் நிச்சயம். அவர் பதவியிலிருந்தபோது நடைபெற்ற தாகக் கூறப்படும் அட்டூழியங்கள் அனைத்தும் - அதனால் அந்நாட்டு மக்களால் ஒரு பகுதியினர் அவர் மீது கொண்டிருந்த வெறுப்பு அமெரிக்கா போன்ற நாடுகள் 'சாக்குப்போக்கு' கூறிக்கொண்டு உள்ளே நுழைவதற்கு உதவியாக இருந்துள்ளன.



நீதிமன்றில் சதாம் 'குர்ஆன்' நூலை கையில் வைத்து ஏதோ சொல்கிறார்.

எதுவானாலும் அவர் மீதான விசாரணைகள் முறையாகவும் நீதியாகவும் நடைபெற வேண்டும் என்று உலகம் விரும்புகின்றது. அதற்காகவே அவர் சார்பில் வாதிடுவதற்கு சட்டத்தரணிகளும் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். அந்தச் சட்டத்தரணிகளுக்கும் அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டுள்ளன; இருவர் படுகொலை செய்யப்பட்டுமிருக்கிறார்கள்.

1982ஆம் ஆண்டு பாக்தாத்திற்கு வடக்கிலுள்ள துஜெயில் நகரப்பகுதியில் 140 பேருக்கு மேற்பட்டவர்கள் கொலை செய்யப்பட்டமை தொடர்பாக இப்பொழுது சதாம் ஹுசைனுக்கு எதிராக விசாரணைகள் நடைபெற்றுவருகின்றன. அந்த நகரம் வழியாக சதாம் ஹுசைன் சென்ற போது நடைபெற்றதாகக் கூறப்படும் கொலை முயற்சியை அடுத்தே மேற்படி படுகொலைகள் நடைபெற்றதாகக் கூறப்படுகின்றது.

கடந்த செவ்வாய்க்கிழமை 5சாட்சிகள் 23 வருடங்களுக்கு முன் நடந்த அட்டூழியங்கள் பற்றி சாட்சியமளித்ததையடுத்து தாம் இனி நீதிமன்றத்துக்கு வரப்போவதில்லையென்று சதாம் அறிவித்திருந்தார்.

''நீதி இல்லாமல் நான் நீதிமன்றம் வர முடியாது நீங்கள் எல்லாரும் நரகத்துக்குப் போங்கள். நீங்கள் அமெரிக்காவின் ஏஜெண்டுகள்'' என்று நீதிமன்றில் சதாம் கூறியிருந்தார். அடுத்தநாள் நீதிமன்றம் ஒரு மணி நேரம் பிந்தியே கூடியது. சதாம் நீதிமன்றம் வருவதற்கு மறுத்ததாலேயே இந்தத் தாமதம் என்று அதிகாரிகள் கூறியிருந்தார்கள். சதாமின் சட்டத்தரணிகள் எடுத்த முயற்சியால் அவர் பின்னர் நீதிமன்றம் வந்ததாகத் தெரிகின்றது.

சாட்சியமளித்தவர்களின் பெயர்கள் வெளியிடப்படவில்லை. அன்றைய விசாரணைகளின் முடிவில் தாம் மூன்று நாள்களாக ஒரே மேல் சட்டையையும் உள் ஆடையையும் அணிந்து கொண்டிருப்பதாக நீதிமன்றில் முறையிட்டார்.

அமெரிக்கா தன்னை முடித்துக்கட்டத் திட்டமிட்டிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார். முன்னதாக சாட்சியமளித்த முதல் பெண் 'சாட்சி ஏ' என்று அழைக்கப்பட்டார். திரைக்குப் பின்னாலிருந்து பேசிய அவரது குரலும் அடையாளம் காண முடியாதவாறு செய்யப்பட்டிருந்தது. சாட்சிகளின்தற்காப்புக்காக இவ்வாறு செய்யப்பட்டிருந்தது.

''எனது ஆடைகளை பலவந்தமாகக் களைந்தார்கள். என் கால்களைமேலே தூக்கி வைத்தார்கள். என் கைகளைக் கட்டிப் போட்டார்கள். கேபிள் வயர்களால் அடித்தார்கள் மின்சாரத்தாலும் அதிர்ச்சியளித்தார்கள்'' என்று அவர் கூறினார்.

***

## பிரிட்டனின் வருங்கால பிரதமர் கமரோன்?

### உலக வலம் பேனா

### பிரிட்டிஷ் எதிர்க்கட்சியின் புதிய தலைவர்

பிரிட்டிஷ் மக்களின் எதிர்கால பிரதம மந்திரியாக வரக்கூடியவர் என்று கருதப்படும் ஒருவரை கொன்சர் வேடிவ் கட்சி தனது தலைவராகத் தேர்ந்தெடுத்துள்ளது.

கட்சித் தலைமைப் பதவிக்குப் போட்டியிட்ட 39 வயதான டேவிட்கமரொன் அபரிமிதமான வாக்குகளைப் பெற்றுத்தலைவராக வெற்றிவாகை சூடியுள்ளார். டேவிட்டாவிஸ் என்பவரை எதிர்த்துப் போட்டியிட்ட டேவிட் கமரொன் தபால் மூலம் வாக்குகளால் ஒன்றுக்கு இரண்டு என்ற வீதத்தில் வெற்றி பெற்றிருப்ப தாக அறிவிக்கப்பட்டது.



பிரிஷ்ட்டிஷ் கன்சர் வேடிவ் கட்சியின் புதிய தலைவர் கமரொன் ஆதரவாளர்கள் அளித்த விருந்துக்கு கர்ப்பிணியான மனைவியுடன் வருகைதந்தார்.

ரொனி பிளேயரின் தொழில் கட்சி, அண்மையில் நடந்த பொதுத்தேர்தலில் வெற்றி பெற்றதால் கொன்சர் வேஷல் கட்சியின் தலைவர் மைக்கல் ஹோவர்ட் தமது தலைவர் பதவியை கைவிடுவதாக அறிவித்திருந்தார். அதன் பேரில் நடந்த கொன்சர் வேஷல் கட்சித்தலைவர் போட்டியில் இப்பொழுது கமரொன் வெற்றி பெற்றுள்ளார்.

நாடாளுமன்றத்துக்கான தேர்தலுக்கு வெகுகாலம் இருந்தபோதிலும் ரொனி பிளேயருக்கு எதிராக கொன்சர்வேஷல் கட்சியை கமரோன் திறமாக வளர்த்தெடுப்பார் என்றும் அடுத்த பொதுத்தேர்தலில் கொன்சர் வேஷல் கட்சியை வெற்றிபெறச்செய்து ஆட்சியைக் கைப்பற்றும் தகுதி அவருக்கிருக்கிறதென்றும் ''டோரி'' கள் மத்தியில் நம்பிக்கை ஏற்பட்டுள்ளது.

கட்சியை நவீனமயப்படுத்தி புத்துயிர் ஊட்டப்போவதாக வெற்றிபெற்றதையடுத்து வெளியிட்ட கருத்தில் கமரோன் தெரிவித்துள்ளார்.

***

தாய்லாந்தின் பிரதம மந்திரிதாக்சின் சினவாத்ரா நீதிமன்றில் தொடுத்திருந்த பல அவதூறு வழக்குகளை அந்நாட்டின் அரசரின் ஆலோசனையை ஏற்று விலக்கிக்கொண்டுள்ளார்.

பொதுப் பணியில் ஈடுபட்டுள்ளவர்கள் தம் மீதான நியாயமான விமர்சனங்களை ஏற்றுக் கொள்ளவேண்டும் என்று ஒருசொற்பொழிவின்போது தாய்லாந்து மன்னர் பூமிபால் அதுல்யாடேஜ் தெரிவித்திருந்தார். மன்னர் மறைமுகமாகப் பிரதமமந்திரியையே இவ்வாறு குறிப்பிட்டிருந்தார் என்று கருதப்பட்டது. பிரதமர் தாக்சின் தாய்லாந்து பத்திரிகை அதிபர் ஒருவர் மீது 2 கோடி 80 லட்சம் டொலர் இழப்பீடுகோரி வழக்குத் தொடர்ந்திருந்தார். மன்னரின் கருத்தையறிந்த பின் பிரதமர் வழக்கை வாபஸ் பெற்றுள்ளார். இதுபோன்ற வேறு அவதூறு வழக்குகளையும் பிரதமர் வாபஸ் பெற்றார்.

மன்னர் தமது 78 ஆவது பிறந்த தினத்தையொட்டி நிகழ்த்திய உரையின்போது, வழக்கறிஞர்கள் பிரதமரை வழக்குத் தொடுக்கும்படியும் தண்டனை வழங்கும்படியும் ஆலோசனை கூறுகிறார்கள். ஆனால் நான் பிரதமருக்கு கூறுகிறேன். அப்படி செய்ய வேண்டாம், தண்டிப்பது நல்லதல்ல'' என்று கூறினார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கரவெட்டி பிரதேசசெயலக சிறப்பு மலர்

## நிறைவான பணிக்கு உதவும் கைங்கரியம்



அன்புள்ளவர்களுக்கு :-

கரவெட்டி பிரதேச செயலகத்திற்கு புதிதாக அமைக்கப்பட்ட கட்டம் இன்று திறந்து வைப்பதை இட்டு மகிழ்ச்சிஅடைகிறோம். நீண்ட காலமாக சொந்தக் கட்டம் இல்லாமல் வாடகைக் கட்டடத்தில் இயங்கிய குறைபாடு இன்று நீங்குவதையிட்டு கரவெட்டி வாழ் மக்களுக்கு மகிழ்ச்சியைத் தரும் செய்தியாகும். மக்களின் பணிகளை நிறைவாகச் செய்வதற்கு அலுவலகம் மிகவும் அவசியம். இதனை உணர்ந்து 'நீரப்' திட்டத்தின் உதவி கிடைத்தமை பாராட்டுக்குரியது. இப்பணியை நிறைவேற்றியிருக்கும் இன்றைய பிரதேச செயலாளர் திரு. சி.சத்தியசீலன் இளமையான துடிப்புள்ள எதனையும் நிறைவாக செய்யவேண்டும் என்ற ஆற்றலைக் கொண்டவர். அவருடைய பணி பாராட்டுதற்குரியது. இப்பிரதேச செயலகம் மக்களுடைய பணிகளை நிறைவாக செய்து நீண்டகாலம் பணியாற்ற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். எல்லோருக்கும் இறைவனுடைய ஆசி கிடைப்பதாக.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

**இரண்டாவது குருமஹா சந்நிதானம்**
**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த**
**பரமாசாரிய சுவாமிகள்**
**நல்லூர் திருஞான சம்பந்தர் ஆதீனம், நல்லூர்.**

## அன்றாடக் கருமத்துக்கு வலுச்சேர்க்கும் நிகழ்வு



கரவெட்டிப் பிரதேச செயலகத்திற்கான புதிய கட்டடம் கட்டி நிறைவு செய்யப்பட்டுத் திறப்புவிழா நடைபெறுவதை அடைந்து மகிழச்சியடைகின்றேன். மக்களின் அன்றாடப் பணிகளை இலகுவாகச் சிரமமின்றிச் செய்து முடிக்கக் கூடிய வகையிலே பிரதேச செயலகங்களின் செயற்பாடுகள் இன்று பரவலாக்கப்பட்டுள்ளமையை யாவரும் அறிவர்.

அந்தந்தப் பிரதேச மக்கள் தத்தமது தேவைகளை விரைவாக நிறைவேற்ற இன்று பிரதேச செயலகங்கள் உதவுகின்றன. முன்னொரு காலத்தில் கொழும்பு சென்று செய்யவேண்டிய விடயங்களை அந்தந்தப் பிரதேச செயலகங்களுடாகவே இன்று மக்கள் நிறைவேற்றிக் கொள்ளக்கூடிய வாய்ப்பும் வசதியும் உண்டு. உண்மையில் பிரதேச செயலர்கள் தத்தம் பிரதேசத்தின் சமூக, பொருளாதார, பண்பாட்டு வளர்ச்சியிலே கூடிய கவனம் செலுத்தி வருவதை அண்மைக் காலமாக அவதானிக்கமுடிகின்றது.

ஆளுமை மிக்க பிரதேச செயலர்கள் தமது திறமையினாலும் சக ஊழியர்களின் ஒத்துழைப்பினாலும் மக்களின் தேவைகளை உடனுக்குடன் நிறைவேற்றிவிடுவர்.

கரவெட்டிப் பிரதேச செயலகக் கட்டடத் திறப்பு விழாவை வாழ்த்துவதோடு, இத்திறப்பு விழாவை ஒட்டி வெளிவரும் மலர் இப்பிரதேசத்தின் பண்பாடுகளைப் பதிவுசெய்ய வேண்டும் என்றும் அவாவுறுகின்றேன்.

**பேராசிரியர் எஸ். மோகனதாஸ்**
**துணைவேந்தர், யாழ் பல்கலைக்கழகம்,**
**திருநெல்வேலி**

## முன்மாதிரியாகப் பணிபுரியட்டும்



முழுமனதுடனும் பிரியமுடனும் சேவையாற்ற ஓர் ஊழியனுக்கு ஆதாரமாக உந்து சக்திகளாகத் தேவைப்படுவது அடிப்படைத்தேவைகளைத் திருப்திப்படுத்துகின்ற நிறைவான அழகான அலுவலகக் கட்டடமாகும். எமது திணைக்கள ஊழிர்கள் கடும் சிரமத்துக்கு மத்தியில் அதிக கவனமெடுத்து அனைவரும் திருப்தியடையக் கூடியவகையில் அழகான இவ்வலுவலகக் கட்டடத்தை எத்தனையோ சவால்களுக்கு மத்தியில் ஒப்பந்தக்காரர் மூலம் நிர் மாணித்துத் தந்துள்ளோம்

கரவெட்டிப்பிரதேச சகல தூரத்திலான மக்களும் குறிப்பாக துன்பத்தின் விளிம்பில் நிலை தடுமாறும் சகல இன மக்களும் தம் தேவைகளை இன்முகத்துடன் அன்பாக வரவேற்று பண்பாக நல்ல வழிகாட்டலுடன் உடனுக்குடன் நிறைவேற்றித்தர இப்பிரதேசச் செலக ஊழியர் கள் அனைவரும் நேர்மையுடனும் இதய சுத்தியுடனும் கூட்டாக →

## நிறைந்த பயன் கிடைக்கவேண்டும்.



கரவெட்டி பிரதேச செயலகத்துக்கென அமைக்கப்பட்ட புதிய கட்டடத்தின் திறப்பு விழாவில் வெளியிடப்படும் மலருக்கு ஆசி வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றோம். இந்தப் பிரதேச மக்களுக்கு பணியாற்றவென இப்பிரதேச மக்களின் அனுசரணையுடனே கொள்வனவு செய்யப்பட்டு வடக்கு-கிழக்கு அவசர புனர் நிர்மாண திட்ட நிதியில் இருந்து கட்டப்பட்ட இப்புதிய கட்டடம் மக்களுக்கு பெரும் துணைபுரியும் என்பதில் எந்த ஐயமுமில்லை. இறைவனுடைய திட்டப்படி இக்கட்டடத்தை கட்டிமுடித்த அனைவரையும் பாராட்டி வாழ்த்துவதோடு, இதனால் இப்பிரதேச மக்களுக்கு நிறைந்த பயன் கிடைக்கவேண்டும் என வாழ்த்துகிறோம்.

**மேதகு தோமஸ் சவுந்தர நாயகம் ஆண்டகை,**
**ஆயர் இல்லம், யாழ்ப்பாணம்.**

## அனைத்து வளங்களையும் ஒருங்கிணைக்க உதவும் கைங்கரியம்



வடமராட்சியின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் அமைந்திருக்கும் கரவெட்டி பிரதேச செயலக திறப்பு விழவினை முன்னிட்டு வெளியிடப்படும் சிறப்பு மலருக்கு வாழ்த் துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன். வடக்கு-கிழக்கு அவசர புனர் நிர்மாணத்திட்டத்தின் கீழ் (யுத்தத்தினால் பாதிப்படைந்த பிரதேசங்களின் கட்டுமானங்களை மீளக்கட்டியெழுப்பி மக்களுக்கான சேவைகளை வழங்கி அவர்களின் வாழ்க்கைத் தரத் தினை அதிகரிப்பதற்காக உலக வங்கியின் நிதி ஒதுக்கீட்டின் மூலம் இக்கட்டடம் அமைக் கப்பட்டுள்ளது.

வேகமாக மாறிவரும் கால ஓட்டத்திற்கு ஈடுகொடுத்து மக்களின் பல்வேறு தேவைகளைப் பூர்த்தி செய்யும் அமைப்புக்களாகவும் நீடித்து நிலைதிருக்கக் கூடிய அபிவிருத்தியினை கிராமங்களில் ஏற்படுத்துவதற்கான நிர்வாக மையங்களாவும் பிரதேச செயலகங்கள் அமைந்திருக்கின்றன.கரவெட்டி பிரதேசம் பல வளங்களையும் சிறப்புக்களையும்கொண்டிருப்பதுடன் பல கல்விமான்களையும், அறிஞர்களையும்,புத்திஜீவிகளையும் உருவாக்கிய பெருமைபெற்ற பிரதேசமாகும். இங்கு கிடைக்கக்கூடிய அனைத்து வளங்களையும் ஒன்றிணைத்து இப்பிரதேச மக்களுக்குரிய நிறைவான சேவைகளை இந்த அலுவலகம் வழங்குவதற்காக எல்லாம் வல்ல இறைவன் அருள்புரிய வேண்டுமென வேண்டுவதுடன் எனது வாழ்த்துக்களையும் நல்லாசிகளையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**க.கணேஷ், அரசாங்க அதிபர்/ மாவட்டச் செயலாளர்,**
**யாழ். மாவட்டம்.**
**மாவட்ட செயலகம், ய ாழ்ப்பாணம்.**

## புதிய கட்டடம் புதுப்பொலிவு



கரவெட்டி பிரதேச செயலகத்திற்குக் கிடைத்துள்ள புதிய கட்டடத் தின் திறப்பு விழாவின் போது வெளியிடப்படவிருக்கும் சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்க எனக்கு வாய்ப்பளித்த விழா ஏற்பாட்டுக் குழுவினருக்கு எனது நன்றியையும் மகிழ்ச்சியையும் தெரிவித்துக் கொள்கிறேன். சிறப்பு மலரென்பது சிந்திக்கத் தூண்டும் கருத்துக் களஞ்சியம். விழாவை அலங்கரிக்கும் மலர்மாலை. அது காலத்தால் மறையாத புதுமணம் கொண்ட பயனுள்ள படைப்புக்களை உள்ளடக்கிய புதுமாலை.

கரவெட்டி பிரதேசத்திற்கு அழகு தரும் புதிய கட்டடம் போலவே வரலாற்று முக்கியத்துவம் பெறும் இந்தச் சிறப்புமலரும் பயன்தரும் சிந்தனை மலராக, இன்றைய விழாவை நினைவூட்டும் காலப்பொட்டகமாக திகழவேணடும் என் வாழ்த்துகின்றேன்.

**க. அரியநாயகம், மாவட்ட நீதிபதி,**
**பருத்தித்துறை.**



## நன்றியுணர்வுடன் நி



வடமராட்சி தெற்கு மேற்குப் பிரதேச செயலகத்தி
மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெரும
கரவெட்டிப் பிர தேசத்தின் நிர்வாக மையமாக விள
ஒரு நிரந்தரக் கட்டடத்தினை கொண்டிருக்க வில்லை
வடக்கு -கிழக்கு அவசர புனர்நிர்மாணத்திட்டத்தின்
நிர்மாணப்பணிகளுக்காக இது வரை வழங்கப்பட்டுள்ளது. இக்காணி
மக்கள் பிரதம செயலாளர் (NEERP) திட்ட இணைப்பாளர், அரசாங்க
வர்த்தக சங்கத்தினர், அரச உயர் அதிகாரிகள், கட்டடத்திணைக்கள
அர்ப்பணிப்பும் பற்றுறுதியும் நிறைந்த பங்களிப்புக் காரணமாக அ
மக்களின் காலடிக்கு சேவைகள் சென்றடைய வேண்டு மென்ற நோக்
அடை வதற்கு அனைவரினதும் ஒத்துழைப்பும் பங்களிப்பும் அவசிய

## மனநிறைவைத்



எமது பிரதேச செயலகத்திற்கான புதிய கட்ட
காலக் கனவை நனவாக்கி உள்ளதால் எல்லோரு
ஒருவனாக நானும் பெரு மகிழ்வடைகின்றேன்.
வடக்கு-கிழக்கு அவசர புனர்நிர்மாணத்திட்ட நி
விரைவாகவும் தனது சேவையை வழங்கும் என்ப
ஆற்றலும், நீண்டகால சிந்தனையுடன் சிறப்பாக செயற்படக்கூடிய
காலத்தில் இக்கட்ட டம் திறக்கப்படுவதும், செயற்படவுள்ளதும்
திறக்கப்பட்டுள்ளது என்பதைக் கட்டியங் கூறி நிற்கிறது.


## கரவெட்டி பிரதேச செயல
## சிறப்பு மலருக்கு அனுசரண

### வர்த்தக நி

| | | |
|---|---|---|
| | | பிரியங்கா |
| கோபி ஏஜென்சி, 33, மில் வீதி, வவுனியா. | ஐயாத்துரைதேவராசா பல்பொருள் வாணிபம் | றோயல் எலக்றோ |
| கருணா ரெக்ஸ் | ஸ்ரீ முருகன் மெடிக்கல் | சோன |
| கஜமுகன் கட்டடப்பொருள் விற்பனை நிலையம் | அபிராமி ஸ்ரோர்ஸ் | சுபா |
| சிவா எலக்ரிக்கல்ஸ் | றோயல் ஸ்போட்ஸ் | சுப்ப |

| | | | |
|---|---|---|---|
| செல்லமுத்தூஸ் புடவை நிலையம் | திசா களஞ்சியம் | ஸ்ரீஜெயராம் கண்ணாடியகம் | அருண்அழகு மாடம் |
| யசோ ரெக்ஸ் | பூம்புகார் சில்க் கவுஸ் | அம்சன் ஒளியகம் | ஜெகா மோட்டோர்ஸ் |
| போன் ஷொப் | சர்வானந்த வாணிபம் | ஜனனி பல்பொருள் விற்பனை நிலையம் | ஜமுனா ஸ்ரோர்ஸ் |
| மெற்றோ வைன் ஸ்டோர்ஸ் | டோறா மல்ரி கொம்பிறக்ஸ் | தமிழ் பூங்கா புத்தகசாலை | அருள் நாயகி கிறிம் கவுஸ் |
| ஸ்ரோர்ஸ் உணவு விடுதி | ஹிறோ சுப்பர் கொம்பிளெக்ஸ் | பவர்க்கோட் | நடனமுருகன் பார்மசி |
| அழகர் பல்பொருள் வாணிபம் | என்.எஸ்.ஆர் | ஜெகா மோட்டோர்ஸ் | கிருஷ்ணானந்தம் பலசரக்குக் கடை |
| டினா ஓடியோ வீடியோ சென்ரர் | ஸ்ரீ வரதாஸ் மதுபானசாலை | லிபேர்ட்டி மோட்டேர்ஸ் | நெல்லை சில்க் |
| சந்துஜன் அழகுச் சோலை | ஜெயா கல்லுடைக்கும் ஆலை கப்பூது | சந்திரா தொலைத்தொடர்பகம், உடுப்பிட்டி | லிங்கம்ஸ் கரணவாய் |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்கள குடும்ப ஆதிக்கவாதத்தின் பலமே இனப்பிரச்சினையை விகாரமாக்கி வருகிறது


மு.திருநாவுக்கரசு

★ இலங்கை அரசியலானது உள்நாட்டு, வெளிநாட்டு ரீதியில் இனப்பிரச்சினையின் மீது மையங்கொண்டு செயற்படுகிறது. அதன் அர்த்தம் இனப்பிரச்சினை தான் அரசியற் பிரச்சினை என்பதல்ல. மாறாக இலங்கையின் உள்நாட்டு, வெளிநாட்டு ரீதியிலான அனைத்துப் பிரச்சினைகளும் இனப்பிரச்சினை மீது திசை திருப்பப்பட்டு, இலங்கை அரசியலின் அனைத்துச் சுமைகளும் தமிழ்பேசும் மக்களின் முதுகில் ஏற்றப்பட்டுவிட்டன.

★ அரசியல் ஆதிக்கம் குடும்ப ஆதிக்கத்திற்கூடாக இன ஆதிக்கத்தில் மையங்கொள்வதால், அரசியல் ஆதிக்கத்துடன் தொடர்புறும் அனைத்து உள்நாட்டு, வெளிநாட்டுச் சக்திகளும் இன ஆதிக்கத்திற்குள் நிலையெடுத்து விடுகின்றன. ஆதலால் இனப்பிரச்சினை தான் இப்போது எல்லாமாகி விடுகின்றது.

இவ்வாறு வித்தியாசமான கோணங்களில் இலங்கை அரசியல் பொறி முறையைப் பார்க்கின்றது "கொழும்பு 2007" என்ற நூல்.

சிறந்த அரசறிவியலாளரும், பிரபல அரசியல் ஆய்வாளருமான "திரு மாஸ்டர்" என்று ஆய்வாளர்களாலும், வாசகர்களாலும், மாணவர்களாலும் அறியப்பட்ட மு.திருநாவுக்கரசு இந்த நூலின் ஆசிரியராவார்.

இலங்கையின் புதிய ஜனாதிபதித் தேர்தல் நடைபெறுவதற்கு முன்னர் எழுதப்பட்டது இந்த நூல். சமாதானத்துக்கான யுத்தமா? அல்லது யுத்தத்திற்கான "சமாதானமா" என்ற பிரதான தலைப்பில் பல விடயங்கள் நூலில் அலசி ஆராயப்பட்டுள்ளன.

நூலின் உள்ளடக்கம் உதயனின் ஞாயிறு பதிப்பில் தொடர் சிறப்புக் கட்டுரையாக வெளியிடப்படுகிறது.

## சமாதானத்துக்கான யுத்தமா? அல்லது யுத்தத்திற்கான சமாதானமா?

தொடர் சிறப்புக் கட்டுரை 2

## மஹிந்த தீவிர இனவாதத்தை கையில் எடுத்தது ஸ்ரீ.ல.சு.க கட்சியை பண்டா குடும்பப் பிடிக்குள் விடாது தடுக்க

பண்டாரநாயக்கா இலங்கையில் கால் வைத்த காலத்தில் வெள்ளையருக்கு எதிரான அரசியலின் மூலம் சேனநாயக்க குடும்பமும் வேறு சிங்கள இளைஞர்களும் அரசியலில் ஸ்திரம் பெற்றிருந்தனர். இதனால், பண்டாரநாயக்கா சேனநாயக்காக்களுடன் இணைந்தார். ஆனால், அடுத்தபடியில்தான் நிற்கவேண்டி ஏற்பட்டது.

இந்நிலையில் சேனநாயக்க குடும்பம் பற்றி சிறிது நோக்குதல் அவசியம். சேனநாயக்க குடும்பமும் ஆங்கில அனுகூலங்களுக்குள் சுருண்டிருந்த குடும்பம்தான். சேனநாயக்காவின் தந்தை டொன் ஸ்பாட்டர் சேனநாயக்க (Don Sparter Senanayake) பிரித்தானியர் ஆட்சியின் கீழ் முக்கியத்துவம் பெற்றிருந்த ஒரு முக்கிய தரகு முதலாளியாவார். இவர் சாராயத் தரகு முதலாளிகள் கூட்டத்தில் ஒரு முக்கிய புள்ளி. பிரித்தானியரால் முதலியார் பட்டமளிக்கப்பட்டிருந்த இவரிடம் 2000 ஏக்கர் விஸ்தீரணம் உள்ள காரீய சுரங்க நிலம் இருந்தது. இவரது இச்சுரங்கங்களில் 3000இற்கும் குறையாத தொழிலாளர்கள் பணிபுரிந்தனர். இலங்கையில் ஆரம்பத்தில் எழுந்த பிரித்தானிய எதிர்ப்பியக்கங்கள் மது ஒழிப்பு இயக்கங்களாகக் காணப்பட்டன என்பதும் இங்கு கவனிக்கத்தக்கது. அப்படிப் பார்க்கையில் மது ஒழிப்பு இயக்கம் டி.எஸ். சேனநாயக்காவின் தந்தைக்கும் எதிரானது. ஆனால், இங்குள்ள சுவாரசியமான விடயமென்னவெனில் டொன் ஸ்பாட்டர் சேனநாயக்காவின் மூன்று பிள்ளைகளான டொன் சாள்ஸ் சேனநாயக்க, டி.எஸ்.சேனநாயக்க, எவ்.ஆர். சேனநாயக்க என்போர் தமது தந்தை சாராயத் தரகு முதலாளி கூட்டத்தைச் சேர்ந்தவராய் இருந்தபோதிலும் அவருக்கெதிராய் மது ஒழிப்பு இயக்கத்தில் தீவிரமாய் பங்கெடுத்தனர். இது மக்கள் மத்தியில் அவர்களுக்கு ஒரு முதன்நிலை அங்கீகாரத்தை ஏற்படுத்தியது. மேலும், 1915 ஆம் ஆண்டு முஸ்லிம்களுக்கு எதிரான கம்பளைக் கலகத்தில் இவர்கள் மூவரும் பங்கெடுத்ததான குற்றச்சாட்டின் பேரில் ஒன்றரை மாதம் பிரித்தானியர்களால் சிறைவைக்கப்பட்டனர். இச்சிறை வாழ்வும் இவர்களை "தேசிய வீரர்களாக" மக்கள் மத்தியில் பார்க்க வைத்தது. இத்தகைய பின்னணியில் சேனநாயக்க குடும்பம் ஓர் அரசியற் சக்தியாக வளர்ச்சியடைந்தது. ஆதலால் பண்டாரநாயக்கா இவர்களை அனுசரித்துப் பின்னால் போக முற்பட்டார். இதுவரை சேனநாயக்க குடும்பம் அந்தஸ்து ரீதியில் பண்டாரநாயக்க குடும்பத்திற்கு கீழ்நிலையிலேயே இருந்தது. சேனநாயக்க குடும்பத்தவரை மகாமுதலியார் ஆகிய பண்டாரநாயக்காவின் தந்தை தனது வீட்டு விறாந்தையில் நிற்கவிட்டுத்தான் கதைப்பது வழக்கம். இப்படி அவரது அதிகாரத்திற்கும், அந்தஸ்திற்கும் கீழ்ப்பட்டே சேனநாயக்காக்கள் நடக்கவேண்டி இருந்தது. இந்த முரண்பாட்டையும் ஏற்றத்தாழ்வையும் டி.எஸ். ஒருபோதும் மறந்துபோகவில்லை. இப்பின்னணியில் பண்டாரநாயக்காவின் மனமாற்றத்தை இவர்கள் நம்பவுமில்லை. பண்டாரநாயக்கா தனது பிரபுத்துவ குடும்ப வாழ்வு முறையை மேலும் இன்னொரு கட்டத்திற்கு வளர்த்துச் சென்ற பின்னணியில் அவரது மனமாற்றத்தை அவர்கள் நம்பமுடியாத நிலையும் தோன்றியது. திருமண உறவு முறையால் சேனநாயக்க குடும்பத்திற்கு ஜயவர்த்தன குடும்பம் உறவானது. சேனநாயக்க குடும்பமும் கொத்தலாவல குடும்பமும் நெருங்கிய உறவினராவர். இம்மூன்று குடும்பங்களும் ஒன்றுசேர்ந்து பண்டாரநாயக்கா குடும்பத்திற்கு எதிரான வியூகத்தைக் கொண்டு செயற்பட்டன.


சோல்பரி


டி.எஸ்.

### தன்னைப் பலப்படுத்தவே சிங்கள மகாசபையை பண்டா நிறுவினார்

தன்னைப் பலப்படுத்தும் நோக்கில் பண்டாரநாயக்கா சிங்கள மகாசபையை ஸ்தாபித்தார் தனது சிங்கள மகா சபையைக் கலைக்காது டி.எஸ்.சேனநாயக்காவின் தலைமையில் ஸ்தாபிக்கப்பட்ட ஐக்கிய தேசியக் கட்சியில் பண்டாரநாயக்காவும் ஒருவரானார். சேனநாயக்க, சேர்.ஜோன்.கொத்தலாவல, ஜே.ஆர்.ஜெயவர்த்தன ஆகிய மாமன் மருமக்கள்தான் கட்சியின் அதிகாரபீடமாயினர். அதனால்தான் யூ.என்.பியினை Uncle and Nephew Party என அழைப்பர். கொத்தலாவல, ஜெயவர்த்தன என்பவர்களுக்கு ஊடான சேனநாயக்க கட்சிக்குள் பண்டாரநாயக்காவிற்கு எதிரான வியூகத்தை அமைத்தார். கட்சியின் இரண்டாவது நிலை கொத்தலாவலவுக்குரியது என்ற நிலை வெளியிற் தென்படலாயிற்று. உண்மையில் பண்டாரநாயக்கவிற்கு எதிராக கொத்தலாவலவைத் தான் சேனநாயக்கா முன்னிறுத்தினார். கட்சியின் இரண்டாம் நிலையில் தான் இல்லை என்பதை உணர்ந்த பண்டாரநாயக்கா ஐ.தே.கவை விட்டு வெளியேறி சுதந்திரக் கட்சியை ஸ்தாபித்தார். தனது சிங்கள மகா சபையின் தளத்தைக் கொண்டே சு.காவை ஸ்தாபித்தார். சு.கவை ஆரம்பித்த பின்புதான் பண்டாரநாயக்க சிங்கள மகாசபையைக் கலைத்தார் என்பது குறிப்பாகச் சுட்டிக் காட்டப்பட்டுவரும் ஒரு விடயமாகும். சிங்கள மகா சபையை அவர் ஸ்தாபித்திருந்ததும் அத்துடனேயே அவர் வேறு கட்சிகள் அமைப்புக்களில் பங்குவகித்ததும் சு.கவை ஸ்தாபிக்கும்வரை அதனை அவர் கலைக்காது சு.கவை ஸ்தாபித்ததோடு தான் அதனை அவர் கலைத்ததும் அவரது அரசியல் உள்நோக்கங்களையும் குடும்பப் போட்டிகளையும் தெளிவாகக் காட்டி நிற்கின்றன. அதேவேளை ஐ.தே.கவுக்குள் பண்டாரநாயக்கவின் நிலை காலியானதும் சேனநாயக்கவிற்கும் கொத்தலாவலவுக்கும் இடையேயான மாமன்-மருமகன் பந்தத்தை விடவும் சேனநாயக்கவிற்கு அவரது மகன் டட்லி சேனநாயக்கவிற்கும் இடையேயான தந்தை- மகன் உறவு முதன்மை பெற்றது. அதாவது பண்டாரநாயக்கவிற்கு எதிராக கூட்டுக்குடும்பம் ஒன்றாய் நின்றது. பண்டாரநாயக்க வெளியேற சேனநாயக்கா தனது மகனுக்கே வாரிசு உரிமையை வழங்கினார்.

இரண்டாம் உலக மகாயுத்தம் நிகழ்ந்து கொண்டிருந்த காலத்தில் சிங்கள மக்கள் மத்தியில் மூன்று அரசி[illegible] காண[illegible] ஒன்று சிங்கள மக்கள் மத்தியில் அதிக செல்வாக்கைப் பெற்றிருந்த டி.எஸ்.சேனநாயக்கா தலைமையிலான தீவிர வலது சாரித்தளம் மற்றையது கலாநிதிகள் என்.எம்.பெரெரா, கொல்வின் ஆர். டி.சில்வா தலைமையிலான இடதுசாரித்தளம், மூன்றாவது பண்டாரநாயக்க தலைமையில் காணப்பட்ட சிங்கள மகா சபைத்தளம் என்பனவாகும். ஆனால், பண்டாரநாயக்கா தலைமையிலான தளம் அப்போது தன் சக்தியை அதுவரை நிரூபித்திருக்கவில்லை. இப்பின்னணியில் பிரித்தானியர் சேனநாயக்கவை தமது நண்பராய் தேர்ந்தெடுக்கலாயினர். பிரித்தானியருடன் முரண்பட்டுக்கொண்டிருந்த சேனநாயக்கா அவர்களின் நண்பராய் மாறும் படலம் உருவானது. இப்படி சேனநாயக்கா பிரித்தானியரின் மிகத் தெளிவான, மிக இறுக்கமான நண்பராக மாறிய காலத்தில் பண்டாரநாயக்கவும் டி.எஸ். சேனநாயக்காவிற்குப் பின்னால் நின்ற ஒருவராவார்.

### பிரித்தானியர்- சிங்களவர் கூட்டுச் சதியை தமிழ்த் தலைவர்கள் கண்டு கொள்ளவில்லை

இரண்டாம் உலக மகாயுத்தம் முடிவடைந்த சூழலில் இந்தியாவிற்குச் சுதந்திரம் அளிக்க வேண்டிய பின்னணியில் இலங்கையை பிரித்தானியர் தம் அணிக்குள் வளைத்தெடுக்க திட்டமிட்டனர். சிங்கள மக்கள் மத்தியில் தலைமைப் பாத்திரம் வகிக்கக்கூடிய தீவிர வலதுசாரியான டி.எஸ்.சேனநாயக்காவை தம்வசப்படுத்த பிரித்தானியர் திட்டமிட்டனர். அதுவரை இந்திய தேசிய காங்கிரசுடன் தனது சாய்வைக் கொண்டிருந்த டி.எஸ்.சேனநாயக்காவை பிரித்தானியர் தம்பக்கம் சாயவைத்தனர். சேனநாயக்காவினதும் அவரது குடும்பத்து நலன்களையும் பாதுகாத்தல், சிங்களவர்களுக்குச் சாதகமான அரசியல் யாப்பை உருவாக்குதல் என்ற விட்டுக்கொடுப்புகளை சேனநாயக்காவிற்கு பிரித்தானியர் செய்துகொண்டு பிரித்தானியருக்குத் தேவையான பிரித்தானிய தளங்களை இலங்கையில் அமைத்தல், பிரித்தானியருக்குத் தேவையான அரசியல், பொருளாதார,வெளியுறவுக் கொள்கையை இலங்கை பின்பற்றல் என்பதான பரகசியமானதும் சில இரகசியமானதுமான ஒப்பந்தங்களிற்கு அவர்கள் வந்தனர். ஐவர் ஜெனிங்ஸ், சோல்பரி, ஒலிவர் குணதிலகா, டி.எஸ்.சேனநாயக்கா ஆகிய நால்வருக்கிடையேயான ஒரு கூட்டுத்திட்டமாக இது நிறைவேறியது. தமிழ்த் தலைவர்கள் இத்தகைய கூட்டுச் சதியைக் கண்டுகொண்டதாக இல்லை. மாறாக பல தமிழ்த் தலைவர்களிடம் பிரித்தானியர் மீதான நிகரற்ற எஜமானிய விசுவாசம் இருந்தது.அதேவேளை, இப்படி இலங்கைத் தீவை விற்றபோது பண்டாரநாயக்காவும் அவருடன் கூடவே இருந்தார். பிரித்தானியருடன் பாதுகாப்பு, வெளியுறவு என்ற அடிமைச் சாசன ஒப்பந்தங்களில் கையெழுத்திட்ட மந்திரி சபையிற் தான் பண்டாரநாயக்காவும் இரண்டாம் நிலை அந்தஸ்து வகிக்கும் ஒருவராய் இருந்தார்.

டி.எஸ்.சேனநாயக்கா குடும்பரீதியாக பண்டாரநாயக்காவை கட்சிக்குள் சுற்றிவளைத்தபோது, அதாவது ஜோன் கொத்தலாவல, ஜெயவர்த்தனா, டட்லி சேனநாயக்கா எனப் பண்டாரநாயக்காவிற்கு எதிராக குடும்ப ரீதியாக தடைச்சுவர்கள் தெளிவாகக் கட்டியெழுப்பப்பட்டபோதுதான் அதைக் கண்டு பண்டாரநாயக்கா சீற்றமடைந்து 1951 ஆம் ஆண்டு ஐ.தே.க.வை விட்டு வெளியேறினார். அப்படி வெளியேறிய பண்டாரநாயக்கா றதுல குடும்பங்களையும், ராஜபக்ஷ குடும்பங்களையும் தன் தளமாகக்கொண்டு சுதந்திரக் கட்சியை நிர்மாணித்து வளர்த்தார். இதன்மூலம் பண்டாரநாயக்கா தலைமையிலான கூட்டுக்குடும்பங்களும் நட்புக் குடும்பங்களும் ஒருபக்கமாய் அமைய, சேனநாயக்கா தலைமையிலான கூட்டுக்குடும்பங்களும் நட்புக்குடும்பங்களும் மறுபக்கமாய் அமைந்தன. இந்நிலையில் இவ்விரு குடும்ப அணிகளும் தத்தமது குடும்ப ஆதிக்கத்திற்கான தெளிவான போட்டியில் ஈடுபட்டன.

பண்டாரநாயக்கா ஐ.தே.கவை விட்டு வெளியேறி 8 மாதங்களில் 1952 ஆம் ஆண்டு டி.எஸ்.சேனநாயக்கா திடீரென மரணமடைந்தார். அவ்வாறு அவர் மரணமானதும் பிரித்தானியருக்கும் சேனநாயக்காவிற்கும் இடையே ஏற்கனவே செய்யப்பட்டிருந்த இரகசிய ஒப்பந்தத்தின்படி [illegible] மகன் டட்லி சேனநாயக்[illegible] தேசாதிபதி சோல்பரி, பிரதமராக நியமித்தார். இலங்கை அரசியலில் எல்லாவற்றிற்கும்பால் குடும்பம்தான் பிரதானமானது என்ற நிலையை முழு அளவில் இது ஸ்தாபித்தது. சேனநாயக்காவின் கூட்டுக்குடும்ப உறுப்பினராய் கட்சியில் இரண்டாம் நிலையிலிருந்த ஜோன் கொத்தலாவலவை இந்நியமனம் கடுமையாகப் பாதித்தது. அவர் ஆத்திரம் கொண்டு சேனநாயக்கா குடும்பத்திற்கு எதிராக எழுதியும் தாக்கியும் வந்தாராயினும் இறுதியாக கூட்டுக்குடும்பச் சமரசம் கைகூடியது.

### தமிழரின் முதுகில் ஏறிய பண்டாவுக்கு ஜவகர்லால் நேரு கைகொடுத்து உதவினார்

இப்பின்னணியில் பண்டாரநாயக்கா ஒரு வேட்டைக்காரனுக்குரிய வீராவேசத்துடன் சேனநாயக்கா குடும்பத்தைத் தோற்கடிக்க முனையலானார். அதற்காக எதையும் செய்ய, எத்தகைய சக்திகளையும் பயன்படுத்தத் தயாரானார். பிரித்தானியரும் அவரது இராணுவத் தளங்களும் சேனநாயக்கா குடும்பத்திற்கான அரணாக அமைந்திருந்ததை உணர்ந்த பண்டாரநாயக்கா, அதற்கு எதிரான கொள்கையை ஆவேசத்துடன் தீட்டினார். பிரித்தானியருக்கெதிராக, இந்தியப் பிரதமராயிருந்த ஜவகர்லால் நேருவின் கரங்களைப் பற்றிப்பிடித்தார். குடும்பப் போட்டியும் வெளியுறவுக் கொள்கையும் ஒன்றுடனொன்று இணைந்து கொண்டன. இவ்வாறாக குடும்ப ஆதிக்க போட்டி இனப்பிரச்சினையிலும், வெளியுறவுக் கொள்கையிலும் தெளிவாக ஆதிக்கம் செலுத்தத் தொடங்கியது. டி.எஸ்.சேனநாயக்காவை திருப்திப்படுத்துவதற்காக 1947 ஆம் ஆண்டு பிரித்தானியர் தமிழரின் கால்களை நறுக்கினர் - சோல்பரி யாப்பு. நேரு பக்கம் சாய்ந்த பண்டாரநாயக்காவை நேரு திருப்திப்படுத்தத் தயாரானார். இந்நிலையில், தமிழரின் முதுகில் ஏறிய பண்டாரநாயக்காவிற்கு 1956 ஆம் ஆண்டு நேரு கைகொடுத்து உதவுபவரானார். இங்கு பண்டாரநாயக்காவின் வெளியுறக் கொள்கைக்குள் தமிழர் பலியிடப்பட்டதை சிறப்பாகக் கவனிக்கவேண்டும். பிரித்தானியருடனான டி.எஸ். இன் வெளியுறவுக் கொள்கைக்குள் தமிழர் ஒடுக்கப்பட்டது போலவே இங்கு இந்தியாவுடனான பண்டாரநாயக்காவின் வெளியுறவுக் கொள்கைக்குள்ளும் தமிழர் நசியுண்டனர். இனப்பிரச்சினையும் வெளிநாட்டுக் கொள்கையும் இப்படி குடும்ப அரசியல் ஆதிக்கப் போட்டியுடன் இணைந்து செயற்பட்டுவந்த விசித்திரத்தை அப்போது தமிழ்த் தலைமைகள் புரிந்துகொண்டதாய் தெரியவில்லை. பண்டாரநாயக்காவிடம் ஓர் உறுதியான கொள்கை இருந்தது. அது எப்படியாயினும் தான் பதவிக்கு வரவேண்டுமென்பதுதான்.

சேனநாயக்கா குடும்பத்திற்கு எதிரான வியூகத்தை அமைப்பதில் பண்டாரநாயக்கா முற்றிலும் ஈடுபட்டார். முதலாவதாக சேனநாயக்கா குடும்பத்திற்கு எதிரான குடும்ப வியூகமொன்றை உருவாக்கினார். அடுத்து சேனநாயக்க குடும்பத்திற்கு அரணான வெளியுறவு கொள்கையை உடைக்கவல்ல ஒரு வியூகத்தை அமைத்தார். மூன்றாவதாக மொழிப் பிரச்சினைக்கூடாக இனவாதத்தைப் பயன்படுத்தினார். அப்படியே மதப்பிரச்சினை, சாதிப்பிரச்சினை என்பவற்றையும் பயன்படுத்தினார்.


நேரு

அத்துடன் "இடது சாரிகளை" மிகச் சாதுரியமாகப் பயன்படுத்தினார். மொத்தத்தில் அனைத்து நிலமானிய சக்திகளையும் தனக்கு அரணாக அமைத்தார். உண்மையில் பண்டாரநாயக்கா தனது நிலமானிய அம்சங்களைத் தேசியவாதம் என்று திரித்தார். உண்மையில் பண்டாரநாயக்கா ஒரு பிற்போக்கு நிலமானியவாதியே தவிர தேசியவாதியல்லர்.


ஆர்.டி. பண்டாரநாயக்க

சேனநாயக்க குடும்பத்தை வெற்றி கொள்வதற்கேற்ற உடனடி நாகாஸ்திரமாக "இருபத்திநான்கு மணித்தியாலயத்திற்குள் தனிச் சிங்களச் சட்டத்தை நிறைவேற்றுவேன்" என்ற கொள்கையை முன்வைத்தார். சேனநாயக்கா குடும்பத்தை வீழ்த்தக் கக்கிய அந்த விஷம், இலங்கைத் தீவையே நச்சுப் பொய்கையாக்கி விட்டது. இலங்கைத்தீவை நவீன அரசியற் பொருளாதார வளர்ச்சிக்கு இட்டுச் செல்ல முடியாமைக்கு இத்தகைய குடும்பாதிக்கவாதம், நிலமானியவாதம் ஆகிய அனைத்தினதும் கூட்டு ஒரு பிரதான காரணியாய் அமைந்தது. மொத்தத்தில் சிங்களத் தேசியவாதத்தின் உள்ளடக்கமென்பது சிங்களப் பிரபுத்துவ வாதந்தான். பிரபுத்துவவாதம் குடும்பவாதத்தில் கால்கோள் ஊன்றியது.

(13 ஆம் பக்கம் பார்க்க )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒத்துமாறல்

கொழும்பிலுள்ள அரச திணைக்களத்தில் (மத்திய) அரசாங்க முகாமைத்துவ உதவியாளராக (எழுதுவினைஞராக) கடமையாற்றும் ஒருவர் யாழ்ப்பாணத்திற்கு ஒத்துமாற விரும்புகின்றார். ஒத்துமாற விரும்புவோர் தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி எண்:

(43805)(32-11-14) **0777 253344.**


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அன்னை மடியில்
19-10-1947

இறைவன் பாதார விந்தத்தில்
11-11-2005

# முருகன் சின்னம்மா

**தாயே நீ எங்கே சென்றாய்?**
**நீ இருந்த இடமெல்லாம் தேடுகின்றோம்**
**காணவில்லை உன் திருமுகத்தை**
**கண்கள் கண்ணீர்தான் சொரிகிறதம்மா!**

இன்று (11.12.2005) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் 31ஆம் நாள் அஞ்சலி நிகழ்விலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கைதடி மத்தி.
(43834) (24-32-14-11)

தகவல்:
**உன் உறவுகள்.**


## ஓர்கன் விற்பனைக்கு

சொந்தப் பாவனையில் உள்ள ஓர்கன் (Organ) (DX 7s Yamaha) விற்பனைக்குண்டு.

தொடர்பு : **எஸ். சஞ்சய்**
**0773583927** (43784)(32-11-14)

## CANON போட்டோ கொப்பி

NP 1215, 3025, 3225, 3725, 3825

இயந்திரங்களுக்குரிய சகலவிதமான உதிரிப்பாகங்கள் (SPARE PARTS) மொத்தமாகவும், சில்லறையாகவும் மலிவான விலையில் பெறலாம்.

பாவித்த STABIGUARDS உம் கிடைக்கும்
**தொடர்பு: 071 4142976**

## ஒத்துமாறல்

கொழும்பில் கற்பிக்கும் பட்டதாரி ஆசிரியர், யாழ்ப்பாணம் அல்லது வவுனியாவில் கடமையாற்றும் ஆசிரியருடன் ஒத்துமாற விரும்புகின்றார்.

தொடர்புகளுக்கு : 0776 913127 (43595)(32-11-14)


## சுத்திகரிப்புத் தொழிலாளருக்கு நியமனக் கடிதங்கள்

வலி.தென்மேற்கு,டிசெ.11

யாழ்.மாவட்டத்தில் அரசினர் வைத்திய சாலைகளிலும் மற்றும் சுகாதாரத் திணைக்கள நிறுவனங்களிலும் அமைய சுத்திகரிப்பு தொழிலாளர்களாகக் கடந்த பல வருட காலமாக பணிபுரிந்து வந்தவர்களுக்கு வடக்கு - கிழக்கு மாகாண சுகாதார சேவை பணிப்பாளரால் நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

ஜூலை மாதம் முதலாம் திகதி தொடக்கம் இவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டிருக்கிறது என இவர்களுக்கு கடந்த வாரம் அனுப்பி வைக்கப்பட்டுள்ள நியமனக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நியமனக் கடிதங்கள் யாவும் யாழ். சுகாதார சேவை பிரதி மாகாணப் பணிப்பாளர் பணிமனை ஊடாகச் சம்பந்தப்பட்டவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (எ-135)

## கர்ப்பவதிகள் கிளினிக் இடமாற்றம்

பண்டத்தரிப்பு அரசினர் கிராமிய வைத்தியசாலையில் எதிர்வரும் 14 ஆம் திகதி புதன் கிழமை நடைபெற இருந்த பண்டத்தரிப்பு,வடலியடைப்பு, பிரான்பற்று ஆகிய பகுதிகளிலுள்ள கர்ப்பிணித் தாய்மாருக்கான கிளினிக் அங்கு நடைபெறமாட்டாது என்றும் பிரான்பற்று ஆரம்பசுகாதார நிலையத்தில் இந்தக் கிளினிக் அன்றைய தினம் நடைபெறும் என்றும்- அறிவிக்கப்பட்டுள்ளது.

மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எஸ்.சிவகணேஷ் இக்கிளினிக்கில் கர்ப்பவதிகளைப் பரிசோதித்து சிகிச்சை வழங்கவுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-135)

## உரும்பிராயில் கலாசார மண்டபம்

உரும்பிராய் தெற்கு செல்வபுரம் பகுதியில் நியாப் திட்டத்தின் கீழ் கலாசார மண்டபம் ஒன்று நிர்மாணிக்கப்படவுள்ளது. (6-154)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

மட்டுவில் - நுணாவில் வணிகர் மன்றம், நுணாவில் வீரபத்திரர் ஆலய பரிபாலன சபை, நுணாவில் கிராமியக் குழு, நுணாவில் சமுர்த்திச் சங்கம் ஆகியவற்றின் தலைவரும்



சமுர்த்தி மகா சங்கம், நுணாவில் விவசாய சம்மேளனம் ஆகியவற்றின் உபதலைவரும் சமுர்த்தி கட்டுப் பாட்டுச் சபை உறுப்பினருமான

**சுப்பிரமணியம் பூபாலசிங்கம்**

அவர்கள் கடந்த 05.12.2005 அன்று சாவகச்சேரி மாவட்ட நீதிபதி முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதிவானாகச் சத்தியப்பிரமாணம் செய்தமையையிட்டு பாராட்டி வாழ்த்துகின்றோம்.

(நி/46215)(32-11-14)

நுணாவில் சந்தி,
சாவகச்சேரி.

**ரங்கநாதன் குடும்பம்,**
**சதீஸ் மோட்டேர்ஸ் எஞ்சினியர்ஸ்.**




## உங்களுக்குத் தெரியுமா?

* செல்போனின் கதிர் இயக்கம் மூளை - இருதய செல்களை பாதிப்படையச் செய்கின்றன.
* ரீ.வி மற்றும் கணனிகளின் மின்காந்த சக்தி நம் உடலில் உள்ள உயிர்காந்த சக்தியில் அழுத்தத்தை ஏற்படுத்துகின்றன.

தவிர்க்க முடியாத இவைகளினால் ஏற்படும் உடல் நோவு -வருத்தம் - மன அழுத்தம் ஆகியவற்றிலிருந்து பாதுகாப்புப் பெற :

**ஸ்ரீ ஸ்ரீ ரவி சங்கர்ஜியின் வாழும் கலைப் பயிற்சி**

உடல் முழுவதும் ஒவ்வொரு செல்களிலும் பிராண சக்தியை பரவச் செய்து உயிர்காந்த சக்தியை சமநிலைப்படுத்துகிறது.

**நாள் :** 12.12.2005 திங்கட்கிழமை பின்நேரம் 6 மணி (பயிற்சி பற்றிய இலவச அறிமுக உரை)

**இடம் :** சர்வதேச வாழும் கலை அறநிறுவனம் யாழ்.வீதி, தேசிய சேமிப்பு வங்கி - எதிர் ஒழுங்கை, மானிப்பாய்.

*பயிற்சி நாள்கள்: 13.12.05முதல் 18.12.05வரை*
*பயிற்சி நேரம் : பின்னேரம் 6 மணிமுதல் 8மணி வரை*
*மேலும் தொடர்புகளுக்கு: 077 - 9059544, 077 - 9059549, 077-6160214*

www.artofliving.org www.srisriravishankar.org

(43131)(32-11-14)


## மரண அறிவித்தல்

### திருமதி பத்மநாதன் கிருஷ்ணவேணி



யாழ்ப்பாணம், நீராவியடி, கடையிற்சுவாமி வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பத்மநாதன் கிருஷ்ணவேணி 08-12-2005 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் சர்வணமுத்து - சரஸ்வதி ஆகியோரின் அன்பு மகளும் முத்துலிங்கம் மனோன்மணி ஆகியோரின் அன்பு மருமகளும் மு.பத்மநாதன் (காந்தி) அவர்களின் அன்பு மனைவியும் பபிலன் (யா/வைத்தீஸ்வரா கல்லூரி), அபிதாஜினி (யா/இந்து மகளிர் கல்லூரி), அபிராமி (யா/இந்து ஆரம்ப பாடசாலை), விக்னேஸ்வரன் ஆகியோரின் அன்புத் தாயும் அமரர் குணரத்தினம், விஜயரட்ணம் (உடுப்பிட்டி), அமரர் ஜெயரட்ணம், பத்மலோஜினி (பிரான்ஸ்), சுலோஜினி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் திருமதி செல்வராணி ஆனந்தராஜா, சிவராசா (ஜேர்மனி), திருமதி கௌரி மதியழகன், அம்பிகை ஈஸ்வரன் (பிரான்ஸ்), சிவா, சிவந்தினி, அமரர் சிறிதரன் (சுவிஸ்), திருமால் (பிரான்ஸ்), திருமதி சறோ, திருமதி மகேஸ்வரி (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.12.2005) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோம்பையன்மணல் இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*29/2,கடையிற்சுவாமி வீதி,*
*நீராவியடி, யாழ்ப்பாணம்.*
T.P. 077 6176916.

தகவல்:
**மு.பத்மநாதன்** (கணவர்).
(43850) (24-32-14-11)


IOM International Organization for Migration

## Procurement and Logistics Assistant Grade 4
## Location :- JAFFNA.

**JOB PROFILE**

Procurement and Logistics Assistant will be responsible for planning, managing and directing logistics support for IOM operations to include procurement, distribution and warehousing, material, equipment, vehicles. The incumbent will provide efficient coordination and use of all IOM vehicles involved in the operation and ensures delivery of response in accordance with the IOM Fundamental Principles and the role assigned to IOM under guidance and support of Head of sub office, Jaffna.

**MAIN RESPONSIBILITIES**

- Develop a logistics plan and procedures in consultation with HSO and admin. The Plan should include Procurement, Warehousing, Transport and Fleet management; Personnel support (feeding, lodging, transportation)
- Procure goods and services locally on behalf of the IOM programme following procedures of IOM on Procurement
- To implement logistic procedures, secure that they are followed, and to determine the objectives/priorities in consultation with the Head of mission, Admin/Finance Assistant
- Organize the transportation, customs clearance and other formalities for incoming goods in liaison with the national logistic and admin/logistic officer
- Closely liaise with international, government and other non-government agencies if necessary
- Ensure that the goods procured are within the actual budget lines for logistic matters
- Ensure all stocks and inventories are properly managed

**QUALIFICATIONS and SKILLS Required**

- G.C.E A/L with at least three years extensive experience in logistics related skills as listed above (managing supplies, team support, vehicle management, and communications) and sound knowledge of logistics practices and standards
- Detailed knowledge of community support organizations and their specific roles
- Good skills in leadership and management
- Flexibility and ability to work well and make decisions under stress and potentially adverse conditions
- Strong communications skills
- Experience in inventory management and warehousing
- Good problem solving skills

Interested candidates are requested to send in their CVs by snail mail or e-mail on or before December 17th 2005 with their immediate contact number and two non related referees.

**Mission To Sri Lanka - Colombo**
1 Police Park Place • Colombo 5 • Sri Lanka
Tel: +94.11.5361941 • Fax +94 11.5361944 •
E-mail:iomsl@sltnet.lk •
Internet:www.iomsrilanka.org

**Sub office - Jaffna**
38 Temple Rd • Jaffna • Sri Lanka
Tel:+94.212227680 •
E-mail: iomja@sltnet.lk

(43885)

## பாடசாலை மாணவர்களுக்கான ஆங்கில சிறப்பு வகுப்பு

விடுமுறையில் பிள்ளைகள் SAAMSTECH பாடவிதானம் மூலம் ஆங்கிலத்தில் தேர்ச்சி பெற அரிய சந்தர்ப்பம்.

**ஆரம்பம் : 15.12.2005**
**காலம் : 3 வாரங்கள்**
**கட்டணம் : ரூபா 1500/-**

காலை மற்றும் மாலை பிரிவுகள். 7 முதல் 10 மற்றும் 11 முதல் 13 ஆம் வகுப்புகளுக்கு தனித்தனி பிரிவுகள். நேரடி வகுப்பும் குழுப்பயிற்சியும் ஒலிப்பயிற்சியும். பாட அலகுகள் இலவசம். பயிற்சி முடிவில் சான்றிதழ்.

**விசேட சலுகை**
**இன்றும் நாளையும் பதிவு செய்வோருக்கு பாடக்கட்டணம் ரூபா 1000 மட்டும்.**

பதிவுகளுக்கு

**SAAMSTECH**
841, Hospital Road, Jaffna 021 - 4591571
233/4, Kasthuriar Road, Jaffna 021 - 2229505


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதையாகவே வாழ்ந்த பெருங்கவிஞன் பாரதி

"பாட்டுக்கு ஒரு புலவன் பாரதியடா - அவன் பாட்டைப் பண்ணோடு ஒருவன் பாடினானடா! கேட்டுக் கிறுகிறுத்துப் போனேன்டா - அந்தக் கிறுகிறுப்பில் உளறும் மொழி பொறுப்பாயடா!"

என்று பாரதியின் பாட்டுத் திறத்தினைத் தனக்கே உரிய தன் நடையில் கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளை பாடுகின்றார்.

இவரை மிஞ்சுகின்ற அளவிற்கு பாரதியின் தாசனாக விளங்கிய பாரதிதாசன் அவர்கள் பாரதியை பின்வரும் முறையில் உச்சி மீது உவந்து ஏற்றிப் பாடுகின்றார். இதோ அவருடைய பாடல்

''பைந்தமிழ்த் தேர்ப்பாகன் அவனொரு
செந்தமிழ்த் தேனீ, சிந்துக்குத் தந்தை
குவிக்கும் கவிதைக் குயில்! இந்நாட்டினைக்
கவிழ்க்கும் பகையைக் கவிழ்க்கும் கவிமுரசு!
நீடுதுயில் நீக்கப் பாடி வந்த நிலா
காடு கமழும் கற்பூரச் சொற்கோ!
கற்பனை ஊற்றாம் கதையின் புதையல்
திறம்பாட வந்த மறவன், புதிய
அறம்பாட வந்த அறிஞன், நாட்டிற்
படரும் சாதிப் படைக்கு மருந்து,
மண்டும் மதங்கள் அண்டா நெருப்பவன்
அயலார் எதிர்ப்புக் கணையா விளக்கவன்
என்னென்று சொல்வேன் என்னென்று சொல்வேன்!''

முன்னே குறிப்பிட்ட கவிமணியை மிஞ்சுகின்ற அளவிற்கு பாரதியை நம் பாரதிதாசன் படம் பிடித்துக் காட்டுகின்ற பாங்கு

## இன்று அவரது 123 ஆவது பிறந்ததினம்

எம்மை மெய்சிலிர்க்க வைக்கின்றது. பைந்தமிழ் பற்றுடைய பாரதிதாசனைப் போல் பார்ப்பனீயத்தை சாடி தமிழகத்தில் வேறு எவரும் இல்லை. இருந்தாலும் பார்ப்பனன் குலத்தில் தோன்றிய பாரதிக்கு அவன் தாசனாக விளங்கினார்.

பார்ப்பன குலத்தில் பாரதி தோன்றினாலும் ''பார்ப்பானை ஐயர் என்ற காலமும் போச்சே'' என்று பாடியவர் பாரதி. பார்ப்பனர் இருவர் பைந்தமிழ்ப் பற்றுடையவர்கள். ஒருவர் பாரதி, மற்றையவர் சூரிய நாராயண சாத்திரி என்ற தன் இயற்பெயரை பரிதிமாற் கலைஞர் என்று மாற்றிய தமிழ் அறிஞர். எனவேதான், இருவர் மீதும் பாரதிதாசனுக்கு தனிப்பற்றும் பாசமும் இருந்தது.

### தமிழக கவிஞர்

இந்திய விடுதலைப் போராட்டத்தை ஒட்டிய காலத்தில் பல கவிஞர்கள் தோன்றியுள்ளனர். இவர்களுள் நினைவில் வைக்கத்தக்கவர்கள் சிலர். கவிமணி அவர்களோ பாரதிக்கு சில ஆண்டுகள் மூத்தவர். அவர் இந்திய விடுதலை வரலாற்றில் நேரடியாகப் பங்கு கொள்ளாவிடினும் நல்ல கவிஞர் என்று மதிக்கத்தக்கவர்.

குழந்தைக் கவிஞர், இயற்கைக் கவிஞர் என்று பெயர் பெற்றதோடு ஆங்கிலப் பாடல்கள் பலவற்றைத் தமிழில் தந்த சிறப்பும் இவரையே சாரும். இவரின் ''ஆசிய ஜோதியும்'' "உமார்காயர்" பாடல்களும் அழியாப் புகழ் பெற்றவை. பாரதியின் தாசனாக விளங்கிய பாரதிதாசனும் ஒரு காலத்தில் இந்திய தேசியத்தால் ஈர்க்கப்பட்டு 'கதர்ப்பாட்டு' பாடிய வரலாறு உண்டு.

இதனையொட்டிய விரிவை பேராசிரியர் இளவரசு எழுதிய நூலில் காண்க. ஆனால், இவர் காலப் போக்கில் இந்திய தேசியத்தில் இருந்து விடுபட்டு திராவிடத் தேசியமும் தமிழ்த் தேசியமும் பாடியது வரலாறு ஆகும்.

### இராஜாஜி வாழ்த்திய பாரதி

மூதறிஞர் இராஜாஜியுடன் சில கருத்துக்களில் நாம் மாறுபடுவது உண்டு. ஆனால், அவர் நல்ல மதிப்பீட்டாளர் என்பதில் மாறுபட்ட கருத்துக்கள் இருக்க முடியாது.

எனவேதான் அவர் பாரதியைப் பற்றிக் குறிப்பிடுகையில் பாரதியைத் 'திலகர் யுகக் கவிஞர்' என்றும், இந்திய விடுதலை இயக்கத்திற்கு தன்னை அர்ப்பணித்த மற்றைய கவிஞர் நாமக்கல் இராமலிங்கம்பிள்ளை அவர்களை காந்தி யுகக் கவிஞர் என்றும் குறிப்பிட்டுச் சென்றுள்ளார்.

அதேவேளையில் இவர்கள் காலத்தில் வாழ்ந்த யோகி சுத்தானந்த பாரதியையோ சுப்பிரமணியம் யோகி அவர்களையோ கம்பதாசன் அவர்களையோ நாம் மறப்பதற்கில்லை. ஆனால், விடுதலை தவறி பாழ்பட்டுக் கிடந்த இந்திய சமுதாயத்திற்கும் - தமிழ்ச் சமுதாயத்திற்கும் பாரதி ஊட்டிய எழுச்சியை வேறு எவரும் ஊட்டவில்லை என்பது வரலாறு நடுநிலைமையில் நின்று வழங்குகின்ற தீர்ப்பாகும்.

### பாரதியும் இரவீந்திரநாத்தாகூரும்

பாரதியை இவ்விதம் உச்சிமீது வைத்து உவந்து போற்றுகின்ற போது வங்கப் பெருங்கவிஞன் இரவீந்திரநாத்தாகூரை நாம் மறப்பதற்கில்லை. அவரும் இந்திய விடுதலைக்காக குரல் எழுப்பியவர் தான். ஆனால், பாரதிபோல் விடுதலை வேட்கைக்கு பொதுமக்களை அவரால் தட்டி எழுப்ப முடியவில்லை. 11.12.1882 இல் தோன்றிய பாரதி 11.09.1921 ஆம் ஆண்டு தனது 39 ஆவது அகவையில் தன்வாழ்வை முடித்துக்கொண்டார். இந்தியாவிற்கு விடுதலை கிடைத்தது. 1947 ஆகஸ்ட் 15. ஆனால், 1921 இல் அவர் மறைவதற்கு முன்பேயே


''ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே
ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோமே''

என்று எவ்வளவு முன்கூட்டிய உணர்வோடு இந்தியாவிற்கு விடுதலை கிடைக்கும் என்பதைப் பாடிச் சென்றார்.

இதனாற்றான் போலும் இரவீந்திரநாத்தாகூருக்கு ''நோபல்'' பரிசு கிடைத்தபோது எனக்கும் அது கிடைத்திருக்க வேண்டும் என்று பாரதி கூறியது புலமைக் காழ்ப்பில் (Intellectual Jealousy) எழுந்த கூற்று அல்ல. மாறாக உண்மைக்கு உட்பட்ட கூற்றே ஆகும்.

### பாரதி முரண்பாட்டின் மொத்த வடிவம்

பாரதியைப் பற்றி பல ஆய்வுகள் எழுந்துள்ளன. அவர் பற்றிப் பலதரப்பட்ட கருத்து கள் உள. பாரதியைக் கடவுள் என்று கருதுவோரும் உளர். பாரதியின் தேசிய விடுதலைப் பாடல்கள் ஒரு காலத்தை மிஞ்சி வாழப் போவதில்லையென்று மதிப்பீடு செய்வோரும் சிலர். தமிழ் இலக்கண வரம்பை மீறுகின்ற அளவிற்கு 'ஆச்சே' 'போச்சே' என்று கொச்சை நடையைக் கையாண்ட குற்றத்தைப் பாரதி மீது சுமத்து வோரும் உளர்.



பாரதியாருடைய கவிதைகளையும் உரைநடை நூல்களையும் நாம் மூழ்கிப் படிக்கின்ற பொழுது பலமுரண்பாடுகளை நாம் காணத்தக்கதாக இருக்கின்றது. ''முரண் பாட்டின் மொத்த வடிவம் பாரதி'' என்று முட்டி மோதுவோரும் உளர்.

இவ்விதம் ஆயிரம் குறைபாடுகளை நாம் பாரதியிடம் கண்டாலும் இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற கவிஞன் பாரதி என்பதையொட்டி எம்மிடையே மாறுபட்ட கருத்து இருக்க முடியாது.

'My personality is a bundle of contradictions' (என் ஆளுமை முரண்பாட்டின் மொத்த வடிவம்) என்று பாகிஸ்தான் உருவாவதை கனவு கண்ட கவிஞர் இக்பால் தன்னைப் பற்றி இவ்விதம் குறிப்பிடுகையில் பாரதியிடம் காணப்படும் முரண்பாடுகளை நாம் எல்லை மீறி வலியுறுத்தத் தேவையில்லை.

''ஆயிரம் தெய்வம் உண்டு என்று அலையும் அறிவிலிகாள் அறிவே தெய்வம் என்பதை அறியீரோ''

என்று பாடிய பாரதி பராசக்தியைப் பற்றியும், மாரியம்மன் பற்றியும், பிள்ளையார் பற்றியும் முருகன் பற்றியும் கண்ணனை வெவ்வேறு வடிவத்திலும் வர்ணித்த பாங்கினை நாம் எவ்விதம் எடுத்துரைப்பது என்ற கேள்விக்கு நாம் எவ்விதம் விடைகூறுவது என்பது சிக்கல் நிறைந்ததாகும்.

ஆனால், இத்தகைய குறைபாடுகள், முரண்பாடுகள் வேறு புலவர்களிடம் இருந்தது என்பதை நாம் உணர்வது நலம். பாரதி இந்திய தேசியத்தைப் பற்றியா, தமிழ் தேசியத்தைப் பற்றியா அதிகம் பாடினார் என்று எழுப்பப்படுகின்ற கேள்விக்கும் விடைகூறுவது கடினம். எனினும் தமிழ்த் தேசியத்தை மறவாத நிலையிற்றான் இந்தியத் தேசியத்தை அவர் பாடினார் என்பதை நாம் இங்கு நினைவு கொள்ளத்தக்கதாகும்.

''செந்தமிழ் வாழ்க செந்தமிழ் நாடு வாழ்க
பாரத மணித்திருநாடு வாழ்க''

என்று அவருடைய பாடல்கள் பல இனிது முடிவுறுவதை நாம் காணலாம்.

தமிழன் தகைமை உணர்ந்த பாரதி

யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதாவது எங்கும் காணோம் என்று பல்மொழி அறிந்த நிலையில் தமிழன் பாங்கினை எடுத்துக்கூறிய பாரதி ''தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவும் வகை செய்தல் வேண்டும்'' என்றும் பாடினான்.

அத்தோடு பிறநாட்டார் மதிக்கத்தக்க முறையில் திறமையான இலக்கியங்களை நாம் படைத்தல் வேண்டும் என்று பாடிய பாரதி பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ் மொழியில் பெயர்த்தல் வேண்டும் என்றும் காலத்தின் கருத்தோட்ட வளர்ச்சிக்கு ஏற்ப தமிழை வளம்படுத்த விரும்பியவன் பாரதி. "மெல்லத் தமிழ் இனிச் சாகும்'' என யாரோ ஒரு பேதை கூறிய கூற்றினைக் கேட்டுக் கொதித்தெழுந்த பாரதி

''மேற்கில் மெத்த வளரும் விஞ்ஞானத்தை அறிவியலை - எம் தமிழில் ஆக்கி எம் மொழியில் வளம் காண முனைந்தார் பாரதி''

### மகாகவி பாரதியின் எல்லை மீறிய தமிழ்ப்பற்று

இந்திய ஒருமைப்பாட்டினை வலியுறுத்திப் பாடிய தலைசிறந்த பாடல்தான் ''சிந்து நதிக்கரையில் ஓடம் ஓட்டும்...'' பாரதியின் பாடல். இப்பாடலில் மகாராஸ்திரர் வீரம் பேசப்படுகின்றது. கங்கை நதியினை இணைக்க வேண்டும். வட இந்தியாவில் விளைகின்ற கோதுமையைத் தமிழ்நாட்டிற்குக் கொண்டு வரவேண்டும் என்று பாடிப் பாரதி சேரநாட்டு அழகிய பெண்களோடு கூடி சுந்தரத்தெலுங்கு பாடவிரும்பினார்.

இவ்விதம் இந்திய ஒருமைப்பாட்டினை ஓங்கி ஒலித்த பாரதி தன்னை மீறிய நிலையில் தமிழ் உணர்ச்சிக்கு ஆளாக்கப்பட்டு தமிழனை மிஞ்சுகின்ற அளவிற்கு மூளை படைத்த ஒருவனைத் தான் காண விரும்பவில்லை என்றும் தமிழிச்சியை மிஞ்சுகின்ற அளவிற்கு ஒருத்தி அழகாய் இருப்பதை தன்னால் தாங்க முடியாது என்றும் கூறியவன் பாரதி.

### தமிழிசையை வரவேற்றவர்

சிந்து நதிக்கரையிலே என்ற பாடலில் கேரளப் பெண்களுடன் சுந்தரத் தெலுங்கில் [illegible] ரும் பிய பாரதி தமிழிசை தமிழகத்தில் தாழ்ந்து போவதைக் கண்டு கொதித்து எழுந்து ''வாதாபி கணபதி ஜெயம் ஜெயம்'' என்று வடமொழியில் நமது இசைக்கலைஞர்கள் தம் இசை நிகழ்ச்சியை தொடக்கி வைப்பதை வன்மையாகக் கண்டிக்கின்றார்.

இப்பாடலை விடாது கேட்கும் அளவுக்கு உங்கள் காதுகள் என்ன இரும்பா; அவ்வளவு மரத்துப் போய்விட்டதா என்று கேட்டு, ஏன் தமிழன் தமிழில் பாட தயங்குகின்றான் என்று அவர் அன்று கேட்ட கேள்வி இன்றும் பொருள் பொதிந்த கேள்வியாக விளங்குகின்றது. பார்ப்பானை ''ஐயனென்று என்ற காலமும் போச்சே'' என்று பார்ப்பனீயத்தை எள்ளி நகையாடிய பாரதி வடமொழி இசைக்கோ தெலுங்கு இசைக்கோ தமிழன் அடி பணிந்து அடிமையாகக் கூடாது என்று எம்மை எச்சரிக்கின்றார்.

தமிழ்மண் காத்து தாயகம் மீட்க பாரதி காட்டும் வழி

மொழி ஒரு இனத்தின் விழி மட்டுமல்ல; அது ஒரு இனத்தின் உயிரும் என்பதை உணர்ந்தவன் பாரதி. அவனின் "யாமறிந்த மொழிகளிலே'' என்ற பாடலும் ''செந்தமிழ் நாடெனும் போதினிலே இன்பத்தேன் வந்து பாயுது காதினிலே" என்ற பாடலும் சான்று கூறும்.

புரட்சிக் கவிஞர் பாரதியின் ''செந்தமிழ் நாடென்னும் பாடல்'' நினைவிற்கு வருகின்றது. நாற்பது வரிகள் கொண்ட இப்பாடலில் பதினைந்து இடங்களில் தமிழ் நாடு, தமிழ் நாடு என்று வலியுறுத்துகின்றார். அத்தோடு நில்லாது,

''நித்தம் தவம் செய்யும் குமரி எல்லை
வடமாலவன் குன்றம் இவற்றிடையே
புகழ் மண்டிக் கிடக்கும் தமிழ் நாடு''

என்று தமிழ் நாட்டின் எல்லையைக் பாங்குற பாரதி வலியுறுத்திச் சென்ற போதும் நித்தம் தவம் செய்யும் குமரி எல்லை எங்கள் எல்லையாக இருக்கின்றது.

ஆனால் வடமாலவன் குன்றத்தை இழந்து விட்டோம்.

ஒரு காலத்தில் தமிழ் ஈழத்தின் எல்லைப் பரப்பு வடக்கை, கிழக்கை, வடமேற்கை உள்ளடக்கி பத்தாயிரம் மைல் கொண்ட நிலப்பரப்பு எங்கள் மண்ணாக விளங்கியது. இலங்கைக்கு விடுதலை கிடைக்கின்ற போது அது எண்ணாயிரத்து ஐந்நூறு சதுர மைலாகக் குறைந்துள்ளது. இப்பொழுது எம்மிடம் இருப்பது ஏறக்குறைய ஏழாயிரம் சதுர மைல் கொண்ட பூமிதான். இதனையும் இழக்கும் நிலை ஏற்பட்டுவிட்டால் தமிழ் நிலத்தின் தொடர்பு துண்டிக்கப்படும். நாம் இந்து மாபெருங்கடலையே இறுக அணைக்கும் நிலை ஏற்படும்.

நிலைத்த வாழ்விற்கு நிலைத்த நிலப்பாதுகாப்பு தேவையென்று வலியுறுத்தும் பாரதியின் எச்சரிக்கும் பாடலை நினைவு கொண்டு தமிழ் மண்காக்க, தாயகம் மீட்க, உறுதிகொள்வோமாக. பாரதியின் பெருமை பற்றி மேடையெங்கும் முழங்குவதை விட பாரதி மேலே காட்டிய எல்லைப் பாதுகாப்புத் தான் எமக்கு வாழ்வு கொடுக்கும் என்பதனை நாம் உணர்வோமாக.

*

மா.க.ஈழவேந்தன்
(நாடாளுமன்ற உறுப்பினர்)

# காலத்துக்காக விழிப்புடன் இருப்போம்!

ஒருவன் எந்த வேலையும் கிடைக்காமல் ஏழ்மையாக வாழ்ந்து வந்தான். அவனின் நிலையைப் பார்த்த துறவி ஒருவர் ''இதோ இக்கடற்கரையில் இருக்கும் ஆயிரக்கணக்கான கற்களில் ஒரே ஒரு கல்லுக்கு மட்டும் தெய்வீக சக்தி உண்டு. கடல் அலைகள் படும் இடத்தில் அந்தக்கல் இருந்தாலும், அதைத் தொட்டுப் பார்த்தால் கதகதப்பாக இருக்கும். தெய்வீக சக்தி வாய்ந்த அந்தக் கல்லுக்கு இதுதான் அடையாளம். அந்தக் கல்லைக் கண்டு பிடித்து, எடுத்துக்கொண்டு போய், வீட்டின் பூசையறையில் வைத்து உனக்கு என்ன வேண்டுமோ கேள். அந்தக் கல் நீ கேட்டதையெல்லாம் கொடுக்கும்'' என்று சொல்லிவிட்டுச் சென்றார். உடனே கடற்கரையில் தேட ஆரம்பித்தான். முதலில் ஒரு கல்லை எடுத்தான். அது கதகதப்பாக இல்லாததால் மற்றக் கற்களோடுகலந்துவிடக் கூடாது என்று அடுத்த கடலில் வீசி எறிந்துவிட்டு, அந்தக் கல்லை எடுத்தான். அதுவும் கதகதப்பாக இல்லை. இப்படிப் பல மணிநேரம் கல்லைஎடுப்பதும்கடலில் வீசுவதுமாக இருந்தான். ஒரு மாதம் வரை இந்த வேலையைச் செய்தும், துறவி சொன்ன கதகதப்பான கல் கிடைக்கவில்லை. ஒரு கட்டத்தில் கல் எடுப்பதையும், கடலில் வீசுவதையும், அவன் தன்னிச்சையாகச் செய்ய ஆரம்பித்து விடுகிறான். அது போன்ற சந்தர்ப்பத்தில் அவன் ஒரு கல்லை எடுக்கிறான். வீசுகிறான். அப்போது அவனுக்கு 'சுரீர்' என்கிறது. தான் கடைசியாகக்கடலில் வீசியகல்லே, கதகதப்புக் கல் என்பதை அவன் உணர்கிறான். அவனுக்கு உடம்பு ஜில்லென்றாகிறது. ஒரு மாதமாகத் தேடிய கல்லை கடலில் வீசியெறிந்து விட்டோமே என்று வருத்தப்பட்டு தன் தலையில் அடித்துக்கொண்டான்.

விழிப்பாக இல்லாமல் கவனமில்லாமல் செயற்பட்டால் என்னவாகும் என்பதை இக்கதை நமக்கு உணர்த்துகின்றது. "விழிப்பாக இருங்கள் ஏனெனில் நாளும் நேரமும் உங்களுக்குத் தெரியாது''. (மத் 25:13)

## ஞாயிறு நற்பிரசாதம்

காலத்தின் அருமை தெரியாமல் அதை வீணாக்கி, பின்பு கண்ணீர் வடித்தவர்கள் வரலாற்றில் பலர். சிலர், எப்போதும் தாமதமாக வருவதே பழக்கம், அது அலுவலகமாக இருந்தாலும் சரி ஆலயமாக இருந்தாலும் சரி, பிந்தியவர்கள் தோல்வியையே தழுவுகிறார்கள் என்பதே உண்மை. எல்லாச் சூழ்நிலைகளிலும் ஞானம் நிறைந்த, விழிப்போடு செயல்பட இறைவனின் வார்த்தைகள் நமக்கு அறிவுறுத்துகின்றன. பயணம் செய்யும் திருச்சபையே கிறிஸ்தவ வாழ்வின் மைய மாகும். மனிதன் நிலை வாழ்வை அடைய வேண்டுமானால், அவன் ஆண்டவரோடு என்றும் இணைந்திருக்க வேண்டும். விசுவாசப் பிணைப்பிலிருந்தும் பிரிந்து விடாமல் இருக்கவும் நாம் தொடரும் பயணத்திலும், செல்லும் வழியிலும், கொள்கையிலும், ஞானத்தினால் ஆண்டவரின் அருளில் நிலைத்து நின்று வாழவும் அழைக்கப்படுகிறோம்.

நன்றி: பாதுகாவலன்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org


# 115 அடி உயர சுனாமின

# கடலடி எரிமலை

**யுத்தத்தின் வெடி ஓசைகளும் குண்டுத்தாக்குதல்களும் மனிதனையும் உலகினையும் பயத்தில் ஆழ்த்திய காலம் மெல்ல மெல்ல மாறிவருகிறது. இயற்கையும், இயற்கையின் கோரத் தாண்டவங்களும் இன்று உலகை ஆட்டிவைக்கின்றன. மனிதனால் மனிதன் கொல்லப்பட்ட காலம் மாறி இயற்கையே தன் குழந்தைகளைப் பலியெடுக்கும் நிலைமை தலைதூக்கியுள்ளது. இத்தகைய இயற்கையின் மூர்க்கத்தினால் உறங்கியுள்ள எரிமலைகளும் உயிர்ப்புப் பெறுகின்றன. இதன் காரணமாக எரிமலைகள் மீளுயிர்ப்பு பெற்று வெடிக்கின்றன; பலியெடுக்கின்றன. அவ்வேளைகளில் எல்லாம் மனிதன் மரணவலி உணர்கின்றான்.**

**இந்தக் கட்டுரைத் தொடரின் முதல் மூன்று பாகங்கள் ஏற்கனவே உதயனில் வெளியாகி இருந்தன. இது நான்காவது பாகம் ஏற்கனவே வந்தவற்றில் நிலத்தின் கீழான தட்டுக்களின் நகர்வுகள் பற்றியும் அதனால் ஏற்படும் ஆழிப்பேரலைகள், நில நடுக்கம் என்பன பற்றியும் மலைகளின் உருவாக்கம் குறித்தும் ஆராயப்பட்டது. இந்தப் பாகத்தில் எரிமலைகளின் வெடிப்புப் பற்றி ஆராயப்படுகிறது.**

இவ்வுலகில் எரிமலைகள் காணப்படும் இடங்களைக் கடந்த வாரம் வெளியான கட்டுரையின் 34 ஆவது படம் காட்டுகிறது. புவியில் எரிமலைகள் காணப்படுமிடங்களை அவதானித்தால் அவை நீண்ட சங்கிலிகள் போன்ற அமைப்பில் அமைந்திருப்பதைக காணலாம். இவற்றிலொன்று 'தீ வளையம்' (Ring of Fire) என அழைக்கப்படும் பசுபிக் சமுத்திரத்தைச



படம் 35

சுற்றி அமைகின்ற சங்கிலி. இச்சங்கிலிக்கு சமீபமாகவே அநேக எரிமலைகள் காணப்படுகின்றன.

இச்சங்கிலிகள் புவியின் பாறை மண்டலத் தட்டுக்களின் (Tectonic Plates) ஓரங்களாக அமைவதையும் அவதானிக்கலாம். முதலாவது கட்டுரையில் பாறை மண்டலத்தட்டுகள் (Tectonic Plates) புவிநடுவுறையின் ஒரு பகுதி உருகிய வலயங்களில் நகருவதாகக் கூறியிருந்தோம். எரிமலைச் செயற்பாடுகளுக்கும் ஒரு பகுதி உருகிய பாறைகளே முதலாக (Source) அமைகின்றன.

பாறைமண்டலத்தட்டு அமைப்பில் மக்மாக்கள் பின்வரும் மூன்று வகையான இடங்களில் உருவாகின்றன:

(அ) தட்டுகள் பிளந்து விலகிச் செல்லும் - அதாவது விரிவடையும் - தட்டு எல்லைகளில் உருவாகும் எரிமலைகள் (Volcanos at divergent plate boundaries)

(ஆ) பாரம் குறைந்த தட்டைக் கீழே அமிழ்த்திக்கொண்டு அதன் மேல் பாரம் கூடிய தட்டு வழுக்கிச் செல்வதாகிய - அமிழும் வலயங்களில் (Subduction Zones) உருவாகும் எரிமலைகள்.

(இ) தட்டு எல்லைகளுக்கு வெகுதொலைவில் உருவாகும் எரிமலை செயற்பாட்டிடங்கள். இவை 'அனுகூலமான இடங்கள்' ("Hot Spots") எனப்படும். அனுகூலமான இடத்து எரிமலை உருவாக்கம் தட்டு எல்லைகளுடன் சம்பந்தப்பட்டிருக்கவில்லை. அதாவது இவை தட்டுக்குள்ளேயே உருவாகும் எரிமலைகள் (Intraplate valcanos).

இவை மூன்றும் 35 ஆவது படத்தில் காட்டப்பட்டுள்ளது. இவை ஒவ்வொன்றைப் பற்றியும் சிறிது அறிந்து கொள்வோம்:

### விரிவடையும் தட்டு எல்லைகளில் (divergent plate boundaries) உருவாகும் எரிமலைகள்:

புவியதிர்வுகள் போலவே எரிமலைகளும் புவிப்பாறையின் மெலிந்த இடங்கள் அமைகின்ற குறை-கோடுகளிலேயே (Fault Lines) அநேகமாக அமைகின்றன. இரு புவித்தட்டுகள் மோதும் போது, அந்நிகழ்வு எரிமலைச் செயற்பாடு உருவாவதற்கு ஊக்கியாக (Catalyst) அமையலாம்.

உலகின் உயிர்ப்புள்ள எரிமலைகள் பலவும் - ஏறத்தாழ 500 முதல் 600 வரை - பாறைத்தட்டு ஓரங்களுக்கு சமீபமாகவே அமைந்துள்ளன. இவற்றில் அனேகமானவை கடற்படுக்கைகளில் பரவியுள்ள மலைத் தொடர் உச்சிகளிலேயே காணப்படுகின்றன. விரிவடையும் தட்டு எல்லைகளான இம்மலையுச்சித் தொடர்களின் (mid-ocean ridges) கீழேயுள்ள நடுவுறையில் (Mantle) உள்ள பொருட்களின் பகுதி உருகலால் மக்மா உருவாக்கப்படுகிறது. நடுவுறையின் மேலுள்ள தட்டின் அமுக்கம் காரணமாக பாறைகளின் உருகுநிலை குறைவதால், உருகல் அதிகரித்து மேலெழும்.

இவ்வாறு புவியின் மேல் நடுவுறையிலிருந்து (upper mantle) மேலெழும் மக்மா விரைவாக வெளியேற்றப்பட்டு சமுத்திரப் படுக்கைகளில் கொட்டப்பட்டுப் புதிய புவிப்புறணிப் பதார்த்தம் (new crust material) - கடற்படுக்கைப் படலங்கள் - உருவாகிறது. இவ்வாறாக எரிமலைகள் கொட்டும் புதிய புவிப்புறணிப் பதார்த்தங்கள் புதிய நிலத்தைக் கூட உருவாக்கலாம். உதாரணமாக 1963 ஆம் ஆண்டில் கடலடியில் ஏற்பட்ட எரிமலைக் கக்கலொன்று சேட்சே (Surtsey) எனப் பெயரிடப்பட்டுள்ள தீவு ஒன்றை ஐஸ்லாந்திற்கு தெற்குப் பக்கத்தில் உருவாக்கியது.

கண்டங்களில் தட்டெல்லைப் பிளவுகள் மிகக் குறைவாகவே காணப்படுகின்றன. கண்டங்களின் தட்டெல்லைப் பிளவுகளில் ஏற்படும் எரிமலைகளில் அநேகமானவை அமைதியானவை.

### அமிழும் வலயங்களில் உருவாகும் எரிமலைகள்:

ஒரு தட்டு இன்னொன்றின் மீது வழுக்கும் போது, கீழுள்ள தட்டு மேலும் கீழ் நோக்கி நடுவுறையினுள் (mantle) தள்ளப்படும். கீழே அமிழும் தட்டு நீர் நிரம்பிய வீழ்படிவுகளைக் (Water Saturated Sediments) காவிச்செல்லும். புறணியில் சிக்கிக்கொண்டுள்ள நீர் நடுவுறையினுள் தாக்கங்களை ஏற்படுத்தும். நீர் நடுவுறையோடு கலக்கும் போது, அது நடுவுறையின் உருகுநிலையைக் (Melting Point) குறைக்கும். அதனால் திண்ம நடுவுறை குறைந்த வெப்ப நிலையிலேயே உருகித் திரவமாகி 'மக்மா' ஆகிறது. இது மேற்பரப்பிலிருந்து ஏறத்தாழ 100 km ஆழத்தில் இடம்பெறும். பாறைகளை உருகவைக்கும் மக்மா பொதுவாக மேலெழும்

### அனுகூலமான இடத்து (Hot Spots) எரிமலைகள்:

புவிச்சரிதவியலாளர்கள் அனுகூலமான இடங்களின் இயல்பு பற்றி ஒத்தகருத்து உடையவர்களாயில்லை. முதற் கூறிய இருவகை எரிமலைகள் போலல்லாது இவ்வகை எரிமலைகள் அங்கொன்றும் இங்கொன்றுமாக ஒழுங்குமுறை ஏதுமின்றித் தனித்துக் காணப்படும். அனுகூலமான இடங்களில் நடுவுறையில், நடுவுறையின் சூடான பதார்த்தங்கள் நிரல்களாக (columns) மேலெழும். இவை நடுவுறைச் சிறகுகள் (mantle plumes) எனப்படும். நடுவுறைப் பதார்த் தங்கள் மேலெழ மேலெழ அதன் மீதான அமுக்கம் குறையும். அதனால் அப்பதார்த் தங்கள் உருக ஆரம்பிக்கும். மேலுள்ள தட்டு போதிய வளவு டலவீனமானதாயிருப்பின் மக்மா அதனைப் பிளந்து கொண்டு எரிமலையாக வெளியேறும்.

அனுகூலமான இடங்களில் வெளியேறும் லாவாக்களின் பொருட்சேர்க்கை பேசல்ரிக் வகையினதாகவே காணப்படுகிறது. அதனால் அனுகூலமான இடத்து எரிமலைகள் அநேகமாக அமைதியானவை.

நடுவுறைச் சிறகுகள் உருவாகியதற்கான காரணம் சரிவர அறியப்படவில்லை. அவை அவ்வவ்விடங்களில் நடுவுறைகளில் மேலதிக வெப்பத்தை உருவாக்கும் கிளர்மின் பதார்த்தங்கள் செறிந்திருப்பது காரணமாக உருவாகியிருக்கலாம் என நம்பப்படுகிறது. இம்மேலதிக வெப்பம் மேலதிக உருகலுக்கு காரணமாயிருக்கலாம்.

### எரிமலை கக்கும் கோலங்கள் (Styles of volcanic eruption):

எரிமலைகளின் கக்கும் கோலங்கள் (Styles) எரிமலைக்கு எரிமலை மாறுபடும். இருப்பினும் பொதுவாக கக்கும் கோலங்களை ஏழு வகையாக வகைப்படுத்தலாம் வை 36 ஆவது படத்தில் காட்டப்பட்டுள்ளன.

(1) ஐஸ்லாண்டிக் வகை (Icelandic Type):

இவ்வகையில் வாயுக்கள் சுலபமாக வெளியேறும். குறைந்த பாகுநிலை லாவா அநேகமாக ஆற்றில் நீர் பாய்வதைப் போலப் பாயும். எரிமலைத் துவாரத்தினூடு வெளிக்கொட்டப்படும் லாவாக்கள் 25 km நீளம் வரை பாயும். இவ்வாறு கொட்டப்படும் லாவா படிப்படியாக ஏறத்தாழக் கிடையான எரிமலைக் கற்படலங்களைக் கொண்ட அகன்ற பீடபூமியாகத் (Plateaus) தோற்றம் பெறும்.

(2) ஹவாயியன் வகை (Hawaiian Type):

இதுவும் ஐஸ்லாண்டிக் வகையைப் போன்ற அமைதியான பேசால்ரிக் ரக லாவாக்களின் பாய்ச்சல் ஆகும். ஆனால் காலவோட்டத்தில் அவை படிப்படியாக உயரமாகக் குவிந்து கூரையுள்ள அகன்ற மண்டபம் (Dome) போல தோற்றம் பெறும்.


(இதன்மேல் கூறப்போகும் மூன்று வகைக் கோலங்களும் பாகுநிலை கூடிய லாவாக்களைக் கொண்டமையால் வெடிக்கும் தன்மை உடையன).

(3) இஸ்றோம்போலி வகை (Strompolian Type):

தென்மேற்கு இத்தாலியில் பல நூற்றாண்டுகளாக தொடர்ச்சியாகக் கக்கிக் கொண்டிருக்கும் இஸ்றோம்போலி எரிமலை இவ்வகைக்கு ஒரு உதாரணமாக விளங்குவதால் இவ்வாறு அழைக்கப்படுகிறது. இவ்வெரிமலையின் மத்திய லாவா ஏரி, குளிர்ந்த புறணியால் மூடப்பட்டுள்ளது. புறணியின் கீழ் வாயு அமுக்கம் விரைவாக அதிகரிக்க அதிகரிக்க, மணித்தியாலத்திற்கு ஒரு சில தடவைகள் சிறு கக்கல்கள் ஏற்பட்டவண்ணம் இருக்கும். இவ்வாறு உருவாகும் எரிமலைக் கூம்பை (Volcanic Cone) உடைக்கும் அளவுக்கு இவ்வகைக் கக்கல்கள் பலம் வாய்ந்தவையல்ல. (அடுத்த இரு வகையும் இவ்வகையை விடக் கூடுதல் பலம் வாய்ந்தவை)

(4) வல்கன் வகை (Vulcanian Type):

வல்கன் (Vulkan) என்பது அக்கினி, உலோக வேலை இவற்றைக் காக்கும் உரோமானியரின் தேவதை. வல்



**பேராசிரியர் இ.குமாரவடிவே**
*விஞ்ஞான பீடாதிபதி*
*(யாழ்.பல்கலைக்கழகம்)*

கன் வகைக் கோலத்தில் தடித்த, உயர் பாகுநிலை லாவாக்கள், சாம்பர் திணிவுகள், எரிமலையிலிருந்து ஊதி வீசப்படும் துண்டுகள் ஆகியன மாறிமாறி வெளித் தள்ளப்பட்டுக் கொண்டிருக்கும். இதர எரிமலை கக்கல்களின் முதற்கட்டமும் இது போலவேயிருக்கும். ஏனெனில் பெருங் கக்கல்களுக்கு முன் இவ்வெரிமலைகள் முதற் கட்டமாக தமது 'தொண்டைகளை' இடைஞ்சல்கள் அற்றதாக ஆக்கிக் கொள்கின்றன.

(5) வெசுவியன் வகை (Vesuvian Type):

வெசுவியஸ் என்பது இத்தாலியிலுள்ளவொரு எரிமலை. வெசுவியஸ் எரிமலையின் கோலத்தில் கக்கும் எரிமலைகள் வெசுவியன் வகைக் கக்கல் கோலம் என அழைக்கப்படுகிறது. இவ்வகைக் கக்கலில் உயர் பாகுநிலை உடைய மக்மாவில் சிக்கிய வாயுக்கள் மூர்க்கமாக வெடிக்கும். வெடிப்பின் போது ஊதி வீசப்படும் பதார்த்தங்கள் பெருமளவு விஸ்தீரணமுள்ள பிரதேசத்தில் சென்று விழும்.


(6) பிளினியன் வகை (Pilinian Type):

வெசுவியஸ் வகையைப் போன்ற ஆனால் மிக மூர்க்கமான கக்கல்கள் பிளினியன் வகை எனப்படும். கி.பி 79ஆம் நூற்றாண்டில் நடந்த இவ வகை எரிமலைக் கக்கலொன்றின் விபரங்களை எழுதிவைத்த பிளினி (Plini) என்பவரைக் கௌரவிக்கும் முகமாகவே இவ்வகைக்கு அவரின் பெயர் சூட்டப்பட்டது.

பாரிய கக்கல் தொடரில் இறுதிக்கட்டமாக வருவதே பிளினியன் கக்கல். முதற்கட்டக் கக்கலில் 'தொண்டையை சுத்தப்படுத்திக் கொண்ட' எரிமலை நம்பமுடியாத அளவில் நிலைக்குத்தாக மேலெழும் வாயுக்களையும் சாம்பரையும் ஏனைய கல் போன்ற இடிந்த பொருட்களையும் பல மைல் உயரத்திற்கு விண்ணை நோக்கி ஊதித்தள்ளும்.

(7) பெலீன் வகை (Pelean Type):

கரிபியன் கடலிலுள்ள மாட்டினிக் தீவில் (Martinique Islands) உள்ள பெலீ (Mont Pelee) மலையிலுள்ள எரிமலையின் கக்கல் கோலத்திலிருந்து இப்பெயர் வந்தது. இவ்வகைக் கக்கலில் மக்மாவின் பாகுநிலை மிக அதிகமாதலால் மக்மா பாய்வது மிகக்கடினம். அதனால் எரிமலையின் 'தொண்டை' அதனது சொந்த பிசுபிசுப்பான மக்மாவினாலேயே அடைபட்டுவிடும். அதனால் எரிமலையின் மேற்பகுதியை அல்லது அதன் பக்கத்தை ஊதி வெடிககச் செய்வது மூலம் வாயுவின் அமுக்கம் விடுவிக்கப்படும்.




படம் 36

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...யை ஏற்படுத்திய ...யின் வெடிப்பு!




### எரிமலைக் கக்கல்கள் ஏற்படுத்தக் கூடிய பேரழிவுகள்:

கண்டத்திற்குரிய எரிமலைகளின் (Continental volcanos) பலவகைக் கக்கல் நடத்தைகள் உயிர்ச்சேதத்தையும் பேரழிவையும் ஏற்படுத்தலாம்.

(அ) கக்கல் வாணவிளையாட்டுக் கழிவுகளும் (Pyroclastic Debris) நீரோட்டமும் கீழ்நோக்கிய சாய்வுகளில் மணிக்கு 30 மைல் வேகத்தில் 45 மைல் தூரம் வரை பாய்ந்து 100 அடி தடிப்புள்ள படிவுகளை ஏற்படுத்தலாம். (உதாரணம்: வாஷிங்ரனிலுள்ள றெனியர் மலை (Mount Rainier, Washington).

(ஆ) வாயு வலுவூட்டப்பட்ட கக்கல் வாண விளையாட்டுப் பாய்ச்சல்கள் (Pyroclastic Flows) 250 mph வேகத்தில் $1300^0$F வெப்பநிலையில் 30 மைல்கள் வரை நகரக்கூடியன.

உதாரணம்: கரிபியன் தீவாகிய மாட்டினிக் இலுள்ள (Martinique) பெலீ மலை (Mont Pelee).

(இ) எரிமலைக் கூம்புகள் (Volcanic Cones) இடிந்து விழுந்து இராட்சத நிலச்சரிவுகள் ஏற்பட்டு பல மைல் (30 மைல்கள் வரை) தூரத்திற்கு நிலத்தோற்றத்தை புதைத்து விடலாம்.

உதாரணம்: அமெரிக்காவில் கலிபோர்னியா மாநிலத்திலுள்ள சாஸ்தா மலை.

(ஈ) எரிமலைக் கூம்புகள் நிலைக்குத் தாக கடலில் விழலாம். அவ்வாறு விழும் போது அது 100 அடி உயரமுள்ள சுனாமி யைக்கூட ஏற்படுத்தலாம்.

உதாரணமாக இந்தோனேசிய நாட்டில் றாகற்றோ (Krakatau) தீவுக் கூட்டங்களில் 1883 ஆம் ஆண்டு ஏற்பட்ட எரிமலைக் குமுறலைக் குறிப்பிடலாம். சமீபத்தில் இந்தோனேசிய சுமாத்திரா தீவருகே கடலில் ஏற்பட்ட நிலவதிர்வின் காரணமாக ஏற்பட்ட சுனாமியின் கோரவிளைவுகளை அனுபவித்த நாம் றாகற்றோவில் 112 வருடங்களுக்கு முன்னர் நடைபெற்ற நிகழ்வை அறிந்திருப்பது நன்று.

### றாகற்றோ எரிமலை


இன்று றாகற்றோ என்பது சுமாத்திரா, ஜாவா தீவுகளுக்கிடையே சுந்தா நீரிணையில் அமைந்துள்ள இந்தோனேசிய தீவுக்கூட்டம். இது அமைந்துள்ளவிடம் அவுஸ்திரேலியா-இந்தியன் தட்டின் எல்லையில் அமைந்துள்ள 'எரிமலைகள் பெருவளைவு' (Grand Arc of Volcanoes) இன் ஒரு பகுதி. றாகற்றோ கடற்படுக்கையிலிருந்து மேலே முந்தியின் அழியும் பெரியதோர் கூம்பு எரிமலை. அதன் பருமட்டான வெளிபெல்லைகளை இன்றும் வேறுபடுத்திக் காணக்கூடியதாகவுள்ளது.

றாகற்றோ முன்னையதொரு குமுறியெழுந்தழிந்த எரிமலைச் சிதைவுகளிலிருந்து பதினேழாம் நூற்றாண்டின்போது மக்மா செயற்பாடுகளின் விளைவாக உருவானது. இரண்டு நூற்றாண்டுகளாக அமைதிகாத்த பின், 1883 ஆம் ஆண்டு மே மாதம் 20 ஆம் திகதி இந்த எரிமலையின் செயற்பாடுகள் மீண்டும் உயிர்த்தன. 1883 ஓகஸ்ட் மாதமளவில் ஏறத்தாழ ஒரு டசின் துவாரங்களினூடு மிதமான அளவுள்ள 'வெசுவியன்' வகைக் கக்கல் தொடங்கியது. ஓகஸ்ட் 26 ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு ஒரு கூம்பு வெடித்து இராட்சத பேரொலியுடன் கடலுக்குள் வீழ்ந்து அழிந்தது. இதனால் சுனாமி உருவானது. அது ஏற்படுத்திய புகையும் சிதறல்களும் ஏறத்தாழ இருபத்தெட்டு கிலோ மீட்டர் (பதினேழு மைல்) உயரத்திற்கு மேலெழுந்தது.

கூம்பு வெடித்து வீழ்ந்த சத்தம் மேற்கு ஜாவா, ஜாகர்த்தா நகரமக்களைச் செவிடாக்கியது. 27 ஆம் திகதி காலை மேலும் பல காதைப்பிளக்கும் குமுறல்களும் உடைந்து விழும் நிகழ்வுகளும் நடந்தன. அன்று பகல் 10 மணிக்கு ஏற்பட்ட இராட்சத வெடிப்பு 5000 km வரை கேட்டது. புகை மண்டலமும் பாறாங்கற் துகள்களும் 80 km வரை மேலேழுந்தது. புகைமண்டலத்தால் பகல் இரவு போலானது. கடலில் வீழ்ந்த இவ்வுடைவுகள் மேலும சுனாமியை ஏற்படுத்தியன. சுனாமி ஜாவா, சுமாத்திரா கடற்கரையோரங்களை பதம்பார்த்தது. கடலோரத்தை அடைந்த சுனாமியின் உயரம் 35 m (115 அடி)! எரிமலை குமுறியதால் சிறிதளவு உயிரிழப்புக்களே ஏற்பட்டன. ஆனால் அதன் விளைவாக ஏற்பட்ட சுனாமி 295 நகரங்களைத் துவம்சம் செய்து 36000 மக்களைக் காவு கொண்டது.

புவியதிர்வால் உருவான சுனாமியின் கோரத் தாண்டவத்தைக் கடந்த ஆண்டு கண்டுகொண்ட நாம் கடலில் வீழ்ந்து அழியும் எரிமலைக் கூம்பொன்றினால் உருவாகக் கூடிய சுனாமியொன்று

படம் 37




எமது கடலோரங்களைத் தாக்க முடியாது என அறுதியிட்டுக் கூற முடியுமா ?

### காலநிலையும் தட்ப வெப்பமும் (Weather and Climate)

இதுவரை புவியின் உட்சக்தியினால் (Internal energy of earth) ஏற்படும் இருபெரும் அனர்த்தங்களாகிய புவிநடுக்கம், எரிமலைக் குமுறல்கள் பற்றி ஆராய்ந்தோம். இப்போது சூரியனின் சக்தியால் (Solar Energy) உருவாகும் அனர்த்தங்களையும் அவ்வனர்த்தங்கள் தீவிரமடைய மனித செயற்பாடுகளின் பங்களிப்பு பற்றியும் நோககுவோம்.

சூரியனாற் காலிக்கப்படும் கதிர்களினது சக்தியின் ஒரு சிறு விகிதமே புவி மேற்பரப்பை வந்தடைகிறது. ஆயினும் சூரியனிலிருந்து புவிமேற்பரப்பை வந்தடையும் சக்தி, புவி உட்பகுதியிலிருந்து புவிமேற்பரப்பை வந்தடையும் சக்தியைப் போல் 5300 மடங்கு அதிகம்.

புவி மேற்பரப்பை வந்தடையும் சூரிய சக்தியின் முப்பது சதவீதமானது குறுகிய அலைநீளக் கதிர்வீச்சாக புவிமேற்பரப்பில் நேரடியாகத் தெறிப்படைந்து விண்வெளிக்குத் திருப்பப்பட்டுவிடுகிறது. நாற்பத்தேழு சதவீதமானது வளி, கடல், நிலம் ஆகியவற்றால் முதலில் வெப்பமாக உறிஞ்சப்பட்டு, பின் நீண்ட அலைநீளமுடைய கதிர்வீச்சாக விண்வெளிக்கு மீளவும் கதிர்வீசப்படுகிறது. மிகுதியான இருபத்துமூன்று சதவீதமான சூரிய சக்தி மட்டுமே புவியிலுள்ள நீரை ஆவியாக்கி அதை வளிமண்டலத்திற்கு கொண்டுசெல்ல செலவிடப்படுகிறது.

சூரிய சக்தி, புவியிலிருந்து ஆவியாதல் (Evaporation) மற்றும் ஆவியுயிர்ப்பு (Transpiration - உயிர் வாழ்வனவற்றின் தோலின் துவாரங்கள் அல்லது இலைத் துளைகள் மூலம் வியர்வையாக அல்லது ஆவியாக நீர் வெளியேறுதல்) மூலம் நீரை வளிமண்டலத்திற்கு எடுத்துச் செல்கிறது. அவ்வாறு எடுத்துச்செல்லப்பட்ட நீராவி வளிமண்டலத்தில் நீராக ஒடுக்கமடைந்து (Condense) புவியீர்ப்பின் காரணமாக நிலத்தில் மழையாக அல்லது மழைப்பனியாக விழுகிறது. இவை பனிக்கட்டி ஆறுகள், ஆறுகள், அருவிகள், சிற்றாறுகள், ஓடைகள் ஆகவும் நிலத்தடி நீராகவும் மீண்டும் கடலைச் சென்றடைகிறன. இவ்வட்டம் நீரோட்ட வட்டம் (Hydrologic cycle) எனப்படும். இது முப்பத்தேழாவது படத்தில் காட்டப்பட்டுள்ளது.

புவியில் எந்தவொரு சமயத்திலும் ஒரு இலட்சம் லீட்டரில் ஏறத்தாழ ஐந்து லீட்டர் என்ற விகிதத்தில் நீர் நகர்ந்த வண்ணம் இருக்கிறது. புவியின் நீரில் 97.3 சதவீதத்தை சமுத்திரம் கொண்டுள்ளது. மிகுதி 2.7 சதவீத நீரின் எழுபத்தேழு சதவீதம் பனிக்கட்டி ஆறாக அடைபட்டுக்கிடக்கிறது; இருபத்தியிரண்டு சதவிகிதம் நிலத்தடியில் மெதுவாக நகர்கிறது; மிகுதி ஒரு சதவீதமே ஆறுகளாக, குளங்களாக, மண்ணிலுள்ள ஈரத்தன்மையாக அமைந்துள்ளது. நிலத்திற்கும் தாவரங்களுக்கும் உயிர்வாழ்வனவற்றிற்கும் மிக மிக அத்தியாவசியமான நீரின் அளவு சமுத்திர நீருடன் ஒப்பிடும் போது மிகமிக ... நோக்கற்பாலது.

முப்பத்தெட்டாவது படம் பனிக்கட்டியாகவுள்ள நீரின் அளவையும் ஆறு குளங்குட்டைகளிலும் நிலத்தடியிலும் தற்காலிகமாக சேமித்து வைக்கப்பட்டிருக்கும் நீரினளவையும் காட்டுகிறது. இப்படத்தில் சமுத்திர நீர், பனிக்கட்டி, நிலத்தடி நீர், நில மேற்பரப்பு நீர், ஆற்று நீர், உயிர்த்திணிவு (Biomass), வளிமண்டலத்திலுள்ள நீர் போன்றவற்றின் கனவளவுகள் வெவ்வேறாகப் பெட்டியிட்டுக் காட்டப்பட்டுள்ளன. இக்கனவளவுகள் நீரினளவை 10,000 கன கீலோமீற்றர் அளவுச் சட்டத்தில் தருகிறது. வருடமொன்றில் ஆவியாக்கல், ஆவியுயிர்ப்பு (Evaporation and Transpiration) அடையும் நீரின் சராசரிக் கனவளவும் ஆவியிலிருந்து தண்ணீர் அல்லது பனிக்கட்டியாக மாறும் ஆவியின் கனவளவும் 10,000 கன கீலோமீற்றர் அளவுச் சட்டத்தில் காட்டப்பட்டுள்ளது.

நீரோட்டவட்டமானது கடந்த நான்கு பில்லியன் வருடங்களுக்கு மேலாகத் தொடர்ச்சியாக இயங்கிக் கொண்டிருக்கிறது. சூரியன் பிரகாசித்துக் கொண்டிருக்கும் வரையும் - புவிமேற்பரப்பில் நீர் இருக்கும் வரையும் - இந்த வட்டம் தொடர்ந்து கொண்டேயிருக்கும். ஒரு பார்வையில் சமுத்திரங்களைப் பிரதான நீர் முதலாகவும் (Prime water source) வளிமண்டலத்தை வழங்கும் தொகுதி (Delivery system) யாகவும் புவிமேற்பரப்பை ... வாளராகவும் கருதலாம்.

இச்சுற்றில் மிகச்சிறிதளவு நீரே தொகுதியில் சேர்க்க அல்லது நீக்கப்படுகிறது. ஆனால் புவியின் தட்பவெப்ப நிலைமாற்றங்களைப் (Climatic changes) பொறுத்து இவை புவியில் பல அனர்த்தங்களையும் மாற்றங்களையும் ஏற்படுத்தும். குறிப்பாக பின்வருவன நிகழும்:

(அ) அகலக்கோட்டுக்கு (Latitude) குறுக்காகவும் நெடுங்கோட்டுக்கு (Longitude) குறுக்காகவும் கண்டங்கள் மந்தகதியில் நகர்தல்

(ஆ) மலைகள் தலையெடுத்தலும் தாழ்ந்த நிலையை அடைதலும்

(இ) புவியில் தரப்பட்டவொருவிடத்தில் நீரின் அளவு தேவைக்கு அதிகமாயிருத்தல் தொடக்கம் பெருந்தட்டுப்பாடு வரை மாற்றமடைதல் (Floods & droughts)

நீரோட்ட வட்டத்திற்கு வலுவை அளிக்கும் சூரிய சக்தியானது ஈர்ப்பின் (Gravity) உதவியுடன் பல முறை (Process)களின் ஊடாக பலவகை அனர்த்தங்கள் ஏற்படக் காரணமாயமைகிறது.

ஆகவே இந்நிலையில் சூரிய சக்தி புவியில் எவ்வாறு பரந்துள்ளது, அது எவ்வாறு புவியின் கால நிலையும் (Weather), தட்பவெப்பமும் (Climate) ஒருவாகப் பங்களிப்பு செய்கின்றது என்பதை நாம் ... கொள்வது அவசியமாகிறது. அதனைக் கீழே தருகிறோம்.

சூரிய சக்தி புவியைச் சமமற்ற முறையில் சூடாக்குகிறது. புவியின் மத்திய கோட்டுப் பகுதி அதன் முனைவுப் பகுதிகளை விட நேரடியாகச் சூரியனுக்கு முகம் கொடுக்கின்றமையால் வருடமொன்றில் புவிமத்திய கோட்டுப்பகுதி முனைவுப் பகுதிகளைவிட 2.4 மடங்கு அதிக சூரிய சக்தியைப் பெறுகிறது. வெப்பத்தைக் காவும் சமுத்திரங்களையும் வளிமண்டலத்தையும் புவியின் கறங்கல் (spin) இயக்கத்தில் ஈடுபட வைக்கிறது. இப்பின்னணியில் சமனற்ற வெப்பப் பரவலை சமமான பரம்பலாக மாற்ற புவியீர்ப்பு தன் கைவரிசையைக் காட்டுகிறது. புவியீர்ப்பானது குளிர்ந்த, அடர்த்தி கூடிய வளித் திணிவுகளையும் நீர்த் திணிவுகளையும் வலிமையுடன் பலாத்காரமாக இழுப்பது மூலம் வெப்பப்பரவலில் சமநிலையை ஏற்படுத்த முயற்சிக்கிறது. இந் நடவடிக்கைகள் உருவாக்கும் தொடர்ச்சியான மாற்றங்களையே காலநிலை எனவும், தட்பவெப்பநிலை எனவும் அழைக்கிறோம்.


மணிக்கு மணி, நாளுக்கு நாள், பருவத்திற்கு பருவம் வளிமண்டல நிலைமையில் ஏற்படும் மாற்றங்களைக் காலநிலை (Weather) என்கிறோம். தசாப்தங்கள், நூற்றாண்டுகள், ஆயிரக்கணக்கான, இலட்சக்கணக்கான, கோடிக்கணக்கான வருடங்கள் போன்ற நீண்டகால இடைவெளிகளில் ஏற்படும் காலநிலையை நோக்கும் போது அதனை தட்பவெப்பம் (சீதோஷ்ணம் - Climate) என்கிறோம். காலநிலை போலவே தட்ப வெப்பமும் மாற்றங்களுக்குட்பட்டவையே.

புவியிலுள்ள நிலைமைகள் மாறும்போது புவியின் தட்பவெப்பமும் மாற்றமடையும். அவ்வாறு மாற்றமடையும் போது சகல உயிர்வாழ்வனவும் புதிய நிலைமைகளுக்கு ஏற்ப தம்மை மாற்றியமைத்துக் கொள்ள வேண்டும். தட்பவெப்ப மாற்றத்தின் போதும் அதன் பின்னரும் சில உயிரினங்கள் செழித்து விருத்தியடையும். புதிய தட்பவெப்பத்திற்குப் பொருத்தமான புதிய இனங்கள் தோன்றும். மாற்றங்களைத் தழுவிச் செல்லமுடியாத உயிர்வகைகள் இல்லா தொழிந்து போகும்.

காலநிலை, தட்பவெப்பம் ஆகியவற்றை நிர்ணயிக்கும் காரணிகள் எவை? மனித செயற்பாடுகளால் இவற்றில் ஏற்படும் மாற்றங்கள் எவை? அதன் விளைவாக ஏற்படும் அனர்த்தங்கள் எவை? என்பதை அடுத்த வாரம் பார்ப்போம்.

(வளரும்)

படம் 38




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# DANISH REFUGEE COUNCIL (DRC)

DRC works at promoting lasting solutions to the problems of refugees and internally displaced persons throughout the world. In Sri Lanka, DRC supports reintegration of returned persons in the North and East and capacity building of local partner organizations. DRC's Head Office is located in Vavuniya, with district offices in Trincomalee and Kilinochchi.

## Vacancies

### Micro - Finance Advisor

The Micro - Finance Advisor will lead a team of Field Officers administering Revolving Loan Funds operated through Community Based Organizations (CBOs) and Cooperative Societies in partnership with DRC.

He/she will be called upon to develop strategies and methods to ensure the sustainability of such funds and to enable the regular assessment of DRC's interventions in this area. He/She will be required to travel frequently in all the districts where DRC works.

**Qualifications:**

- University Degree or equivalent professional qualifications in Management, Commerce, Finance or Banking.
- Minimum 05 years specific, supervisory/managerial experience in an institution operating micro - finance schemes in Sri Lanka.
- Excellent communication/Negotiation skills
- Good report writing skills.
- Computer literate and able to work with spreadsheets.
- Good team player with excellent inter-personal skills.
- Fluency in English and Tamil.

### Protection Officer - Kilinochchi / Mullaithivu

The Protection Officer will lead a team of Field Officers and be responsible for the co-ordination of DRCs protection activities in Kilinochchi and Mullaitivu. S/he will be responsible for developing and implementing DRCs protection training and awareness-raising programmes in the two Districts.

**Qualifications:**

- University Degree (ideally law, politics or social studies) and at least 3 years relevant experience
- Supervision skills
- Excellent communication/negotiation skills
- Advocacy skills
- Good report writing skills
- Computer skills in MS office and data management skills
- Confidence and ability to liaise at all levels
- Ability to communicate in English
- Flexibility, enthusiasm and a creative approach

### Field Officer (Protection)-Vavuniya / Mannar, Kilinochchi and Trincomalee

The Field Officer will assist the Team Leader/District Manager in all aspects of DRCs rehabilitation programme. The Field Officers will have a particular responsibility for protection activities such as training and awareness-raising. Field Officers work closely with local partners, relevant Government departments and other stakeholders.

These positions will be based in Vavuniya, Kilinochchi and Trincomalee respectively

**Qualifications:**

- University Degree (ideally law, politics or social studies) and 1 year relevant experience or A levels and 2 years relevant experience
- Knowledge of government structures
- Confidence and ability to liaise at all levels
- Flexibility, enthusiasm and a creative approach
- Advocacy skills
- Training skills
- Good report writing skills
- Computer skills in MS office and data management skills
- Ability to communicate in English

Please forward your curriculum vitae along with contact telephone No and names of three non-related referees to the following address within 07 days of this advertisement. The position applied for should be indicated on the top left hand corner of the envelope in applications sent by mail.

**Head – Finance & Administration**

**Danish Refugee Council**

**No. 77, 1st Floor**

**1st Cross Street, Vavuniya.**

**Fax No. 0242224009 E mail: drc-hfa@sltnet.lk**

## பிரான்பற்றில் புதிதாக மத்திய மருந்தகம்

வலி. தென்மேற்கு- டிசெ.11

பிரான்பற்று முல்லையடி என்ற இடத்தில் இலவச ஆயுள்வேத மத்திய மருந்தகம் ஒன்றை எதிர்வரும் ஜனவரி மாதத்தில் ஆரம்பிப்பதற்கு வடக்கு-கிழக்கு மாகாண சுதேச மருத்துவத் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்கென இங்கு நிரந்தர கட்டடம் ஒன்றை அமைக்கும் வரை தற்காலிகமாகவே கட்டிடம் ஒன்றில் இந்த மருந்த கத்தை ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ள தாகத் தெரிவிக்கப் படுகின்றது.

பிரான்பற்று மக்கள் நலன்புரிச் சங்கம் இதற்கான கட்டடத்தை பெற்றுக்கொடுத்துள்ளது. என்றும் எதிர்வரும் ஜனவரி மாதத்தில் இலவச மத்திய மருந்தகம் இங்கு திறக்கப்படும் என்றும் தெரியவருகின்றது.

(ஓ-135)


## தகவல் கோருதல்

"நியாப்" திட்டத்தின் கீழ் புனரமைக்கப்படவுள்ள இரணைமடுக் குளத்தை செம்மையாகவும் பாதுகாப்பாகவும் புனரமைக்க வேண்டியுள்ளதால் 1957 மற்றும் 1994 ஆம் ஆண்டுகாலப்பகுதியில் ஏற்பட்ட பெருவெள்ளத்தின்போது, குளத்தில் ஏற்பட்ட மாற்றம், பாதிப்பு என்பன பற்றிய தக வல்களை பத்திரிகைச் செய்தியாகவோ அல்லது அனுபவம் மூலம் நினைவில் வைத்திருப்பவர்கள் தங்கள் தகவல்களை ஒரு வார காலத்தினுள் எழுத்து மூலம் அல்லது நேரடியாக பணிமனைக்கு வந்து தகவல்களைத் தந்துதவுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

பணிமனைக்கு நேரடியாக வரமுடியாத சந்தர்ப்பத்தில் 0212285867 என்னும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டால் தகவலைப்பெறுவதற்கு ஆவன செய்து தரப்படும் என்பதையும் அறியத்தருகின்றேன்.

எந்திரி. ஏ.சி.வினோதராஜ்,
பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர்,
கிளிநொச்சிப் பிராந்தியம்.

(C/46658)

## கியுபிட் போட் KUPID FORT

(இது ஒரு இந்தியன் தயாரிப்பு) Capsules



பிரசித்தி பெற்ற, ஆயுர்வேத மூலிகைகளைக் கொண்டு இந்தியாவில் தயாரிக்கப்பட்ட ஒரு மாத்திரை, சர்வதேச உலகில் எல்லோராலும் அங்கீகரிக்கப்பட்ட ஒரு சிறந்த ஔஷதம். கியுபிட் போட் கீழ்க்காணும் பிரச்சினைகளை சீர்செய்யும்.

- ஆண் வீரியமின்மை, மலட்டுத் தன்மையைப் போக்க
- வயது முதிர்ந்தோரின் பாலியல் பிரச்சினைகளுக்கு ஒரு தீர்வு
- சாதாரண பாலியல் குறைபாடுகளை சரிப்படுத்த ஒன்றோ இரண்டு மாத்திரைகளைத் தொடர்ந்து ஒரு மாதம் பாவித்து சிறந்த பயனைப் பெறுங்கள்.

100% ஆயுர்வேத மூலிகைகளால் தயாரிக்கப்பட்டது.

எதுவித பக்க விளைவுகளும் கிடையாது.

கியுபிட் போட் வில்லைகள் தாம்பத்திய வாழ்வில் ஒரு மறுமலர்ச்சி.

கியுபிட் போட் என்று பெயர் சொல்லிக் கேட்டு வாங்குங்கள்.

**நாடெங்கிலும் உள்ள சகல பார்மஸிகளிலும் பெற்றுக்கொள்ளலாம்**

**வைத்திய ஆலோசனையைப் பெற்று சிறந்த பயனை அடையுங்கள்**

(சி-46478) (21.11.19)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கில் தமிழ் - முஸ்லிம் மக்களின் உறவை சீர்குலைப்பவர் அமைச்சர் அதாவுல்லாதான்!

## பேரினவாதிகளின் எலும்புத் துண்டுக்காக அவர் வாலாட்டுகின்றார் என்கிறார் ரவிராஜ்

"கிழக்கில் தமிழ் - முஸ்லிம் மக்களின் உறவு சீர்குலையக் காரணமாக இருப்பவர் அமைச்சர் அதாவுல்லாஹ்தான். அம்பாறையில் 100 வீதம் சிங்களவர்கள் வாழுகின்ற பகுதிகளில் கருணா குழுவினருக்கு முகாம் அமைத்துக் கொடுத்து, அங்கு தமிழ் - முஸ்லிம் மக்களின் உறவைச் சீர்குலைத்துக் கொண்டிருக்கின்றார் அமைச்சர் அதாவுல்லாஹ்.

தனது அரசியல் இருப்புக்காகவும், பேரினவாதிகள் வீசுகின்ற எலும்புத் துண்டுகளுக்காகவும் இப்படி வாலாட்டும் வேலைகளில் ஈடுபடுவதை அதாவுல்லாஹ் உடனடியாக நிறுத்தவேண்டும். தமிழ் முஸ்லிம் மக்கள் ஒன்றிணைந்து தமது உரிமைகளைப் பெற ஆயத்தமாகும் இத்தருணத்தில் அதாவுல்லாஹ் போன்றவர்கள் இவ்வாறான நாசகாரச் செயலில் ஈடுபடுவதை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

- இவ்வாறு கூறினார் தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிராஜ்.

நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் வரவு - செலவுத்திட்டத்தின் இரண்டாவது வாசிப்பின் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார். அவர் மேலும் கூறியதாவது:-

கடந்த கால வன்செயல்கள் காரணமாக பாதிக்கப்பட்ட தமிழ் - முஸ்லிம் மக்கள் தமது உரிமைகளைக் கூட்டாகப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் அவர்கள் ஒன்றிணைந்து செயற்பட முன்வந்துள்ளனர். இந்த உறவைச் சீர்குலைத்து, அவர்களுக்குக் கிடைக்கவிருக்கும் உரிமைகளைத் தடுப்பதற்காக பேரினவாதிகள் சதிசெய்து வருகின்றனர்.

அந்தப் பேரின அரசியல்வாதிகளின் சதிவலைக்குள் சிக்கி அவர்கள் வீசுகின்ற எலும்புத் துண்டுகளைப் பெறுவதற்காக தமிழ் - முஸ்லிம் உறவைச் சீர்குலைக்கும் விதத்தில் செயற்படுகின்றார் அமைச்சர் அதாவுல்லாஹ்.

இவ்வாறான குழப்ப நிலைக்கு பின்னணியில் இருப்பவர்கள் சிவப்புச் சட்டை அணிந்த ஜே.வி.பியினர்தான். இவர்களின் ஆதரவில் முன்னெடுக்கப்படுகின்ற ஆட்சியில் எவ்வாறு தமிழ் மக்களுக்கு சரியான தீர்வு கிடைக்கும்? இவர்களின் ஆதரவில் உருவான வரவு - செலவுத் திட்டத்தை எவ்வாறு ஆதரிப்பது?

வரவு - செலவுத்திட்டத்தில் மக்களுக்கு வழங்குவதற்கு எதுவுமில்லை. வழமையாக நாடாளுமன்றத்தில் வரவு - செலவுத்திட்டம் சமர்ப்பிக்கப்படும் போது நிதி அமைச்சர் கறுப்புப் பெட்டியில் பைல்களைச் சுமந்து வந்துதான் சமர்ப்பிப்பார். ஆனால் இம்முறை பெட்டி எதுவும் இல்லாமல் ஒரு 'பைலுடன்' மாத்திரம் வந்துதான் வரவு - செலவுத் திட்டத்தைச் சமர்ப்பித்தார் ஜனாதிபதியும் நிதி அமைச்சருமான மஹிந்த ராஜபக்ஷ. மக்களுக்கு வழங்க வரவு - செலவுத்திட்டத்தில் எதுவுமில்லை என இதிலிருந்து தெளிவாகிறது. இப்படியான வரவு - செலவுத்திட்டத்திற்கு எமது ஆதரவு இல்லை.

எந்த வரவு - செலவுத்திட்ட சமர்ப்பிப்பும், பொருளாதார அபிவிருத்தியும் எமது தமிழ் மக்களுக்கு உதவப்போவதில்லை. எமது மக்களுக்குத் தேவையானதெல்லாம் சமாதானம் ஒன்றேதான். ஜனாதிபதி எமது மக்களுக்கு நன்மை செய்ய விரும்பினால் நிரந்தர சமாதானத்தை உருவாக்க வேண்டும். புலிகளுடன் உடனடியாகப் பேச்சு நடத்த வேண்டும்.

அதற்கு ஜே.வி.பியினரோ, ஜாதிக ஹெல உறுமயவினரோ தடையாக இருந்தால் அவர்களைத் தூக்கி எறியவேண்டும். அப்படி ஜனாதிபதி செய்வாரேயானால் அவருக்கு நாம் ஆதரவு தருகிறோம்.

சமாதான பேச்சுக்கு தொடர்ந்தும் அனுசரணை வழங்க வருமாறு நோர்வேக்கு ஜனாதிபதி அழைப்புவிடுத்தமைக்கு நாம் பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம். அதேவேகத்தில் பேச்சுவார்த்தையை ஆரம்பியுங்கள் என்றே நாம் கேட்கின்றோம்.

உங்கள் வரவு - செலவுத் திட்டத்தை தமிழ் மக்கள் ஏற்கவேண்டும் என்றால் நாட்டில் நிரந்தர சமாதானம் உருவாக வேண்டும். அச்சமாதானம் மூலம் தமிழ் மக்கள் நன்மை அடையவேண்டும். இல்லையேல் இந்த வரவு - செலவுத் திட்டம் தமிழ் மக்களுக்கு ஒத்துவராது.

[illegible]தைவிடுத்து கிழக்கில் தமிழ் - முஸ்லிம் மக்களின் உறவைக் கெடுப்பதோ வடக்கில் தமிழ் மக்கள் மீது அடக்கு முறைகளைப் பிரயோகிப்பதோ சரியான வழியாகாது. - என்றார் அவர்.

# உடப்பு பகுதியில் 24 தமிழர்கள் கைது

கொழும்பு,டிசெ.11

புத்தளம் மாவட்டம், உடப்புப் பகுதியில் நேற்றுமுன்தினம் மாலை ஸ்ரீலங்கா படைகள் மேற்கொண்ட தேடுதலின்போது 24 தமிழர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

கைது செய்யப்பட்டவர்கள் நாட்டின் பல்வேறு பகுதிகளையும் சேர்ந்தவர்கள் எனவும், இவர்களிடம் தீவிர விசாரணை நடத்தப்பட்டு வருவதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

# பரிசீலனைக்கு எடுக்க வேண்டிய ஒரு பரிந்துரை

*ஓடிவருகின்றன*
*உயர்ந்த முகடுகளில் இருந்து நதிகள்*
*எங்கள் கால்நனைப்பதாய் கூறி.*

*கண்டங்களைக் கடந்தும்*
*சமுத்திரங்களைத் தாண்டியும்*
*காற்று வருகிறது*
*எங்கள் சுவாசத்துக்கானதெனச் சொல்லி.*

*எமக்கான சகலதுமே இறக்குமதியாகின்றன*
*மனித உரிமைகளுக்கான விதிகள்*
*அடங்கலாக.*

*எறும்புகளின் ஊர்வலங்களின்போது*
*கால்மிதியாது கடப்பது எப்படியென்று*
*விதிகளும்*

*காலுறைகளும்*
*பூசும் களிம்புகளும்கூடத் தருவிக்கப்படுகின்றன.*

*கோழி அறுக்கும்போதிலும்*
*கத்தியை எப்படிக் கையாள்வதென்றும்*

*எலிகளை வலியில்லாமல்*
*எப்படி மடக்கலாமெனவும்*

*கடிக்கவரும் வெறிநாய்களை மயக்கி*
*எப்படி முத்தமிடலாமென்றும்*
*நுளம்புகளுடன் இசைந்து வாழ்தல்*
*எங்ஙனமெனவும்*

*எல்லாவற்றுக்கும் போலவே*
*வெள்ளைக்காரரே இதற்கும் விரிவுரை*
*செய்கின்றனர்.*

*திரைமூடிய ஜன்னல்களுக்குள்ளே*
*குளிரூட்டப்பட்ட அறைகளுக்குள்ளிருந்து*

*செய்வினைகள்*
*செயற்பாட்டு அறிக்கைகள்*
*சுவரொட்டிகள்*

*விலைகொடுத்து வாங்கிய வீதிநாடகங்கள்*

*வருடத்தில் விழாவுக்கான ஒரு நாளாகிய*
*'டிசெம்பர் 10' என*

*எங்கும் படர்ந்தழுத்தும் காற்றமுக்கம்*
*எங்கள் மீது இப்போது.*

*இடிக்கவரும் குழுமாட்டை அடித்தல்*
*எப்படிக் குற்றமாகும்?*

*கடிக்கவரும் நாய்க்கு கல்லெடுத்தெறிந்தால்*
*கண்டனம் எறிந்தவர் மீதா?*

*புரியவில்லையே அவர்கள் சூத்திரம்.*

*பிரசவத்தில் இரத்தம் சிந்துவது*
*உயிரொன்றின் மீட்புக்கானதென*
*எப்படிப் புரியாமற்போகும் அவர்களுக்கு?*

*எது எப்படியோ*

*'உயிர்மீதான உரிமைகள் பேணப்பட*
*வேண்டியதே' எனும்*

*குரல்கள் மீது எமக்குக் கோபமில்லை.*

*ஆயினும்*
*வெறும் வெளிகளில் கலந்து கரையாமல்*

*எல்லோர் செவிக்குள்ளும்*

*அதிகார அறைகளுக்குள்ளும்*

*எல்லா இதயச்சுவர்களையும் கீறி நுழையட்டும்.*

*பாவப்பட்டு அழும் மக்களின் பக்கமான*
*பரிந்துரைகளாக*
*நற்செய்திகளாக*
*எல்லைமீறிப் பயணிக்கட்டும் இந்தக் குரல்கள்*

**- புதுவை இரத்தினதுரை.**

*(நேற்று - டிசெம்பர் 10ஆம் திகதி சர்வதேச மனித உரிமைகள் தினம். அதனை முன்னிட்டு இந்தக் கவிதை பிரசுரமாகிறது)*

# குடும்ப ஆதிக்கப் போட்டியின் மற்றொரு கட்டம்; சந்திரிகா - ரணில் கைகோர்ப்பு நிகழ்கிறது

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

பரந்துபட்ட வாக்குவேட்டையைப் பெறுவதற்காகத் தனது குடும்ப வட்டத்திற்கு முற்றிலும் வெளியேயான சி.பி.டி.சில்வாவை சு.கவின் உப தலைவராக பண்டாரநாயக்கா வைத்திருந்தார். பண்டாரநாயக்கா ஐ.நா. சபைக்குச் செல்லவேண்டியிருந்த போது தற்காலிக பிரதமராக நியமிக்கப்பட வேண்டிய நிலையில் சி.பி.டி. சில்வா இருந்தார். அவர் சுகவீனம் காரணமாக நாட்டில் அப்போது இல்லாதிருந்தமை அவரை தற்காலிக பிரதமராக நியமிக்காது தவிர்க்க பண்டாரநாயக்காவிற்கு வாய்ப்பளித்தது. அதே வேளை, அவர் தனது கட்சிக்காரர் அல்லாத, அதுவும் நாடாளுமன்றத்தில் ஒரேயொர் ஆசனத்தை மட்டும் கொண்டிருந்த பாஷாபெரமுனவின் தலைவர் தஹநாயக்காவை தற்காலிக பிரதமராய் நியமித்தது பெரிதும் சர்ச்சைக்குரிய விடயமேயாகும். இதற்குள்ளும் ஒரு குடும்ப ஆதிக்கப் போட்டியே காரணமாய் அமைந்தது. தஹநாயக்கா தற்காலிக பிரதமராய் பதவியேற்க முன்னமே பண்டாரநாயக்கா சுட்டுவீழ்த்தப்பட்டுவிட்டார். ஆனால், தற்காலிக பிரதமராய் பதவியேற்ற தஹநாயக்காவையே பின்பு நிரந்தர பிரதமராய் நியமித்தனர். உண்மையில் சி.பி.டி.சில்வா அப்போது சுகவீனம் காரணமாகத்தான் தற்காலிக பிரதமர் பதவியிலிருந்து தவிர்க்கப்பட்டிருந்ததால் பின்பு பண்டாரநாயக்காவின் மரணத்தைத் தொடர்ந்து, சி.பி.டி. சில்வாவே நிரந்தர பிரதமராக நியமிக்கப்பட்டிருக்கவேண்டும். தற்காலிக பிரதமரான தஹநாயக்கா பின்பு பதவியிறக்கப்பட்டிருக்கவேண்டும். இங்கு குடும்ப ஆதிக்கம் சரிவர பேணப்பட்டுள்ளமையைக் காணலாம். அதாவது, பண்டாரநாயக்கா குடும்பம் தமது கட்சிக்குள் கூடத் தம்மைத் தவிர வேறு எந்தக் குடும்பமும் வந்துவிடக்கூடாது என்பதிலும் கவனமாயிருந்து வருகின்றது.

1960 ஆம் ஆண்டு மார்ச் மாதம் நிகழ்ந்த தேர்தலில் சுதந்திரக் கட்சிக்கு சி.பி.டி. சில்வா தலைமை தாங்கினார். அவர் தோல்வியடைவதையே பண்டாரநாயக்க குடும்பம் விரும்பியது. அப்படியே கூட்டுக்குடும்பங்களும் விரும்பின. சி.பி.டி.சில்வா தலைமை தோல்வியடைந்துவிட்டதாகக் கூறி சிறிமாவோ பண்டாரநாயக்காவை கதிரைக்குக் கொண்டு வந்தார்கள். 1960ஆம் ஆண்டு ஜூன் தேர்தல் மூலம் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவை பிரதமராக்கினார்கள். அவர் பிரதமராக்கப்பட்டபோது அவர் தேர்ந்தெடுக்கப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினரல்லர் என்பதும் இங்கு கவனிக்கத்தக்கது. ஒரு தலைவரின் கீழ் தேர்தலில் தோல்வியடைந்தால் பின்பு வேறொருவரைக் கட்சித் தலைவராக்கும் மரபு இலங்கை அரசியல் வரலாற்றில் இல்லை. ஆனால், சி.பி.டி. சில்வாக்கு அதுவே நிகழ்ந்தது.

### சேனநாயக்க - பண்டா குடும்ப வாரிசுகள் மீண்டும் கை கோர்ப்பு

இதேபோல, இன்னொரு சம்பவத்தையும் நோக்கலாம். சிறிமாவோ பண்டாரநாயக்காவின் குடியுரிமையை குடும்ப ஆதிக்க நோக்கில்தான் ஜே.ஆர்.ஜயவர்த்தன பறித்தார். இதனால், குடியுரிமை பறிக்கப்பட்ட சிறிமாவோ பண்டாரநாயக்கா 1982 ஆம் ஆண்டு நிகழ்ந்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட முடியவில்லை. சிறிமாவோவின் நெருங்கிய இரத்த உறவினராகிய கொப்பேக்கடுவாவே சு.க.வின் ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்தப்பட்டார். அதில் அநுரா பண்டாரநாயக்கா இந்தியமனத்தைத் [illegible]யாக எதிர்த்திருந்தார். "வேண்டாப் பெண்டாட்டி" மனப்பாங்கில் பண்டார நாயக்கா குடும்பம் நடந்து கொண்டது. உண்மையில் கொப்பேக்கடுவவின் தோல்வியை பண்டாரநாயக்கா குடும்பம் யாசித்தது என்பதில் சந்தேகமில்லை. அத்தோல்வியுடன் பண்டாரநாயக்கா குடும்பத்தின் தலைமை ஸ்தாபிதமானது. இதுதான் மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதி வேட்பாளராக்கப்பட்ட விவகாரத்திலும் அரங்கேறிவருகிறது. மஹிந்த ராஜபக்ஷ தோல்வியடைந்தால் கட்சி மீதான பிடி பண்டாரநாயக்கா குடும்பத்திடமே சிக்கியிருக்கும் என்பதே கணக்கு. பண்டாரநாயக்கா குடும்பத்தின் இக்கணக்கைத் தோற்கடிப்பதற்காக மஹிந்த ராஜபக்ஷ தீவிர இனவாதத்தை கையிலெடுத்துள்ளார். அவர்களது குடும்ப ஆதிக்கப்போட்டி இனவாதத்தை ஒரு கட்டத்திலிருந்து இன்னொரு கட்டத்திற்குத் தள்ளிச் செல்கின்றது. இப்போது சு.க.விற்குள் ஏற்பட்டிருக்கும் உட்கட்சிக் குடும்ப ஆதிக்கப்போட்டி இனவாதத்தின் மீதே கோலோச்சுகின்றது. சேனநாயக்கா, பண்டாரநாயக்கா என்ற இரு கட்சிக்கிடையேயான குடும்ப ஆதிக்கப் போட்டியாயினும் சரி, பண்டாரநாயக்கா ராஜபக்ஷ எனும் ஒரு கட்சிக்குள்ளேயான குடும்ப போட்டியாயினும் சரி அவை இனவாதத்தையே ஆயுதமாகக் கொள்கின்றன. அதாவது, தமிழ்பேசும் மக்களுக்கிருக்கக் கூடிய இனப்பிரச்சினைக்கப்பால் சிங்களக் குடும்ப ஆதிக்கப் போட்டியானது இனப்பிரச்சினையாக விகாரவடிவம் பெற்று நிற்கின்றது.

அநுரா பண்டாரநாயக்கா தனது சகோதரி சந்திரிகாவுடனான வாரிசுரிமைப் போராட்டத்தில் தோல்வியடைந்து ஐ.தே.க.விற்கு கொப்புத் தாவினார். பண்டாரநாயக்கா குடும்பத் தலைமையை உடைப்பதற்கு ஐ.தே.க. அவரைப் பாற்றாங்கல்லாகப் பயன்படுத்தியது. அவர் நாடாளுமன்ற



உறுப்பினராக்கப்பட்டதுடன் பதவிகளும் அளிக்கப்பட்டன. இவ்வாறு ஐ.தே.கவில் இருந்துகொண்டு சு.க.விற்கு கல்லெறிந்த அநுரா, மறுபடியும் சு.கவிற்குத் தாவினார். அநுரா ஐ.தே.க. விலிருந்து சு.க.விற்கு கல்லெறிந்து கொண்டிருந்த போது அக்கற்களையெல்லாம் ஏந்தி சு.க. வைக் காப்பாற்றிய ஏனைய உறுப்பினர்களைவிடவும் அநுரா கட்சிக்குள் முன்னணிக்கு கொண்டுவரப்பட்டு அடுத்த பிரதமருக்குரிய ஸ்தானம் அநுராவிற்குத்தான் உரியதென்றும் கட்சிக்குள் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. கட்சியை விட்டு விலகியது மட்டுமல்ல, சு.கவின் பரம எதிரியான ஐ.தே.கவுடன் சேர்ந்து சு.கவைத் தகர்த்து வந்த அநுராவிற்குப் பிரதமர் பதவி என்பது ஒதுக்கப்பட்டமை அனைத்து ஜனநாயக விதிமுறைகளுக்கும் முரணான ஓர் இனக்குழுவாதத் தன்மை கொண்டது. இப்படியான செயல்முறை கற்காலக் குழுச்சமூகத்திற்கே பொருத்தமானது. இவ்வாறு கட்சிக்குள் மீண்டும் நுழைந்த அநுரா, சு.கவை பண்டாரநாயக்கா குடும்பத்தின் ஒரு "குடும்பச் சொத்து" என வெளிப்படையாகவே பேசினார். ஜனநாயகம், சர்வஜனவாக்குரிமை போன்ற உன்னத விழுமியங்களையெல்லாம் இந்தக் குடும்ப ஆதிக்க நடைமுறை கேள்விக்குரியதாக்கியுள்ளது. இத்தகைய குடும்ப ஆதிக்கவாதத்தின் பலத்தை விளங்கிக் கொள்ளாமல் இலங்கையின் அரசியலையோ, இனப்பிரச்சினையையோ விளங்கிக்கொள்ளமுடியாது. இந்தவகையில், மிகவும் அப்பாவித் தனமாய் இனப்பிரச்சினையை வெறும் பச்சைக் கண்களால் பார்க்க முடியாது.

அநுரா சு.கவில் இருந்து வெளியேறிய போது அவரை ஐ.தே.க. வாரியணைத்துப் பயன்படுத்தியது போல, தற்போது பண்டாரநாயக்கா குடும்பத்திற்கு ராஜபக்ஷ குடும்பத்திற்கும் இடையே மோதல் உருவானதும் சந்திரிகாவை, ரணில் விக்கிரமசிங்க பெரிதும் பாராட்டி அவரது ஆலோசனைகளைத் தான் பெறப்போகிறாரெனவும் நாட்டிற்கு அவரது அறிவும், அனுபவமும் அவசியமெனவும் புகழ்ந்தேற்றத்தொடங்கினார். உண்மையில் இப்போது பண்டாரநாயக்கா குடும்பத்திற்கும் சேனநாயக்கா குடும்ப வாரிசான ரணிலுக்கும் இடையே உள்ளூரக் கைகோர்ப்பு நிகழ்ந்துவிட்டது. இது குடும்ப ஆதிக்கப் போட்டியின் இன்னொரு கட்டமும் வகையுமாகும்.

(வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முஸ்லிம்களின் நிலைப்பாடு - யார் குற்றி என்றாலும் அரிசியாகட்டும்

சிறுபான்மை மக்களின் வாக்குகளே இந்நாட்டின் ஆட்சியாளர்களை தீர்மானிக்கின்ற



சக்தியாகும் என்ற உண்மை !, இம்முறை ஜனாதிபதித்தேர்தலில் மீண்டுமொருமுறை நிரூபணமாகியிருக்கிறது. சிறுபான்மை மக்களின் வாக்குகளை இத்தேர்தலில் நின்ற பிரதான இரு வேட்பாளர்களான மகிந்த ராஜபக்ஷ, ரணில் விக்கிரமசிங்க ஆகியோருக்கு பெற்றுக் கொடுக்கும் முயற்சியில் சிறுபான்மைக்கட்சிகள் பகீரதப் பிரயத்தனங்களை மேற்கொண்டிருந்தன. இதற்காக கட்சித்தாவல்கள், குழிபறிப்புக்கள் திரைமறைவு ஒப்பந்தங்கள் என அக்கட்சிகளின் நிகழ்ச்சி நிரல்கள் அமைந்திருந்தன. குறிப்பாக முஸ்லிம் கட்சிகளின் செயற்பாடுகள் பிரசித்தி பெற்றவையாக அமைந்தன.

எது எப்படியோ தேர்தலும் முடிந்து, ஜனாதிபதியும் தெரிவுசெய்யப்பட்டு, புதிய அமைச்சரவையும் நியமிக்கப்பட்டாயிற்று. முஸ்லிம் சமூகத்தின் விமோசனம் விடுதலை, உரிமை என்பனவற்றிற்காகவே அரசியலில் ஈடுபடுகின்றோம் என மேடைக்கு மேடை வீரவசனம் பேசிய முஸ்லிம் கட்சிகளின் கோஷங்களெல்லாம் தற்போது மூலைக்குள் முடங்கும் தருணத்தை அடைந்திருக்கின்றன. முஸ்லிம்களுக்கு கிடைக்கவேண்டிய உரிமைகள், சலுகைகளை பட்டியலிட்ட முஸ்லிம் கட்சிகள் இந்நேரம் அவற்றை குப்பைத் தொட்டிகளில் இட்டிருக்கலாம்.

முஸ்லிம்களின் வாக்குப்பலத்தில் ஜீவித்துக் கொண்டிருக்கும் முஸ்லிம் கட்சிகள், தாங்கள் ஆளுந்தரப்பில் இருந்தாலென்ன எதிரணியில் இருந்தாலென்ன தங்களுக்கு வாக்களித்த மக்களுக்கு சேவகம் புரிவதே அவர்களின் தலையாய கடமையாகும். இக்கடமையை இன்ன இன்ன கட்சிகள் தான் செய்ய வேண்டும் என முஸ்லிம் சமூகம் என்றுமே வரையறை போட்டது கிடையாது. இனியும்

> - எஸ். ஏ. எம். பௌஸான்
> நீர்கொழும்பு

அவ்வாறு நடக்க முற்படமாட்டார்கள். மாறாக எந்த முஸ்லிம் கட்சி எந்த சேவையை செய்தாலும் அதனை ஏற்றுக்கொள்ள முஸ்லிம் சமூகம் தயாராகவே இருக்கின்றது. தவிரவும் அதற்காகக் காத்துக்கொண்டும் இருக்கின்றது. எனவே, தேர்தலில் பிரதான இரு வேட்பாளர்களையும் ஆதரித்த முஸ்லிம் கட்சிகள் தேர்தலுக்கு முன்னர் காணப்பட்டது போலன்றி தமக்கிடையிலான வாய்ச்சாடல்கள், கருத்துமோதல்கள், அறிக்கைச் சமர்கள் போன்றவைவற்றை முஸ்லிம் சமூகத்தின் விமோசனம், விடுதலை என்பவனற்றைக்



கருத்திற்கொண்டு முற்றாக தவிர்த்துக் கொள்ள வேண்டும். புதிய அரசாங்கத்தில் அமைச்சுப் பதவிகளை பெற்றிருக்கும் அரசதரப்பு முஸ்லிம் எம்.பிக்களுக்குப் பக்கபலமாக எதிர்த்தரப்பு முஸ்லிம் எம். பிக்கள் நடந்துகொள்ளவேண்டும். அவர்களை நடுச்சந்தியில் விமர்சிப்பதோ, அவர்களது அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு முட்டுக் கட்டையாக இருப்பதோ, அவர்கள் பெற்றிருக்கும் அமைச்சுப் பதவிகளுக்கு எதிராக சதி முயற்சிகளில் ஈடுபடுவதோ எதுவாக இருந்தாலும் அது முஸ்லிம் சமூகத்திற்கான விமோசனத்தையும் விடுதலையையும் ஒரு போதும் பெற்றுத்தராது என்பது மட்டுமன்றி அவற்றைக் குழி தோண்டி புதைக்கவே வழிவகுக்கும் என்பதை சம்பந்தப்பட்டவர்கள் மறந்து விடக்கூடாது.

## அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனம்

**உறுப்புரை - 03**
வாழ்வதற்கும் சுதந்திரத்திற்கும் பாதுகாப்பிற்கும் சகலரும் உரிமையுடையோராவர்.

**உறுப்புரை - 04**
எவரும் அடிமையாக வைத்திருக்கப்படுதலோ அல்லது அடிமைப்பட்ட நிலையில் வைத்திருக்கப்படுதலோ ஆகாது. அடிமை நிலையும் அடிமை வியாபாரமும் அவற்றின் எல்லா வகைகளிலும் தடை செய்யப்படுதல் வேண்டும்.

**உறுப்புரை - 05**
எவரும் சித்திரவதைக்கோ அல்லது கொடுமையான, மனிதத்தன்மையற்ற அல்லது இழிவான நடைமுறைக்கோ தண்டனைக்கோ உட்படுத்தப்படுதலாகாது.

(தொடர்ச்சி அடுத்த வாரம்)




## அரசியலே சரித்திரம்

ஒரு சமூகத்திலிருந்து மற்றொரு சமூகத்திற்கு மாறுகிற மாற்றம் அவ்வளவு சுலபமானதல்ல. மக்கள் எத்தனையோ இடுக்கண்களையும் கஷ்ட நஷ்டங்களையும் தாண்டித்தான் மாறுதலை காணமுடியும். 'துன்பம் இல்லை, இன்பம் இல்லை' கொடிய போராட்டங்கள் மூலமும் மகத்தான தியாகங்கள் மூலமும் புதிய சமூகம் பிறக்கிறது. மனிதன் முன்னேறுகிறான். ஒவ்வொரு புதிய வளர்ச்சியும் ஒவ்வொரு புதிய முன்னேற்றத்தின் முத்திரையே.

இன்று ஒவ்வொரு ஆணும் ஒவ்வொரு பெண்ணும் நிறைந்த இன்ப வாழ்வு அடைகிற அளவுக்குப் பொருளுற்பத்தி ஏற்பட்டிருக்கிறது. இயற்கை வரட்சி, பஞ்சம், வரையறைக்கப்பட்ட பொருள் வினியோகம், பண்டை முறைப்படி வாழ்தல் ஆகிய நிலைமைகளை பின்தள்ளி விட்டு மனித வர்க்கம் எவ்வளவோ முன்னேறி வந்திருக்கிறது. பண்டைய நிலைமைக்கும் இன்றைய நிலைமைக்கும் ஏணி வைத்தாலும் எட்டாது.

ஆயினும் இன்றும் மனித வாழ்வில் அமைதியில்லை. முறையான வளர்ச்சி இல்லை. சரித்திர சக்திகள் கொலை நெருக்கடியிலேயே உழல்கின்றன. இன்றைய சமூக அமைப்பை மாற்றித்தீர வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு வந்திருக்கின்றன. மனிதன் இருந்த இடத்தில் சும்மா இருக்க மாட்டான். இன்று, அவன் எதிர்நோக்கி நிற்கும் பிரச்சினை என்ன?

செல்வம் மலை மலையாக குவிந்து கிடக்கிறது. எவ்வளவு உற்பத்தி செய்ய யந்திரங்களும் மனிதனிடம் இருக்கின்றன. ஆனால் சொந்தக்காரர்கள் சுயநலமிகளான ஒரு சிலர். ஆகவே இந்த யந்திர சக்தியை பொது உடைமையாக்குவது எப்படி என்பதே இன்றைய பிரச்சினை.

உற்பத்தியை சமூக ரீதியாக்கிவிட்டது முதலாளித்துவம். எப்படி ஏராளமாக எல்லோருக்கும் கிடைக்கத்தக்க அளவு உற்பத்தி செய்வது என்பதில் வெற்றி பெற்றவிட்டது அது ஆனால், உற்பத்தி சாதனங்களும் அதிகாரமும் ஒரு சின்ன சிறிய பங்கீடும் பொது நல நோக்கோடு நடைபெறாமல் சுயநல நோக்கோடு நடை பெறுகிறது.

இந்த மனித அரக்கர்களின் சுயநல சுரண்டல் மொழி தான் தற்காலத்தில் அடிக்கடி நடைபெறும் யுத்தங்களுக்கு காரணம். இரண்டாவது மகா யுத்தத்தைக் கொண்டு வந்தவர்களும், மூன்றாவது மகா யுத்தத்தை கூவி அழைக்கிறவர்களும் இவர்களே.

> ப. ஜீவானந்தம் எழுதிய
> கம்யூனிஸம் என்ற நூலிலிருந்து.

## வாசகர் கவனத்திற்கு...

கருத்தாடல் களத்திற்கு உங்கள் கருத்துக்களும் வரவேற்கப்படுகின்றன.
அத்தோடு விழிப்பின் பதிவுகள் தொடர்பான உங்கள் அபிப்பிராயங்கள், விமர்சனங்களையும் நாங்கள் எதிர்பார்க்கிறோம்.
எழுதி அனுப்ப வேண்டிய முகவரி.

விழிப்பின் பதிவுகள்
யங் ஏசியா டெலிவிஷன்
இல, 713. டிபி. விஜயசிங்க மாவத்தை, பெலவத்தை, பத்தரமுல்லை.
மின்னஞ்சல்முகவரி :- villippu@yatv.net

## இருளைவிட

சுடர் எரிகிறது
அணைவது போல

திரி கருகியிருக்கிறது
தீர்ந்திருக்கிறது நெய்

எனினும்
தீராத தாகத்துடனேனும்
தாளாத
சோகத்துடனேனும்
தள்ளாடியபடி இந்த
சுடர் எரிகிறது

இரத்தம் வடியும்
துயர் நிறைந்து

இழப்பில் தொடரும்
இதய வலியுடன

இன்னும் தொடரும்
நம்பிக்கைச்சுடர்
அணைவது போலேனும்
எரிகிறது

இருளைவிட - இந்த
வெளிச்சம்
கொஞ்சமேனும்
உயிர் கொடுக்கிறது

- என். ஜீவேந்திரன்

## மலையக மக்களுக்கு தனியலகு அவசியம்

மலையகத்தமிழர் தம்மை தனியானதோர் தேசிய இனமாகக் கருதுகின்றனர் என்பதும் இதனையொட்டியே மலையக தமிழ் தேசியம் வளர்ந்து வருகிறது என்பதும் மலையக தமிழர் தனியான நிர்வாக அலகை கோருவதற்கான அடிப்படை தகுதியாகக் கொள்ளப்பட வேண்டும். மேலும் மலையக மக்கள் நாட்டின் எப்பகுதியில்



வாழ்ந்த போதும் அவர்களது மொழி தமிழ் தான். அவர்கள் தமது தாய் மொழியில் கருமமாற்றக்கூடிய சகல அடிப்படை உரிமை அவர்களுக்குண்டு.

தனித்துவமான கலாச்சார பண்பாட்டு அம்சங்கள் அவர்களுக்கிறது. எனவே அதனை பேணிப்பாதுகாக்கவும் வளர்த்தெடுக்கவும் அவர்களுக்கு உரிமையுண்டு.

தனியான பொருளாதார கட்டமைப்பு அவர்களுக்குண்டு. பெருந்தோட்டப் பொருளாதாரத்தினதும் அதன் உப தொழில்களினதும் சொந்தக்காரர்கள் உண்மையில் மலையகத்தமிழரேயாவர்.

மத்திய மலை நாட்டின் பெரும்பகுதி மலையகத்தமிழரின் வாழ்வாதாரப்பிரதேசமாகும். இன்றைய நிலையில் மலையகத்தமிழர் தாம் பெரும்பான்மையாக வாழ்ந்த நுவரெலியா, கண்டி, மாத்தளை, பதுளை, இரத்தினபுரி, கேகாலை, மொனராகலை மாவட்டங்களில் நுவரெலியாவில் மட்டுமே 52வீதமானோர் வசிக்கின்றனர். ஏனைய மாவட்டங்களில் பூகோளரீதியான மலையகத்தமிழரின் வாழ்வதிகாரப்பிரதேசம் திட்டமிட்ட காணிப் பிரிப்புகளாலும் பெரும்பான்மையினக் குடியேற்றங்களினாலும் சிதைக்கப்பட்டிருந்த போதும் 1984ம் ஆண்டின் நிலைகளில் மலையகத்தின் மேற்குறித்த மாவட்டங்களில் 60க்கு மேல் மலையகத்தமிழர் வாழ்ந்துள்ளனர். கம்பஹா, களுத்துறை, காலி, மாத்தறை மாவட்டங்களில் நிர்வாக உள்ளமைப்புகளை ஏற்படுத்துமளவிற்கு மலையகத்தமிழர் வாழ்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

நாட்டின் பெரும்பான்மை மக்களிடமிருந்து அரசியல் பொருளாதார சமூக கலாச்சார பண்பாட்டு உள்ளார்த்தத்தில் கணிசமான வேறுபாட்டைக்கொண்டிருக்கின்ற மலையகத் தமிழர், இலங்கைத் தமிழர், இஸ்லாமியர் ஆகிய இனக்குடிமங்களில் இருந்து பாரிய வேறுபாட்டைக்கொண்டிருக்கின்றனர் என்பதாலும் மலையகத் தமிழர் தமக்கான தனியார் நிர்வாக அலகை கோர உரித்துடையவர் ஆவார்.

மலையகத்தமிழர் இலங்கையின் ஏனைய இனக்குழுமங்களில் இருந்து மொழி ரீதியான, பிரதேசரீதியான, வர்க்க ரீதியான தமக்கேயுரிய தனித்துவமானதும் சிறப்பு வாய்ந்ததுமான பண்பினைக்கொண்டிருக்கின்றனர். மலையகத் தமிழரின் மொழி மலையகத் தொழிலாளர் வகுப்பின் வாழ்வுச்சூழல், பொருளாதார பின்புலம், சமூக அமைப்புடன் சேர்ந்து தனிச்சிறப்பான ஒரு அமைப்பை தன்னகத்தே கொண்டதாக திகழ்கின்றது.

> - நன்றி - விடிவு

இன்னும் சொல்லப்போனால் இரண்டு நூற்றாண்டு கால அடிமைத்தளைகளில் இருந்து அரசியல், பொருளாதார, சமூக, கலாசார, பண்பாட்டு சுரண்டலிலும், தேக்கத்திலும் இருந்து தம்மை விடுவித்து கொள்ளவும் பேரினவாத கருத்தியலின் காட்டுமிராண்டித்தனமான தாக்குதலில் இருந்தும் அதன் கோர தாண்டவங்களால் அடைந்த சுய கௌவர இழப்புக்களில் இருந்தும் தம்மை மீட்கவும் அடுத்த நூற்றாண்டில் உலகில் மானிட, விஞ்ஞான கைத்தொழில், அபிவிருத்தி வேகத்துடன் ஈடு கொடுத்து முன்னேறலாம். தமது இருப்பையும், உயிர் வாழ்வையும் சகல விதமான கேள்விகளில் இருந்தும் விடுவிக்கவும் மட்டுமல்ல உரிமைகளை நிலை நாட்டவும் மலையக தமிழருக்கு தனியான நிர்வாக அலகு அவசியம் தேவை என்பதில் ஐயப்பட எதுவுமில்லை.

## சகோதர மொழியிலிருந்து சில துளிகள்

இப்போது மட்டுமேன்
இந்த பிளவு

சூரியன் பொதுவானது
சுற்றும் பூமி சகலருக்கும்
பொதுவானது
தாய்மை பொதுவானது

தரணியில் பிறந்த சகலருக்கும்
தாய்ப்பால் கொடுக்கும்
தாய்மை பொதுவானது

மக்கள் மொழிகள்
மண்ணில் ஆயிரமாயினும்
கண்ணீர் பொதுவானது

இருந்தும் நாமிருவரும்
இரு துருவமாய்
இருப்பதேனோ

குழந்தையாய் சேர்ந்திருந்தோம்
இளமையில் இணைந்திருந்தோம்
இப்போது மட்டுமேன்
இந்த பிளவு

மீகமுதுவே லொறேட்டா பீரிஸ்

## இவ்வார விழிப்பில்...

- போர்நிறுத்த உடன்படிக்கை திருத்தப்படவேண்டுமா?
- அக்கரைப்பற்றின் தற்போதைய நிலை
- பெண்களும் உரிமைகளும்
- யாழ் மக்களின் எதிர்பார்ப்பு
- இன்றைய பார்வை




விழிப்பின் பதிவுகள் தொடர்பான மேலதிக விடயங்கள் ரூபவாஹினி 'ஐ'அலைவரிசையில் திங்கள் இரவு 7.30மணிக்கும், TNL அலைவரிசையில் செவ்வாய் இரவு 7.25 மணிக்கும் ஒளிபரப்பாகும். விழிப்பு நிகழ்ச்சி தொடர்பான உங்கள் அபிப்பிராயங்கள் வரவேற்கப்படுகின்றன. அனுப்பவேண்டிய முகவரி :- விழிப்பு, யங் ஏசியா டெலிவிஷன், இல 713, டிபி. விஜயசிங்க மாவத்தை, பெலவத்தை, பத்தரமுல்லை.தொலைபேசி இல 0112787[illegible] மின்னஞ்சல் முகவரி villippu@yatv.net இணையத்தள முகவரி www.yatv.net

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய கட்டடத் திறப்பு விழா 11-12-2005



## ...னவு கூருகின்றேன்

...புதிய கட்டடத் திறப்பு விழாவினை முன்னிட்டு வெளியிடப்படும் சிறப்பு ...ச்சியடைகின்றேன். வடமராட்சியின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த ...ம் இந்த அலுவலகம் ஆரம் பித்து கிட்டத்தட்ட 40 வருடங்கள் ஆனபோதும்

... (NEERP) மூன்று கட்டங் களில் 28.75 மில்லியன் ரூபா இக்கட்டடத்தின் ...க் கொள்வனவு செய்வதற்கும் கட்டடத்தினை அமைப்பதற்கும் பிரதேச ...திபர்கள், பிரதேச செயலாளர்கள், காணிக்கொள்வனவு உறுப்பினர்கள், ...தியோகத்தர்கள், எமது அலுவலக உத்தியோகத்தர்கள் ஆகியோரின் ...ந்திருந்ததனை நன்றியுடன் நினைவு கூருவது பொருத்தமானதாகும். ...த்திற்காக உருவாக்கப்பட்ட பிரதேச செயலகங்கள் தமது குறிக்கோளை ...னதாகும்.

## ...ரும் பெரும்பணி

... இன்று திறந்து வைக்கப்படும் நிகழ்வு இப்பிரதேச மக்களின் நீண்ட ... மன மகிழ்வும், மனநிறைவும் அடையும் இவ்வேளையில் அவர் களில்

... மூலம் கட்டப்பட்ட இச்செய லகம் இப்பிரதேச மக்களுக்கு இலகுவாகவும், ... ஐயம் இல்லை.

...ளுமை மிக்க கரவெட்டி பிரதேச செயலர் திரு. சத்தியசீலன் அவர்களது ...பிரதேசத்தின் அபிவிருத்தி தொடர் பான மேம்பாட்டிற்கான வழி

## மக்கள் பங்களிப்பினால் நிமிர்ந்த பிரதேச செயலகம்.



கரவெட்டி பிரதேச செயலகத்திற்கான கட்டடத் திறப்புவிழாவின் பொழுது வெளியிடப்படும் சிறப்பு மலருக்கு எனது வாழ்த்துச் செய்தியை அனுப்புவதில் மகிழச்சியடைகின்றேன். மக்கள் வாழிடத்தில் நிர்வாக மையமாக விளங்கும் பிரதேச செயலகங்கள் மக்களுக்கு சிறந்த சேவையாற்றத் தேவையான கட்டட வசதி இன்றியமையாதது. 13 ஆயிரத்து 700குடும்பங்களைச் சேர்ந்த இப்பிரதேச மக்கள் தமது பலவேறு அலுவல்களை வசதியாகச் செய்துகொள்ள இக்கட்டடம் உதவுவதோடு, அங்கு கடமையாற்றும் உத்தியோகத்தர்களது தொழில்சார் சூழலை மேம்படுத்துவதாகவும் இதுஅமையும்.

இக்கட்டடத்திற்கான காணியைப் பெற்று அரசாங்கத்திற்கு கையளிப்பதில் பிரதேச செயலகப் பிரிவு மக்கள் எடுத்த ஆர்வமிகு நடவடிக்கைக்காகவும் அவர்கள் செய்த நிதிப் பங்களிப்புக்காகவும் அவர்களைப் பாராட்டுதல் கடப்பாடாகும்.

வடக்கு – கிழக்கு மாகாணசபை உலக வங்கியின் அனுசரணையுடனான நீர்ப்திட்டத்தினூடாக இக்கட்டட நிர்மாணத்திற்காக ரூபா. 28.75 மில்லியன் வழங்கி பிராந்தியத்தில் தனக்குள்ள ஒரு பொறுப்பினை நிறைவேற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இக்கட்டடத்தை நல்லமுறையில் பராமரித்து அதை முழுமையாகவும் சிறந்த முறையிலும் பயன்படுத்த அலுவலர்களும் பொது மக்களும் தொடர்ந்து பொறுப்பெடுக்க வேண்டும்.கரவெட்டி பிரதேச செயலகம் மக்களுக்கு வினைத்திறன் மிக்க சேவையாற்றி உதவவேண்டு மென்று விரும்புவதோடு, திறப்புவிழா இனிதே நிறைவேற மனமார வாழ்த்துகின்றேன்.

**சி.ரங்கராஜா, பிரதம செயலாளர்**
**வடக்கு-கிழக்கு மாகாணம், திருகோணமலை.**

## 40 ஆண்டு பழமைமிக்க நிர்வாகப் பிரிவுக்கு புதிய கட்டடம்



கரவெட்டி பிரதேச செயலகத்தின் புதிய கட்டடத் திறப்பு விழாவினை முன்னிட்டு வெளியிடப்படும் சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றேன். நான் யாழ். மாவட்ட அரசாங்க அதிபராக இருந்த போது இதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது. இப்பிரிவு கிட்டத்தட்ட 40 ஆண்டுகளிற்கு முன் ஆரம்பிக்கப்பட்டு உதவி அரசாங்க அதிபர் பிரிவாகவும் பின் பிரதேச செயலாளர் பிரிவாகவும் இயங்கி வருகின்ற போதிலும் இந்த அலுவலகம் நிரந் தரமான கட்டடத்தில் இயங்கவில்லை. யுத்தத்தினால் பாதிப்படைந்த கட்டுமானங்களை மீளக் கட்டியெழுப்புவதற்கும் பாதிக்கப் பட்ட பிரதேசங்களின் அபிவிருத்தியினை முன்னெடுத்துச் செல்வதற்கும் உலகவங்கியின் நிதியுதவியுடன் நடைமுறைப்படுத்தப்படும் NEERP திட்டத்தின் கீழ் மூன்று கட்டங்களாக 28.75 மில்லியன் ரூபா இவ்வேலைத் திட்டத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## ஒன்றிணைந்த முயற்சியின் பெறுபேறு



கரவெட்டிப் பிரதேச மக்களது ஒன்றிணைந்த முயற்சியின் பெறுபேறாக அதன் அறுவடையாக இங்கே திறந்துவைக்கப் பட்டிருக்கும் இந்தப் புதிய பிரதேச செயலகத்தினைக் காணும் போது பெருமிதப்படும் உணர்வு எனக்கு மிகைப்பட்டு நிற்கிறது.

'எமது நாட்டுக்கு இப்பொழுது வேண்டியது இரும்பனைய தசைகளும், உருக்கனைய நரம்புகளும் மற்றும் எதனாலும் எதிர்க்க முடியாத, கடலின் அடி வரை செல்ல நேர்ந்தாலும் கருதியதை

## கரவெட்டியின் மையப்பிரதேசத்தில் கட்டடம்

பூனை தன் குட்டியை இடத்துக்கிடம் காவிச் செல்வது போல கரவெட்டிப் பிரதேச செயல கமும் வெவ்வேறு தனியார் கட்டடங்களில் பல்லாண்டு காலமாக மாறி மாறி இயங்கி வந்தது. கட்டடம் ஒன்றை அமைப்பதற்காகக் கரவெட்டிப் பிரதேச செயலகப்பிரிவு மக்கள் ஒரு காணியை நன்கொடையாக வழங்கி உதவினார்கள். இக்காணியானது பிரதேசத்தின் ஒரு மையப்பகுதியில் அமையப்பெற்றிருப்பது பெருஞ் சிறப்பாகும்.

## முழுமையான சேவைபெற அரிய சந்தர்ப்பம்



உலக வங்கியின் நிதி உதவி யுடன் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களின் கட்டுமானங்களை மீளக் கட்டியெழுப்பும் திட்டத்தின் கீழ் வடக்கு-கிழக்கு அவசர புனர் வாழ்வுத் திட்ட (NEERP) நிதி ஒதுக்கீட்டிலிருந்து அமைக் கப்பட்டுள்ள கரவெட்டி பிரதேச செயலகத்திற்கான புதிய கட்டடத் திறப்பு விழாவினை முன்னிட்டு வெளியிடப்படும் சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதனை இட்டு பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

இப்பிரதேசத்தின் நிர்வாக மையமாக விளங்கும் இச் செயலகத்தின் கட்டட நிர்மாணமானது இப்பிரதே சத்திற்கான நீடித்து நிலைத்திருக்கக் கூடிய அபிவிருத்தி யின் அடித்தளமாக அமைந்திருப்பதுடன் வடமராச்சி மக் களின் நீண்ட காலத்தேவை ஒன்றினையும் பூர்த்தி செய்திருக்கின்றது. மிகவும் வேகமாக மாறிவரும் உல கின் சவால்களை எதிர்கொண்டு மக்களின் தேவை களை விரைவாகவும் திருப்தியாகவும் பூர்த்திசெய்ய வேண்டியதும் வாழ்க்கைதரத்தினை அதிகரித்து பிர தேசத்தினை அபிவிருத்திப் பாதையில் இட்டுச்செல்ல வேண்டியதும் பிரதேச செயலகங்களின் பிரதான கடமை யாகவுள்ளது.

கிடைக்கக்கூடிய வளங்களை உச்சமாகப் பயன் படுத்தி தேவைகளை அடையாளம் கண்டு அபிவிருத்தித் திட்டங்களை தயாரித்து, திட்டமிட்ட அடிப்படையில் இக் குறிக்கோளை செயலகங்கள் அடையவேண்டும். இவ் வலுவலகத்தின் கட்டட நிர்மாணப் பணிகளுக்கும் தள பாட உபகரணங்கள் கொள்வனவிற்குமான (NEERP) திட்டத்தின் ஊடாக இதுவரை 28.75 மில்லியன் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

## மாவட்ட நிர்மாண இயலுமைக்கு ஓர் எடுத்துக்காட்டு

வடமராட்சி தெற்கு மேற்குப் பகுதிக்கான பிரதேச செயலகம் புதிய இடத்தில் அமைக் கப்பட்டு, வைபவரீதியாகத்திறந்து வைக்கப்படும் நிகழ்வினை நினைவூட்டுகின்ற வரலாற்று ஆவணமொன்றில் எமது ஆசிச் செய்தியும் இடம் பெறக்கூடிய வாய்ப்பிற்காக மிகவும் மகிழச்சியுறுகின்றோம். யாம் பிறந்து வளர்ந்த மண்ணில் மலர்ந்துள்ள ஒரு நிறுவனம், பட்டதாரிப் பயிற்சியாளராக 1971 இல் முதன் முதலாக பணியாற்றிய நிறுவனம் பல்வேறு சாதனைகள், சோதனைகளின் பின்னர் கம்பீரமான சொந்தக் கட்டடத்தில் தனது பணிகளை மேலும் முன்னெடுத்துச் செல்ல ஆதாரமாக இருந்தவர்களையும் நன்றியுடன் வாழ்த் தக்கூடிய வாய்ப்பும் சேர்ந்துள்ளமை மேலும் மகிழ்வூட்டுகின்றது.

முதலில் தமக்கான பணிமனைக்கு 1.5 மில்லியன் ரூபா பெறுமதியான நிலத்தினை யாழ். பருத்தித்துறை பிரதான வீதி மருங்கில், கரணவாய் மூத்தவிநாயகப் பெருமான் அருள் பாலிக்கும் உடனடுத்த பிரதேசத்தில் வழங்கிய நல்மனத்தோர் நன்றிக்கு உரிய வர்கள். யாழ். மாவட்ட அரசாங்க அதிபராயிருந்த செ. பத்மநாதன் அவர்களின் இடைவிடாத முன்னெடுப்பு, வடக்கு-கிழக்கு மாகாணசபையினால் செயற்படுத்தப்படும் உலக வங்கியின் அனுசரணையுடனா வடக்கு-கிழக்கு அவசர மீள் நிர்மாண செயற்றிட்டத்தின் மூன்று படிநிலை களுக்கான 28.75 மில்லியன் ரூபா பெறுமதியான நிதிப்படுத்தல் ஆகியவை நினைவு கூரத்தக்கவை.

## நன்றியுடன் நினைவுகூரும் பெரும்பணி

எது எப்படி நடக்கின்றதோ அது நன்றாகவே நடக்கின்றது என்ற பகவானின் கீதை உபதேசத்திற்கு அமைய எமது கரவெட்டிப் பிரதேசம் வளர்ச்சியடைந்து வருவது எமது மக்கள் யாவரும் அறிவர்.

எமது பிரதேச வளர்ச்சியில் எமது செயலகத்திற்கான சொந்தக் காணி கொள்வனவும் பிரதேச செயலகக் கட்டடத் திறப்பு விழாவும் இரு மைல்கற்களாகும். காணிக் கொளவன வின் போது அச்சபையின் தலைவரும் முன்னாள் பிரதேச செயலருமான திரு.செல்ல முத்து ஸ்ரீநிவாசன் அவர்கள் கடமை, நேர்மை இரண்டையும் தனது இரு கண்களாகக் கொண்டு கடமையாற்றியவர். அவரின் செயல்திறனில் நம்பிக்கை இருந்தமையால்தான் இப்பெரிய காணியை மிகக் குறுகிய காலத்தில் கொள்வனவு செய்யமுடிந்தது. அவரின் சேவை இப்பிரதேசத்தின் வளர்ச்சி வரலாற்றில் நீங்கா இடத்தைப்பெறும் என்பது திண்ணம்.


... புதிய கட்டடத் திறப்பு விழா
...ண வழங்கி வாழ்த்துவோர்:-

...லையங்கள்

| | | |
|---|---|---|
| ...பூட்டி பலர்ஸ் | | |
| ...ிக் அன்ட் எலக்றிக்கல் | விண்மீன் அங்காடி. | உதயன் பல்பொருள் வாணிபம் |
| ... வீடியோ | ஸ்ரீ ஐங்கரா ரேடேர்ஸ் | வேழமுருகன் முகவர் தபால் நிலையம் |
| ... பேக்கரி | றீகல் வைன் ஸ்ரோர்ஸ் | அம்பிகா பல்பொருள் வாணிபம் |
| ... மார்க்கற் | அரோக்கிய எக்ஸ்றே நிலையம் | சிதம்பரப் பிள்ளை புத்தகசாலை |

| | | | |
|---|---|---|---|
| மகாலட்சுமி தங்க மாளிகை | வினோத் சூபலஸ் | இரட்ணம் ரெக்ஸ்ரைல் | சுதா ரேட் சென்ரர் |
| தச்சை ஐங்கரன் | கௌரி பைசிக்கிள் அன்ட் பூட் வெயர் | ஹெப்பி ரெக்ஸ் | ஹரன் தேநீர் சாலை |
| ராஜலட்சுமி ஸ்ரோர்ஸ் | வைஷ்ணவி நகைப்பூங்கா | றியோ உணவகம் | ராஜ் வர்த்தக நிலையம் |
| ஆதவன் மிதிவண்டி நிலையம் | அம்பிகை நகை மாடம் | மாயவன் நகை மாடம் | மலர்ஸ் |
| ஜெயா இரும்பகம் | கிங் யரட்ஸ் | நியூ அம்பிகா ஸ்ரோர்ஸ் | மோடோன் ஸ்ரோர்ஸ் |
| கலைவாணிக் கண்ணாடிக் களஞ்சியம் | ஸ்ரீ கிருஷ்ணா கிறீம் கவுஸ் | ஆனந்தா உணவகம் | கலைமகள் ஸ்ரோர்ஸ் |
| சாராஸ் | தமிழ் பூங்கா அச்சகம் | லவுலி கூல்பார் | நியூ சன்ஸ் நகை மாடம் |
| சுவர்ணமகால், நெல்லியடி | குறிஞ்சி [illegible] | [illegible]ஸ்ரோர்ஸ் | இஷா ரேடேர்ஸ் |

நலன் விரும்பிகள்

| |
|---|
| கரணவாய் தெற்கு கிராம அலுவலர் பிரிவு மக்கள் |
| உடுப்பிட்டி வடக்கு கிராம அலுவலர் பிரிவு மக்கள் |
| கரணவாய் மத்தி கிராம அலுவலர் பிரிவு மக்கள் |
| கப்பூது கிராம அலுவலர் பிரிவு மக்கள் |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறப்பு மலரின் தொடர்ச்சிகள்

## மாவட்ட நிர்மாண ...

01.03.2004 இல் வடக்கு-கிழக்கு மாகாண புனர் வாழ்வு இணைப்புக் குழுவின் அங்கீ காரத்தைப் பெற்ற இம் மீளமைப்புச் செயற்றிட்டம், நிர்மாணப் பொருள் கள், மேசன்மார், தச்சுவேலையாள்களின் தட்டுப் பாடுகள் மத்தியிலும் ஓராண்டு காலத்திற்குள் நிறை வேற்றப்பட்டமை யாழ். மாவட்ட நிர்மாண இயலுமைக்கு எடுத்துக்காட்டானதாகும்.

மத்திய, மாகாண மேல் மட்டங்களில் நிவாரணம், அபிவிருத்தி தொடர்பாக எடுக் கப்படும் தீர்மானங் களைச் செயலாக்கி நற் பேறுகளை உரியவர்களுக்கு உரிய காலத்தில் வழங்குவதில் மாவட்ட நிர்வாகத்தின் முக்கியத்துவம் என்றும் உணரப்பட்டு வந்துள்ளது. அரசாங்க அதிபர்கள், பிரசே செயலாளர்கள், கிராம சேவை அலுவலர்களின் திறமையும், நேர்மையும் அர்ப்பணிப்பும் கலந்த சேவைகள் பலவேறு இக்கட்டான நிலைமைகளில் மக்களை இடரிலிருந்து மீட்டுள்ளன. சில அலுவலரைப்பொறுத்து விதிவிலக்குகள் இருந்தா லும் அவை அவ்வவ்காலங்களில் மக்களினதும் அரசாங்கத்தினதும் பார்வையின் கீழ் கவனிக்கப்பட்டு வழிப்படுத்தப்பட்டுள்ளன.

மத்தியிலுள்ள அமைச்சுக்களின் செய்றிட்டங்கள், மாகாணசபையின் செயற்றிட்டங்கள் பொதுவாக மக்களின் நிம்மதி, மேம்பாடு ஆகியவற்றை அடித்த ளமாகக் கொண்டுள் ளதால் எல்லாத் திட்டங்களையும் உரியவாறு உரிய காலத்தில் செயற்படுத்தி, கண் காணித்து, மக்கள் பங்களிப்பை உறுதிப்படுத்தி, சமூக நீதியை நிலை நிறுத்தக்கூடியதாக மீளமைக்கப்பட்ட கரவெட்டி பிரதேச செயலகம் தொடர்ந்தும் செயற்பட வேண்டுமென மனமார வாழ்த்துகின்றோம். செயலகத் தின் திறனை மக்களின் மலர்ந்த முகங்களில் பார்க்க வேண்டும் அதுவே தலையாய ஆசீர்வாதமாகும்.

**செ.சுவாமிநாதன்**
பிரதிப் பிரதம செயலாளர் (திட்டமிடல்)
பிரதம செயலாளரின் செயலகம்,
வ.கி.மா.

## முழுமையான சேவைபெற...

இப்பிரதேசமக்கள் திருப்தியான சேவையினை யும், முழுமையான அபிவிருத்தியினையும் பெறுகின்ற போதுதான் இம் முதலீட்டின் உண்மையான அறுவடை யினை நாம் பெற்றுக்கொள்ளமுடியும். இச் செயலகத் தின் உத்தியோகத்தர்கள் குழுவாக ஒன்றிணைந்து வினைத்திறனும் பயனுறுதியும் உள்ள சேவையினை மக்களிற்கு வழங்க எல்லாம் வல்ல இறைவனின் அருள்கிடைக்க வேண்டுவதுடன் இச்செயலகத்தின் எதிர்காலம் ஒளிமயமானதாக விளங்க எனது வாழ்துக் களையும் நல்லாசிகளையும் தெரிவித்துக்கொள்கின் றேன்.

**கே.மகாலிங்கம்,**
**திட்ட இணைப்பாளர்,**
**வடக்கு-கிழக்கு அவசர புனர் வாழ்வுத்திட்டம் (NEERP),**
**திருகோணமலை.**

## கரவெட்டியின் மையப்பிரதேசத்தில்...

இக்காணியில் வடக்கு -கிழக்கு அவசர புனர் நிர்மாணத்திட்ட நிதியிலிருந்து புதிய கட்டம் அமைக்கப்பட்டு அதன் திறப்புவிழா நடைபெறவிருப்பதையிட்டுப் பெருமகிழ்வெய்து கின்றேன். காரியாலய உத்தியோகத்தர் சௌகரியமாகவிருந்து பொதுமக்களுக்குத் துரித சேவையாற்றக்கூடியவாறு இக்கட்டடம் அமையப்பெற்றுள்ளது. கரவெட்டிப் பிரதேச செய லகப் பிரிவு மக்களுக்கு ஒரு வரப்பிரசாதமாகும். உத்தியோகத்தரும் பொதுமக்களும் வள மான வாழ்வு வாழ்ந்திட வாழ்துகின்றேன்.

**செல்லமுத்து ஶ்ரீநிவாஸன், பிரதேச செயலர்**
**தென்மராட்சி, சாவகச்சேரி.**

## நன்றியுடன் நினைவு கூறும்...

கட்டடத் திறப்பு விழா நாயகனும் பிரதேச செயலருமான திரு. சி. சத்தியசீலன் அவர் கள் இப்பிரதேச மக்களின் திலகமாகத் திகழ்பவர். தனது பெயருக்கு ஏற்றவாறு பொருத் தமான முறையில் தனது கடமையைச் செய்துவருபவர். இவர்கள் இருவரும் இப்பிரதேச வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியவர்கள். இவர்களோடு காணிக் கொள்வனவுச் சபையின் பொருளாளரும் முன்னாள் உதவித் திட்டமிடல் அதிகாரி யுமான திருமதி நடராசா புவனேஸ்வரியுடன் இந்த இடைப்பட்ட காலங்கள் கடமைபுரிந்த திரு. வே. வீரபத்திரப்பிள்ளை, திரு. சிவபுண்ணியம் ஆகிய மூவரும் இப் பிரதேச மக்களின் நன்றிக் குரித்தானவர்கள்.

இப்பிரதேச செயலர் பதவி வழியாக எமது வாணியர் கழகத்தின் பிரதம விருந்தினராக யாப்பில் இடம் பெற்றுள்ளார் என்றால் வாணிப கழகத்திற்கும் பிரதேச செயலகத்திற்கும் உள்ள உறவு மேலும் சொல்ல வேண்டியதில்லை அந்த உறவிலேயே காணிக் கொள் வனவிலும், கட்டடத் திறப்பு விழாவிலும் வாணிபர்கழகமும் அதன் அங்கத்தவர்களும் முன்னுரிமை பெறுகின்றனர். இவர்களும் இப்பிரதேச மக்களால் மறக்க முடியாதவர்கள். இந்த உறவு மேன் மேலும் வளர வேண்டும். இப் பிரதேச செயலகம் எமது பிரதேச மக்க ளுக்கும் எமது கழகத்திற்கும் அளப்பரிய சேவைகள் புரிய எல்லாம் வல்ல இறைவன் அருள் வேண்டி வாழ்த்தி வணங்குகின்றேன்.

**சி. தங்கராசா, செயலாளர்.**
**வாணிபர் கழகம், நெல்லியடி.**

## முன்மாதிரியாகப்...

ஒன்றிணைந்து பணியாற்றுகிறார்கள் என்று பிரமிக் கும் வகையில் தேசம் புகழும் வண்ணம் பணிபுரிந்து முன்மாதிரியாகத் திகழ்வார்கள். இவ்வலுவலக ஊழி யர்கள் என்ற ஆணித்தரமான நம்பிக்கையுடன் எல்லாம் வல்ல இறைவனின் ஆசீர்வாதத் துடன் இப்பிரதேசச் செயலகம் பிரகாசமாக ஒளிர வேண்டுமென்று மனமார வாழ்த்து கின்றேன்.

**க. குகநேசன், பிரதம பொறியியலாளர் கட்டடங்கள்**
**திணைக்களம் (மாகாணம்), யாழ்ப்பாணம்.**

## ஒன்றினைந்த...

முடிக்கும் ஆற்றல் பெற்ற மனங்களே' என அன்று சுவாமி விவேகானந்தர் அவர்கள் கூறிய வார்த்தைகளும்,

'துன்பம் உறவரினும் செய்க துணிவாற்றி
இன்பம் பயக்கும் வினை' என்ற வள்ளுவரின் வார்த்தைகளும்,

வாழ்வில் மிக முக்கியமான விடயம் யாதெனில் எமது இலாபங்களை முதலீ டாகக் கொள்வதல்ல, அதை எந்த முட்டாளும் செய்வான். உண்மையில் மிக முக்கிய மானது யாதெனில் எமது இழப்புக்களை இலாபமாக்கிக் கொள்வதேயாகும்.

இதனைச் செய்வதற்கு நிறைந்த புத்திசாலித்தனம் வேண்டும் என்ற மேலைத்தேய தத்துவஞானி ஒருவருடைய கருத்தும் எனக்கு ஒன்றன் பின் ஒன்றாக ஞாபகம் வரு கின்றன. ஆம் இங்கு நான் குறிப்பிட்ட இந்த மூன்று தத்துவார்த்தக் கருத்துக்க ளுக்கும் எடுத்துக் காட்டாக இந்தக் கரவெட்டிப் பிரதேச மக்கள் செயற்பட்டிருக் கின்றார்கள்; செயற்பட்டு வருகின்றார்கள். வலிமை பெற்ற மனங்களைக் கொண்ட இந்த மக்கள், இழப்புக்களையே முதலீடுகளாக்கி உயர்ந்து நிற்கின்றனர். அதனை நினைத்து பெருமிதத்தோடு பாராட்டி நிற்கின்றேன்.

**கஜேந்திரகுமார் பொன்னம்பலம்.**
**நாடாளுமன்ற உறுப்பினர்.**

## மனநிறைவைத்...

மேலும் இக்கட்டடம் அமைவதற்கான இடத்தைக் கொள்வனவு செய்வதற்கு பங்களிப்பு வழங்கிய எமது பிரதேச பெருமக்களையும், அயராது பங்களிப்புக்களை சேர்க்க உழைத்த செயலகப்பணியாளர்களையும், பொது நிறுவனங்களையும் பாராட் டுகிறேன். இச் செயலகம் சீருடனும், சிறப்புடனும் இயங்கி மக்களின் வளமான வாழ் வுக்கு தேவையறிந்து சேவையாற்றி, குறைபோக்கி, நிறைவூட்டி இப்பிரதேசம் மேன் மேலும் சிறப்புற்று அபிவிருத்தியடைய இப்புதிய செயலகக் கட்டடம் செயற் பட எல்லாம் வல்ல இறையருளை வேண்டி வாழ்த்துகின்றேன்.

**கி.சிவநேசன் (பா.உ)**
**யாழ்ப்பாண தேர்தல் மாவட்டம், கரவெட்டி கிழக்கு,**
**கரவெட்டி.**

## நன்றியுடன் நினைவு ...

மக்களின் தேவைகள் அறிந்து பிரதேசத்தில் உள்ள வளங்களை உச்சமாகப் பயன் படுத்தி அவசர, குறுகிய கால, நீண்டகாலத் திட்டங்களை வரைந்து மக்களினதும் அரசு, அரசு சார்பற்ற நிறுவனங்களின் பங்களிப்புடன் பிரதேசத்தினை அபிவிருத்தி செய்ய வேண்டி பாரிய பொறுப்பு எமக்கு உள்ளது.உலகத்தின் எதிர்கால சவால்களை சமாளிப் பதற்கு தகவல் தொழில்நுட்பத்தின் உதவியுடன் மக்களுக்கான சேவைகளை விரை வாகவும் வினைத்திறனுடனும் வழங்குதல் வேண்டும். இச்செயலகத்தின் எதிர்காலம் ஒளிமயமானதாக அமைய எல்லாம் வல்ல மூத்தவிநாயகப்பெருமானின் அருள் வேண்டி எனது வாழ்த்துக்களையும் நல்லாசிகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**சி. சத்தியசீலன், பிரதேச செயலர்**
**கரவெட்டி.**

## 40 ஆண்டு...

மக்கள் தமது தேவைகள் அனைத்தையும் தமது பிரதேசத்திலேயே இலகுவாக பெற்றுக்கொள்ளவேண்டும் என்ற நோக்கிலும் மக்களை பங்காளர்களாக்கி அவர் களின் தேவைகளை பூர்த்தி செய்யக்கூடிய திட்டங்களை நடைமுறைப்படுத்து வதற்காகவும் உருவாக்கப்பட்டுள்ள பிரதேச செயலகக் கட்டமைப்புக்கள் தமது நோக்கத் தினை நிறைவேற்றுவதற்குரிய அடிப்படை வசதிகளை கொண்டிருக்க வேண்டும். இந்த அலுவலகங் களின் ஊடாக மக்கள் திருப்திகரமான சேவையினை விரைவாகவும் சரியாகவும் உரிய தரத்திலும் பெற்றுக்கொள்ளவேண்டும்.

இப்பிரதேசம் 35 கிராம அலுவலர் பிரிவுகளையும் கிட்டத்தட்ட 50 ஆயிரம் மக்க ளையும் கொண்டிருப்பதுடன் பல அறிஞர்களையும் கல்விமான் களையும் உருவாக் கிய பிரதேசமாகும். மக்களது தேவைகளையும் விருப்பங்களையும் அறிந்து அவர் களை பங்காளிகளாக்கி அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டும். இவ்வலுவலகம் தனது சேவையினை சிறப்பாக மக்களிற்கு வழங்கவும் அதன் எதிர்காலம் ஒளிமய மானதாகவும் பிரதேசத்தின் சுபீட்சத்தினை ஏற்படுத்துவதாகவும் அமையவேண்டி எனது வாழ்த் துக்களையும் நல்லாசிகளையும் தெரிவித்துக் கொள் கின்றேன்.

**திரு.செ. பத்மநாதன், திட்டப்பணிப்பாளர் (NEERP),**
**(முன்னாள் யாழ். அரச அதிபர்) வடக்கு-கிழக்கு**
**மாகாணம்**
**திருகோணமலை.**

### பொது அமைப்புக்கள் (மாதர் சங்கங்கள்)

- மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம்-கரவெட்டி கிழக்கு
- மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம்-துன்னாலை தெற்கு
- மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம்-அத்தாய்
- மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம்-உடுப்பிட்டி
- மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம்-துன்னாலை மேற்கு
- மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம்-இமையாணன் மேற்கு
- மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம்-அந்தணர் திடல்
- மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம்-மத்தொனி
- மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம்-உடுப்பிட்டி தெற்கு
- மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம்-துன்னாலை மத்தி
- மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம்-கரணவாய்கிழக்கு

### பொது அமைப்புக்கள்
(கடற்றொழிலாளர்/ விவசாய சம்மேளனம்/ ஏனைய விளையாட்டுக் கழகங்கள்)

- சிந்தாமணி கடற்றொழில் அபிவிருத்திச் சங்கம்-மத்தொனி
- நெல்லியடி விவசாய சம்மேளனம்-நெல்லியடி
- நெல்லியடி கிழக்கு விவசாய சம்மேளனம்-நெல்லியடி கிழக்கு
- இளைஞர் கழகம்-கரணவாய் கிழக்கு
- சுடர் ஒளி விளையாட்டுக்கழகம்-நெல்லியடி கிழக்கு

### நலன் விரும்பிகள்

- கரணவாய் தெற்கு கிராம அலுவலர் பிரிவு மக்கள்
- உடுப்பிட்டி வடக்கு கிராம அலுவலர் பிரிவு மக்கள்
- கரணவாய் மத்தி கிராம அலுவலர் பிரிவு மக்கள்
- கப்பூது கிராம அலுவலர் பிரிவு மக்கள்

### தனியார் கல்வி நிலையங்கள்

- நியூ எக்சலனட் இன்ஸ்ரிரியூட்
- ஐ.ஐ.எஸ் கணனி நிறுவனம்
- கேம்பிறிச் கல்வி நிலையம்
- பீகொன் கல்வி நிலையம்
- மற்ஸ் சென்ரர்

### பல நோக்கு கூட்டுறவுச்சங்கம்

- கட்டைவேலி நெல்லியடி கூட்டுறவுச்சங்கம்

### ஆலயங்கள்

- அல்லையம்பதி ஶ்ரீ சிவசுப்பிரமணிய தேவஸ்தானம்-துன்னாலை
- இமையாணன் மாந்தோட்ட சிவஞான வைரவர்-இமையாணன் மேற்கு
- வெலிக்கந்தோட்டம் பிள்ளையார் கோயில்-துன்னாலை தெற்கு
- வதிரி உல்லியன்னொல்லை கண்ணகை அம்மன் தேவஸ்தானம்-வதிரி
- கிழவி தோட்டம் விநாயகர் ஆலயம்-கரவெட்டி கிழக்கு
- வதிரி காளையந்தோட்டம் முத்துக்குமாரசுவாமி ஆலயம்
- நெல்லியடி தடங்கன் புளியடி முருக மூர்த்தி ஆலயம்
- கோயிற்கடவை சித்திவிநாயகர் ஆலயம்-துன்னாலை மத்தி
- சிவன்கோயில் தேவஸ்தானம் கலட்டி-கரணவாய் கிழக்கு
- யார்க்கரு சித்திவிநாயகர் ஆலயம்-கரவெட்டி கிழக்கு

### வங்கிகள்

- இலங்கை வங்கி-நெல்லியடி
- மக்கள் வங்கி-நெல்லியடி
- வர்த்தக வங்கி-நெல்லியடி

### பொது அமைப்புக்கள்
(கிராம அபிவிருத்திச் சங்கம்)

- கிராம அபிவிருத்திச் சங்கம்-துன்னாலை மேற்கு
- கிராம அபிவிருத்திச் சங்கம்-அந்தணர்திடல்
- கிராம அபிவிருத்திச் சங்கம்-நெல்லியடி கிழக்கு
- கிராம அபிவிருத்திச் சங்கம்-சமரபாகு
- கிராம அபிவிருத்திச் சங்கம்-கரணவாய் கிழக்கு

### சனசமூக நிலையங்கள்

- ஜோதி சன சமூகநிலையம்-இமையாணன்
- நவசக்தி சன சமூக நிலையம்-மத்தொனி
- நெல்லியடி சனசமூக நிலையம்-நெல்லியடி
- கட்டைவேலி சனசமூக நிலையம்-கட்டைவேலி
- கோயிற்கடவை சனசமூக நிலையம்-துன்னாலை மத்தி
- வேதாரணியேஸ்வரா சனசமூக நிலையம்-கரணவாய் கிழக்கு
- அல்லையம்பதி ஶ்ரீ முருகன் சனசமூக நிலையம்-துன்னாலை
- தேவராளி சனசமூக நிலையம்-தேவரையாளி
- கப்பூது சனசமூக நிலையம்-கப்பூது
- சோளங்கன் சனசமூக நிலையம் -கரணவாய் மேற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேரடிப் பேச்சு நோர்வே, புலிகள் 'ரெடி!' ஜனாதிபதி தயாரா?



## நோர்வே - பிரபா - மஹிந்த சந்திப்பு இரு இனங்களின் தலைவிதியை நிர்ணயிக்கும்

ஸ்ரீலங்கா அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் செய்துகொள்ளப் பட்டு நான்கு வருடங்களாக நடைமுறையில் உள்ள யுத்தநிறுத்த உடன்படிக்கை நெருக்கடி நிலைக்குள் சிக்கியுள்ளது.

அந்த நிலையைத் தவிர்த்து முறைப்படி அந்த உடன்படிக்கையை நடைமுறைப்படுத்தக் கூடிய சூழலை உருவாக்க வேண்டியதன் அவசியத்தைப் பல தரப்புக்களும் கோடிட்டுக் காட்டிவருகின்றன.

இந்த வகையில் புதிதாகப் பதவியேற்றுள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு நோர்வே அனுசரணையாளர்கள் ஊடாகத் தமிழீழ விடுதலைப் புலிகள் செய்தி ஒன்றை கடந்த வெள்ளிக்கிழமை விடுத்துள்ளனர்.

கிளிநொச்சிக்கு வந்த நோர்வே தூதர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் மூலமாக இச்செய்தியை விடுதலைப் புலிகளின் தலைமை அனுப்பியுள்ளது.

கடந்த மாதம் 19ஆம் திகதி ஜனாதிபதியாக மஹிந்த ராஜபக்ஷ பதவியேற்றார். அவர் ஆட்சிக்கு வரக் காரணமாக இருந்த ஜே.வி.பி.மற்றும் ஹெல உறுமய பேரினவாதச் சக்திகளின் அழுத்தம் காரணமாக சமாதான முயற்சிகள் குறித்து எந்தவித நடவடிக்கைகளையும் எடுக்க முடியாத இக்கட்டு நிலையில் இருந்தார்.

ஜே.வி.பியின் 'நட்பு நாடாக' விளங்கும் இந்தியாவை இலங்கை விவகாரத்தில் நுழைத்து அக்கட்சியை வலைக்குள் சிக்க வைக்க, மஹிந்த புதிய வியூகம் ஒன்றை அமைத்தார். அதன் வெளிப்பாடாக வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவை இந்தியாவுக்கு அனுப்பினார். அவர் பல தரப்புக்களுடனும் பேச்சுகளை நடத்தினார்.

இலங்கை விவகாரத்தில் தலையிட்டு அமைதிகாக்கும் படையை இங்கு அனுப்பி சூடுவாங்கிய வரலாற்றை மறக்காது ராஜதந்திர ரீதியில் தனது காய்நகர்த்தலைச் செய்துள்ளது இந்தியா.

'இலங்கை விவகாரத்தில் நாம் தலையிடவில்லை. நோர்வேயைத் தொடர்ந்து அனுசரணையாளர்களாக ஏற்றுக்கொள்ளுங்கள். தேவையான ஆலோசனைகளை காலத்துக்குக் காலம் வழங்குகின்றோம் - என்று இலங்கைக்கு அடித்துக்கூறிவிட்டது.

இந்தச் செய்தியுடன் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர நாடு திரும்பினார். மஹிந்த வகுத்த வியூகத்துக்கு கிடைத்த முதல் வெற்றி இதுவாகும்.

இதன்பின் ஜே.வி.பி. மற்றும் ஹெலஉறுமயவின் தலைவர்களை அவர் தனித்தனியாகச் சந்தித்தார். இந்தியாவின் நிலைப்பாட்டை அவர்களுக்குத் தெளிவுபடுத்தினார். ஒன்றும் செய்யமுடியாமல் இருகட்சிகளும் தமது அடிப்படைக் கொள்கைகளில் இருந்து பின்வாங்க வேண்டிய நிலை உருவாகியது.

இந்நிலையில் கடந்த புதன்கிழமை நோர்வேத் தூதரை தமது அலுவலகத்திற்கு அழைத்து உத்தியோகபூர்வமாக அனுசரணைப் பணியைத் தொடருங்கள் என்று அறிவித்தார் மஹிந்த.

நோர்வேயை வெளியேற்று என்று கோஷங்களை முன்வைத்து நோர்வேத் தூதரகம் முன் ஆர்ப்பாட்டங்களை நடத்தி வந்த ஜே.வி.பி. மற்றும் ஹெலஉறுமயக் கட்சிகள், ஜனாதிபதி நோர்வேயை அனுசரணைப் பணிக்கு அழைத்துள்ள நிலையில் வாய்மூடி மௌனிகளாகியுள்ளன. இலங்கை விவகாரத்தை அக்குவேறு ஆணிவேறாகக் கரைத்துக் குடித்து அனுபவம் பெற்ற நோர்வே, சிங்களத் தலைமைகளில் நம்பிக்கை வைக்காது, சகல தெற்குக் கட்சிகளும் கூட்டாக ஆராய்ந்து முடிவு எடுத்த பின் ஒன்றாக குரல் கொடுங்கள் என்று கூறியுள்ளது.

ஜனாதிபதியின் அனுசரணைப் பணி என்ற செய்தியுடன் கிளிநொச்சி வந்த நோர்வேத் தூதருக்கு உறைக்கும் படியாக தமது நிலைப்பாட்டை எடுத்துவிளக்கியுள்ளார் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன்.

''யுத்த நிறுத்த சூழல் தகர்ந்து போகும் ஆபத்து மிக நெருக்கமாகிக் கொண்டிருக்கின்றது. அண்மைக் காலத்தில் இராணுவ நெருக்குவாரங்கள், பொதுமக்கள் கொலை செய்யப்படுதல், இராணுவ - பொதுமக்கள் முறுகல்கள் போன்றவை தீவிரமடைந்து கொண்டிருக்கின்றன.

''யுத்த நிறுத்த உடன்படிக்கையின் அமுலாக்கல் தொடர்பாக அரசு உயர்மட்டக் குழுவும் விடுதலைப் புலிகளின் உயர்மட்டக் குழுவும் விரைவாகச் சந்தித்து நேரடியாகப் பேசவேண்டும். காலத்தின் கட்டாயமாக அது இருக்கின்றது.

''தற்போதுள்ள நெருக்கடி நிலையை மாற்றி யுத்தமற்ற - அமைதிச் சூழலைத் தக்க வைக்க வேண்டுமானால் விரைவாக நேரடிப் பேச்சு இடம்பெறவேண்டும். தலைமைப் பீடத்தின் சார்பாக வலியுறுத்துகின்றோம்''.

இப்படியான செய்தி ஒன்றை நோர்வே அனுசரணையாளர் ஊடாகத் தமிழ்ச்செல்வன் புதிய அரசுத் தலைவருக்கு அனுப்பியிருக்கின்றார்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் ஆட்சி முடிவுறும் இறுதிக் காலத்தில், யுத்த நிறுத்த உடன்பாடு தொடர்பாக அரசும் - விடுதலைப் புலிகளும் உயர் மட்டத்தில் நேரடிப் பேச்சு நடத்தவேண்டும் என்ற யோசனை நோர்வேத் தரப்பால் முன்வைக்கப்பட்டது.

இந்தப் பேச்சுகளை அமைதியான சூழலில் நடுநிலையான நாடு ஒன்றில் நடத்தலாம். இல்லாவிட்டால் கிளிநொச்சியில் நடத்தலாம் என்று விடுதலைப் புலிகள் தமது நிலைப்பாட்டைத் தெளிவாக வெளியிட்டிருந்தனர்.

கிளிநொச்சியில் நடத்த முடியாது. எமது தரப்புப் பிரதிநிதிகளுக்கு பாதுகாப்பு இல்லை. வெளிநாட்டில் அல்ல. உள்நாட்டிலேயே பேச்சு நடக்கவேண்டும். ஓமந்தை யுத்த சூனியப் பிரதேசத்தில் பேச்சை நடத்தலாம் என்று அரசுத்தரப்பில் கூறப்பட்டது.

இறுதியில், விடுதலைப் புலிகளின் உயர் மட்ட அரசியல் குழுவினர் வெளிநாடுகளுக்குச் செல்லும் போது கட்டுநாயக்காவில் தங்கித்தான் செல்வார்கள். அது பாதுகாப்பான இடம் என நோர்வேத் தரப்பு ஆலோசனை ஒன்றை ஒருதலைப்பட்சமாக முன்வைத்தது. அந்த யோசனையை இலங்கை அரசும் ஆமோதித்தது.

நோர்வேயின் இந்த யோசனை விடுதலைப் புலிகளின் தலைமையைச் சீற்றமுற வைத்தது.

இருதரப்புச் சம்பந்தப்பட்ட விடயம். எம்முடன் ஆராயாமல் எப்படி கட்டுநாயக்காவைத் தெரிவு செய்தீர்கள் என நோர்வேக்கு தமது ஆட்சேபத்தைத் தெரிவித்து அந்த யோசனையை முற்றாக நிராகரித்துவிட்டனர் புலிகள்.

இக்காலகட்டத்தில் ஜனாதிபதி தேர்தலுக்காக நியமனப் பத்திரங்கள் கோரப்பட்டு தேர்தல் பிரசாரம் முனைப்படைந்ததுடன் நேரடிப் பேச்சு என்ற விவகாரம் அடிபட்டுப் போனது.

புதிய தலைவர் தெரிவான பின்னர் மீண்டும் நேரடிப் பேச்சு விவகாரம் மீள உயிர்த்துள்ளது.

யாழ்ப்பாணத்திலும் கிழக்கிலும் வன்செயல்களின் மட்டம் உயர்ந்துள்ளது. யுத்தநிறுத்த உடன்படிக்கை மிகவும் நெருக்கடிக்குள்ளாகியுள்ளது. வன்முறைகளைக் கட்டுப்படுத்த இருதரப்பின் உயர்மட்டத் தலைவர்கள் பேச வேண்டும் என்று நோர்வே அனுசரணையாளர்கள் மீண்டும் ஒரு யோசனையை முன்வைத்துள்ளனர்.

இந்த யோசனையை வரவேற்றுள்ள விடுதலைப் புலிகள் உயர்மட்டக் குழுவின் நேரடிப் பேச்சு விரைவாகவும் அவசரமாகவும் இடம்பெற வேண்டும். அதற்கு அரசுத் தரப்பும் முன்வரவேண்டும் என்ற செய்தியை அரசுத் தலைவருக்கு கடந்த வெள்ளி அனுப்பியுள்ளனர்.

இந்த நேரடிச் சந்திப்பின் அவசரத்தை அனுசரணையாளரான நோர்வேயும் தமிழர் தரப்பின் அதிகாரபூர்வப் பிரதிநிதிகளான விடுதலைப் புலிகளும் உணர்ந்து செயற்படுவது போல மற்றொரு தரப்பான ஸ்ரீலங்கா அரசும் செயற்பட்டால்தான் எதிர்கால சமாதான முயற்சிகள் ஆரோக்கியமாக முன்னெடுக்கப்படும். இதுகுறித்து முடிவு எடுக்க வேண்டிய பொறுப்பு ஸ்ரீலங்கா அரசின் பக்கமே உள்ளது. மொத்தத்தில் பந்து அரசின் பக்கத்திலேயே உள்ளதால் உருப்படியான செயற்பாடுகளை மஹிந்த மேற்கொள்வாரா? அடுத்துவரும் நாள்கள் அதற்கு பதில் கூறும்.

யுத்தநிறுத்த உடன்பாட்டின் அமுலாக்கல் தொடர்பான நேரடிப் பேச்சுக்கு புறம்பாக-

அரசுக்கும் - விடுதலைப் புலிகளுக்குமிடையில் எதிர்காலத்தில் இடம்பெறப் போகுமென நம்பப்படும் நேரடிப் பேச்சுக்கள் தொடர்பாகப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்காக நோர்வேயின் உயர்மட்ட அரசியல் குழு அடுத்தடுத்த வாரங்களில் இலங்கை வரப் போகின்றது.

ஏற்கனவே அரசுக்கும் - விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடந்த ஆறுகட்டப் பேச்சுக்களின் தொடர்ச்சியாகப் பேச்சுகள் விட்ட இடத்தில் இருந்து ஆரம்பிக்கும் சாத்தியம் குறித்தும் அடுத்த கட்ட நகர்வுகள் குறித்தும் அந்தக்குழு பேச்சுக்களை நடத்தவிருக்கின்றது.

இக்குழு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் உட்பட மற்றும் கட்சிகளின் தலைவர்களைச் சந்திக்கப் போகின்றது.

அந்தப் பேச்சில் காணப்படும் முடிவுதான் எதிர்காலப் பேச்சுக்கள் சுமுகமாக முன்னெடுக்க உதவப்போகின்றது. இணக்கம் ஏற்படாவிட்டால் இரு தேசங்கள், இரு இனங்கள் தமது தலைவிதியைத் தாமே தீர்மானிக்கும் முடிவுக்குத் தள்ளப்படும். இதுவே யதார்த்த நிலை.

* * *

## மக்களின் கொந்தளிப்பு கூறும் செய்தி என்ன?

கடந்த முதலாம் திகதி நீர்வேலியில் தேச விடுதலைப் பற்றாளர்களான இரு இளைஞர்கள் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்தை அடுத்துக் குடாநாட்டு மக்கள் கொதித்தெழுந்தார்கள்; கிளர்ந்தெழுந்தனர்.

இராணுவப் புலனாய்வாளர்களும் ஈ.பி.டி.பியினரும் இணைந்து இக்கொலையைப் புரிந்தனர் என எழுப்பப்பட்ட குற்றச்சாட்டின் பேரில் மக்கள் கிளர்ந்தெழுந்து படையினருக்கு எதிரான தாக்குதல்களை - எதிர்ப்பு நடவடிக்கைகளைத் தீவிரமாக்கினர்.

குடாநாடுதழுவிய வகையில் நடத்தப்பட்ட ஹர்த்தால், பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரிக்கு முன்பாகவுள்ள முகாம்களை அகற்றக் கோரி மாணவர்கள் மேற்கொண்ட மறியல் போராட்டங்கள் காரணமாக முடிந்த வாரம் கொந்தளிப்பு வாரமாக அமைந்துவிட்டது.

ஹர்த்தால் காரணமாக வீதிகளில் ரயர்கள் போட்டு எரித்தும் வீதித்தடைகள் போட்டும் படையினரின் நடமாட்டங்கள் முடக்கப்பட்டன.

படையினரின் விநியோகச் செயற்பாடுகளை முடக்கும் வகையில் அவர்களுக்கு உணவு எடுத்துச்சென்ற வாகனங்கள் கோண்டாவிலிலும் இருபாலையிலும் கிளைமோர் தாக்குதலுக்கு இலக்காகின. குடிதண்ணீர் எடுத்துச் செல்லும் பவுஸர் வாகனம் யாழ். கச்சேரியடியில் தாக்கப்பட்டது. பல காவலரண்கள் மீது கிரனேட் தாக்குதல்களும் மேற்கொள்ளப்பட்டன.

மக்களின் கொந்தளிப்பின் வெளிப்பாடாகப் படையினர் மீது கல்வீச்சுகளும் பரவலாக இடம்பெற்றன. பதிலுக்கு படையினரும் பொல்லுகள், எஸ்லோன் பைப்புகள் கொண்டு பொதுமக்களைக் கண்டபடி தாக்கியும் உள்ளனர்.

சமாதான காலத்துக்கு முன்னர் நடைமுறையில் இருந்த படையினரின் தேடுதல்கள், சுற்றிவளைப்புக்கள், அடையாள அட்டைச் சோதனை என்பன மீண்டும் ஆரம்பமாகியுள்ளன.

மொத்தத்தில் குடாநாடு போருக்கு முந்திய புறச் சூழல் உருவாகி வருவது போன்ற தோற்றம் கண்டுள்ளது. பொதுமக்களின் கொந்தளிப்புக்கு எதிராகப் படையினர் ஆரம்பித்து வைத்த வன்முறை சார்புப் புறத்தோற்றம் - சூழல் - தொடருமா? அல்லது அரசு - புலிகள் பேச்சுக்கள் தொடங்கும் போது, நிலைமை சீராகுமா? இவையே இன்று எழும் கேள்விகள்.

ஒருவார களேபரங்களுக்குப்பின் அமைதிக்குத் திரும்பியுள்ள குடாநாட்டுச் சூழல் தொடர்ந்து தக்கவைக்கப்படுமா என்பதைப் பொறுத்திருந்து தான் பார்க்கவேண்டும்.

*





வாராந்த அரசியல் அலசல்

குகா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள சிசில் பிறிச், யப்பான் ஏசியா துவிச்சக்கர வண்டி (பெண்கள்), காஸ் அடுப்பு சிலிண்டர் உட்பட வீட்டுப் பாவனையில் உள்ள தளபாடங்கள் (அலுமாரி, மேசை, கதிரைகள்), சிறிய துவிச்சக்கர வண்டி (½ ஆண்கள்), சிறிய T.V. என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு: இல.36, சங்கிலியன் வீதி, நல்லூர் - யாழ்ப்பாணம். (43814)

## கார் விற்பனைக்கு

3 Sri xxxx தொடரிலக்கமுடைய Fort கார் நல்ல நிலையில் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 0777 283824, 071-4220020. (சி/46717)

## நாய்கள் விற்பனைக்கு

கொழும்பிலிருந்து கொண்டுவரப்பட்ட றொடீசியன் றிச்பக் இன ஆண், பெண்கள் நாய்களும், ஜேர்மன் செப்பேட் இன ஆண் நாயும், டொமன் (டொமன் + காலிக்குயின்) பெண் நாயும் விற்பனைக்குண்டு. தொடர்பு: செல்லையா உருத்திரா, கேணியடி, கொக்குவில் மேற்கு. (43824)

சுத்தமான Dobermann Pincher நாய்க் குட்டிகள் குறைந்த விலையில் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: க.தனபாலசிங்கம் (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச்சந்தையடி, நல்லூர். (43784)

60 நாள் நிறைந்த அல்சேஷன் பெண் குட்டிகளும் (கறுப்பு) டோமன் பெண் குட்டியும் விற்பனைக்குண்டு. தொடர்பு: வ.சிவசுப்பிரமணியம் பொன்னாலை வீதி, கட்டுடை, மானிப்பாய் (துர்க்கா மில்லுக்கு அருகில்). (43836)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

Prima உயிர் Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள் சுகாதார முறைப்படி உடன் சுத்தம் செய்து தினமும் பெற்றுக்கொள்ளலாம் (Electronic நிறுவை). தொடர்பு: (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (43786)

புறொயிலர் 1Kg 140/=, சுத்தம் செய்தது 210/= மற்றும் கல்වெட் சேவல் என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு: New R.S.K Farm, மானிப்பாய் றோட், பெரிய மதவடி, உடுவில் மற்றும் மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில். (43816)

## கோழிக்குஞ்சு விநியோகம்

இரண்டு முறை தடுப்பு மருந்து போடப்பட்ட Original Prima Broiler குஞ்சுகள், பேட்டுக்குஞ்சுகள் 12.12.2005 திங்கட்கிழமை பிற்பகல் விநியோகிக்கப்படும். எமது பருத்தித்துறை - நெல்லியடிக் கிளைகளிலும், கரன் - ஆலடி, உடுவில், நல்லூர் பாம் சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். தை மாதம் Broiler கோழிகளுக்குத் தட்டுப்பாடு ஏற்படும் என்பதால் முன்கூட்டியே பதிவுகளை மேற்கொள்ளவும். (43785)

## மணமகன் தேவை

ஜேர்மனியில் குடியுரிமையுடைய யாழ். இந்து கௌரவ குடும்பம், 1985, உத்தரட்டாதி, மீன ராசி, 24கிரக பாவம், 5'4'' உயரம், சிவந்த நிறமான, தாதியர் உத்தியோகத்தர் பணியிலுள்ள மணப்பெண்ணுக்கு டாக்டர், எஞ்சினியர், பட்டதாரி மணமகன் தேவை. தொடர்பு: திரு.S.K.சிவகரன், சிவாலயா சர்வதேச திருமண நிலையம், இல.11, யமுனா வீதி, நல்லூர் - யாழ்ப்பாணம். T.P 0776528641, E.mail Shivagaran 12 @ yhoo.com. (43829)

## திருமண சேவை

ஏழு செருப்பு தேய்ந்து ஏற்ற ஒருவரை வாழ்க்கைத்துணையாக்க முடியவில்லையே என ஏக்கமா? நுங்கள் செருப்பில் தூசிபடிவு ஏற்படாத துரிதவேகத்தில் பெருந்தொகையான கடிதக்கோப்புக்களுள் தெரிந்தெடுக்கும் சாதகக் குறிப்புக்கள் பொருந்தக் கூடியனவா? விருப்பத்திற்குரியனவா? என்பதைத் தெரிந்தெடுத்தகணமே நிச்சயிக்கக்கூடிய சுயதெரிவு முறையே சுயதெரிவுமுறை முன்னோடி பிரபல திருமண ஆற்றுப்படுத்துநர் குரும்பசிட்டியூர் மாயவேலமுதனின் ஒப்பபேற்று வழிமுறை வேல் அமுதனின் வழிமுறை பற்றிய விவரங்களுக்கு மாலை 4.30 மணிக்கு மேல் தொடர்புகொள்க. வேலமுதனின் நேரடி தொலைபேசி 2360488, 4514396. (சி-46692)

## வீடு வாடகைக்குத் தேவை

நல்லூர், பிறவுண் வீதி, நாவலர் வீதிப் பகுதிகளில் அளவான சிறிய வீடு வாடகைக்குத் தேவை. முற்பணமும் வழங்கப்படும். T.P.: 0776365950. (43588)

## காணி விற்பனைக்கு

ஆலடி, மானிப்பாய் றோட், உடுவிலில் வியாபாரத்திற்கு உகந்த இடத்தில் 4 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: 0115343282. (43788)

## காணியுடன் வீடு விற்பனைக்கு

தும்பளை பிரதான வீதியிலிருந்து 200 m தூரத்தில் இயற்றாவளைப் பிள்ளையார் கோயில் வீதி, தும்பளையில் வீடு விற்பனைக்குண்டு. தொடர்புக்கு: 0776199786. (43790)

அச்சுவேலி, ஜோன்ராஜ வீதியில் நான்கு பரப்புடன் கூடிய வீடு உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்புகொள்ள வேண்டிய தொலைபேசி இல.: 0112 - 360963, 0773028402. (43815)

யாழ்ப்பாணம், இராசாவின் தோட்டம் வீதியில் 2 பரப்புக் காணியில் 4 அறைகளுடன் கூடிய சகல வசதிகளும் கொண்ட வீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு: 032-2221340. (43844)

## பணிப்பெண் தேவை

கொழும்பு, வெள்ளவத்தையிலுள்ள ஒரு வீட்டில் மூன்று பேருக்குச் சமைப்பதுடன் வீட்டைப் பராமரிக்கக்கூடிய வேலைக்கு ஒரு பெண் உடனடியாகத் தேவைப்படுகிறார். 50 வயதுக்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும். தங்குமிடம், சாப்பாட்டுடன் மாதாந்த சம்பளமும் கொடுக்கப்படும். தொடர்பு: 29/2, கல்யாணி றோட், வெள்ளவத்தை, கொழும்பு - 06. T.P.: 2502229, 2366482. (43821)

## மணமகன்கள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம், 1977, றோகிணி, இடபராசி, 4இல் செவ்வாய், 43 கிரகபாவம், 5'2'' உயரம், M.B.B.S., 1978 அனுசம், விருச்சிக ராசி, 5'5' உயரம், கிரக பாவம் 51½, M.B.B.S. டாக்டர் மணமகள்களுக்கு U.K., U.S.A. ஆஸ்திரேலியா குடியுரிமையுடைய டாக்டர், என்சினியர் மணமகன்கள் தேவை. தொடர்பு: Shivaalaya, No.11, Jamunaa Street, Nallur, Jaffna, Sri Lanka. T.P.: 0776528641, Email: Shivagarn 12@yahoo.com. (43724)

## தவறிவிட்டது

நா.சிவகரன் என்பவருடைய மோட்டார் வாகனப் புத்தகம் கடந்த மாதம் 05.11.2005 வலிகாமத்திற்கும் வடமராட்சிப் பிரதேசத்திற்கும் இடையில் தவறவிடப்பட்டுவிட்டது. கண்டெடுப்பவர்களிற்குச் சன்மானம் வழங்கப்படும். தொடர்பிற்கு: 0776544586, 0779 037194. (43342)

## பூச்சாடிப் பிரியர்களுக்கு

றபர் துகள்களால் (Crumbed Rubber) தயாரிக்கப்பட்ட சிறிய, பெரிய கலர்ப் பூச்சாடிகள் விற்பனைக்குண்டு. வீட்டிற்கு உள்ளேயும் வெளியேயும் இலகுவில் இடம் மாற்றி வைக்கக்கூடியது. தொடர்பு: க.ஸ்ரீபதி, நவரட்ணராஜா வீதி, நெட்டிலிப்பாய், கோண்டாவில் (DSI ரயர் களஞ்சியத்திற்கு அருகில்). (46278)

### Refresh System

புதிய, பழைய கணனிகள் வீட்டில் வந்து திருத்திக்கொடுக்கப்படும். தொடர்பு: சுதுமலை, மானிப்பாய், 077-3253104, 077-6279671.
(43247)(42.32.19.11)

### கோபாலையரின்

தமிழ் இலக்கணப் பேரகராதி
17 தொகுதிகள்
சேமமடு பொத்தகசாலை
UG. 52, பீப்பிள்ஸ் பார்க்,
(சி/46667) கொழும்பு-11,
011-2331475 பெற்றுக்கொள்ளலாம்.

### ENGLISH CLASSES

English Liteature, English Language
தரம் 6 முதல் O/Lவரையிலான சகல வகுப்புகளும் ஆரம்பம் 15.12.2005. அனுமதிக்குப் பெற்றோர் வருகை அவசியம்.
தொடர்பு: K.Subramanium
62, palam Road, Kantharmadam. (43796)

### மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 54 வயதுடைய, விவாகரத்துப் பெற்ற, இளைப்பாறிய தொலைத்தொடர்பு பொறியியலாளர் கொழும்பில் சொந்த வீடுள்ள மணமனுக்கு நற்குணமும், நல்ல அழகும், தெய்வ பக்தியும் உள்ள 5 அடி உயரத்திற்குக் குறைவான விவாகரத்து அல்லது விதவை 50 வயதிற்குட்பட்ட ஆசிரியை அல்லது தாதி, வங்கி ஊழியராகத் தொழில் புரியும் மணப்பெண் தேவை. சாதகக் குறிப்பு, படம், தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.
(43783)
தொடர்பு: B.Rajenthra
Telecom Engineer
52/29A, றபர்வத்தை, தெஹிவளை.
T.P.No. 0112736233
தங்கை கொ[illegible] T.P. No. 021 2226481

## கண்டியில் கைத்திறன் போட்டி

தொழில் நுட்பக் கல்லூரி மாணவர்களுக்கானவலயமட்ட தேசிய கைத்திறன் போட்டி - 2005 எதிர்வரும் 23ஆம் திகதி வெள்ளிக்கிழமை கண்டி - அறப்பொல தொழில்நுட்பக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

யாழ். தொழில்நுட்பக் கல்லூரியில் இருந்து மேற்படி போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்ட 6 பயிற்சி நெறிகளைச் சேர்ந்த 6 மாணவர்களையும் எதிர்வரும் 14ஆம் திகதி புதன்கிழமை யாழ். தொழில்நுட்பக் கல்லூரிக்கு நேரில் சமுகமளிக்குமாறு யாழ். தொழில்நுட்பக் கல்லூரி அதிபர் கேட்டுள்ளார்.

கட்டடவேலை, மரவேலை, நீர்க் குழாய் பொருத்துதல், மின்கம்பி இணைப்பு, மின் உருக்கி ஒட்டுதல் ஆகிய பயிற்சி நெறிகளைச் சேர்ந்த தலா ஒவ்வொரு மாணவர்களே வலயமட்ட தேசிய கைத்திறன் போட்டிக்கென அழைக்கப்பட்டுள்ளனர். (எ-12)

### கடன் வழங்க நிதி ஒதுக்கீடு செய்யக் கோரிக்கை

வட பிரதேச நல்லொழுக்க சம்மேளனம் சம்மேளன உறுப்பினர்களுக்கு சுழற்சி முறையில் சுயதொழில் முயற்சிக் கடன் வழங்குவதற்கு நிதி வழங்கி உதவுமாறு ஐ.நா. அபிவிருத்தித் திட்டத்தின் யாழ். மாவட்ட பொறுப்பதிகாரியிடம் கடித மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இதேவேளை, மேற்படி சம்மேளனம் ஜனவரி மாதம் தொடக்கம் சகாயபுரம் மற்றும் அராலி மேற்கு, ஊர்காவற்துறை ஆகிய கிராமங்களில் நல்லொழுக்கம் மற்றும் அறநெறிகளைக் கற்பிக்கும் கல்வி நிலையங்களை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்துவருவதாக சம்மேளனத்தின் தலைவர் சி.இராசலிங்கம் தெரிவித்தார். (எ-135)

### கணிப்பீட்டுச் செயலமர்வு

தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளில் சமூகக் கல்வியும் வரலாறும் பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான பாடசாலை மட்டக் கணிப்பீட்டுச் செயலமர்வு எதிர்வரும் 24ஆம் திகதி சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

பாடசாலைகளில் இப்பாடம் கற்பிக்கும் ஆசிரியர் ஒருவரை செயலமர்வில் கலந்துகொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகன் கேட்டுள்ளார். (எ-117)


Saito College Malaysia 4 வாரத்தில்
STUDY LONDON, CANADA, AUSTRALIA, USA Through MALAYSIA
Minimum qualification G.C.E (O/L)
Course fee payable in installment
All filed of studies available
No visa interview
100% guaranties for visa
Limited applications only
Initials cost with Air Ticket only 75000/=

HOT LINE: 0717763564
IT SOLUTION
527,Galle Road,Colombo-06
☎ 2551148, 2551548
Contact US:
IIS
#100, Clock Tower Road, Jaffna.
T.P : 021 222 2831



SAAMSTECH இன்
WEB & INTERNET
உங்களுக்கான, குடும்பத்துக்கான, நிறுவனத்துக்கான இணையதளத்தினை நீங்களே அமைத்துக்கொள்ளலாம்
இணையதள வடிவமைப்பு பயிற்சிநெறி
காலம் : 1 மாதம்
கல்வித்தகுதி : க.பொ.த சா.த
கட்டணம் : ரூபா 3000/-
பாட அலகுகள் : Internet Fundamental, Web Fundamental, Front Page, Dream Weaver HTML, CSS, Java Script, Server Scripting, e-commerce, e-business and more..
பாடநெறியின் முடிவில் சுயமாக இணையதளங்களை வடிவமைக்கலாம், இணையதளமூடான வியாபாரங்களை நடாத்தலாம், உலகளாவிய அளவில் அதிக ஊதியத்துடன் தொழில்வாய்ப்பை பெற்றுக்கொள்ளலாம்.
குறிப்பு : பாடநெறியின் முடிவில் பரீட்சையில் அதிகூடிய புள்ளிகள் பெறுவோருக்கு எமது இணையதள பிரிவில் பணிநியமனம்
விசேட சலுகை
இன்றும் நாளையும் பதிவு செய்வோருக்கு விரும்பிய பெயரில் ரூபா 10,000/- பெறுமதியான .COM இணையதளம் மற்றும் ஒரு வருடத்துக்கான HOSTING சேவை என்பன முற்றிலும் இலவசம்
பதிவுகளுக்கு
SAAMSTECH
841, Hospital Road, Jaffna 021 - 4591571
233/4, Kasthuriar Road, Jaffna 021 - 2229505


## 16ஆவது ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 02 - 02 - 1969



இறப்பு 09 - 12 - 1989

சங்கரப்பிள்ளை தேவசாந்தி [சாந்தி]

பதினாறு ஆண்டுகள் பறந்தோடிப் போனாலும்
பதறிய நெஞ்சங்கள் இன்னும் ஆறவில்லையே சாந்தி!
சிதறிய எண்ணம்போல் உன் நினைவுகள் சிதறியே போகாமல்
என்றும் எம் நெஞ்சில் ரணமாய் வலிக்கின்றதே!

கைதடி மேற்கு, கைதடி. (43708) (21-14-24) - குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியர்
திருமதி பாலகௌரி சுவேந்திரன்
அவர்களின் அன்புத் தந்தை



இராசகாரி பாலசுப்பிரமணியம்

அவர்கள் 09.12.2005இல் இறைபதம் அடைந்த செய்தி கேட்டு மனம் வருந்துவதுடன், அன்னாரின் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்து அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.
காரைநகர். (43847) (21-14-24) யா/ கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகாவித்தியாலயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மெல்லிய உடம்பிற்கு

உங்கள் அல்லது உங்கள் குழந்தையின் உடல் மெலிவானதும் பலவீனமானதா?

சந்தேகமின்றி உபயோகியுங்கள்!

எப்பட்டன் வெயிட் கெயின் அதிபோஷாக்கு பாலுணவு




யாழ் குடா நாட்டில் ஏக விற்பனையாளர்:
சிட்டி மெடிக்கல்ஸ்,
தொ.பேசி 2222198, தொ.நகல் - 2223880
மற்றும் எல்லா மருந்தகங்களிலும்

ஏக பிரதிநிதிகள்
**Suri Trading Company (Pvt) Ltd**
No.85/5, Sanjaya Mawatha, Rilaulla, Kandana.
Tel: 011 4-810251 Fax: 011 4-813110


## முப்பத்தோராம் நாள் நினைவஞ்சலி

மண்ணில் 21 - 11 - 1935



விண்ணில் 11 - 11 - 2005

### திருமதி இராசையா பராசக்தி

(இளைப்பாறிய ஆசிரியை)

அன்னையே!
எம்மை வாழவைத்த தெய்வமே
நீங்கள் பிரிந்து இன்றோடு
மாதம் ஒன்றாகி விட்டது
இருந்தும் எம்துயர் தீரவில்லை

88, கனகரத்தினம் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.

- பிள்ளைகள்.

## 31ஆம் நாள் நினைவலைகளும் அந்தியேட்டி அழைப்பும்

அன்னை மடியில் 23 - 11 - 1942



ஆண்டவன் அடியில் 13 - 11 - 2005

### அமரர் பொன்னம்பலம் கோடீஸ்வரன்

சிங்கப்பூரைப் பிறப்பிடமாகவும் இல.18, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டுக்குழியை வசிப்பிடமாகவும், இல.52, 33ஆம் ஒழுங்கை, வெள்ளவத்தை, கொழும்பை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட மதிநிறைமைந்தன் பொன்னம்பலம் கோடீஸ்வரன் அவர்கள் 13.11.2005 அன்று கொழும்பில் இறைபதம் அடைந்தார்.

அன்னாரது அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (12.12.2005) திங்கட்கிழமை அவரது இல.52, 33ஆம் ஒழுங்கை, வெள்ளவத்தை, கொழும்பு இல்லத்திலும் அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் அதனைத்தொடர்ந்து மதியபோசனமும் 13.12.2005 செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் (பு.நே.) "The Bambalapittiya Gov't Flats-Welfare Association Community Centre Bambalapittiya விலும் நடைபெறும்.

மேற்படி வைபவத்தில் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் மறைவுச்செய்தி கேட்டு அனுதாபங்கள் தெரிவித்த அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஓம் சாந்தி, சாந்தி!!சாந்தி!!!

இல. 18, கச்சேரிகிழக்கு ஒழுங்கை,
சுண்டுக்குழி.

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரிகள்
(பொ.பாரதாதேவி, பொ.சந்தானதேவி)

(43718)

## மரண அறிவித்தல்

### திருஞானசம்பந்தர் நடராசா



யாழ்.கஸ்தூரியார் வீதியைச் சேர்ந்த நடராசா அவர்கள் (08.12.2005) வியாழன் ஜேர்மனியில் காலமானார்.

அன்னார் புஷ்பரதியின்(ஜேர்மனி) கணவரும் காலஞ்சென்ற திருஞானசம்பந்தர்-இராசம்மா தம்பதியரின் மகனும், இணுவில் தெற்கு சிவகுரு-ஞானபூங்கோதை தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற அரியநாயகம் (Rtd.A.O.Teaching Hospital, Jaffna) மற்றும் பரமேஸ்வரி, பாக்கியலஷ்மி, பாலசுப்பிரமணியம் (Jayakirushna Jewellers), நகுலேஸ்வரி, தியாகராசா(Luxme Nagai Madam) ஆகியோரின் சகோதரரும், ராசநாயகி, காலம்சென்ற கனகரெத்தினம்(செட்டியார்) மற்றும் சுப்பிரமணியம் (Ret.Superintendent of Surveys), தெய்வநாயகி, மகேந்திரன் (Rtd.A.O.Dpdhs.Jaffna), வேதநாயகி, சத்தியமூர்த்தி தவயோகராணி, சிவராசா யோகேந்திரா (ஜேர்மனி), சிவசுப்பிரமணியம் சந்திரவதனி, கந்தசாமி பரஞ்சோதி (ஆஸ்திரேலியா), அருமைநாயகம் பரிமளம் (மணி)ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 13.12.2005 செவ்வாயன்று ஜேர்மனியில் நடைபெறுமென்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

(140) 320, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

(43848)(45-15-53)

ஓம் விராட் விஸ்வப்பிரமனே நம

# திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் சுபமங்கலகரமான பார்த்திப வருஷம் கார்த்திகைத் திங்கள் 29 ஆம் நாள் (14.12.2005) புதன்கிழமை கும்பலக்கின சுப நாளில் முற்பகல் 11 மணி முதல் நண்பகல் 12 மணிவரையுள்ள (புதிய நேரம்) சுபமுகூர்த்த சுப வேளையில்,

திரு.திருமதி ஸ்தபதி ஜீவரட்ணம் தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரன்
திருவளர் செல்வன்
**ஜெயப்பிரகாஸ்**
(ஸ்தபதி)
அவர்களுக்கும்

திரு. திருமதி நாகராஜா கலாமணிதேவி தம்பதிகளின் புதல்வி திருவளர் செல்வி
**மாலா**
(ஆசிரியை)
யா/பெரியபுலம் மகாவித்தியாலயம்
அவர்களுக்கும்

இறைவன் திருவருள் துணைகொண்டு "தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்தில்" திருமணம் நடத்த பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் குடும்ப சமேதராய் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்து தொடர்ந்து நடைபெறும் மதியபோசன விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்

திருமதி தவமணிதேவி ஜீவரட்ணம்
குடும்பத்தினர்.
"ஜெயமஹால்"
காளிகோயிலடி,
திருநெல்வேலி கிழக்கு,
திருநெல்வேலி.

திருமதி கலாமணிதேவி நாகராஜா
குடும்பத்தினர்.
இல. 70, காரைக்காட்டு லேன்,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

(இருவீட்டார் அழைப்பு)

இந்த அழைப்பையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

(43775)(51)

## நீரிழிவு நோய் கருத்தரங்கு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், டிசெ.11

யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் இன்று நடைபெறவிருந்த நீரிழிவு நோய் பற்றிய கருத்தரங்கு தற்போது நிலவும் சீரற்ற கால நிலை காரணமாகப் பிற்போடப்பட்டுள்ளது. என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இக்கருத்தரங்கு எதிர்வரும் 18 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 8.30 மணிக்கு அதே மண்டபத்தில் நடைபெறும் எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது.(3-12)

## ஈர விழிகளுடன் ஈராண்டு நினைவலைகள்

தாயின் மடியில் 1971 - 10 - 09



தரனின் அடியில் 2003 - 12 - 04

அமரர் **தம்பிராஜா சுதர்சன்** (சுதா)
(ஆசிரியர், யா/புங்குடுதீவு மகா வித்தியாலயம்)
திதி: ஏகாதசி (11.12.2005)

அன்பு முகம் காணாமல்
ஆண்டு இரண்டானதையா!
ஆசை மொழி கேளாமல்
நாள் கடந்து போனதையா!
ஆறிடுமோ எங்கள் மனம்
அகன்றிடுமோ உங்கள் நினைவு?

எங்கள் அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

முதலாம் வட்டாரம்,
நெடுந்தீவு.

உங்கள் பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

(43858)

## மரண அறிவித்தல்

### A.P.செல்லையா

(ஓய்வு பெற்ற அதிபர் யா/மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம்)



மீசாலை தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட A.P.செல்லையா அவர்கள் நேற்று (10.12. 2005) சனிக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.12.2005) திங்கட்கிழமை கனடாவில் நடைபெறும். அன்றைய தினம் அவரது மீசாலை இல்லத்தில் முற்பகல் 11 மணிக்கு அஞ்சலி நிகழ்வு நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ப.வே.இராசரத்தினம்.

கனடா
416 6247562

(43861)

## பன்னிரண்டு ஆண்டின் நினைவஞ்சலி



எங்களுக்கு வாழ்வதனை அமைத்துத் தந்த எந்தையே!
எங்களைத் தவிக்கவிட்டு எங்குதான் சென்றீர்கள்!
பணிவிடைகள் பல செய்யக் காத்திருந்தோம் பலநாளாய்
பணிவிடைகள் பாராமற் சென்றது ஏன்? ஓர் நாளில்!
நீங்காத நினைவுடனே வாழ்கின்றோம் நிதமே!
நீங்காமல் நீங்கள் வர வேண்டுகின்றோம் ஆண்டவனை

அமரர்
### சின்னத்தம்பி சந்திரசேகரம்
ஓய்வுபெற்ற ஓவசியர் R.M.C(R.D.A)

| அன்னையின் மடியில் | விநாயகன் கழலில் |
|---|---|
| 24-07-1929 | 25-11-1993 |

- குடும்பத்தினர்.

அன்பகம்,
இணுவில் மேற்கு,
இணுவில்.

(43836)

## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 25 - 09 - 1986



விண்ணில் 07 - 12 - 2000

### செல்வி திவ்யா விக்னேஸ்வரன்

திதி:ஏகாதசி 11.12.2005

சூரியன் திசை மாறினாலும்
எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
உன்நினைவுகள் மறையுமோ?
எம் உயிர் உள்ளவரை

ஏழாலை கிழக்கு,
ஏழாலை.

- குடும்பத்தினர்.

(43857)(42)

## மரண அறிவித்தல்

### J.E.துரைசிங்கம் கிறிஸ்ரோப்பர்

(முன்னாள் பிறிமியர் பேக்கரி உரிமையாளர் - யாழ்)

யாழ்ப்பாணம், வேம்படி வீதியில் வசித்து வந்தவரும் தற்காலிகமாக தெகிவளையில் வசித்தவருமாகிய J.E.துரைசிங்கம் கிறிஸ்ரோப்பர் (முன்னாள் பிறிமியர் பேக்கரி உரிமையாளர். யாழ்ப்பாணம்) அவர்கள் தெகிவளையில் நேற்று (10.12.2005 ) சனிக்கிழமை காலமானார்.அன்னார் காலஞ்சென்ற லீலாவின் அன்புக் கணவரும் சுனிதா(U.K), சுரேன்(பிறிமியர் பேக்கரி உரிமையாளர், யாழ்ப்பாணம்), கிறிசாந்தா (U.K), றசி (U.K)ஆகியோரின் பாசமிகு தந்தையும், Dr.ரவின் ஜெயரட்ணம் (U.K), லலிதா, ஆசீர்வாதம் தேவரட்ணம் (U.K), பேராசிரியர் ஜெகன் தோமஸ்(U.K) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் செவ்வாய்கிழமை பி.ப4 மணிக்கு A.F.றேமன் இல்லத்தில் நடைபெற்று, கனத்தை மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தெகிவளை.

தகவல்:
சுரேன் A.E.கிறிஸ்ரோப்பர்.

(43864)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல்லூரில் ஓட்டோ பயணிகள் நால்வர் காயம்!

நல்லூர் முத்திரைச் சந்திப் பகுதியில் நேற்று முற்பகல் 10 மணியளவில் இடம் பெற்ற பஸ் - ஓட்டோ விபத்தில் ஓட்டோவில் பயணம் செய்த நால்வர் படுகாயமடைந்தனர்.

யாழ். நகரில் இருந்து சென்ற பஸ்ஸும் கட்டைப்பிராயில் இருந்து பயணிகளுடன் வந்த ஓட்டோவுமே விபத்துக்குள்ளாகின.

இச்சம்பவத்தில் கட்டைப்பிராயைச் சேர்ந்தவர்களான எம்.தம்பித்துரை (வயது65), த.சசிகலா(வயது30), க.சுஜீவா(வயது32) ஓட்டோ சாரதியான என்.ஜெயக்குமார்(வயது 20) ஆகியோரே படுகாயமடைந்தவர்களாவர்.

விபத்துடன் தொடர்புடைய பஸ்ஸையும், ஓட்டோவையும் யாழ்.பொலீஸார் பொலீஸ் நிலையத்துக்கு எடுத்துச்சென்றனர்.

காயமடைந்தவர்கள் உடனடியாக யாழ். போதனாவைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். (ஐ-12-190)

## கிரானில்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வைத்திருந்த அவரது குழந்தைக்கும் சிறு காயங்கள் ஏற்பட்டிருக்கின்றது.

இந்த இரு நபர்களும் விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் என்று விசாரணையில் தெரிய வந்ததாகப் பொலீஸார் தெரிவித்தனர். (ஐ-3)

## மீனவர் படகுகள் புயலில் சிக்கின!

திருகோணமலையை அண்டிய கடற்பரப்பில் கடந்த வெள்ளிக்கிழமை மாலை 7 படகுகளில் சென்ற 35 மீனவர்கள் புயலில் சிக்கியதில் இரு படகுகள் காணாமற்போயின. ஏனைய படகுகள் அன்றையதினம் இந்தியக் கடற்பகுதிக்கு அடித்துச்செல்லப்பட்டுள்ளன. அங்குவைத்து இந்தியக் கடற்படையினர் இந்த மீனவர்களைக் கைது செய்ததுடன், படகுகளையும் தம்முடன் எடுத்துச்சென்றனர் என இலங்கை மீன்பிடித்துறை அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-12)

## திருமலையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆகியோரும் காயமடைந்துள்ளனர். இவர்கள் திருகோணமலை ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர். குண்டுவெடிப்பால் அலுவலகத்துக்குப் பலத்த சேதங்கள் ஏற்பட்டுள்ளன.

அலுவலகத்தினுள் மறைத்துவைக்கப்பட்ட குண்டு ஒன்று வெளியில் இருந்து தூரக் கட்டுப்பாட்டுக் கருவி மூலம் இயக்கி வெடிக்க வைக்கப்பட்டுள்ளது என்று ஈ.பி.டி.பி. தரப்பில் வெளியிடப்பட்ட ஓர் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈ.பி.டி.பி. அமைப்பினரின் இந்த அலுவலகத்தில் பொலீஸ் காவலரண் ஒன்று அமைக்கப்பட்டிருந்தது. அலுவலகத்தைச் சுற்றி இராணுவ காவல் போடப்பட்டு பலத்த பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தது.

இந்நிலையிலேயே அங்குகுண்டுவெடிப்பு நிகழ்ந்துள்ளது. (ஐ-3-12-151)

## விடாது கொட்டித் தீர்த்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை - குடாநாட்டில் புயல் அபாயம் நீங்கிவிட்டது என்று வானிலை அவதான நிலையம் உறுதிப்படுத்தியுள்ளது என்று அரச அதிபர் அறிவித்திருக்கின்றார். எனினும், இன்றும் பலத்த காற்றுடன்கூடிய மழை தொடர்ந்து பொழியும் என்று எதிர்வுகூறப்பட்டிருக்கின்றது.

கடல்கொந்தளிப்பு தொடர்ந்து காணப்படுவதால், கடலுக்குச் செல்லவேண்டாம் என்றும் மீனவர்கள் எச்சரிக்கப்பட்டுள்ளனர்.

நேற்றுக்காலை 8.30 மணிமுதல் மாலை 3மணி வரையான காலப்பகுதியில் 178 மி.மீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது.

மிகக் குறுகிய காலத்தில் பெய்த மிகக் கூடுதலான மழைப்பொழிவு இது என்று அரச அதிபர் மேலும் தெரிவித்தார்.

திருநெல்வேலியிலுள்ள வானிலை அவதான நிலையத்தின் தகவல்படி -

யாழ்ப்பாணத்துக்கு வடகிழக்கே 50 கிலோமீற்றர் தூரத்தில் நிலைகொண்டிருந்த புயல்மையம் வடமேற்குத் திசையாக இந்தியப் பகுதிநோக்கி மெதுவாக நகர்கின்றது என்றும் - இதனால், இடியுடன்கூடிய மழை இன்றுமாலைவரை தொடர்ந்து பெய்யும் என்றும் - தெரிவிக்கப்பட்டது. நேற்று முழுநாளும் காலநிலை மோசமாக இருந்தபோதிலும் பிரதான வீதிகளில் படையினரின் தீவிர காவல் கடமையில் எந்தத் தளர்வும் காணப்படவில்லை. (ஐ-6-7-12-15-17-51-70-86-100-180)

## துன்னாலை வடக்கில் மின்தாக்கி குடும்பஸ்தர் மரணம்!

துன்னாலை வடக்கில் நேற்று மாலை 6.30 மணியளவில் அன்ரனாவைத் திருப்ப முற்பட்டவர் மின்தாக்கி உயிரிழந்தார்.

அதே இடத்தைச் சேர்ந்த கா.சபாரத்தினக் குருக்கள் (வயது 48) என்ற குடும்பஸ்தரே உயிரிழந்தவராவார்.

சடலம் மரண விசாரணைகளுக்காக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (3-12)

**விக்னா கல்வி நிறுவனம்**

தரம் 6 தொடக்கம் O/L வரை வகுப்புகள் ஆரம்பமாகிவிட்டன. சகல பாடங்களும் 12.12.2005 திங்கள் 9 மணிக்கு நடைபெறும்.

✸ புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

(சி/46229-12-13-33) -இயக்குநர்.

## வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 09.11.2005 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

**அமரர் அம்பலவாணர் ஜெயபாலரத்தினம்**

(ஓய்வுபெற்ற ஆசிரியர், இராமநாதன் கல்லூரி)

அவர்களின் வீட்டுக்கிருத்தியம் இன்று (11.12.2005) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அன்றையதினம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

*76/5, ஓட்டுமடம் வீதி,*
*யாழ்ப்பாணம்.* (43867-12-13-33) குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி தங்கம்மா தர்மலிங்கம்

உரும்பிராய் வடக்கைப் பிறப்பிடமாகவும் மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தங்கம்மா தர்மலிங்கம் நேற்று முன்தினம் (09.12.2005) வெள்ளிக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.12.2005) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் முற்பகல் 10 மணியளவில் தகனக்கிரியைக்காக பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கோணேசாவாசா,*
*உடுவில் வீதி,*
*மானிப்பாய்.* (43873-12-13-33) தகவல்: பிள்ளைகள்.

### நாகலிங்கம் மயில்வாகனம்

நெல்லண்டை, பருத்தித்துறையைச் சேர்ந்த நாகலிங்கம் மயில்வாகனம் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நா.ம.நாகலிங்கம் - அன்னப்பிள்ளை தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும் காலஞ்சென்ற வே.க.சுப்பிரமணியம் - சிவபாக்கியம் தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்ற காந்திமதியின் அன்புக் கணவரும் திலகவதியின் (லண்டன்) அன்புத் தந்தையும் விஜயானந்தராசா சிவயோகத்தின் மாமனாரும், விக்னேஸ், கார்த்தி ஆகியோரின் அன்புப் பாட்டனாரும் அன்னலிங்கம் விஜயரட்ணம், சந்தாணலெட்சுமி, இராமச்சந்திரன், பாலச்சந்திரன், காலஞ்சென்ற ஜெயச்சந்திரன், ஜெயலட்சுமி, பாக்கியலட்சுமி, மங்களலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரரும் மங்களேஸ்வரி, இராஜேஸ்வரி, காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம், கெங்காதேவி, சீறாதேவி வல்லிபுரம், சூரியநாதன் அன்னபூரணம் ஆகியோரின் மைத்துனரும் சிவப்பிரகாசத்தின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.12.2005) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பி.ப. 3 மணிக்குப் பருத்தித்துறை கோரியடி மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

*நெல்லண்டை,*
*பருத்தித்துறை.* (சி/46727-12-13-33) தகவல்: நா.விஜயரட்ணம் (சகோதரன்)



**SKY COMPUTER SYSTEMS.**
89A, Kandy Road, Jaffna.
Tel: 021 222 9109
E-Mail: skymathy@sltnet.lk
Pentium II 400 MHZ- 16,000/-
Pentium IV Genuine intel Dealer Pentium III
* COMPUTER SALES
* COMPUTER REPAIR
* COMPUTER PARTS
* COMPUTER MAINTANACE
17" Monitor - 7,900/-
அனைத்துக் கணனிகளும் 1 வருட உத்தரவாதம்
MOBILE SERVICE
(யாழ் கச்சேரிக்கு அருகில்)

**ராஜா** யாழ்ப்பாணம்
ஸ்ரீகாந், நமீதா, வடிவேல் நடித்த
**பம்பர கண்ணாலே**
காட்சிநேரம்: பு.நே. 10.30, 2.30, 6.30 மட்டும் (46404)

**நாதன்ஸ்** யாழ்ப்பாணம்



பொதுமக்களின் வேண்டுகோளுக்கிணங்க
தற்காலிக புதிய நேரமாற்றம் 10.30, 1.30,4.30, இரவு 7.30
இந்தியாவிலும், இலங்கையிலும் ஒரேதின வெளியீடு
ஷாம், சினேகா அபர்னா நடித்த
ABCD

**மனோகரா** யாழ்ப்பாணம்



7ஆவது வெற்றி வாரமாக இளைய தளபதி விஜய், அசின், பிரகாஷ்ராஜ் நடித்த
சிவகாசி
கா.நே:10.30,2.30,6.30,9.30(பு.மு.)
9ஆம் திகதி முதல்
காலை 10.30 காட்சியாக சிவகாசி
1.30,4.30,7.30,10.30 காட்சியாக சூரியா, திரிஷா வடிவேல் நடித்த
ஆறு
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடு
9 ஆம் திகதி முதல் புதிய நேரப்படி புதிய காட்சி நேரம் காலை 10.30, மதியம் 1.30, மாலை 4.30, இரவு7.30,10.30

**நாகம்ஸ்** சுன்னாகம்



இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடாக
அர்ஜுன், நமிதா, வடிவேல் நடித்த
**ஆணை**
தினசரி: புது நேரம் 11.00, 3.00, 7.00,10.00

## மரண அறிவித்தல்கள்

### திருமதி இராசரத்தினம் பாக்கியம்



தெல்லிப்பளையைப் பிறப்பிடமாகவும் தற்போது 43A, சிவப்பிரகாசம் வீதி, வண்ணார்பண்ணை, நாச்சிமார் கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசரத்தினம் பாக்கியம் (08.12.2005) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் முத்தையா இராசரத்தினத்தின் அன்பு மனைவியும் பாலச்சந்திரன், சூ.ஜெயமலர், சிவன்மலைச்சந்திரன் (ஜப்பான்) திருச்சந்திரன் (அஞ்சல் அலுவலகம், தெல்லிப்பளை), செல்வச்சந்திரன், செ.இரஞ்சிதமலர் (ஜேர்மன்), கு.சாந்திமலர், ஜெயச்சந்திரன், கிருபாமலர் ஆகியோரின் அன்புத் தாயாரும் பா.இன்பஜோதி, கா.சூரியகுமார் (பிரதேச செயலகம், நல்லூர்), சி.மிசையோ (ஜப்பான்), தி.மாலதி, செ.ஆனந்தி, அ.செல்வராஜா (ஜேர்மன்), வி.குலேந்திரன் ஆகியோரின் அன்பு மாமியாரும் செ.பிரணவன் (ஜேர்மன்), செ.சந்தோஜினி, செ.நிவாசினி, கு.பிரவீன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.12.2005) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வண்ணை கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*43A, சிவப்பிரகாசம் வீதி,*
*வண்ணார்பண்ணை,*
*நாச்சிமார் கோவிலடி.* (43862-12-13-33) தகவல்: குடும்பத்தினர்.

### காசிப்பிள்ளை இராசரத்தினம்

*(ஓய்வுபெற்ற பாடசாலை எழுதுநர்)*

தோப்பு, அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட காசிப்பிள்ளை இராசரத்தினம் அவர்கள் நேற்று (10.12.2005) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான காசிப்பிள்ளை - வள்ளியம்மை தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும், காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் - திரவியம் தம்பதியரின் மூத்த மருமகனும் யோகமலரின் அன்புக் கணவருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.12.2005) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கல்லூரி ஒழுங்கை,*
*கொக்குவில் கிழக்கு,*
*கொக்குவில்.* (43868-12-13-33) தகவல்: மனைவி, மருமகன் (இ.யோகமலர், இ.அருள்நேசன்)

### கார்த்திகேசுக் குருக்கள் சபாரத்தினக்குருக்கள் (சபா)


வடமராட்சி, துன்னாலை மத்தியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட கார்த்திகேசுக் குருக்கள் சபாரத்தினக்குருக்கள் (சபா) நேற்று (10.12.2005) சனிக்கிழமை அகாலமரணமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.12.2005) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 4 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக ஓடைக்காடு மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*துன்னாலை வடக்கு,*
*கரவெட்டி.* (43872-12-13-33) தகவல்: குடும்பத்தினர்.

EXPOAIR எக்ஸ்போ எயார்
your friend in the skies... வானத்தில் உங்கள் நண்பன்...





தினசரி யாழ் - கொழும்பு விமான சேவை
ஒதுக்கீடுகளுக்கும் விமான பயணச்சீட்டுக்களுக்கும்
கொள்ளுப்பிட்டியில் - 011 2372 952 / 3, வெள்ளவத்தையில் - 011 2360 290 / 1
யாழ்ப்பாணத்தில் - 021 222 3891 / 6297, 0772 348888, 0772 349999
E-Mail : reservations@expoavi.com, jaffna@expoavi.com

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 11.12.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு டார்லி பட்லர் நிறுவனத்தின் புலமைப் பரிசில்கள்

'பிக்' ரேஷர்களை உற்பத்தி செய்து விநியோகம் செய்யும் டார்லி பட்லர் நிறுவனம் அதன் 25ஆவது ஆண்டு நிறைவைக் குறிக்குமுகமாக ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட 25 மாணவர்களுக்கு புலமைப்பரிசில்களை வழங்கியுள்ளது.

''எதிர்காலத் தலைவர்களைக் காப்போம்'' என்ற தொனிப் பொருளின் கீழ் வழங்கப்பட்ட இந்த புலமைப்பரிசில்கள்மூலம் இந்த 25 மாணவர்களும் கல்விப் பொதுத்தராதர உயர்தரம் வரை தங்கள் கல்வியைத் தொடரமுடியும்.

இந்த 25 மாணவர்களும் நாடுமுழுவதிலும் இருந்து குலுக்கல்முறைமூலம் தெரிவுசெய்யப்பட்டனர். தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் 2006ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் கல்விப்பொதுத் தராதர உயர்தரம்வரை ஒவ்வொரு மாதமும் தலா ஆயிரம் ரூபாவைப் பெறுவர்.''எதிர்காலத் தலைவர்களைக் காப்போம்'' என்ற எமது தொனிப்பொருளுக்கு ஏற்ப இத்திட்டம் அமைந்துள்ளது. தெரிவுசெய்யப்பட்ட 25 மாணவர்களும் உயர்தரம்வரை எமது உதவியைப் பெறுவார்கள்.

சமூகத்திற்கு இவ்வாறான சேவைகளைச் செய்வதையிட்டு நாம் மகிழ்ச்சி அடைகின்றோம் எனக்கூறினார் டார்லி பட்லர் நிறுவனத்தின்பேச்சாளர் ஒருவர். (07)




பான்வெல்கட்ட
கோமாரிக்கா



ஆரோக்கியமான,வசீகரமான, மென்மையான சருமத்தை பெற பான்வெல்கட்ட சவர்க்காரத்தை பாவியுங்கள்.இது சுருக்கங்கள்,வறண்டதோல் ஏற்படுவதை தடுக்கும்.

பான்வெல்கட்ட
கோமாரிக்கா

விஷக்கிருமிகளை அழிக்கவல்ல
ஆயுர்வேத வாசனை சவர்க்காரம்

இது ஒரு சித்தாலேப தயாரிப்பு

ஹெட்டிகொட இன்டஸ்ரீஸ் (பிரை) லிமிட்.
33/3, ஸ்ரீ தர்மராம வீதி, இரத்மலானை, இலங்கை.
தொலைபேசி: 2736910 தொலைநகல்: 2735465

வனிக்கா மெடிக்கல்,
இல. 85, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 6291, 021 222 2445.

CARD
இல்லாமலே

இலங்கையில் முதல் தடவை
டொப் - up புதுமை

கொமர்ஷல் வங்கி

ரீ LOAD
செய்யுங்கள்

COM-e-LOAD

மூலம் உங்களுடைய தொலைபேசியை 24 மணிநேரமும் ரீலோட் செய்யுங்கள்




நீங்கள் டயலொக் பாவனையாளராகவும், கொமர்ஷல் வங்கிக் கணக்கு வைப்பாளராகவும் இருந்தால், கொமர்ஷல் வங்கி வழங்கும் இந்த சேவையைப் பெற்றுக்கொள்ள முடியும். அருகிலுள்ள கொமர்ஷல் வங்கிக் கிளைக்குச் சென்று உங்களைப் பதிவு செய்துகொள்ளுங்கள். ஒரு மணி நேரத்திற்குள் SMS மூலம் இரகசிய குறியீட்டு இலக்கம் ஒன்றை நீங்கள் பெறுவீர்கள். இப்போது உங்கள் இரகசிய குறியீட்டு இலக்கத்தை அழுத்தி ஒரு இடைவெளி விட்டு RS யை அழுத்தவும். ரூ.100/- முதல் ரூ.999/- வரை உங்களுக்கு தேவையான தொகையை அழுத்தி 8823 என்ற இலக்கத்திற்கு SMS செய்யுங்கள்.


உதாரணம்: <xxxx <Space> Rs453>

நீங்கள் குறிப்பிட்ட பணத் தொகை உங்கள் கொமர்ஷல் வங்கிக் கணக்கிலிருந்து உடனடியாகவே உங்கள் தொலைபேசிக்கு லோட் செய்யப்படும் இனி, ஏன் கடைக்கு போகிறீர்கள்? கடைக்கு போகாமலே லோட் செய்யுங்கள். நொடியில் கதையுங்கள்.

நீங்கள் இச் சேவையை தினமும் 24 மணிநேரமும் எங்கிருந்தும் பெற்றுக்கொள்ளலாம். மீள்நிரப்புங்கள். விரும்பியவாறு பேசுங்கள்!

மேலதிக விபரங்களுக்கு அருகிலுள்ள கொமர்ஷல் வங்கிக் கிளையொன்றை நாடுங்கள் அல்லது 077 2353353 என்ற இலக்கத்திற்கு அழையுங்கள். அல்லது ebanking@combank.net என்ற ஈ-மெயில் மூலம் தொடர்புகொள்ளுங்கள்.

டிசெம்பர் 31ம் திகதி வரை பதிவு கட்டணம் செலுத்த வேண்டியதில்லை




Dialog
கொமர்ஷல் வங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆசைக்கும் எல்லையுண்டு. அது பேராசையானால் பெருந்தரித்திரமாகிவிடும். ஓய்வுபெறும் ஜனாதிபதி கேட்கும் சலுகைகளைப் பார்த்தால் ஸ்ரீ லங்காவிற்குள் ஒரு குட்டிநாட்டை உருவாக்கி நிர்வகிக்கப்போகிறாரா என்ற சந்தேகம் எழுகிறது. 'ஓய்வுபெற்ற ஜனாதிபதிகளும் அவர்களுக்கான வரப்பிரசாதங்களும்' என்னும் விடயம் குறித்து ஆராய்கிறார் கட்டுரையாளர் ரனஜித் ஆனந்த ஜயசிங்க. 'லங்காதீப' வார இதழில் வெளியான கட்டுரையின் தமிழாக்கத்தை இங்கு தருகிறோம்.

# ஆசைக்கும் ஓர் எல்லையுண்டு



ஸ்ரீலங்காவின் நான்காவது ஜனாதிபதியாகப் பணியாற்றிய சந்திரிகா, அண்மையில் ஓய்வுபெற்றார். அவர் ஓய்வுபெற்றவேளையில் அவருக்கு வழங்கப்பட்டிருந்த வசதிகள் சலுகைகள் குறித்து ஊடகங்களில் வெளியான தகவல்கள் நாட்டில் சர்ச்சைகளைக் கிளப்பியுள்ளன. நாட்டில் முன்னர் நடைமுறையிலிருந்த நாடாளுமன்ற சம்பிரதாயங்களின்படி பிரதமர் ஒருவர் பதவியிலிருந்து விலகும்போது அவருக்கு எதுவித சலுகைகளும் வழங்கப்படவில்லை. ஆனால், 1978 இல் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய அரசமைப்பின்படி ஜனாதிபதி ஒருவர் ஓய்வுபெறும் போது அவர் சிற்சில சலுகைகளுக்கு உரித்துடையவர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த அரசமைப்பின் கீழ் 1980 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட 4 ஆம் இலக்க ஜனாதிபதிக்கான வரப்பிரசாதங்கள் என்ற சட்டத்தில் ஓய்வுபெறும் ஜனாதிபதிக்குரிய சலுகைகள் சட்டரீதியாக்கப்பட்டுள்ளன.

இந்தச் சட்டத்தில் ஜனாதிபதி ஒருவர் ஓய்வுபெறும்போது அவருக்குரிய சலுகைகள் குறித்துத் தெளிவாகக் கூறப்பட்டிருப்பினும், அவருக்கு வழங்கப்படும் பாதுகாப்பு ஊழியர்களின் எண்ணிக்கை குறித்துத் தெளிவாகக் கூறப்படவில்லை. எனவே, முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா ஓய்வுபெற்றபோது அவரின் பாதுகாப்புக்காக 50 கொமாண்டோக்கள், குண்டு துளைக்காத 4 வாகனங்கள், 183 பொலீஸார் ஆகியோரைப் பெறத் தீர்மானித்திருக்கிறார் எனத் தெரிவிக்கப்படுகிறது. அவருக்குத்தேவைப்படும் குண்டுதுளைக்காத வாகனம் ஒன்றின் பெறுமதி 4 கோடி ரூபாவாகும். எனவே, அந்த 4வாகனங்களுக்கு மாத்திரம் 16 கோடி தேவைப்படுகிறது. இவற்றைவிட மேலும் 32 வாகனங்கள் தனக்குத் தேவை என அவர் கோரியுள்ளார். இந்தச் சலுகைகளுக்கு மேலதிகமாக தனது தனிப்பட்ட பணிகளைக் கவனிக்க 62 ஊழியர்களும் 10 தொழிலாள்களும் தேவை எனவும் கோரியுள்ளார்.

சந்திரிகாவின் கோரிக்கை நிறைவேற்றப்பட்டால் மொத்தமாக 260 ஊழியர்களை அவரது தேவைக்கென ஒதுக்க நேரிடும். இந்தச் சலுகைகளுக்கு மேலதிகமாக முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் வாசஸ்தலமும் கொழும்பு 7-இல் அமைந்துள்ள தேசிய போர் வீரர் வாசஸ்தலமும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவின் வாசஸ்தலமாகவும் பணிமனையாகவும் ஒதுக்கப்பட்டுள்ளன.

இருப்பினும், இவை யாவற்றிற்கும் முன்னராக முன்னாள் ஜனாதிபதியின் அமைச்சரவையால் அனுமதிக்கப்பட்ட கோட்டேயில் நாடாளுமன்றத்திற்கு அண்மையில் பல கோடி ரூபா பெறுமதியான வனப்புமிக்க பதினொன்றரை ஏக்கர் காணி வாசஸ்தலம் அமைக்க அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளது. அது குறித்தும் பல்வேறு விமர்சனங்கள் எழுந்தன. இவ்வாறு காணிகளும் மற்றும் சலுகைகளும் இதற்கு முன்னர் ஜனாதிபதியாகவிருந்து ஓய்வுபெற்ற எவருக்கும் வழங்கப்படவில்லை என நாம் மேற்கொண்ட விசாரணைகளிலிருந்து தெரியவருகிறது.

இந்த நாட்டின் நிறைவேற்று அதிகாரங்களைக் கொண்ட முதலாவது ஜனாதிபதியான ஜே.ஆர்.ஜயவர்த்தன, தனது பதவிக் காலத்தை பூர்த்திசெய்து 1989 ஜனவரியில் ஓய்வுபெற்றார். அவர் மிகவும் அமைதியான சூழ்நிலையில் எதுவித ஆடம்பரமுமின்றி ஓய்வுபெற்றார். அவருக்குப் பின் பதவியேற்ற ஆர்.பிரேமதாஸவிடம் அவர் பதவியேற்ற தினத்தன்றே அதுவரை தனது உத்தியோகபூர்வ வாசஸ்தலமாக விளங்கிய ஜனாதிபதி மாளிகையைக் கையளித்தார். அதற்கு முன்னர் ஜே.ஆர். தனது உத்தியோகபூர்வ கடமைகளுக்கு மாத்திரமே ஜனாதிபதி மாளிகையைப் பயன்படுத்தி வந்தார். ஏனைய சந்தர்ப்பங்களில் வாட் பிளேஸில் அமைந்துள்ள அவரது சொந்த இல்லத்திலேயே வாழ்ந்து வந்தார். எனவேதான், பிரேமதாஸ ஜனாதிபதியாகப் பதவியேற்ற தினத்தன்றே ஜனாதிபதி மாளிகையை ஜே.ஆரால் கையளிக்க முடிந்தது. ஓய்வுபெற்ற ஜே.ஆர்., வாட்பிளேஸில் அமைந்துள்ள தனது சொந்த வீட்டிலேயே வாழ்ந்துவந்தார். சட்டப்படி உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தைப் பெற வாய்ப்பிருந்தும் ஜே.ஆர்.அதைப் பெறாமல் தனது சொந்த வீட்டிலேயே வாழ்ந்தார்.

ஜே.ஆர். ஜனாதிபதிப் பதவியிலிருந்து ஓய்வுபெற்றவேளையில் வடபகுதிப் போராளிகளால் மட்டுமன்றித் தென்பகுதிக் கிளர்ச்சியாளர்களினாலும் அவருக்கு அச்சுறுத்தல்கள் இருந்தன. 1989 ஆம் ஆண்டின் போது வடபகுதியிலும் தென்பகுதியிலும் கலவரங்கள் வலுத்தன. அந்த நிலைமையை பிரேமதாஸவின் சொற்களில் கூறுவதாயின் 'வடக்கிலும் தெற்கிலும் கொளுந்துவிட்டெரிந்த நாட்டையே ஜே.ஆர். என்னிடம் ஒப்படைத்தார்'.

ஜே.ஆர்.ஓய்வுபெற்றபோது அவரிடமிருந்து இரண்டு வாகனங்களை மட்டுமே பெற்றிருந்தார். அதில் ஒன்று தனது பயணங்களை மேற்கொள்வதற்கான குண்டுதுளைக்காத பென்ஸ் ரக வாகனம், மற்றது தனது பணிமனை ஊழியர்கள் பயன்படுத்துவதற்கான வாகனம். அவர் எங்காவது செல்வதற்குத் திட்டமிட்டால் பொலீஸாருக்கு அல்லது இராணுவத்திற்கு அறிவித்து பாதுகாப்புக்காக ரோந்து அணியில் செல்வதற்கு இரண்டு வாகனங்களைப் பாதுகாப்பு ஊழியர்களுடன் கேட்டுப்பெற்றுக்கொள்வார்.அவரது வீட்டில் 8 வீரர்கள் மட்டுமே பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டனர். தனது பணிமனையில் பணியாற்ற 9 ஊழியர்களையும் ஒரு சாரதியையும் மட்டுமே அரசிடம் கோரிப்பெற்றார். ஜே.ஆருக்கு உத்தியோகபூர்வ வாசஸ்தலம் கிடைக்காவிடினும் அவர் வசித்த தனது சொந்த வீட்டிற்கு அரசிடமிருந்து வாடகையை அறவிட்டிருக்கலாம். ஆனால்,அவர் வாடகையைப் பெறவில்லை. பதிலாக தனது முன்னைய வீட்டை (முன்னர் சீனத் தூதரகம் இருந்த வீடு) ஜயவர்த்தன கலாசார மையத்திற்கு நன்கொடையாக வழங்கியுள்ளார். அது பலலட்சம் ரூபா பெறுமதியான பாரிய வீடாகும். தான் சேமித்து வைத்திருந்த பெரும் எண்ணிக்கையிலான நூல்களையும் அவர் அந்த மையத்திற்கு அன்பளிப்பாக வழங்கியுள்ளார். அரசமைப்பின்படி அனுமதிக்கப்பட்ட மாதாந்த ஓய்வூதியமான 25 ஆயிரம் ரூபாவை மட்டுமே ஜே.ஆர். பெற்றார். ஜே.ஆரின் மறைவிற்குப் பின்னர் அந்த ஓய்வூதியத்தின் மூன்றில் இரண்டு பங்கு அவரது விதவை மனைவிக்கு வழங்கப்படுகின்றது. இதன்படி ஜே.ஆரின் மனைவிக்கு முன்னாள் ஜனாதிபதியின் பெயரால் மாதாந்தம் 16,666 ரூபா ஓய்வூதியம் கிடைக்கிறது.

ஜனாதிபதி ஒருவர் மரணமான பின்னர், அவருடைய மனைவிக்கு வாசஸ்தலம், வாகன வசதிகள் மற்றும் ஊழியர்கள் வழங்கப்படும் எனக் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதன்படி, ஜே.ஆரின் மறைவிற்குப் பின்னர் ஜனாதிபதி சந்திரிகாவின் ஜனாதிபதிச் செயலாளராகப் பணியாற்றிய கே.பாலபட்டபெந்தியிடம் ஜே.ஆரின் பணியாள்கள் சென்று திருமதி ஜயவர்த்தனவிற்கு சட்டப்படி அரசால் வழங்கப்படவேண்டிய வாசஸ்தலம், வாகனம் மற்றும் ஊழியர்கள் குறித்து வேண்டுகோள் விடுத்தபோது பாலபட்டபெந்தி அளித்த பதில் அருவருப்பாக அமைந்தது என மூத்த அதிகாரி ஒருவர் குறிப்பிட்டார்.

ஜே.ஆரின் மனைவிக்கு வாசஸ்தலம் தேவை இல்லை. அவர் தற்போது வசிக்கும் வீட்டிலேயே வசிக்கலாம் என்று கூறுங்கள் எமது அம்மையார் (சந்திரிகா) ஓய்வுபெற்ற அன்றே ஹொர கொல்லவில் உள்ள தனது வீட்டிற்குச் சென்றுவிடுவார். அதுவே எமது கொள்கை. உங்கள் கோரிக்கையை நிறைவேற்ற முடியாது எனப் பதிலளித்தார்.

எவ்வாறாயினும், காரசாரமான விவாதங்களையடுத்து முடிவில் ஒரு வாகனத்தையும் ஒரு தனிப்பட்ட உதவியாளையும் வழங்க பாலபட்டபெந்தி சம்மதித்துள்ளார். இன்று முன்னாள் ஜனாதிபதியான சந்திரிகா கோரும் சலுகைகளை அந்தச் சட்டத்தை உருவாக்கிய ஜே.ஆர். 1989 இல் தனது அரசு ஆட்சியிலிருந்தபோது பெற்றசலுகைகளுடன் ஒப்பிடுகையில் வானத்திற்கும் பூமிக்குமிடையேயான இடைவெளி போன்றதாக உள்ளது.

ஜே.ஆருக்குப் பின்னர் ஜனாதிபதிப் பதவியை ஏற்ற பிரேமதாஸ படுகொலை செய்யப்பட்டதால் அவரால் ஓய்வுபெறமுடியவில்லை. அதையடுத்து ஜனாபதியான டி.பி.விஜேதுங்க 1994 இல் ஓய்வுபெற்றார். விஜேதுங்கவுக்கும் மேலே குறிப்பிடப்பட்ட சட்டத்தின்படி சலுகைகள் வழங்கப்பட்டன.

சந்திரிகா ஜனாதிபதியாக முதன்முதலாக 1994 நவம்பர் 12 ஆம் திகதி பதவியேற்றார். அன்றையதினமே விஜேதுங்கா ஜனாதிபதி மாளிகையை சந்திரிகாவிடம் ஒப்படைத்து விடைபெற்றார். ஒருநாள் கூட மேலதிகமாக அங்கு வாழ விஜேதுங்க விரும்பவில்லை. கொழும்பில் ஒரு வீடும், ஒரு பணிமனையும் விஜேதுங்கவுக்கு சந்திரிகா அரசால் வழங்கப்பட்டது. விஜேதுங்க ஓய்வுபெற்றபோது குண்டுதுளைக்காத வாகனம் ஒன்றையும் இரு பாதுகாப்பு வாகனங்களையும் 32 பாதுகாப்பு ஊழியர்களையும் அரசு வழங்கியது. அவரது வாசஸ்தலத்திலும் பணிமனையிலும் பணியாற்ற 20 ஊழியர்களையும் அரசுவழங்கியது.

நாம் மேலே குறிப்பிட்ட 1980 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வரப்பிரசாத சட்டத்தின்படி ஓய்வுபெறும் ஜனாதிபதி ஒருவர் அமைச்சருக்குரிய சலுகைகளைப் பெற உரித்துடையவராகிறார். ஆனால், முன்னாள் ஜனாதிபதி ஒருவருக்கு அமைச்சருக்குள்ள அதிகாரங்கள் கிடையா. விஜேதுங்கவுக்கும் இன்றும் 25,000 ரூபாவே ஓய்வூதியமாகக் கிடைக்கின்றது. அதற்கு மேலாக எதுவித சலுகைகளையும் அவர் கோரவில்லை. முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்த்தனவை முன் உதாரணமாகக் கொண்டே தனக்குரிய சலுகைகளைப் பெறுவது தொடர்பாகத் தான் செயற்படுவதாக விஜேதுங்க தெரிவிப்பார் என அவரது ஊழியர்களில் ஒருவர் குறிப்பிட்டார். ஜே.ஆர். மற்றும் விஜேதுங்க ஆகியோர் இந்நாட்டு அரசியலில் ஈடுபட்ட பழம்பெரும் அரசியல்வாதிகளின் கீழ் அனுபவத்தையும் ஒழுக்கத்தையும் பெற்ற தலைவர்களாவர். ஐ.தே.கட்சியில் இருந்தவர்களைப் போலவே சுதந்திரக் கட்சியில் இருந்த பழைய தலைவர்களும் தாங்கள் ஓய்வுபெறும்போது சலுகைகளைக் கோரவில்லை. காலஞ்சென்ற டட்லி சேனநாயக்க மற்றும் சேர் ஜோன் கொத்தலாவல ஆகியோர் போற்றத்தக்க கனவான்களாக விளங்கினர். 1994 இல் தேர்தலில் தோல்வியடைந்தவுடன் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தனது பழைய காரை வீட்டிலிருந்து எடுப்பித்து உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தைக் கையளித்தவுடன் அந்தக் காரிலேயே தனது சொந்த வீட்டிற்குச் சென்றார்.

இந்த முன்னுதாரணங்களை சந்திரிகாவால் பின்பற்ற முடியாமலிருப்பது மிகவும் வேதனை தரும் விடயமாகும். மஹிந்த ஜனாதிபதியாகப் பதவியேற்று இரண்டு கிழமை முடிவடைந்த நிலையிலும் சந்திரிகாவால் ஜனாதிபதி மாளிகையை புதிய ஜனாதிபதியிடம் கையளிக்க முடியாதுள்ளது. சந்திரிகா இறுதிநேரத்தில் வழங்கிய காசோலைகள் குறித்தும் பல்வேறு விமர்சனங்களும் சர்ச்சைகளும் எழுந்துள்ளன. அதுமாத்திரமன்றி, ஓய்வுபெற்றுச் செல்லும் ஜனாதிபதி (சந்திரிகா) பெற்றுள்ள சலுகைகள் இதுவரை வேறு எந்தவொரு ஜனாதிபதிகளும் பெறவில்லை.1994 இல் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் 62 சதவீத வாக்குகளைப் பெற்று மக்களைக் கவர்ந்து வெற்றிவாகை சூடிய சந்திரிகா ஓய்வுபெற்றுச் செல்லும்போது புதிய ஜனாதிபதிக்கும் சமூகத்திற்கும் பல சிக்கல்களைத் தோற்றுவித்துள்ளார். அரசியல் என்பது சொல்லிலும் பார்க்க செயலில் முன்மாதிரியாகச் செயற்படவேண்டிய துறையாகும். அரசியல் கௌரவமான சமூக சேவையாகும். எவ்வகையிலும் அந்தக் கௌரவம் பாதிக்கப்படக்கூடாது. மக்கள் ஆணை என்பது ஒரு தலைவருக்கு அல்லது தலைவிக்கு மக்களால் வழங்கப்படும் ஒரு வரப்பிரசாதம் மட்டுமே.

ஜனாதிபதி மஹிந்த தனது கொள்கை விளக்கமான 'மஹிந்தவின் சிந்தனைகளை' வெளியிட்ட அன்று நாட்டு மக்களுக்கு விடுத்த அறிவிப்பில் அசோகச் சக்கரவர்த்தியின் மகனான மஹிந்தன், தேவநம்பியதீச மன்னனுக்கு வழங்கிய உபதேசத்தைக் குறிப்பிட்டார்.

''மகாராஜா! நீங்கள் இந்த வனத்தின் உரிமையாளர் அல்லர். பொறுப்பாளர் மாத்திரமே''. இதுவே அந்த உபதேசம். இதுவே யதார்த்தம். இந்த யதார்த்தத்தைப் புரிந்துகொண்டு கௌரவத்துடன் தங்கள் கடமைகளை மேற்கொள்வது மக்களின் உண்மையான தலைவர்களின் பொறுப்பும் கடமையுமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரியகாந்தி
உதயன்
ஞாயிறு சிறப்பம்சம்
11.12.2005

# மீள எழுந்து நிற்கும் திருநந்தீஸ்வரம்

த.மனோகரன்

இலங்கையில் தமிழர் வரலாறு- இந்து சமயத்தின் வரலாறு தொன்மை யானது என்று நாம் வெறுமனே பேசிக்கொண்டிருப்பதால் பயனில்லை. நமது வரலாற்றுப் பழமை சரியான முறையில் ஆராயப்பட்டு ஆவணப்படுத்தப்பட வேண்டியது காலத்தின் தேவையாகும்.

தமிழர் தாயகமாகக் கொள்ளப்படும் வடக்கு - கிழக்கு மாகாணத்திலிருந்த வரலாற்றுக் காலத்திற்கு முந்திய இதிகாச காலமாகிய இராமாயண காலத்தில் சிறப்புற விளங்கிய திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ் வரம் போன்ற திருத்தலங்கள் ஐரோப்பியர் வருகையின்பின்னர் சிதைத்தழிக்கப்பட்டமை வரலாறு.



### பஞ்ச ஈஸ்வரங்கள்

இலங்கைக்கு விஜயன் வந்து கரையொதுங்கிய காலத்தில் ஐந்து பிரசித்தி பெற்ற ஈஸ்வரங்கள் இருந்ததாக மகாவம்சம் கூறுகின்றது. திருக்கேதீஸ்வரம், நகுலேஸ்வரம், திருக்கோணேஸ்வரம், முன்னேஸ்வரம், தொண்டீஸ்வரம் என்பன இந்த ஐந்து ஈஸ்வரங்களாகும். இந்த ஐந்து ஈஸ்வரங்களையும் பஞ்ச ஈஸ்வரங்கள் என்றும் கூறுவர். இவற்றிற்கும் மேலாக மேலும் பல சிவாலயங்கள் இலங்கையின் பல பகுதிகளிலுமிருந்த மையும், போர்த்துக்கீசரால் அவை அழிக்கப்பட்டமையும் வரலாற்று உண்மைகள்.

இந்த வகையிலே 1518இல், இன்றைய கொழும்பு மாவட்டத்தில் அன்றைய கோட்டை இராச்சியத்திலி ருந்த மிகப் பெரும் சிவலாயங்களும் சிதைத்து அழிக்கப்பட்டுள்ளன.



## ஆலயத் தொல்பொருள் சான்றுகளை காப்பாற்றி ஆவணப்படுத்த முயற்சிகள்

கொழும்பு மாவட்டத்தில் தென்பகுதியில் இரத்மலானையில் இன்று 'கொனா கோயில்' என்று சிங்களத்தில் குறிப்பிடப்படும் சிற்றூரில் இருந்த மிகப் பெரும் சிவாலயம் 1518 இல் போர்த்துக்கேயரால் சிதைக்கப்பட் டுள்ளது. சுமார் ஐந்து நூற்றாண்டுகள் மண்ணில் மறைந்திருந்த சிவாலயச் சின்னங்கள் பல, 1984ஆம் ஆண்டு முதல் வெளிப்படத் தொடங்கியதன் மூலம் மேல் மாகாணத்தில் இந்துக்கள தும், தமிழரினதும் பழமையும், பெருமையும் வெளிவரத் தலைப்பட்டு விட்டதெனலாம்.

கருங்கல்லாலான பெரிய ஆவுடை யாரொன்றும், மேற்படி ஆவுடை யாருக்குப் பொருந்தாத உடைந்த நிலையிலுள்ள சிறிய சிவலிங்கமொன் றும், உடைந்த நிலையிலுள்ள நந்தியும் மேலும் பல திருக்கோயிலுக்குரிய கருங்கற்படிமங்களும் நிலத்தினடியிலிருந்து எடுக்கப்பட்டுள்ளமை பெரிய ஆவுடையார் சிறு பாதிப்புமின்றி இருப்பதுடன் கருங்கல்லாலான அதனைத் தட்டிப் பார்க்கும்போது வெண்கல ஓசை எழும்புகின்றது.

அண்மையில் இச்சிவாலயம் அமைந்துள்ள இடத்திற்குச் சற்றுத் தொலைவில் பிறதேவைக்காக நிலத்தை அகழ்ந்த போது ஒரு அழகிய அம்மன் சிலை கண்டெடுக்கப்பட் டுள்ளது. அகழ்ந்தபோது ஏற்பட்ட தாக்கத்தால் தாமரைப் பூவில் வீற்றிருக்கும் அம்மனின் தலைப்பகுதி துண்டிக்கப்பட்டு விட்டது. தொல்பொருள் திணைக்களத்தில் தற்போது வைக்கப்பட்டுள் இவ்விக்கிரகம் 11ஆம், 12ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததென உதவித் தொல்பொருள் ஆணையாளர் எல்.செனரத் திசாநாயக சான்று வழங்கியுள்ளார்.

சிவாலய சின்னங்கள் கண்டெடுக்கப்பட்ட காணியில் இரு நூற்றாண்டுகளுக்கு முன்பு அமைக்கப்பட்ட முருகன் ஆலயம் உள்ளது. 'கொனா பந்தி கதரகம தேவாலய' என்று சிங்களத்தில் இவ்வாலயத்தைக் குறிப்பிடுகின்றனர். அதாவது எருதுடன் தொடர்புடைய கதிர்காமக்கந்தன் கோயில் என்பது அதன் பொருளாகும்.

வரலாற்று இலக்கியக் குறிப்புகளும் இச்சிவாலயம் தொடர்பில் இருப்பது குறிப்பிடத்தக்கது. கோட்டை இராசதானியை 1415 முதல் 1467 வரை ஆட்சி செய்த மன்னன் ஆறாம் பராக்கிரமபாகு. அம் மன்னனின் மகளின் பெயர் உலகுடைகுமாரி. உலகுடைகுமாரி என்பது தமிழ்ப் பெயராகும்.

### குயில் விடு தூதில் வரலாற்றுக் குறிப்புகள்

சிங்கள இலக்கியங்களிலே சிறப்புப்பெற்ற காவியங்களில் ராகுல தேரர் என்ற பௌத்த துறவியால் ஆக்கப்பட்ட '' சலலிஹினி சந்தேசிய'' வும் ஒன்றாகும். தமிழிலே இந்நூல் குயில்விடு தூது அல்லது பூவை விடு தூது என்று குறிப்பிடப்படுகின்றது. பன்மொழிப் புலமைகொண்ட ராகுலதேரர் இதனை 06ஆம் பராக்கிரமபாகு காலத்தில் அதா வது 1454இல் இயற்றியுள்ளார்.

இந் நூலிலேயுள்ள மூன்று பாடல்கள் சிவாலயத்தையும் அங்கு நடைபெறும் பூசை வழிபாடுகளையும் குறிப்பிடுகின்றன. இளவரசி உலகுடை குமாரி புத்திரபாக்கியம் வேண்டி களனியி லுள்ள வீபீஷண தெய்வத்திடம் தூது அனுப்பும் வண்ணம் அமைந்துள்ள அப்பாடல்களில் போகும் வழியில் தங்கிச் செல்ல வேண்டிய சிவாலயத்தையும் அங்கு செய்யப்படும் வழிபாட்டு முறைகளையும் சிங்கள மொழியில் அழகுற, தெளிவாகத் தொகுத்துப் பாடியுள்ளார் ராகுலதேரர். அம் மூன்று பாடல்களினதும் தமிழாக்கம் பின்வருமாறு அமைகின்றது:- அகில், கற்பூரம், சாம்பிராணி போன்றவற்றி லிருந்தெழும் வாசனைப் புகையின் மத்தியிலே ஜொலிக்கின்ற கொடிகளை யுடையதும், மிகப் பெரிய மிருதங்கம் எனப்படும் மேளத்தினாலும் சங்குகளி னாலும் எழுப்பப்படும் ஓசையு டனும், காண்டாமணியின் ஓசையுடனும் மக்கள் மிகவும் விருப்புடன் தமிழ் மொழியில்பாடும் தோத்திரங்களினால் மனதைக் கவரும் ஈஸ்வரன் கோயிலில் தங்கவும் என்பது முதற்பாடலின் தமிழாக்கம். அடுத்த பாடலில், தேவதாசிப் பெண்களின் எடுப்பான மார்பகங்களில் பூசியிருக்கும் குங்குமப் பூ வாசனையைத் தழுவி, பறவைகளின் ஓசையுடன் சேர்ந்து இளந்தென்றல் வீசும்போது காலைப் பூசையில் ஐந்துவித இசைக்கருவிகள் ஒலிக்கப் படும். அப் பஞ்சதூர்ய நாதங்களைக் கேட்டு சூரியன் உதயமாகும் வேளை நித்திரை விட்டெழவும் என்று கூறப்பட்டுள்ளது.

மற்றைய பாடலில் உதயபர்வதம் என்னும் தங்க விளக்குத்தூணில் பிரகாசிக்கும் விளக்கு போன்ற சூரியன் உலகிற்கு ஒளிவீசும் வேளையில் ஈஸ்வரக் கடவுளுக்கு நடைபெறும் நடனங்களுட னான பூசை உற்சவத் தைப் பார்த்து விட்டு உறுதியான மனதுடன் நீல நிற ஆகாயத்தில் உனது பயணத்தைத் தொடரவும் என்று கூறப்பட்டுள்ளது.

### திருநந்தீஸ்வரம்

இப்பாடல்களில் குறிப்பிடப்பட் டுள்ள சிவாலயம் இரத்மலானையி லுள்ள பழைய சிவாலயமாகவே கொள்ளப்படுகின்றது. சிங்களத்தில் கொனா என்பது தமிழில் எருது ஆனாலும் சிவாலயத்துடன் தொடர்புபடும்போது நந்தி என்றே குறிப்பிடப்பட வேண்டும். நந்தி அதாவது எருது சிவனின், ஈஸ்வரனின் வாகனம் என்பதும் இவ்வாலயத்தை ராகுல தேரர் ஈஸ்வரன் கோயில் என்று குறிப்பிட்டுள்ளமையும் கவனத்திற் கொள்ளும்போது பண்டைய நாளில் இவ்வாலயம் திருநந்தீஸ்வரம் என்ற பெயருடன் இயங்கியிருக்கலாம் என்று கூறமுடியும். மண்ணுள் மறைந்திருந்து மீள எழுந்து வரும் சிவாலய சின்னங் களும், ராகுல தேரரின் பாடல்களும் எமக்குப் பல வரலாற்று உண்மை களைப் புலப்படுத்துகின்றன.

ஐரோப்பியர் இந்நாட்டில் அடியெடுத்து வைக்கு முன்னரே இலங்கையின் மேற்குக்கரையில் கோட்டை இராசதானியில் கொழும் புக்கு அண்மையில் இரத்மலானையில் மிகப் பெரிய சிவாலயம் இருந்துள்ளது. அங்கு முறைப்படி பூசைகள் சிறப்பாக நடைபெற்றுள்ளன. தமிழ் மொழியில் இறைவன் மீது தோத்திரங்கள் பாடப் பட்டுள்ளன. இவற்றை நோக்குமிடத்து தமிழர்கள், இந்துக்கள் பல நூற்றாண் டுகளுக்கு முன்பே உயர் நிலையில் வாழ்ந்துள்ளனர் என்பது தெளிவாகின்றது.



இன்று அதாவது ஐந்து நூற்றாண்டுகள் அளவுமறைந் திருந்த பழம் பெரும் சிவாலயம் மீளவும் திருநந்தீஸ்வரம் என்ற திருப் பெயருடன் பிரகாசிக்கத் தொடங்கியுள்ளது. இது இலங்கை வாழ் இந்துக்கள தும், தமிழர்களதும் உள எழுச்சிக்கு வித்திடுவதாயுள்ளது.

சகல இந்து சமய விழாக்களும் சிறப்புடன் கடந்த சில ஆண்டுகளாக அங்கு நடைபெற்று வருகின்றன. இந்துத் தமிழ் மக்களும், பௌத்த சிங்கள மக்களும் இணைந்து இப்பழம் பெரும் சிவாலய வழிபாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

திருநந்தீஸ்வரத்தின் மீள் எழுச்சி நமது இனத்தினதும், சமயத்தினதும் வரலாற்றுப் பெருமைக்கு கட்டியம் கூறி நிற்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரபாகரனின் அரசியல் சாணக்கியம்!



"பிரேமதாஸவின் அதீத துணிச்சல் மற்றும் அவர் அரசியலில் கடைப்பிடித்த மிதவாதப் போக்கு என்பவற்றின் பலாபலனாகவே இன்று நாட்டில் அமைதி நிலை நிலவுகின்றது" இத்தகைய பாராட்டைப் பிரேமதாஸவுக்கு வழங்கியவர் வேறுயாருமல்லர். விடுதலைப்புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரனே. 1990 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதலாம் திகதி இவ்விதம் பிரேமதாஸவைப் பாராட்டி கருத்து வெளியிட்டிருந்தார்.

"மஹிந்த ராஜபக்ஷ ஒரு யதார்த்தவாதி". இவ்விதம் மஹிந்த ராஜபக்ஷவைப் பாராட்டியிருப்பவரும் விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரனே. அண்மையில் இடம்பெற்ற மாவீரர் தின உரையில் இவ்வித கருத்தைப் பிரபாகரன் வெளிப்படுத்தியிருந்தார்.

பிரபாகரன், ராஜீவ்காந்தியை இவ்விதம் பாராட்டியதில்லை; ஜே.ஆர்.ஜயவர்த்தனவை இவ்விதம் பாராட்டியதில்லை; சந்திரிகாவையோ- ரணில் விக்கிரமசிங்கவையோ ஒருபோதும் இப்படிப் பாராட்டியதில்லை. அந்த வகையில் பிரபகாரனின் பாராட்டைப் பெற்றவர்களென்றால் அது முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸ மற்றும், தற்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆகிய இருவர் மட்டுமே.

இதற்கான காரணம்தான் என்ன?

இப்படி அமைந்ததற்கான காரணத்தைக் கண்டுபிடிக்க வேண்டுமானால் பிரபாகரன் பிரேமதாஸவை எதற்காகப் பாராட்டினார் என்ற வரலாற்றுத் தகவலைத் தேடித் தெரிந்து கொண்டாக வேண்டும்.

இநதிய-இலங்கை ஒப்பந்தத்தில் பிரேமதாஸ வகித்த பாத்திரம் குறித்து பூரணமாகத் தெரிந்துகொண்டுதான் பிரபாகரன் அவ்விதம் பிரேமதாஸவைப் பாராட்டினார். அடுத்துவந்த ஜனாதிபதித் தேர்தலை இலக்கு வைத்தே பிரேமதாஸ இந்திய - இலங்கை ஒப்பந்தத்திற்கு எதிரான உணர்வைத் தமது நடவடிக்கைகள் மூலம் வெளிப்படுத்தினார். நாட்டின் இனப்பிரச்சினைக்கான தீர்வை இலக்காகக் கொண்டே ஜே.ஆர்., இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை மேற்கொள்ள எண்ணினார். ஆனால்; பிரேமதாஸ இந்திய - இலங்கை ஒப்பந்தத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்ததன் மூலம் நாட்டுப்பற்றாளர் என்ற கௌரவத்தைச் சிங்கள மக்கள் மத்தியில் ஈட்டிக் கொண்டார். ஆனால், ஜே.ஆர். ஜயவர்த்தன இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை முற்றுமுழுதாக ஆதரிக்கப் போய் தேசத் துரோகி என்ற களங்கத்தைத் தேடிக்கொண்டார்.

### பிரபாவின் காய்நகர்த்தல்

இந்த நிலையில் இவ்விருவரில் சிங்கள மக்களால் தேசத் துரோகியாகக் கருதப்பட்ட ஜே.ஆரையே பிரபாகரன் தெரிவு செய்திருக்கவேண்டும். ஆனால், இதற்கு மாறாக சிங்களப் பொது மக்களால் நாட்டுப்பற்றாளராகக் கருதப்பட்ட பிரேமதாஸவைத் தேர்ந்தெடுத்து அவருடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டிருந்தார் அவர்.

பிரபாகரனின் இந்த முடிவுக்கு நியாயமான காரணமிருந்தது. இந்திய - இலங்கை ஒப்பந்தம் தமது ஈழ இராச்சியத்துக்கான பாதையின் குறுக்காகப் போடப்பட்ட தடை என்றே பிரபாகரன் கருதினார். தம்மால் தனியாக இத்தடைகளை அகற்றிவிட முடியாதென்பதை அவ்வேளையில் பிரபாகரன் உணர்ந்துகொண்டார். ஆனால், எப்படியாவது அந்தத் தடையை அகற்றிவிட வேண்டிய அவசிய தேவை அவருக்கிருந்தது.

இதற்கான அரியதொரு வாய்ப்பாக 1988 ஆம் ஆண்டில் நடத்தப்படவிருந்த ஜனாதிபதித் தேர்தல் அமைந்தது. அந்தவேளையில் இந்தியாவின் பிரதமராக இருந்த ராஜீவ் காந்தியூடாகத் தொடர்ந்து தடையை நடைமுறைப்படுத்த முயன்ற ஜே.ஆர்., ஜனாதிபதித் தேர்தலில் மீண்டும் போட்டியிடமுடியாது என்பதை உணர்ந்து கொண்ட பிரபாகரன் அப்பதவிக்காக ஐ.தே. கட்சி சார்பாக எவர் நிறுத்தப்படக்கூடுமெனக் கூட்டிக் கழித்துக் கணக்கிட்டுப் பார்த்திருந்தார். முடிவில் ஜனாதிபதித் தேர்தலில் ஐ.தே. கட்சி சார்பாகப் போட்டியிடுவதற்குத் தகுதியானவர்களெனக் கருதப்படும் இருவரில் ஒருவர் அபேட்சகராகத் தெரிவு செய்யப்படலாமெனப் பிரபாகரன் கருதினார். அவர்களில் முதலாமவர் இந்திய - இலங்கை ஒப்பந்தம் உருவாக்கப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்ததன் மூலம் சிங்கள மக்களால் நாட்டுப்பற்றாளர் எனக் கௌரவமாகக் கருதப்பட்ட பிரேமதாஸ ஆவார். இரண்டாமவர், அந்த உடன்படிக்கை மேற்கொள்ளப்படுவதற்கு ஆதரவளித்ததன் மூலம் சிங்கள மக்களால் தேசத்துரோகியாகக் கருதப்பட்ட காமினி திஸாநாயக்க ஆவார். காமினி திஸாநாயக்க ஜனாதிபதி பதவியை அடைவாரானால் ஜே.ஆரின் அடிச்சுவட்டில் செயற்பட்டு இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை வரிக்கு வரி உரிய வகையில் நடைமுறைப்படுத்த முயல்வார் எனப் பிரபாகரன் கணக்குப் போட்டார். அதேவேளை, இந்திய - இலங்கை ஒப்பந்தத்துக்கு ஆரம்பம்

சிங்கள மூலம் : உபுல் யோசெப் பெர்னாந்து
தமிழில் : [illegible]

முதலே எதிர்ப்புத் தெரிவித்து வந்த பிரேமதாஸ ஜனாதிபதியானால் அந்த ஒப்பந்தத்தை ஏதோ ஒரு வகையில் முடிவுக்குக் கொண்டு வருவார் எனவும், தனது தமிழீழம் குறித்த போராட்டப் பயணத்தில் எதிர்ப்படும் தடைகளை நீக்கிக்கொள்ள இயலுமெனவும் பிரபாகரன் கருதினார். எதிர்கால இலக்கைக் கருத்தில் கொண்ட பிரபாகரனின் இவ்வித காய் நகர்த்தும் திட்டத்தை அவதானித்தவாறு மற்றொரு பிரபல அரசியல் தலைவர் இருந்தார். அவ்வேளையில் இந்தியப் பிரதமராகவிருந்த ராஜீவ்காந்தியே அந்தப் பிரமுகராவார்.

### ராஜீவின் திட்டம்

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை எவ்விதத்திலாவது முறிவடையச் செய்துவிட உதவத்தக்க ஒருவரை இலங்கையின் ஜனாதிபதியாக்கிவிடவேண்டுமெனப் பிரபாகரன் முயற்சிப்பதை ராஜீவ் காந்தி தெளிவாகப் புரிந்துகொண்டார். இதனால், ஜே.ஆரை இந்தியாவுக்கு விஜயம் செய்யுமாறு அழைப்பு விடுத்து - அவர் அவ்வழைப்பை ஏற்று இந்தியாவுக்குச் சென்றிருந்த சமயம் - ஜே.ஆரே மூன்றாவது தடவையாகவும் ஜனாதிபதிப் பதவியைத் தொடர்ந்து வகிப்பதற்கு அரசமைப்பு விதிகளில் வழியேதும் கிடையாதாவென வினாவினார். இதற்கு ஜே.ஆர். தயங்கினார். இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை உரிய முறையில் நடைமுறைப்படுத்த வேண்டுமானால், மேலும் ஆறு ஆண்டு காலம் ஜே.ஆர். ஜனாதிபதியாகப் பதவியில் தொடர்ந்திருந்தாகவேண்டுமென ராஜீவ்காந்தி கண்டிப்பதாகத் தெரிவித்தார்.

மேலும், ஆறு ஆண்டுகாலம் ஜனாதிபதிப் பதவியை வகிக்க இயலாதுவிட்டால் ஆகக்குறைந்தது ஒரு வருடமோ அல்லது இரு வருடகாலமோ ஆயினும் ஜே.ஆர். தொடர்ந்தும் ஜனாதிபதியாகப் பதவியிலிருந்தாகவேண்டுமென ராஜீவ்காந்தி ஜே.ஆரிடம் தெரிவித்தார். இத்தகைய யோசனையை செயலுருப் பெறச் செய்வதற்கு ஜே.ஆர். தீர்மானித்தார். இலங்கை திரும்பியதும் மூன்றாவது தடவையும் தாம் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடக்கூடிய விதத்தில் அரசமைப்பு விதிகளில் உரிய மாற்றங்கள் மேற்கொள்ளும் பொருட்டு குழுவொன்றினை ஜே.ஆர் நியமித்தார்.

ஆனால், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் ஜே.வி.பியும் ஒன்றிணைந்து ஜே.ஆரின் புதிய திட்டத்துக்கு எதிராக நாடு பூராவும் எதிர்ப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்தன. நாட்டைக் காட்டிக் கொடுத்த ஜே.ஆரை வீட்டுக்குச் செல்லுமாறு தெரிவிக்கும் சுவரொட்டிகளை சகல பகுதிகளிலுமுள்ள சுவர்களில் ஒட்டித் தமது எதிர்ப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்தனர். ஜே.ஆரைத் தேசத் துரோகியாக வர்ணித்துப் பல வழிகளிலும் பிரசாரங்களை மேற்கொண்டனர். ஜே.ஆர். இந்த நாட்டைப் பிரித்து இந்தியாவுக்கு விற்றுவிட்டாரென விமர்சித்தனர்.

இந்த நிலையில் அரசமைப்பில் உரிய மாற்றங்களை மேற்கொண்டு ஜே.ஆர். மூன்றாவது தடவையாகவும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டால், ஐ.தே. கட்சிக்குத் தோல்வி கிட்டக்கூடுமென ஐ.தே. கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் கவலையுற்றனர். தமது கட்சி நாட்டைக் காட்டிக் கொடுத்துவிட்டதாக மேற்கொள்ளப்பட்ட குற்றச்சாட்டினின்றும் வெளியேறுவது மிகச் சிரமமானதொன்றென அவர்கள் கருதினர். இதன் காரணமாக நாட்டுப் பற்றாளர் எனப் பொதுமக்களின் அபிமானத்தைப் பெற்றிருந்த பிரேமதாஸவை ஜனாதிபதி வேட்பாளராகத் தேர்தலில் நிறுத்துவதென ஐ.தே. கட்சி முடிவு செய்தது.

இதன்மூலம் பிரபாகரனின் எதிர்பார்ப்பு அவருக்குச் சாதகமாக அமைந்த அதேவேளை, ராஜீவ்காந்தியின் எதிர்பார்ப்பு பாதகமான பலனை அளித்தது. இதனால், அந்த வேளையிலிருந்து ராஜீவ் காந்தி இலங்கையின் அரசியல் நடவடிக்கைகளில் தலையிடும் தமது முயற்சியைக் கைவிட நேர்ந்தது. ஆனால், பிரபாகரனோ தனது காய் நகர்த்தல் நடவடிக்கைகளைப் புதிய உற்சாகத்தோடு ஆரம்பித்தார்.

### பிரேமதாஸ – பிரபா பேச்சு முயற்சி

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை நட்புறவு ஒப்பந்தம் என்ற விதத்தில் மாற்றிக் கொள்வதற்கும் இந்திய அமைதி காக்கும் படையினரை இந்தியாவுக்குத் திருப்பி அனுப்புவதற்கும் பிரேமதாஸ ஒப்புக்கொண்டார். சமாதானத்தை ஏற்படுத்தும் நோக்கில் மேற்கொள்ளப்பட்ட அந்த ஒப்பந்தம், எதிர்பார்த்த பலனெதனையும் அளிக்கவில்லையென்பதை பிரேமதாஸ பகிரங்கமாக ஒப்புக்கொண்டார். அதுமட்டுமன்றி, நாட்டின் பெயரால் பிரபாகரனுடன் நேரில் பேச்சு நடத்தி இனப்பிரச்சினைக்கு உரிய தீர்வு காணப்போகிறார் எனவும் பிரேமதாஸ தெரிவித்தார்.

இவ்வித வாக்குறுதிகளை முன்வைத்து ஜனாதிபதித் தேர்தலில் பிரேமதாஸ வெற்றியடைந்தார். தாம் தேர்தலுக்கு முன்னர் வழங்கிய வாக்குறுதிக்கமைய இந்தியாவுக்குக் கூடத் தெரியப்படுத்தாது பிரபாகரனுக்கு நெருக்கமான சோதிலிங்கம் என்பவர் ஊடாக பிரபாகரனுக்குச் செய்தியொன்றினை அனுப்பி வைத்தார்.

பிரேமதாஸவை ஜனாதிபதி வேட்பாளராக நியமிப்பதற்கு முன்னரே பிரபாகரன் இவ்வித அழைப்பொன்றினை எதிர்பார்த்திருந்தார். அவரது எதிர்பார்ப்புக்கமைய பிரேமதாஸவின் அழைப்புக் கிட்டியிருந்தது. தாம் பிரபாகரனை நேரில் சந்தித்துப் பேச்சுகள் மேற்கொள்ள விரும்புகிறார் எனப் பிரேமதாஸ அவ்வழைப்பில் தெரிவித்திருந்தார். பிரேமதாஸவின் அத்தகைய அழைப்புக்குப் பிரபாகரன் தெரிவித்த பதில் ஆச்சரியத்தை ஏற்படுத்துமோர் அபூர்வ செய்தியாகும்.


"நான் உங்களைச் சந்தித்துப் பேசு











வதாயின் காட்டிலிருந்து வெளியேறி வந்தாகவேண்டும். அவ்விதம் நான் காட்டிலிருந்து வெளியேறிவந்தால் இந்திய இராணுவம் என்னைக் கைது செய்யவோ, கொன்று விடவோ முயலக்கூடும். எனவே, நாமிருவரும் சுதந்திரமாக ஒருவரையொருவர் நேரடியாகச் சந்தித்துப் பேச வேண்டுமாயின் இந்திய இராணுவத்தை நாட்டை விட்டு அனுப்பியாகவேண்டும்".

இவ்விதம் பிரேமதாஸவுக்குப் பிரபாகரன் செய்தி தெரிவித்ததையடுத்து, அத்தகைய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டாமென பிரேமதாஸவுக்கு ஜே.ஆர்.ஆலோசனை தெரிவித்தார்.

(VIIIபக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனமே... ஓ... மனமே!

மனம் மனிதனின் வெற்றி, தோல்விகளுக்கு மட்டும் காரணமாக அமையாமல் மனிதனின் நோய்கள் உருவாதல், நோய்கள் குணமாகும், வேகம், இல்லாத நோய்களை மனப்பாதிப்பினால் உருவாக்கி வேதனை அனுபவிக்கும்படி செய்தல் போன்றவற்றிலும் பெரும்பங்கு வகிப்பதனால் மனம் குறித்து அறிவதும் மனதை மாற்றும் விதமறிந்து மனப் பாதிப்பிலிருந்து விடுபடுவதும் அவசியமாகிறது.

'சித்தம்' எனப்படும் மனதினை மாற்றி சார்ந்த உடல்நோய்களிலிருந்து (Psychosomatic Disorders) விடுபட சித்தமருத்துவம் மிகவும் சிறப்பானது. ஏனெனில், 'சித்தம்' என்ற மனதை அடக்கி பரம்பொருள் என்ற மெய்ப்பொருள் கண்டு உண்மை நிலை உணர்ந்தவர்களாகிய சித்தர்களால் உருவாக்கப்பட்ட அற்புதமான மருத்துவ முறையே சித்தமருத்துவம் என்பதில் யாருக்கும் எவ்வித ஐயமும் இல்லை.

அப்படிப்பட்ட சித்தமருத்துவத்தில் மனதின் பாதிப்புகளால் உண்டாகும். நோய்களுக்கு மருந்தில்லாமல் போகுமா? அனைத்து வித நோய்களுக்குமே சித்த மருத்துவத்தில் மருந்து கொடுக்கும் போது மனதிற்கும் சேர்த்தே சிகிச்சை வழங்கப்படுகிறது. மனதினை வளப்படுத்தி - மனப்பாதிப்புக்களை - அகற்றி நல்ல வாழ்வைப் பெற மனம் குறித்த சில கருத்துக்களை அறிந்து கொள்வது அவசியமாகிறது.

**★ மனம் என்றால் என்ன?**

எண்ணங்கள், உருவாதல் அந்த எண்ணங்கள் வடிவெடுத்தல், அவை பதிந்து பாதுகாக்கப்படுதல், தேவையற்ற எண்ணங்கள் அழிந்து போதல் போன்ற எண்ணங்கள், கருத்துகள், சிந்தனைகள் ஆகியவைகளின் பிறத்தல், காத்தல், அழிதல் ஆகியவற்றிற்கான மையமே மனம் ஆகும்.

மனசு, மனது, இதயம், சிந்தை, நெஞ்சம், சித்தம் எனப் பலவகையான சொற்களும் மனதைக் குறிக்கின்றன. காற்றைப் போல, மின்சாரத்தைப் போல மனம் இருப்பதை உணர முடியுமே தவிர பார்க்க முடியாது.

மனம் எங்கே இருக்கிறது என்பது குறித்து பல்வேறு மாறுபாடான கருத்துகள் நிலவி வருகின்றன. நெஞ்சறையில், இருதயத்தில், மூளையில் என பல்வேறு பகுதிகளில் மனம் இருப்பதாகக் கருதப்பட்டாலும், தற்கால அறிவியலின் படி மனம் என்பது மூளைதான். அதன் செயற்பாடுகளில் ஒன்றுதான் மனம் எனக்கூறப்படுகிறது.

இதனை முழுமையாக ஏற்றுக்கொள்ள இயலாது. மனதின் நிலைகளில் ஒன்றான வெளிமனம் (Conscious Mind) வேண்டுமானால் மூளையாக இருக்கலாமே தவிர மனதில் மற்ற இரண்டு நிலைகளும் மூளையாக இருக்க இயலாது. இதனை மனதின் நிலைகள் அறிவதன் மூலம் உணரலாம்.

மனதின் நிலைகள்:-

01. வெளி மனம் Conscious Mind
02. உள் மனம் Subconscious Mind
03. ஆனந்த நிலை மனம் Spiritual Mind

என்று 3 நிலைகளாகப் பிரிக்கலாம்.

**★ வெளிமனம் Conscious Mind**

இது முற்றிலும் அறிவு சார்ந்த பகுதியாகும். இது முழுக்க முழுக்க மூளையின் கட்டுப்பாட்டின் கீழ் வருகிறது. நம் விருப்பம்போல சிறிதளவு முயற்சியின் பேரில் வெளிமனத்தின் எண்ணங்களை மாற்றிவிட முடியும். வெளிமனதில் தோன்றும் எண்ணங்களை அடக்கியாளவும்,

## சுகநலம்

தேவையற்ற எண்ணங்களை மாற்றிவிடவும் இயலும். விருப்பமிருந்தால் தேவையான எண்ணங்களை வெளிமனதில் உருவாக்கிக் கொள்ளவும் இயலும்.

**★ உள் மனம் Subconscious Mind**

இது ஆழ் மனம் எனவும் அழைக்கப்படுகிறது. அறிவு சார்ந்த பகுதிக்குக் கட்டுப்படாமல் இயங்குகிறது. நம் அறிவு சார்ந்த பகுதியாகிய மூளை உணராவிட்டாலும், தன்னைச் சுற்றி நடக்கும் நிகழ்வுகளை ஆழ்மனம் தன்னுள் ஆழப் பதிய வைத்துக் கொள்கிறது.

அதேபோல மூளை மறந்து போனாலும் உள் மனதில் தோன்றிய காட்சிகள், செய்திகள் ஞாபகமாக ஆழ்மனதில் நிலை பெற்று இருக்கும். அதனால் தான் மனோதத்துவ நிபுணர்களால் மனப்பாதிப்பிற்குள்ளானவர்களை ஆழ்நிலை உறக்கத்திற்கு கொண்டு சென்று, ஆழ் மனதைத் தூண்டி, வேண்டிய தகவல்களைப் பெற்றுத் தக்க சிகிச்சை அளித்துக் குணப்படுத்த முடிகிறது.

உள்மனம் என்ற ஆழ்மனம் அறிவு சார்ந்த பகுதிக்குக் கட்டுப்படாமல் போனாலும், வெளிமனதில் தோன்றும் எண்ணங்களைக் கட்டுப்படுத்தி அவற்றை வலுப்படுத்தி ஆழ்மனதில் பதியச் செய்து, அதன் மூலம் ஓரளவு உள் மனதை ஒழுங்குபடுத்தலாம்.

**★ ஆனந்தநிலை மனம் Spiritual Mind**

மூன்றாவது நிலை மனமான ஆனந்த நிலை மனம் மிகவும் உன்னதமானது. பிரபஞ்சத்தில் உள்ள அறிவு அனைத்தும் சேர்ந்த கலவையாகும். இது சர்வ வல்லமையோடு எங்கும் ஒவ்வொரு அணுவிலும் நிறைந்திருப்பது. வெளிமனம், ஆழ்மனம் இவைகளை ஒழுங்குபடுத்தி நம் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருவோமேயானால் ஆனந்தநிலை மனம் என்ற பிரபஞ்சத்தின் அறிவோடு நம்மால் தொடர்பு கொள்ளவும் இயலும்.

சித்தர்கள் எனப்படுபவர்கள் மூன்றாவது நிலை மனமான ஆனந்தநிலை மனத்தை அறிந்து அதன் வழியாகவே பிரபஞ்சத்தின் அறிவை உணர்ந்தனர். பேரின்ப நிலையை எய்தினர். நாம் பேரின்ப நிலையை எய்தாவிட்டாலும், வாழ்வில் நோய்கள், இல்லாமல் மனமே மனித வாழ்வின் ஏணிப்படி மட்டும் அல்ல! ஆதாரமும், அதுவே என உணர்ந்து மனப்பாதிப்புக்களிலிருந்து விடுபட்டு மனநலம் பெற்று, வாழ்வில் வளமோடு வாழக் கற்றுக் கொண்டாலே போதுமானது.

**நி.தர்ஷனோதயன்**
4ஆம் வருடம். சித்த மருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்.



# தாக்குதலுக்குள்ளான தலைநகரம்

கடந்த வாரம் 'தாக்குதலுக்குள்ளான தலைநகரம்' என்னும் தலைப்பில் வெளியான கட்டுரையின் இரண்டாவது பகுதி இது.

இவற்றின் மத்தியில் ஆக்கிரமிப்பாளர்களை ஆச்சரியத்துக்கு உள்ளாக்கிய சம்பவமொன்றும் இடம்பெற்றது. கொழும்பு குதிரைப் பந்தயத்திடலில் அமைந்திருந்த சிறியரக விமானத் தரிப்பிடத்திலிருந்து ''ஹரிகேன்'' ரகத்தைச் சேர்ந்த சிறிய ரக விமானமும், ''புல்மார்'' ரகத்தைச் சேர்ந்த சில சிறிய ரக விமானங்களும் ஒரே சமயத்தில் புறப்பட்டு எதிரிகளின் விமானங்கள் மீது பதில் தாக்குதலை மேற்கொள் ளுமென ஜப்பானியர்கள் ஒரு சிறிதும் எதிர்பார்த்திருக்கவில்லை.

அங்கொடை மனநோயாளர் ஆஸ்பத் திரி மற்றும் மருதானை புகையிரத நிலையம் ஆகியவற்றின் மீது குண்டு வீசித் தாக்கிய ஜப்பானிய விமானங்கள் அத்துடன், நிறுத்திக் கொள்ளாது மீண்டும் கொழும்பின் முக்கியத்துவம் வாய்ந்த கட்டடங்கள் மீது குண்டுத் தாக்குதல் நடத்தும் நோக்கில் வான்வெளியில் சரியான இலக்கைத் தேடி வட்டமிட்டன. எனினும், இலங்கை அரசின் வான்வெளிப் பாதுகாப்புப் பிரிவு விமானங்களின் எதிர்த் தாக்குதல்களைக் கண்டு பின்வாங்கி அவை வெளியேற நேர்ந்தது.

அங்கொடை மனநோயாளர் ஆஸ்பத்திரி நோயாளர்கள் குண்டுவீச்சு விமானங்களின் இரைச்சலைக் கேட்டு கூட்டமாக வெளியில் வந்து கையசைத்து ஆரவாரித்தமை காரணமாகவே ஆஸ்பத்திரிக் கட்டடம் குண்டு வீச்சுக்கு இலக்காக நேர்ந்ததாக பலர் பேசிக் கொண்டாலும், தவறுதலாக ஆஸ்பத்திரிக் கட்டடம் மீது குண்டுவீச்சு மேற்கொள்ளப்பட நேர்ந்தது என்பதே உண்மையாகும்.

இக்குண்டு வீச்சுக்காரணமாக அங்கொடை ஆஸ்பத்திரிக் கட்டடத்துக்குப் பாரிய சேதம் ஏற்பட்டதோடு, 50 பேர் வரையான நோயாளர்கள் உயிரிழந்தனர். அதேவேளை, எதிரிகளின் ஒருசில விமானங்களைத் தாக்கி வான்வெளிப் பாதுகாப்புப் பிரிவினரால் அவற்றை நாசப்படுத்தவும் முடிந்தது. இவ்விதம் தாக்கப்பட்டுச் சேதப்படுத்தப்பட்ட எதிரி விமானங்களின் பாகங்கள் கல்கிசை புனித தோமஸ் கல்லூரி வளாகம், பன்னிப்பிட்டிய பிரதேசம், ஹொரணைப் பிரதேசம் மற்றும் காலிமுகத்திடல் போன்ற பகுதிகளில் பெருமளவில் வீழ்ந்து சிதறிக் காணப்பட்டன. அது மட்டுமன்றி அரச பாதுகாப்புப் பிரிவினரில் எதிர்த்தாக்குதல் காரணமாக உயிரிழந்த ஆறு எதிரிப் படையினரின் உடல்கள் அரச இராணுவ மரியாதையுடன் ஏப்ரல் 07 ஆம் திகதி பொறளை கனத்தை மயானத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டன.

முன்னொருபோதும் இடம்பெற்றிராத இவ்வித அனர்த்தம் காரணமாக கொழும்பு நகர் வாழ் மக்கள் கடும் அச்சமடைந்தனர். அவர்கள் தத்தமது குடும்பத்தவர்களுடன் கொழும்பு மாநகரத்தைவிட்டு இடம்பெயர ஆரம்பித்தனர். பெரும்பாலான பொதுமக்கள் தமது உடைமைகளையும் தம்முடன் எடுத்துக்கொண்டு கிராமப்புறங்களை நோக்கிப் படையெடுத்தனர். நகரிலிருந்த கடைகள் யாவும் இழுத்து மூடப்பட்டன. வீதிகள் யாவும் வெறிச்சோடின. மொத்தத்தில் கொழும்பு நகர் வீதிகளில் மின்சாரக் கம்பங்களில் சாவகாசமாக உட்கார்ந்திருந்த காகங்களைத் தவிர வேறு நடமாட்டமெதுவும் காணப்படவில்லை.

வீடுகளில் வளர்க்கப்பட்ட நாய், பூனை போன்ற வளர்ப்பு மிருகங்கள் கூட வெடிச் சத்தங்களின் அதிர்வில் அஞ்சி மூலைக்கு மூலை பதுங்கிக் கொண்டன. அன்றிரவு கொழும்பு நகரில் பயங்கர அமைதி நிலவியது:

நகரில் அத்தியாவசிய சேவைகள் மட்டும் மேற்கொள்ளப்பட்டன. அச்சிடப்பட்டு வெளிவந்த பத்திரிகைகள் ஜப்பானிய ஆக்கிரமிப்பு முயற்சிச் செய்திகளையே தாங்கி வெளிவந்தன. நகரிலிருந்த உணவு விடுதிகள், கடைகள் என்பவை மூடப்பட்டிருந்தமையால் நகரில் தொழில் முயற்சிகளில் ஈடுபட்டோரும், நகரத்தைக் கைவிட்டு வெளியேறாதிருந்தோரும் தமது உணவு மற்றும் அவசிய தேவைகளுக்கு பெரும் சிரமம் அடைய நேர்ந்தது. இவ்விதம் நகரில் மீந்திருந்தோர் தமது அத்தியாவசிய தேவைகளுக்குப் பெரும் சிரமமுறுவதாக சேர் ஒலிவர் குணதிலகவுக்குச் செய்தி எட்டியது. அவர் உடனடியாகச் செயற்பட்டு, தனது இராணுவ அதிகாரங்களைப் பயன்படுத்தி அவசர உத்தரவொன்றைப் பிறப்பித்தார்.

''நகரில் மூடப்பட்ட நிலையிலுள்ள சகல கடைகளும் உடனடியாகத் திறக்கப்படவேண்டும். கடை உரிமையாளர்கள் இல்லாதவிடத்து, கணக்கீட்டாளர்களைப் பயன்படுத்தி கடையிலுள்ள பொருள்களை பொதுமக்களுக்கு விநியோகித்து அவர்களது சிரமத்தைக் குறைக்கவும், உணவுச்சாலைகளில் உணவு தயாரிப்பதற்கு அவசியமான பொருள்கள் அரசினால் வழங்கப்படும்.'' இதுவே சேர் ஒலிவர் குணதிலக பிறப்பித்த அவசர உத்தரவாகும். அவரது உத்தரவுக்கு இணங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டன. நகரிலிருந்த கடைகள் யாவும் திறக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட்டன.

உரிமையாளர்கள் பலர் தமது வர்த்தக நிலையங்களைக் கைவிட்டு அச்சம் காரணமாக நகரைவிட்டு வெளியேறிச் சென்றிருந்ததால், நடைபாதை வியாபாரிகள் மற்றும் தொழிலின்றி வீதியில் அலைந்து திரிந்த இளைஞர்கள் ஆகிய தரப்பினர் இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி வியாபார நிலையங்களைத் தாமே பொறுப்பேற்று நிர்வகிக்க ஆரம்பித்தனர். அதிர்ஷ்டவசமாகத் திடீரெனக் கிட்டிய இத்தகைய வாய்ப்புக் காரணமாக ஜப்பானியர்களின் குண்டுத்தாக்குதலால் வாழ்க்கைத் தரத்தில் முன்னேற்றம் காணும் வாய்ப்பு ஒருசிலருக்குக் கிட்டியது. எவ்வாறான போதிலும், இக்குண்டுத்தாக்குதல் காரணமாக 85 பேர் உயிரிழக்கவும் 87 பேர் படுகாயமுறவும் நேர்ந்தது.

இச்சம்பவத்தில் பாதிப்புற்றோருக்கான நிவாரண நடவடிக்கைகள் துரிதகதியில் ஆரம்பிக்கப்பட்டன. கொள்ளை முயற்சியிலீடுபடுவோர் இனம் காணப்பட்டால் அவர்கள் மரண தண்டனைக்கு உட்படுத்தப்படுவர் என்பதை விளம்பரப்படுத்தும் சுவரொட்டிகள் நகரின் பல பகுதிகளிலும் ஒட்டும் நடவடிக்கைகள் முடுக்கி விடப்பட்டன.

அதேவேளை, ஜப்பானியர்கள் தமது நடவடிக்கையை அத்தோடு நிறுத்திக் கொள்ளவில்லை. இச்சம்பவம் இடம்பெற்று ஒருவாரம் முடிய முன்னர்- அதாவது ஏப்ரல் மாதம் 09 ஆம் திகதி திருகோணமலைத் துறைமுகமும், அதனை அண்டிய பகுதிகளும் ஜப்பானியர்களின் குண்டுத்தாக்குதலுக்கு உள்ளாயின. திருகோணமலைத் துறைமுகம் மற்றும் முக்கிய கட்டடங்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தீவிர தாக்குதல் காரணமாக துறைமுக ஊழியர்கள் உட்பட 350 பொதுமக்கள் உயிரிழக்க நேர்ந்தது.

இத்தகைய நிகழ்வுகளின் மத்தியில் இலங்கை அரச விமானப்படை, ஜப்பானின் 24 விமானங்களைச் சுட்டு வீழ்த்தியும், 17 விமானங்களுக்குப் பாரதூரமான சேதங்களை விளைவித்தும் சாதனை படைத்த அதேசமயம், தமது தரப்பில் 16 விமானங்களுக்கு சேதமேற்பட்டதாகவும், விமான ஓட்டிகள் ஆறுபேர் உயிரிழக்க நேர்ந்ததாகவும் தெரிவித்தது. அது மட்டுமன்றி கடும் காயங்களுக்குள்ளாகித் தமது தரப்பைச் சேர்ந்த 36 வீரர்கள் வைத்தியசாலையில் சிகிச்சைக்கென அனுமதிக்கப்பட்டுள்ளனர் எனவும் விமானப்படையினர் தெரிவித்தனர். திருகோணமலைத் துறைமுகம் மீது இவ்விதம் திடீரெனத் தாக்குதல் மேற்கொண்ட ஜப்பானிய போர் விமானங்கள் துறைமுகத்திலிருந்து வெளியேறி ஆழ்கடலுக்கப்பால் பயணித்துக்கொண்டிருந்த 'வம்பயர்', 'கொலிம்க்' மற்றும் 'ஹர்மீஸ்' ஆகிய மூன்று தாக்குதல் கப்பல்களைத் தாக்கி அழித்துவிட்டன. நேச நாடுகளின் கடற்படை வீரர்கள் 750 பேரும், ஹர்மீஸ் கப்பலில் பயணித்த 308 கடற்படை வீரர்களும் இத்தாக்குதலில் உயிரிழக்க நேர்ந்தது.

இலங்கையை எவ்வாறாயினும் ஆக்கிரமித்து விடவேண்டுமென்ற ஜப்பானியர்களின் விருப்பம் அவர்களது மனதினின்றும் அகலாத காரணத்தினால் இரண்டாம் உலகப் போர் இடம்பெற்ற காலகட்டத்தில் ஜப்பானிய விமானங்கள் இலங்கையின் வான் பரப்பில் அடிக்கடி அத்துமீறிப் பறப்புக்களை மேற்கொண்டன.

1944 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 07 ஆம் திகதி ஜப்பானியர்களின் கடைசித் தாக்குதல் எனக்கூறப்பட்ட தாக்குதல் சம்பவம் மட்டக்களப்பு நகர் மீது மேற்கொள்ளப்பட்டது. மட்டக்களப்பின் மேல் வான்வெளியில் பறந்த விமானத்திலிருந்து வீசப்பட்ட குண்டுத் தாக்குதலே அதுவாகும். அத்துடன், இலங்கை மீதான ஜப்பானியர்களின் தாக்குதல் முடிவுக்கு வந்தது. ஆனால், இந்த வரலாற்று நிகழ்ச்சிகளுடே முக்கியத்துவம் வாய்ந்த வீரதீரச் செயலாற்றிய படைவீரரொருவரின் அர்ப்பணிப்புணர்வும் செயற்றிறன் மிக்க தீரமும் மறைந்துள்ளது.

இரண்டாவது உலக மகாயுத்தம் முடிவடையும் வரை ஜப்பானியச் சிறையில் பலவித சித்திரவதைகளுக்கு உள்ளான லெனாட் யோசெப் பர்ச்சல் என்ற வான்வெளி பாதுகாப்பு அதிகாரி இலங்கை மக்களது மனதினின்றும் அழித்துவிட இயலாத அளவுக்கு இடம்பிடித்துவிட்டார்.

உலக யுத்தம் முடிவுக்கு வந்த பின்னர் ஜப்பானியர்களால் சிறையினின்றும் விடுவிக்கப்பட்ட பர்ச்சல் தாம் ஏற்றுக்கொண்ட பணியை உறுதியுடனும் துணிச்சலுடனும் உரிய தருணத்தில் ஆற்றியதன் மூலம் இலங்கைப் பொதுமக்களது உயிர் உடமைகளுக்கு நேரவிருந்த அனர்த்தத்தை தடுத்துவிட்ட பெருமை, பூரிப்பு மற்றும் ஒருவகை கர்வம் ஆகிய உணர்வுகளின் சங்கமிப்புடன் இலங்கை மக்களிடம் விடைபெற்றுத் தமது நாடு திரும்பினார். அவரது தன்னலமற்ற துணிச்சல் மிக்க சேவைக்காக இலங்கை அரசு அவருக்கு பல பரிசில்களை வழங்கிக் கௌரவித்தது.

1966 ஆம் ஆண்டில் பர்ச்சல் மீண்டும் ஒரு தடவை இலங்கைக்கு விஜயம் செய்தார். அந்தவேளையில் இரண்டாவது உலக மகா யுத்த காலத்தில் 1942 ஆம் ஆண்டில் வானவெளியில் தமது விமானத்தைச் செலுத்தியவேளையில் எதிரிப்படைகளின் தாக்குதல்களினின்றும் தம் உயிரைக் காப்பாற்றப் பெரும் பிரயத்தனம் மேற்கொள்ள வேண்டியிருந்த நிலையிலும் துணிச்சலுடன் இந்த நாட்டு மக்களைக் காப்பாற்ற இரகசிய சமிக்ஞைச் செய்தியை அனுப்பி வைத்தமை தொடர்பாகவும், தனது எட்டு உதவியாளர்கள் சகிதம் தாம் மேற்கொண்ட வீரதீரச் செயல்கள் பற்றியும் நாட்டு மக்களுக்கு விரிவாக எடுத்துக் கூறுவதற்கு இலங்கை ஒலிபரப்பு நிறுவனம் அவருக்கு ஒரு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தது.

கண்ணீரும் சோகமும் நிறைந்த யுத்தம் எப்போதும் மனித குலத்துக்கு நிரந்தரமான வேதனையையே விட்டுச் செல்கிறது. மொத்தத்தில் யுத்தம் எப்போதுமே துன்பத்தையும், சோகத்தையும், அவலங்களையும் மட்டுமே மனித குலத்துக்குப் பரிசாகத் தரவல்லது.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# கொறிக்கும் பிராணிகள்

கொறிக்கும் பிராணிகளின் தாடைகள் கொறிப்பதற்கு ஏற்றவாறு அமைந்துள்ளன. இவை தாடைகளை மேலும் கீழும் முன்னும் பின்னும் பக்கவாட்டிலும் அசைக்க முடியும். ஒவ்வொரு முன்தாடையிலும் நீண்டு வளைந்த கூர்மையான இரண்டு பற்கள் இருக்கும். முயலுக்கு மட்டும் ஒவ்வொரு தாடையிலும் நான்கு பற்கள் இருக்கும். கொறிக்கக் கொறிக்க இப்பற்களின் நுனி தேயும். ஆனால், தேயத் தேய இப்பற்கள் ஆயுள் முழுதும் வளர்த்து கொண்டே இருக்கும். இப்பிராணிகள் கொறிக்காமலே இருந்தால், இப்பற்கள் வளர்ந்து வாயை மூடமுடியாமல் போய்விடும்! எனவேதான் இவை உணவு உண்ணாதபோதும் ஏதாவது கடினமான பொருளைக் கொறித்துக் கொண்டே இருக்கின்றன.




கொறிககும் பிராணிகள் யாவும் குட்டிபோட்டுப் பால் கொடுக்கும் பாலூட்டிகள் ஆகும். இவற்றில் பெரும்பாலானவை தாவரங்களையே தின்னும். புல், இலை, மரப்பட்டை, மரம் முதலியவற்றை இவை உண்ணும். எலி, சுண்டெலி போன்றவை புழுபூச்சிகளையும் உண்டு வாழும்.

இப்பிராணிகளில் முள்ளம்பன்றி, முயல், நில அணில் போன்றவை தரையில் வாழ்கின்றன. எலி, சுண்டெலி, வெள்ளெலி, மூஞ்சூறு முதலியவை நிலத்தில் வளை தோண்டி வசிக்கும். பறக்கும் அணில் மரத்திலும் நீர்நாய் குளம் குட்டைகளிலும் கூடு கட்டி வாழும். பாலைவனங்களில் வாழும் சில கொறிக்கும் பிராணிகளும் உள்ளன. கொறிக்கும் பிராணிகள் ஓராண்டில் பலமுறை குட்டிபோடும் ஒரு முறையில் பல குட்டிகள் பிறக்கும் எலிகளினால் 'பிளேகு' போன்ற கொடிய நோய்கள் பரவுகின்றன. பயிர்களைக் கடித்து நாசமாக்குகின்றன. உணவு தானியங்களை எலிகள் சேதப்படுத்துகின்றன. இந்தப் பிராணிகளால் மக்களுக்குத் தொல்லையே அதிகம்.

- கவிதா

## தெரிந்துகொள்ளுங்கள்!

- ஒட்டகம் 300 கிலோ எடையை தாங்கிச் செல்லும்.
- தவளைகள் கண்கள் மூலம் சத்தத்தைக் கேட்கின்றன.
- பாம்மைப் போல மீன்களுக்கும் கண் இமையில்லை.
- பித்தப்பை இல்லாத விலங்கு ஒட்டகம்.
- யானையின் உயிர் உள்ளவரை தந்தமும் வளரும்.
- யானையின் கர்ப்பகாலம் 22 மாதங்களாகும்.
- கரப்பான் பூச்சி ஏழு நாள்களுக்கு மேல் தலையில்லாமல் உயிர் வாழும்.
- ஒட்டகச் சிவிங்கியின் நாக்கு அதன் காதுகளைத் தொடுமளவுக்கு நீண்டு வளர்ந்திருக்கும்.
- சைக்கிள் 1790 ஆம் ஆண்டு முதன்முதலாகச் சீனரால் உருவாக்கப்பட்டது.
- உலகில் மிகப் பெரிய விமானப் போக்குவரத்து நிறுவனம் ஏய்ரோ புளொட்
- உலகின் மிகப் பெரிய பூங்கா கனடாவில் அமைந்துள்ளது.

**நற்குணம் ஜீவன்,**
தரம் 9சி, யாழ்/சென்.ஜோன்ஸ் கல்லூரி.

## நமது வழிகாட்டிகள்

கடலில் கலங்கள் முன்னேறக்
கரையின் விளக்கே வழிகாட்டும்.
உடலும் மனமும் உழைத்துயர
உயர்ந்தோர் வாழ்வே வழிகாட்டும்.

கல்வி கற்றுக் கவினடையக்
கலைசேர் நூல்கள் வழிகாட்டும்.
செல்வம் தேடிச் செழித்தோங்கச்
செம்மை உழைப்பே வழிகாட்டும்.

ஈட்டும் பொருளைச் சேமிக்க
எறும்பு தேனீ வழிகாட்டும்!
வாட்டம் ஓட்டி வளம் நாட்ட
வல்லோர் வாழ்வே வழிகாட்டும்!

அழுக்கை அகற்றி அறிவு பெற
ஆசான் உரைகள் வழிகாட்டும்.
இழுக்கில் லாமல் வாழ்ந்துயர
...டில் குறள்தான் வழிகாட்டும்.

**ம.கிறிஸ்ரீன் கஜானா,**
தரம்:- 5
யா /கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை.







பா.ஆதி
தரம்:- 8 டீ, யா/இந்துக் கல்லூரி.




## உங்களின் கைவண்ணம்



நா.அபிராமி,
தரம்- 3பி,
யா / இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை.



மோ.றதன்,
தரம்- 5பி,
யா/ சென்.ஜோன்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணம்.



த.திருவரன்,
தரம்- 7ஏ,
யா /கொக்குவில் இந்து கல்லூரி.

## விடுகதைகள்

- அச்சு இல்லாத சக்கரம் அழகு காட்டும் சக்கரம். அது என்ன?

**வளையல்**

- அடிமேல் அடிவாங்கி அனைவரையும் சொக்க வைக்கும். அது என்ன?

**மிருதங்கம்**

- அடித்தால் வலிக்கும் கடித்தால் இனிக்கும். அது என்ன?

**கரும்பு**

- அகோரத் தாய்க்கு ஐம்பது குஞ்சுகள். குஞ்சுகள் வாயெல்லாம் தங்கம் அது என்ன?

**தீக்குச்சிகள்**

- அம்பலத்தில் ஆடும் அழகுக் கண்ணனுக்கு அங்கம் முழுவதும் தங்கக் கண்ணாடி. அவன் யார்?

**மயில்**

இ.கார்த்திகா, தரம்:-5ஏ
யா/சென்.மேரிஸ் வித்தியாலயம்.

**தம்பி, தங்கைகளே!**

'சிறுவர் பொழில்'
பகுதிக்கு உங்கள் ஆக்கங்கள்
...
பிரசுரத்திற்கு ஏற்றுக் கொள்ளப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செல்லையாத் தாத்தாவும் செல்லக் குழந்தைகளும்...

செல்லையாத் தாத்தா வருவதைக் கண்ட சிறுவர்கள் விளையாட்டை நிறுத்தி விட்டு ஓடி வந்தனர். புளியமரத்தடி ஈரமாக இருந்ததால் வைரவர் கோயில் மண்டபத்தில் எல்லோரும் அமர்ந்து கொண்டனர்.

"தாத்தா... கிருமிகள் பற்றிச் சென்ற வாரம் சொன்னீர்களல்லவா? ஒன்றிரண்டு கிருமிகள் கூட நோயை ஏற்படுத்துமா?" என்று கேட்டான் அகிலங்கன்.

"சாதாரணமாக ஒரு தேக்கரண்டி அசுத்த நீரில் எட்டரைக் கோடி கிருமிகள் இருக்குமாம். ஆனால் கிருமிகள் உடலின் பாதுகாப்பு அணிகளை மிஞ்சி, அவற்றுடன் போட்டியிட்டு வெல்லும் போது நோய் ஏற்படுகிறது" என்றார் தாத்தா.

"எங்கடை வீட்டிலை பழைய சாப்பாடு பூஞ்சணம் பிடிச்சுப் பழுதாகிவிட்டது. மஞ்சள் நிறத்தில் பூஞ்சணம் படர்ந்து இருந்தது. அம்மா அதை வெளியே எறிந்து விட்டா" என்றாள் பிரியங்கா.

"பூஞ்சணமும் நுண்ணங்கிகளால்தான் உருவானது. ஆனால், கிருமிகளைக் கொல்வதற்கான 'பென்சிலின்' போன்ற மருந்துகள் இந்தப் பூஞ்சணத்தில் இருந்தே தயாரிக்கப்படுகின்றன. நான் முன்னர் சொன்னனே கிருமிகள் தீமைகளை மட்டுமல்ல நன்மைகளையும் செய்யுது. பூஞ்சணம் என்பது ஒரு வகையான காளான். இதேபோல காளான்கள் உடலுக்கு ஊட்டம் தரும் உணவுகளாகவும், மருந்துகளாகவும் பயன்படுகின்றன."

"ஓம் தீாத்தா... எங்கடை அம்மம்மா ரிஷி காளான் குளிகை குடிக்கிறவா. அது உடம்பிலை நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரித்து நோய் ஏற்படாமல் பாதுகாக்குமாம்" என்றாள் சாந்தி.

"உலகத்திலை ஆயிரக் கணக்கான வகைக் காளான்



கள் உள்ளன. அவற்றிலே நச்சுக் காளான்களும் இருக்குது. நன்மை செய்யும் காளான்களும் உள்ளன. நல்லது எது என்று கண்டறிந்து பயன்படுத்த வேணும்" என்றார் தாத்தா.

'கனநாளாய் கதை ஒன்றுஞ்சொல்லேல்லைத் தாத்தா... ஒரு கதை சொல்லுங்கோ" என்றாள் சாந்தி.

"கதையில்லை. ஒரு சுவையான பாடலைச் சொல்லுறன்"

"ஓம்... சொல்லுங்கோ" என்றனர் சிறுவர்கள்.

"இது சிலேடைப் பாடல். சிலேடை என்றால் இரண்டு பொருள் வரத்தொடுக்கும் பாடலாகும். மற்றவரை மடக்கும் விதத்தில் நளினமான பாடலாக இது இருக்கும். இப்ப நான் சொல்லுற பாடலைப் பாடியவர் காளமேகப் புலவர். இவர் சிலேடையாகப் பாடுவதில் வல்லவர். அவர் ஒரு முறை திருமலைராஜன் என்ற மன்னன் அரசாண்ட காரைக்கால் என்ற பட்டினத்துக்குச் சென்றார். அங்கே நிறைய அரசவைக் கவிஞர்கள் இருந்தார்கள். அவர்களுக்கு தாம் நிறையக் கற்றவர்கள், பெரும் பண்டிதர்கள் என்ற அகங்காரம் இருந்தது. காளமேகப்புலவரோ பெரும் புலவர். ஆனால், திருமலைராஜனது அரண்மனைக்குள் நுழைந்த போது ஒரு சிலர் எழுந்து வணக்கம் செலுத்தாமல் அமர்ந்திருந்தனர். தன்னை ஏளனப்படுத்தியவர்கள் யாரென அறிய விரும்பிய காளமேகப் புலவர் 'நீங்கள் யார்?' என்று வினவினார். அதற்கு அவர்கள் 'நாங்கள் கவிராயர்கள்' என்று பதிலளித்தனர். இவர்கள் கவிராயர்கள் என்று சொன்னதும் காளமேகப் புலவர் பலத்துச் சிரித்தார். அரசனும் மற்றவர்களும் ஆச்சரியத்தோடு பார்த்தனர். அப்போது காளமேகப் புலவர் பாடினார்.

*"வாலெங்கே? நீண்ட வயிறெங்கே?*
*முன்னிரண்டு காலெங்கே? உட்குழிந்த*
*கண்ணெங்கே? சாலப்*
*புவிராயர் போற்றும் புலவீர்காள்! நீவிர்*
*கவிராயர் என்றிருந்தக் கால்"*

புலவர் பாடி முடித்த பின்னர் அரசனும் மற்றவர்களும் விழுந்து விழுந்து சிரித்தனர். கவிராயர் என்று சொன்ன புலவர்கள் வாயடைத்துப்போனார்கள்" என்று சொல்லிச் சிரித்தார் தாத்தா.

சிறுவர்கள் ஒருவரை ஒருவர் பார்த்தனர்.

"கவி என்றால் கவிதை, பாடல், கவிஞர் என்று அர்த்தம் அதற்கு குரங்கு என்ற பொருளும் உள்ளது. இனிப் பாடலைப் பார்ப்போமா?" என்று கூறிய தாத்தா மீண்டும் பாடலைப் பாடினார். சிறுவர்கள் விழுந்து விழுந்து சிரித்தனர். மற்றவரைப் பார்த்து 'வாலெங்கே...' என்று பாடிக் கேலி செய்தபடி எழுந்தனர். மாலை மங்கி இருள் சூழத் தொடங்கியது.

*(தாத்தா மீண்டும் வருவார்)*

**- பாபு அண்ணா**

# யாழ்ப்பாணம்



வயதாகி விட்டால் மனிதர்கள் விரக்தி நிலை வசப்படுவது இயற்கையே!

இதைக் கண்டும் கேட்டும் உணர்ந்திருக்கிறோம்; அனுதாபப்பட்டிருக்கிறோம்.

"எதற்காக இன்னமும் என்னைக் கொண்டு போகாமல் கடவுள் வைத்துக் கொண்டிருக்கிறாரோ?" இப்படிப் புலம்பும் பழசுகள் பலர் நம் மத்தியில் உள்ளனர்.

பிள்ளைகளின் அலட்சியம்; தீராத நோய், இன்னோரன்ன காரணங்களால் இவர்கள் வாழ்க்கை மீது வெறுப்பு அடைவதுண்டு. நானும் இத்தகைய பழசுகளில் ஒருத்தன்; எனக்கு இத்தகைய பிரச்சினைகள் எதுவும் கிடையாது.

மனைவி எப்போதோ போய்ச் சேர்ந்து விட்டாள்; ஒரே மகன்; குடும்பம் குழந்தை குட்டியோடு வாழும் அவனுடன் நானும் ஒண்டிக் கொண்டிருக்கிறேன்.

என்னால் அவர்களுக்கோ, அவர்களால் எனக்கோ எந்தவிதச் சிரமமும் இதுவரையில் கிடையாது.

மொத்தத்தில் நான் ஒரு சுதந்திரப் பறவை. இருந்தாலும் ஒரு சில வேளைகளில் உலக வாழ்க்கை குறித்து என்னையறியாமலேயே வெறுப்பு தலை தூக்குவதுண்டு. இதுவரை சொன்னது சுய புராணம். இனி விஷயத்துக்கு வருவோம்.

ஏறக்குறைய ஆறேழு மாதங்களுக்கு முன்பு இருந்தாற் போலிருந்து ஒருநாள் நெஞ்சுப் பகுதியில் இடைக்கிடை லேசானதொரு வலியை உணர்ந்தேன். தொடர் வலியல்ல; இடைக்கிடை விட்டு... விட்டு...

வாயுக் கோளாறாய் இருக்கலாம் என அலட்சியமாக இருந்து விட்டேன்.

அடுத்தடுத்த நாளும் தொடர்ந்தும் இடையிடையே அந்த லேசான வலி தொடர்ந்தது.

இனம் புரியாததொரு அச்சத்தின் வசமானேன்.

ஒருவேளை இது ஏதாவதொரு பாரதூரமான வருத்தமாக இருக்குமோ?

உரிய சிகிச்சை எடுக்கத் தவறினால் ஒருவேளை உயிருக்கே ஆபத்தாக முடியுமோ?

குடும்பத்தார் அயலவர்களுடன் ஒன்றாகக் கூடியிருந்து பேசிப் பொழுது போக்கக் கிடைத்த சந்தர்ப்பங்களிலெல்லாம் நீண்டநாள் உயிர் வாழும் ஆசை எனக்கில்லை. நோய்நொடி வந்து படுக்கையில் கிடந்து உழன்று, நானும் சிரமப்பட்டு மற்றவர்களையும் சிரமப்படுத்தாமல் நேர காலத்தோடு போய்ச் சேர்ந்து விடவே விரும்புவதாக நான் வீண் ஜம்பம் அடித்துக் கொண்டதுண்டு.

இப்போது லேசான நெஞ்சு வலியைக் கண்டே மனது அச்சப்படுகிறதே!

எதற்கும் டாக்டர் ஒருவரிடம் காட்டிச் சிகிச்சை பெறத் தீர்மானித்தேன்.

பெரியாஸ்பத்திரிக்குப் போகலாம். விடயம் மகனுக்குத் தெரிய வந்தால் ஒரு புறம் மனம் வருந்தினாலும் மறுபுறம் தர்ம ஆஸ்பத்திரிக்குப் போனால் தனது பதவி அந்தஸ்துக்கு கௌரவக் குறைவாகி விட்டதெனக் கோபிக்கவும் கூடும்.

அதுவுமல்லாமல், நான் என்ன வருமானம் எதுவுமேயில்லாத சாமானியனா?

மாதாமாதம் ஐந்து இலக்கத்தில் ஓய்வூதியப் பணம் கிடைக்கிறதே!

தனியார் மருத்துவமனையில் பணம் செலுத்தி வைத்திய ஆலோசனை பெறத் தீர்மானித்தேன்.

மறுநாள் பணம் செலுத்திப் பதிவு செய்து, கோரப்பட்ட நேரத்தில் தனியார் மருத்துவமனையில் டாக்டரை எதிர்பார்த்துக் காத்திருந்தேன்.

## அச்சம்

டாக்டர் வருவதற்கு முன்னர் அது, இது என்று எத்தனையோ வகைப் பரிசோதனை செய்து கொள்ளுமாறு கோரப்பட்டேன்.

ஒவ்வொரு பரிசோதனைக்குமென தனித்தனியாக எக்கச்சக்கமான பணம் கறந்து விட்டார்கள்.

இதனால் ஏற்பட்ட ஆதங்கத்தில் மருத்துவமனை நிர்வாகியிடமே அது பற்றிக் கேட்டுவிட்டேன்.

'வெறும் நெஞ்சு வலிக்கு, இரத்தம், சிறுநீர் என்று பற்பல பரிசோதனைகள் அவசியம்தானா?'

அவரது பதில் எனக்கு ஆச்சரியமளித்தது.

"தன்னிடம் வைத்திய ஆலோசனை பெறவரும் நோயாளிகளுக்கு இவ்வித சகல ஆய்வுகூடப் பரிசோதனைகளையும் மேற்கொண்டு அதற்கான அறிக்கைகளுடனேயே தன்னிடம் நோயாளியை அனுப்ப வேண்டுமென்று இந்த டாக்டர் வற்புறுத்திக் கூறியுள்ளார். அவர் கடும் கோபக்காரர். நோயாளி அது இது வென்று கேள்வி கேட்டால் கூட அவருக்குப் பிடிக்காது. ஏசிக் கலைத்து விடுவார்"

மருத்துவமனை நிர்வாகியின் நிலை பரிதாபகரமானது போலத் தோன்றியது.

டாக்டர் எனது ஆய்வுகூட பரிசோதனை அறிக்கைகளை மேலெழுந்த வாரியாகப் பார்வையிட்டார். கட்டிலில் படுக்க வைத்து, நெஞ்சின் பல பகுதிகளிலும் தட்டித் தட்டிப் பரிசோதித்தார். கடைசியில் 'உங்களுக்குப் பாரதூரமாக எதுவுமில்லை. நான் எழுதித் தருகிற மருந்தை வாங்கிப் பத்து நாள்களுக்குக் குடியுங்கள்' என்றார் 'மருந்து குடித்து முடிந்தும் வலி குறையாவிட்டால் திரும்பவும் வந்து காட்ட வேண்டுமா?' என்று கேட்டேன்.

"அடுத்த தடவை வரவேண்டிய அவசியமிருக்காது" என்றார் டாக்டர்...

இவர் எதற்காக இப்படிச் சொல்கிறார்? மருந்து குடித்து முடியுமுன் நீ மரணமடைந்து விடுவாய் என்ற அர்த்தத்தில் சொல்கிறாரா என்று எண்ணிய அதே சமயம், எனக்கு ஒருபோதும் நீரிழிவு நோய் இருந்ததில்லை என்று திரும்பத் திரும்பக் கூறியும் இரண்டு வகை இரத்தப் பரிசோதனை, இரண்டு வகை சிறுநீர்ப் பரிசோதனை என்று செய்து என்னிடம் பணம் கறந்து விட்டார்களே என்று டாக்டரிடம் முறைப்பாடு செய்ய எண்ணினேன். ஆனால், மருத்துவமனை நிர்வாகி அந்த டாக்டர் ஒரு முன்கோபக்காரர் என்று சொன்னது நினைவுக்கு வரவே எனது எண்ணத்தைக் கைவிட்டுவிட்டேன். ஆனால், டாக்டரைப் பார்த்தால் அப்படிப்பட்டவர் போல் தெரியவில்லையே! பண்பாக, கனிவாகவல்லவா உரையாடுகிறார். ஒருவேளை, நான் பெரும் பணத்தொகை செலுத்தித்தான் தன்னைச் சந்திக்க வந்ததாகக் கருதி இப்படிக் கனிவு காட்டுகிறாரா? என்று எண்ணியவாறு மருந்தை வாங்கிக் கொண்டு வீடு சென்றுவிட்டேன்.

சும்மாசொல்லக் கூடாது; டாக்டர் தந்த மருந்தைச் சாப்பிட்டத்தில் நாலுநாளில் நெஞ்சு வலி நின்று விட்டது.

சொல்லிப் பதினைந்து இருபது நாளிருக்கும். மீண்டும் அடிக்கடி அதே மெல்லிய சுள்...சுள்...இலேசான நெஞ்சுவலி.

சென்ற முறை வைத்தியம் பார்க்கப்போய் சுளையாக 1800ரூபா செலுத்த நேர்ந்தது. மீண்டும் ஒரு பெருந்தொகை செலுத்தி அதே ஆய்வுகூடப் பரிசோதனை... அதே டாக்டரின் ஆலோசனை இவையெல்லாம் அவசியம்தானா?

எதிர்பாராத சிரமம் வரும்வேளை மனதில் அசாதாரண துணிச்சல் வருமாமே?

எமது ஊரின் ஒரு கோடியில் ஓர் ஆயுர்வேத வைத்தியர். ஊரார்க்கு அவர் தமிழ்ப்பரியாரியார். முறைப்படி ஆயுள்வேத வைத்தியம் கற்றுத் தேறித் தொழில் செய்தாலும், அவரிடம் வைத்தியத்துக்குச் செல்லும் நோயாளர் மிகமிகக் குறைவு. அதனால் அவருக்கு வருமானமும் மிகமிகக் கம்மி. அவரிடம் வைத்தியம் செய்யத் தீர்மானித்தேன்.

எனது பரம்பரை குறித்து, உணவு முறைப் பழக்கம் குறித்து, மற்றும் நடைமுறைப் பழக்க வழக்கங்கள் குறித்து ஆதியோடு அந்தமாக விடுத்து விடுத்துக் கேட்டபின் கடைசியில் குறிப்பிட்ட ஒரு சில உணவு வகைகள், தேநீர் என்பவற்றைக் கை விட்டுத் தான் தரும் மருந்தைப் பத்து நாள் உண்டபின் தன்னை வந்து சந்திக்கச் சொன்னார். இத்தனைக்கும் அவர் என்னிடம் அறவிட்ட கட்டணம் வெறும் நூறே நூறு ரூபாய் தான் .

அவர் தந்த தூள் மருந்து, குளிகை மருந்து எல்லாவற்றையும் பெரும் சிரமப்பட்டு மூக்கைப் பிடித்துக் கொண்டு முறையாக உண்டு முடித்ததில் எனது வலி இருந்த இடம் தெரியாது மறைந்துவிட்டது மட்டுமல்ல, அதற்குப் பின் இந்த ஆறுமாத காலமாக அந்த நெஞ்சு வலியின் அறிகுறியையே நான் காணவில்லை.

ஆனால், இனி ஒருதரம் அந்த நெஞ்சு வலி வந்தால் நான் மீண்டும் அவரிடம் போவதாக இல்லை. காரணம், வயிற்றைக் குமட்டும் அந்த ஆயுள்வேத மருந்தின் மணம் நாலுகாததூரம் மூக்கைத் துளைக்கும்.

இத்தனைக்கும் பிறகும் இன்னும் நான் உற்சாகமாகத்தான் இருக்கிறேன். காரணம், நான் மண்டையைப் போட்டபின் கொள்ளி போடக் கூடவே ஆள் இருக்கிற துணிவுதான்.

ஆனால், இன்றைக்கு யாழ்ப்பாணத்தில் என்னைப்போன்ற பல பழசுகள் பிள்ளைகளெல்லோரையும் ஒட்டு மொத்தமாய் வெளி நாடுகளில் விட்டு, தமது கடைசிவேளையை ஏக்கத்துடன் கழித்துவரும் நிலைமையுடன் ஒப்பிட்டால் நான் ரொம்ப ரொம்ப அதிஷ்டசாலிதான்.

— பொன்வேளன்

வாராந்தம் வெளியாகும் இப்பத்தியில் குறிப்பிடப்படும் பாத்திரங்கள் எவையும், தனிப்பட்ட முறையில் எவரையும் சுட்டுவதில்லை. (ஆ-ர்)

---

# இஞ்சை எல்லாம் மலிவு

கருதுக்கதை

முற்றத்துப் பலாமரத்தில் நாலைந்து பலாப்பழங்கள் முற்றிப் பழுத்திருந்தன. பலாப்பழ 'சீஸன்' என்பதால் தொடர்ந்து சாப்பிட முடியவுமில்லை. எல்லோர் வீட்டிலும் பலாப்பழம் இருப்பதால் உறவினர்களுக்கும் அன்பளிக்க வாய்ப்பில்லை.

"உங்களாலை சாப்பிடத்தான் முடியாவிட்டாலும் சந்தையிலை கொண்டு போய் வித்தால் கொஞ்சக் காசாவது தேறும்" அம்மா கூறியது நியாயமாகப்பட முன்பக்கம் அழுகிய இரண்டு பழங்களைக் கட்டிக்கொண்டு கொடிகாமம் சந்தைக்குப் புறப்பட்டேன். அடுத்த தடவை மிகுதிப் பழங்களைக் கொண்டு போவது என் திட்டமாக இருந்தது. வழியில் நண்பன் பார்த்தீபனும் சேர்ந்து கொண்டான். அவன் கொண்டு வந்த பழங்களிலும் ஒன்று அழுகியிருந்தது.

படிப்பு படிப்பென்று பறந்ததாலை சந்தையிலை பொருள்கள் வித்தும் பழக்கமில்லை; வாங்கியும் பழக்கமில்லை. அவன் தினமும் தேங்காயோ, பயற்றங்காயோ கொண்டு போவதைக் கண்டிருக்கிறேன்.

"சந்தையின் சூட்சுமங்கள் தெரிந்த அவனைக் கொண்டே இந்தப் பழங்களையும் வித்துப்போட வேணும்"

"பார்த்தி உன்ரையோடை சேத்து இதையும் வித்துத் தா..."

"அதுக்கென்ன... அவங்கள் ஓடிவந்து இழுப்பாங்கள் அப்ப கைவிடாட்டில் சரி..."

"அழுகின பழங்களைக் காட்டித்தான் கொடுக்வேணும். வாங்கிற எவரும் பாதிக்கப்படக் கூடாது" சின்னனிலை படிச்ச வர்த்தகப் பழவியாபாரியும் அழுகின பழத்தை வாங்கின முதியவரும் நினைவில் வந்தனர்.

அருகருகே பழங்களை வைத்துக்கொண்டு நின்றோம்.

"இன்னுங்கொஞ்ச நேரத்திலை நெல்லியடி யாவாரியள் வந்திடுவாங்கள். ரண்டுக்கும் நூற்றைம்பது சொல்லு! கடைசி நூறெண்டாலும் குடுக்கலாம்" அவன் அறிவுறுத்தினான்.

"என்ன விலை பலாப்பழம்?"

"... நாலும் முந்நூறு..."

"இதென்ன முகப்பாலை அழுகிக்கிடக்கு..."

"ஆச்சி உனக்கென்னணை தெரியும். வெட்டி வித்தியெண்டா நல்ல காசு. பலாக்கொட்டையே விக்கலாம் நூறுக்கு..." சூட்சுமத்தைக் காட்டினான்.

"எனக்கு நாலுப் வேண்டாம். ரண்டைத் தா... நூற்றி இருபது தான் தருவன்"

"... சரி எடு..." அவன் வித்துப் போட்டான். அடுத்த யாவாரி "என்ன விலை" என்னை நோக்கிக் கேட்டான்.

"நூற்றைம்பது" அவன் சொன்னான்.

"ஐயா முன்பக்கம் கொஞ்சம் அழுகிப் போச்சுது பாத்து எடுங்கோ"

வக்காலத்து வாங்கினேன்.

இரண்டையும் உருட்டிப் பார்த்துவிட்டு "எடை இது சரியில்லை" என்றான்.

நெல்லியடி யாவாரியள் எல்லாரும் போட்டாங்கள்; சந்தையும் கலையத் தொடங்கியது. இவ்வளவு நேரமும் பொறுத்திருந்த அவனும் போவதற்கு அறிகுறியாகத் தலையசைத்தான்.

முதியவர் ஒருவர் வந்தார். "சாப்பாட்டிற்கு நல்ல பழமோ?"

"பறவாயில்லை முகப்பாலை கொஞ்சம் அழுகிப் போச்சுது" பழைய பல்லவியைச் சுதிகுறைத்துப் பாடினேன்.

கத்தியால் குத்திச் சுவைத்துக் கொண்டு எதுவும் பேசாமல் போய்விட்டார்.

இப்படி இன்னும் நாலைந்து பேர் புரட்டிப் புரட்டியே அழுகலைக் கூட்டிவிட்டார்கள்.

கொடிகாம யாவாரி ஒருதனைக் கூப்பிட்டு ....

"அண்ணை இதை ஒருக்காய் பாத்து எடுங்கோ"

"சீ... எனக்கு வேண்டாம்" ஒரு வசனத்தில் பதில் திகைத்தது.

"மாட்டுக்கு வெட்டி வைப்பம்" என்ற ஒரு நிலைபாட்டோடு திரும்பவும் தூக்கிக் கட்டினேன்.

— வினோதரன்

---

## மனிதனாய் வாழ்வதற்கு!

அது ஒரு தீனிப்பண்டம்...
உடற்பசியெடுத்தால்
உருமாறி நிற்கின்ற
காண்டா மிருகம்

புதிது புதிதாய்
தீனியைத் தேடும் பண்டிப் பிசாசு
அதை நானும்
கொஞ்ச நாள்கள்
மேய்த்திருக்கிறேன்

இன்றதை
கைகழுவி விரட்டிவிட்டேன்
அது
என் வாழ்க்கைக்கு இழுக்கு
அது மனச்சாட்சி இல்லா மூதேவி

குலத்திற்கே
இழிவைத் தேடும் மாயப் பிசாசு
வேறெதையும்
சொல்லவில்லை

மனித உடலுக்குத்
தொந்தரவாய் இருக்கின்ற
'தொந்தி' யைத்தான்
கூறுகின்றேன்

இது
இருந்ததென்ன லாபம்?
சோம்பலும் அலுப்பும்
இது தரும் செல்வங்கள்

கொழுப்பை வளர்த்து
கொழுப்பாய்த் திரியும்
தனவான்களே!
'ஹாட் அட்டாக்' நோயை
மகிழ்வோடு ஏற்பீரோ?
ஏன் இந்தக் கொழுப்பு?

கொழுப்பை விரட்டுங்கள்
தொந்தியைத் தவிருங்கள்...
அழகிய மனிதனாய்
நோயற்று வாழுங்கள்!

– அ.சூரியன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நட்பு நட்புத்தான்...! காதல் காதல் தான்...!

நட்புக்கும் காதலுக்கும் வித்தியாசம் தெரியாமல் இன்றைய இளம்தலைமுறையினர் தடுமாறிக் கொண்டு இருக்கிறார்கள். நட்பும் காதலும் ஒன்றுதான் என்று இவர்கள் எண்ணிக்கொண்டிருக்கின்றார்கள். பயன்படுத்திய பின்னர் விலத்தி வைக்கும் ஒரு பொருளாகவே நட்பும் காதலும் இன்று பலர் மத்தியில் காணப்படுகின்றன. அவசர உலகமும் அவசர உறவுமே இன்றைய தலைமுறையினருக்கு தேவையாகியுள் ளது. இதன் பின்னர் ஏற்படப்போகும் எதிர்கால வாழ்வை சிந்திப்பதற்குக் கூட அவர்களுக்கு நேரமில்லை. நட்புக்கு மட்டுமல்ல காதலுக்கும் கூட கண்ணியமும் கட்டுப்பாடும் உண்மைத் தன்மையும் அவசியம். ஏமாற்றாமல் எதிர்காலத்தை நிர்ணயிப்பதுதான் இதன் அடிப்படைக் கோட்பாடு.



தோல்வியுற்ற காதலில் பெரிதும் பாதிக்கப்பட்டவர்கள் பெண்களாகத் தான் இருக்கிறார்கள். பெண்கள்தான் ஆண்களை ஏமாற்றுகின்றனர் என்ற கருத்து இன்று சர்வ சாதாரணமாக எல்லோர் மனதிலும் காணப்படுகின்றது. ஆனால், உண்மையான அன்பு வைக்கும் எந்தவொரு ஆணையும் பெண்கள் கைவிடுவதில்லை. ஆண்கள்தான் தமது சுயநலத்தினை நிலை நிறுத்துவதற்காக பெற்றோருடன் சேர்ந்து தமது உண்மையான காதலை மட்டுமல்லாமல் காதலியையும் இழந்து விடுகின்றனர்.

பொதுவாக இன்று கல்லூரி வயதில் ஏற்படும் காதல் வெறும் இனக்கவர்ச்சியினாலேயே ஏற்படுகின்றது. மாணவப் பருவமும் இளமையும் எவ்வளவு விலைமதிப்பற்றவை என் பதை உணர அவர்கள் மறந்து விடுகின்றனர். மாணவப் பருவத்து காதலில் விடலைத் தனமும் பொறுப்பற்ற தன்மையுமே காணப்படும்.

ஒரு ஆணும் பெண்ணும் பழகும்போது நண்பன் யார்? காதலன் யார்? தோழி யார்? காதலி யார்? என்று முதலிலேயே தீர்மானித்து விடவேண்டும். நட்பில் தோன்றும் அன்பு காதலில் முடிவது அற்புதமான ஒன்றே. ஆனால் இதற்கு பொறுமையும் காத்திருத்தலும் அவசியமாகின்றது.அங்கு அவசரப்பட்டு எடுக்கும் எந்த முடிவும் நட்புக்கு வேட்டு வைத்து விடக்கூடும். எனினும், காதலில் ஒருவிதமான சுயநலம் இருக்கத்தான் செய்கிறது. நட்பில் சுயநலம் என்ற பேச்சுக்கே இட மில்லை. அங்கு விட்டுக்கொடுக்கும் தன்மை மேலோங்கி நின்று நட்பைப் புனிதப்படுத்திக் கொண்டிருக்கும். ஒருவகையில் பார்த்தால் காதலை விட நட்பே உன்னதமானது என்று கூறலாம். கூறினாலும் எவரும் அதற்கு மறுப்புத் தெரிவிக்க முடியாது.

எனவே, இருபாலாரும் பழகும் போது முதலிலேயே எல்லையைப் போட்டுக்கொண்டு விட்டால் உறவுச் சிக்கலும் தேவையற்ற மனக் குழப்பங்களும் ஏற்படாது. உறவுகளிடையே புரிந்துணர்வை வளர்த்துக்கொள்ளவேண்டும். புரிந்துணர்வு என்பது காதலுக்கு மட்டுமல்ல நட்புக்குமே அவசியமாகின்றது. காதலிப்பவர்கள் தமது காதலை திருமண உறவுவரை கொண்டு செல்ல வேண்டியது அவர்களின் முக்கிய பொறுப்பாக உள்ளது. காதலுக்கு கண் இல்லை என்பதெல்லாம் காதலின் பலவீனத்தையே காட்டுகின்றது. காதல் உண்மையிலேயே பலமும் சக்தியும் வாய்ந்தது. அதனை காதலிப்பவர்கள் தான் தவறாக பயன்படுத்தி வருகின்றனர்.

காதலிக்கும் முன்னர் இது எதிர்கால வாழ்க்கைக்கு சாத்தியமாகுமா என ஒரு நிமிடம் யோசித்துப் பார்க்கவேண்டும். காதல் என்பது வெறும் பொழுது போக்கான விடயம் அல்ல. இது மனம் சம்பந்தப்பட்டது. வாழ்க்கை சம்பந்தப்பட்டது. எவரும் நட்பு பிரிந்துவிட்டால் சிந்திக்கவே மாட்டார்கள். ஆனால் காதல் பிரிவில் முடிந்து விட்டால் உயிரை மாய்த்துக் கொள்ளவும் தயங்கமாட்டார்கள். காதல் நிறைவேறா விட்டாலும் நாம் செய்யவேண்டிய கடமைகள் பல இருக்கின்றன. அதனை மறந்து விடக்கூடாது. என்றைக்குமே காதலுக்காக மட்டுமே வாழக்கூடாது. நாம் இன்பமாக வாழ்வதற்காக காதலிக்கவேண்டும். இவ்வாறான காதல் வெற்றியிலேயே முடியும்.

- கங்கா

அர்த்தமுள்ள வாழ்விற்கு...

பொய்யான இந்த உறவுகள் பகரும்
இந்தப் பொய்யான புகழுரைகளில்
மயங்கிக் கிடப்பது எத்தனை மடமை!

# அதிகரித்து வரும் தாய் மரணங்கள்

கடந்த வாரம் ‘ அதிகரித்து வரும் தாய் மரணங்கள்’ என்னும் தலைப்பில் வெளியான கட்டுரையின் இரண்டாவது பகுதி இது.



5.கர்ப்பகால வலிப்பு நிலை ‘எக்லம்சியா’ (Eclampsia):-

கருவுற்றுள்ள காலப்பகுதியில் அல்லது, பிர சவத்தின் போது அல்லது பிரசவத்தின் பின்பு ஏற்படும் கோமா (coma) நிலை அல்லது வலிப்பு நோய் நிலைமை (convulsions) ஆகும். இந் நிலைமைக்கு முன்னான காலப் பகுதியில் (pre eclampsia) உடல் வீக்கம் (oedema குறிப்பா கக்கைகள், கால்கள், மற்றும் முகம்) மற்றும் உயர் குருதி அமுக்கம் (Hypert ension) என்பவற்றால் அடையாளம் காணப்படும். சிகிச்சையளிக்காவிடில் இந்நிலைமை இறப்பிற்று வழிவகுக்கும்.

6. கருப்பைக்கு வெளியே நிகழும் உட்பதித்தல் (Ectopic pregnancy) :- இதன் போது கருக்கட்டப்பட்ட முட்டையானது கருப்பைக்கு வெளியே உட்பதிக்கப்பட்டு முளையமாக விருத்தியடைகிறது. இது பிரதானமாகக் கருப்பை குழாயில் (Fallopian tube) நிகழ்கிறது. இனப்பெருக்கப்பாதைத் தொற்று, உறைந்த குருதித் துணிக்கைகளால் ஏற்படும் அடைப்பு (Embolusm) மற்றும் மயக்க மருந்துப் பாவனை போன்றனவும் இந்நிலைமைக்கு வழிவகுக்கின்றன.



07.தடைப்பட்ட பிரசவம் (obstructed Labour):-

பிரசவத்தின்போது முளையமானது பிறப்புக் கால்வாயினுள் இறங்காத நிலையில், கருப்பையினுள் ஒழுங்கற்ற நிலையில் இருத்தல் (Malpresentation) ஒடுக்கமான இடுப்புக்குழி காரணமாயும் இது ஏற்படலாம்.


08. குருதிச் சோகை (Anaemia):-

இது தாய் மரண, நோய் நிலைமைகளில் மிக முக்கிய பங்கை வகிக்கும். தீவிர குருதிச் சோகையானது, கர்ப்பிணித்தாயில் இதயச் செயலிழப்பை (heart failure) ஏற்படுத்தி இறப்பிற்கு வழிவகுக்கும். குருதிச்சோகையால் தீவிரமாய் பாதிப்படைந்த கர்ப்பிணித் தாய் இதயப் படபடப்பு (Palpitations), மயக்கமேற்படல் போன்ற உணர்வு (Dizziness) போன்ற அறிகுறிகளையும், வெளிறிய உட்கைகள் (Palms) கண்மடல்களின் உட்பகுதி களையும் கொண்டிருப்பதுடன் சுவாசிப்பதில் சிரமத்தையும் (Breathlessness), இலகுவில் களைப்படையும் தன்மையையும் (Tiredness) கொண்டிருப்பர். மலேரியா நோயால் கர்ப்பிணிப்பெண் பாதிக்கப்படும்போது குருதிச்சோகையைப் பெறுவதற்குரிய சாத்தியக்கூறு அதிகமாகும். உலகளாவிய ரீதியில் ஏறந்தாழ 40 - 45 சதவீதமான கர்ப்பிணிப்பெண்கள் மலேரியாத் தொற்றிற்கு ஆளாகுகின்றனர்.

கர்ப்பகால மலேரியாவினால் ஏற்படும் பாதிப்புக்களாவன:-

- கரு அழிவுறல் (Miscarriage)
- குறைப்பிரசவம் (Premature Delivery)
- புதிதாய் பிறந்த குழந்தையில் இறப்பு (New born Dleath)

<u>தாய் மரணத்திற்கான பிரதான காரணங்கள் : வட்டவரைபில்</u>




இவற்றின் அடிப்படையில் அதிகரித்து வரும் தாய்மரணங்களைக் குறைப்பதற்கு அதிதீவிரமான பிரசவக் கவனிப்பு (Emergency Obstetric Care) அவசியமாகும். இருப்பினும், பெண்களின் சமூக அந்தஸ்து, போசாக்கு நிலை மற்றும் தமக்குரிய கர்ப்பங்களின் எண்ணிக்கையைத் தீர்மானிக்கும் சுதந்திரம் என்பன மேம்படுத்தப்பட வேண்டும்.

அத்தியாவசிய, அடிப்படைக் கர்ப்பகாலக் கவனிப்பு (Basic essential obstetric care) ஆனது மருத்துவ மாதுக்கள் (Midwives), வைத்தியர்கள் மற்றும் விசேடபயிற்சி பெற்ற தாதியர் (Nurses with Midwife-y trai dning) மூலமாக வழங்கப்படுதல் அவசியம்.

இத்தகைய கவனிப்பானது பின்வரும் அம்சங்களை உள்ளடக்கியதாகும்.

1.நோய்த்தொற்றைத் தடுப்பதற்காக, குணமாக்குவதற்காக ஊசி வழியான நுண்ணுயிர் கொல்லிகளை (Antbiotics) ஐப் பாவித்தல்:- குருதி மூலம் (IV) தசை வழியாக (IM)

2. கருப்பைச் சுருக்கத்தை அதிகரிக்கக்கூடிய ஊசி மருந்துகளைப் பாவித்தல் (Parenteral Oxytowc Drugs) :- இதனால் குருதிப் பெருக்கானது கட்டுப்படுத்தப்படுகிறது.

3.ஊசிமூலமான உணர்வு குறைக்கும் மருந்துகள் (Sedatives), வலிப்பைத்தடுக்கும் மருந்துவகைகள் (Anticonvulsants) என்பவற்றைப் பயன்படுத்துதல்.

4.கருப்பையுள் எஞ்சியுள்ள சூல் வித்தகத்தின் பகுதியை அகற்றுவதன் மூலம் குருதிப்பெருக்கைக் கட்டுப்படுத்தல்(Manual remoral of placenta)

5.நோய்த்தொற்று, குருதியிழப்பு என்பவற்றைத் தடுக்கும் மூகமாக அகற்றப்படா நிலையிலள்ள கருத்தடை உபகரணங்களை அகற்றுதல் (Romoval of retained Products of contraceptives) ஆகவே, அதிகரித்து வரும் தாய்மரணங்களிற்கான காரணங்களையறிந்த நாம், எதிர்காலத்தில் தாய் மரணங்களின் எண்ணிக்கை குறைந்த ஆரோக்கியமான ஒரு சமுதாயத்தை எதிர்பார்த்துச் செயலில் துணிவோம்!

*நன்றி 'Birth rights - New Approaches to safe mother hood'*

(முற்றும்)

**செல்வி கிறிஸ்ரா நிஷாந்தினி அன்ரன்**
4ஆம் வருடம், யாழ்.மருத்துவபீடம்.

# சந்தியாவின் கடிதங்கள்



**பிரியமுள்ள பிரியாவிற்கு**

‘நகையு முவகையுங் கொல்லுஞ் சினத்திற்
பகையு முளவோ பிற?’

என்பது வள்ளுவப் பெருந்தகையின் திருவாக்கு.

ஆம், கோபம் என்னும் பகைவனை விடக் கொடிய பகைவன் ஒருவனுக்கு வேறு யாருமாகவும் இருக்கமாட்டான்.

ஏற்கனவே கோபத்தைப் பற்றி பல தடவைகள் உனக்கு நான் கூறியிருக்கிறேன்; எழுதியிருக்கிறேன். ஆயினும், கோபத்தால் ஏற்படும் இழப்புகளைக் கருத்தில் கொண்டு மீண்டும் ஒரு முறை கூறலாம் என நினைக்கின்றேன்.

கோபம் வருவதால் ஒருவரின் மனதிலும் உடலிலும் பெரும் மாற்றம் நிகழ்கின்றது. இம் மாற்றம் தீமைக்கே அடிகோலுகின்றது.

கோபம் வந்துவிட்டால் சிலரின் முகம் விகாரமாகிவிடுகின்றது. எள்ளும் கொள்ளும் வெடிக்கின்றது என்று சொல்வார்களே அந்த நிலைக்கு வந்துவிடும். கோபத்தை சிலர் மிகப் பெரிய அளவில் வெளிப்படுத்தி விடுவார்கள். அதாவது கத்தி, ஆர்ப்பாட்டம் பண்ணிவிடுவார்கள். இதனால் அவர்கள் உறவுகளின் பகையைச் சம்பாதித்துக் கொள்கின்றார்கள்.

சில ருக்குக் கண்கள் சிவந்து உதடுகள் துடித்து உடல் பதற ஆரம்பித்துவிடும். இது அவர்களின் உடல் நிலையில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தி விடுகின்றது. இரத்த அழுத்தம் போன்ற நோய்களுக்கு ஆளாவதற்கு இவர்களின் கோபமே காரணமாகின்றது. சிலர் கோபத்தைத் தமக்குள்ளேயே அடக்கி வைக்கின்றார்கள். உள்ளத்தில் சகல கோபங்களையும் அழுத்தி வைத்து அமைதியாய்த் தூங்கும் எரிமலையாய் உள்ளார்கள். எரிமலை எச்சமயத்திலும் வெடிக்கலாம்.

புயலைப் போன்று எதிர்ப்படும் சகலதையும் துவம்சம் செய்யும் சக்தி இந்தக் கோபத்திற்கு உண்டு. கோபத்தில் எது எதிர்ப்படுகின்றது, எதனை நாம் தாக்குகின்றோம் என்பதே நினைவில் நில்லாது சகலதும் அழிந்து ஓய்ந்த பின்னரே திரும்பிப் பார்க்கின்றோம். கோபத்தை மனதில் தேக்கி வளர்த்து வெறுப்புணர்வாக மாற்றி பழி வாங்கும் படலம் ஆரம்பிக்கின்றது. அயல் வீட்டவர்களுக்குள் கோபம் ஏற்படுவதனால் சண்டை உருவாகி அடிதடி யில் முடிந்து என்றுமே போயறியாத நீதிமன்றத்தில் ஆஜராகும் சம்பவங்களும் உருவாகின்றன.கோப வெறியால் வாகனங்கள், கடைகள் அடித்து நொருக்கப்படுவதையும் நாம் காண்கின்றோம். கோபத்தால் சமுதாயம் சீர் கெட்டுத் தடுமாறி நிற்கின்றது.

கோபம் இருக்குமிடத்தில் நிச்சயம் குணம் இருக்கமுடியாது. எனவே, கோபத்தை நாம் அடக்கி வாழ்வதே நம் வாழ்வின் முன்னேற்றத்திற்கு வழிசமைக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "விசேட தேவைக்குரியோர்..."

டிசெம்பர் 3ஆம் திகதி உலகெங்கும் விசேட தேவைக்குரியவர்களின் தினமாகக் கடைப்பிடிக்கப்பட்டது.

'விசேட தேவைக்குரியோர்' என்ற இந்தச் சொல் உங்களில் பலருக்குப் புதிய சொல்லாக இருக்கும்.

இதுவரை காலமும் பாதிக்கப்பட்ட 'ஊனமுற்றோர் அல்லது வலுக் குறைந்தோர்' என்ற சொல்லுக்குப் பதிலாகவே விசேட தேவைக்குரியோர் என்ற சொல் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

அதாவது, சாதாரண மனிதர்களை விட இவர்களுக்கு விசேடமான தேவைகள் நிறைவேற்றப்பட வேண்டியுள்ளன. அதற்குப் பிறரது உதவியோ, உபகரணங்களோ தேவைப்படுகின்றன. இதனால்தான், இச் சொல்லை அறிமுகம் செய்துள்ளனர்.

இவர்களை மாற்று ஆற்றல் உடையோர் என்ற சொல் கொண்டு அழைப்போரும் உள்ளனர். அதாவது, தமது திறன்களில் ஒன்றையோ,சிலவற்றையோ கூடுதலாகக் கொண்டிருப்பர். இவர்கள் தொடர்பான அக்கறை - கரிசனை யாவரிடமும் ஏற்பட வேண்டும். இவர்கள் பற்றிய நலன்கள் உயர்வாகப் பேணப்படல் வேண்டும் என்ற நோக்கில் வருடாந்தம் டிசெம்பர் 3 ஆம் திகதியை ஐக்கிய நாடுகள் சபை இவர்களுக்குரிய தினமாக அறிவுறுத்துகின்றது.

இன்று நடைமுறையில் மனிதர்களிடையே பின்வரும் அங்கக் குறைபாடுகள் இருப்பதைக் காண்கின்றோம்.

கண்கள் தெரியாமை, கண்கள் பார்வைக்குறைவு, காது கேளாமை, வாய் பேசாமை, கைகள் இயலாமை, கைகள் இல்லாமை, கால்கள் இல்லாமை, கால்கள் இயலாமை, கண்கள் இல்லாமை, கண்கள் இயலாமை, மனவளர்ச்சி குறைவு, மனநிலை பாதிப்பு, விசித்திரமான நடத்தை ஆகியவையே ஆகும்.

இக் குறைபாடுகள் பிறப்பு அல்லது விபத்து அல்லது நோய் காரணமாக ஏற்படுகின்றன.

இவற்றைக் கொண்டுள்ள வறிய மக்களுக்கு சமூக சேவைகள் திணைக்களம் இலவசமாக பின்வரும் உபகரணங்களை வழங்கி வருகின்றது.

அவையாவன :- முச்சக்கரவண்டி, சக்கர நாற்காலி, மூக்குக் கண்ணாடி, ஊன்றுகோல், வெள்ளைப்பிரம்பு, காது கேட்கும் கருவி, செயற்கைக் கால் இவற்றைப் பெறுவதற்கு மருத்துவ அத்தாட்சிப் பத்திரத்தை சமர்ப்பித்தால் சமூக சேவைகள் அலுவலர் வழங்க உரிய நடவடிக்கை எடுப்பார்.

விசேட தேவைக்குரியோரில் வறியவர்களுக்கு பொதுசன மாதாந்த உதவிப் பணம் வழங்கப்படுகிறது. அத்துடன், சுயதொழில் செய்யும் ஆற்றலுள்ளவர்களுக்கு உதவி நன்கொடை ரூபா 10 ஆயிரம் வழங்கப்படுகின்றது.

விசேட தேவைக்குரியோரில் தொழில் பயிற்சி பழக விருப்பமும் ஆற்றலும் உள்ளவர்களுக்கு கண்டி மாவட்டத்திலுள்ள 'கெட்டவல' எனும் இடத்திலுள்ள பயிற்சி நிலையத்தில் இலவசமாகப் பயிற்சி வழங்கப்படுகின்றது. பயிற்சி முடிவில் உபகரணங்களும் வழங்கப்படுகின்றன.

வருடா வருடம் இப் பயிற்சி நெறிகளுக்கு விசேட தேவைக்குரியோரை சமூக சேவைகள் திணைக்களம் தெரிவு செய்து அனுப்புகின்றது.

வாய் பேசாமல் உள்ளவர்களுக்கென விசேட அடையாள அட்டையும் சமூக சேவைகள் திணைக்களத்தினால் இலவசமாக வழங்கப்படுகின்றது.

சமூக அமைச்சின் கீழ் விழிப்புலனற்றோர் நம்பிக்கை நிதியம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த நிதியம் இவர்களுக்கு உபகரணங்கள் வழங்கல், சுயதொழில் உதவி வழங்கல், வீடமைப்பு நன்கொடை வழங்கல் என்பவற்றைச் செய்து வருகின்றது.

விழிப்புலனற்றோருக்கான தேசிய செயலகம் எனும் நிறுவனமும் சமூக சேவை அமைச்சின் கீழ் இயங்கி வருகின்றது. இந்த அமைப்பும் விசேட தேவை உடையோர்

## இந்தச் சொல் பலருக்கும் தெரியாது!

தொடர்பில் உதவிகளைச் செய்து வருகின்றது.

விசேட தேவைக்குரியவர்களுக்கு புனர்வாழ்வளிக்கவும் கல்வியை வழங்கவென அரச, அரச ஆதரவு பெற்ற பாடசாலைகள், இல்லங்கள் தர்ம நிறுவனங்களது இல்லங்கள் எனப் பல நாடு முழுவதும் இயங்கி வருகின்றன.

குறிப்பாக எமது வட பகுதியின் நிலைமையைப் பார்ப்போம்.

கைதடியில் செவிப்புலன், விழிப்புலன் இழந்தோர்களுக்கான பாடசாலை 'நவீல்ட்' எனும் பெயரில் இயங்கி வருகின்றது. 1956 ஆம் ஆண்டு முதல் இயங்கி வரும் இது அரச ஆதரவு பெற்ற தனியார் பாடசாலையாகும். இங்கு செவிப்புலனிழந்தவர்களுக்கு சைகை மொழி மூலமும் விழிப்புலன் இழந்தவர்களுக்கு 'பிறெய்ல்' எழுத்து மூலமும் கற்பிக்கப்படுகின்றது.

உடுவிலில் 'வாழ்வகம்' எனும் பெயரில் கண்பார்வை அற்ற சிறுவர்களுக்கான இல்லம் இயங்கி வருகின்றது. இதனை சமூக சேவை உள்ளம் கொண்ட தனியாரால் நடத்தப்படுகின்றது.

தென் இந்திய திருச்சபையால் இணுவிலில் 'நம்பிக்கை இல்லம்' எனும் பெயரில் இல்லமொன்று இயங்குகின்றது. இங்கு கை, கால் ஊனமுற்ற பிள்ளைகள் பராமரிக்கப்பட்டு வருகின்றனர்.

முல்லைத்தீவு உடையார்கட்டில் 'இனிய வாழ்வு இல்லம்' தன்னார்வ சமூக சேவையாளர்களால் நடத்தப் படுகின்றது. இங்கு கண் பார்வையற்ற, காது கேளாத, வாய் பேசாதோர் புனர்வாழ்வு பெறுகின்றனர்.

வவுனியா தேக்கவத்தையில் காது கேளாதோர், கண் பார்வையற்றோர் புனர்வாழ்வுக்கென சர்வசே தொண்டர் நிறுவனத்தால் இல்ல மொன்று நடத்தப்பட்டு வருகின்றது.

யாழ்.மாவட்டத்தில் ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கம் எனும் தன்னார்வத் தொண்டு நிறுவனமும் தொழில் பயிற்சி உபகரணங்கள், மாதாந்த உதவுத்தொகை, சுயதொழில் உதவி நன்கொடை என்பவற்றை வழங்கி வருகின்றது.

இதே போன்ற நிறுவனம் கிளிநொச்சியில் 'கறோட்'எனும் பெயரில் இயங்குகின்றது. சுண்டுக்குளியிலுள்ள ஜெய்ப்பூர் செயற்கைக்கால் நிறுவனமும் சிறப்பாக சேவையாற்றுகிறது. யாழ்.கச்சேரியில் இயங்கும் மாவட்ட மிதிவெடி செயல்பாட்டு அலுவலகம் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் உதவியுடன் மிதிவெடி, கண்ணி வெடிகளால் பாதிப்புற்றோருக்கு உதவிகளைச் செய்து வருகின்றது.

இவற்றை விட விசேட தேவைக்குரியோர் தமக்கென நலனோம்புச் சங்கங்களை உருவாக்கி செயற்பட்டு வருகின்றனர்.

யாழ்.மாவட்டத்தில் செவிப்புலன் இழந்தோர் சங்கம், விழிப்புலனற்றோர் சங்கம் என்பன சிறப்பாக ஈண்டு இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

வவுனியாவில் 'Seed' எனும் நிறுவனமும் விசேட தேவைக்குரியோர் தொடர்பில் சிறப்பாக இயங்கி வருகின்றது.

நாட்டின் சனத் தொகையில் விசேட தேவைக்குரி யோரின் தொகை பலவித காரணங்களால் பெருகியுள்ளது. இதனைக் கருத்தில் கொண்டு சமூக சேவை அமைச்சு

**வேதநாயகம் தபேந்திரன்**
**சமூகசேவை அலுவலர்**

'சி.பி.ஆர்' (CBR - Community Based Rehabilitation Programme for disable) எனும் திட்டத்தை அண்மைய காலத்தில் செயற்படுத்தி வருகின்றது.

'சி.பி.ஆர்' திட்டத்தின் கீழ் பிரதேச செயலகம், உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் தோறும் 10 தொண்டர்கள் தெரிவு செய்யப்பட்டு 2002 ஆம் ஆண்டு நவம்பரில் 10 நாள் பயிற்சி வழங்கப்பட்டது. பின்னர் வெளிக்கள வேலைகளில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர்.

இவர்கள் கிராம மட்டங்களில் புனர்வாழ்வு பெற வேண்டிய விசேட தேவைக்குரியோரைத் தெரிவுசெய்து சமூக சேவைகள் அலுவலருக்கு அறிக்கையிடுவர். சமூக சேவைகள் அலுவலரும் அரச, தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் உதவியுடன் இவர்களுக்கு வைத்திய வசதிகள், கல்விக்கான உதவிகள், சுயதொழில் உதவிகள், உபகரணங்கள், மாதாந்த உதவிப்பணம், உளவள ஆலோசனைகள் என்பவற்றைப் பெற்றுக்கொடுத்து வருகின்றனர். 'சி.பி.ஆர்' திட்டம் பூரண பயனுடைமை வாய்ந்த ஒன்றாக வெற்றிகரமாக இயங்கி வருகின்றது.

யாழ்ப்பாணத்தில் 'யு.என்.எச்.சி.ஆர்' நிறுவனம் 'சி.பி.ஆர்.' திட்டத்தின் பொருட்டு நிறைந்த உதவிகளைச் செய்து வருகின்றது.


'யு.என்.எச்.சி.ஆர்' நிறுவனம் தொண்டர்களுக்கென் மாதாந்தம் 500 ரூபா வழங்கி வருவதுடன் 60 வீதமான தொண்டர்களுக்கு வெளிக்கள வேலைகளுக்கென புதிய சைக்கிள்களையும் வழங்கி [illegible] பாராட்டத்தக்கது.

விசேட தேவைக்குரியோருக்கென உள்நாட்டிலும் சர்வதேச ரீதியிலும் விளையாட்டுப் போட்டிகள் 'பாரா ஒலிம்பிக்' என்ற பெயரில் நடத்தப்பட்டு வருகின்றது. இதில் இவர்களது விளையாட்டுத் திறமைகள் மதிக்கப்படுவதுடன் பதக்கங்கள் வழங்கிக் கௌரவிக்கப்படுகின்றனர்.

விசேட தேவைக்குரியவர்களுக்கென வழங்கப்படும் நன்மைகள் குறித்து இதுவரை விளக்கப்பட்டுள்ளது. இக்கட்டுரையை வாசிப்போர் தயவு செய்து உங்களுக்குத் தெரிந்தவர்களில் யாரேனும் இத்தகைய தேவைகளை உடையோராக இருப்பின் சேவை மனத்துடன் உதவுங்கள்.

இவர்களை சமூகத்தின் சுமையாகக் கருதாது ஓர் சொத்தாகக் கருதுங்கள். இவர்களுக்கு உதவுங்கள். இவர்களில் மறைந்து கிடக்கும் ஆற்றல்களை இனம் காணுங்கள் அதற்கு சரியான வடிவத்தைக் கொடுங்கள். கௌரவமான மனிதர்களாக வாழ ஆசைப்படும் இவர்களை மதியுங்கள்.

நாட்டின் சனத்தொகையில் உள்ள இவர்களின் ஆற்றல்களும் வெளிப்படும்போதுதான் சமூக, பொருளாதார பண்பாட்டு அபிவிருத்திகள் உயர்வடையும். இவர்களும் நிறைவாக வாழ்வார்கள். அதற்குரிய உயரிய சிந்தனையை எங்கள் ஒவ்வொரு வரினதும் மனதில் இன்றே கால்கோள் இடவேண்டும்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலையும் சோலையாம்

*''நீர் கால் யாத்த நிரை இதழ்க்குவளை*
*கோடை ஒற்றினும் வாடாது ஆகும்;*
*கவணை அன்ன பூட்டுப்பொருது அசாஅ*
*உமண் எருத்து ஒழுகைத்தோடு நிரைத்து அன்ன,*
*முளிசினை பிளக்கும் முன்பு இன்மையின்,*
*யானை கை மடித்து உயவும்''*

இது ஔவையார் யாத்த பாடலாகும். தலைமகள் பாலை நிலத்தில் எப்படி நடந்துவர முடியும் என்று எண்ணிய தலைவனுக்குத் தோழி உரைப்பதாக அமைந்தபாட்டு இது. குறுந்தொகையில் வரும் பாலைத் திணைப் பாடல்களில் இதுவுமொன்று.

''தலைவி உம்முடன் சேர்ந்து வரும்போது பாலை நிலம், அவளுக்குச் சோலை நிலம் போலவே இன்பந்தரும்'' எனத் தோழி தலைவனுக்கு விளக்கம் அளிக்கிறாள். கால்-அடி, யாத்தல் - கட்டுதல், அசா - துன்பம், உமண் - உப்பு வாணிகர், ஒழுகை - வண்டி தோடு - தொகுதி, முளிசினை - காய்த்தகிளை, முன்பு - வலிமை, உயவும்-வருந்தும். பாலை நிலத்தில் உள்ள மரக்கிளைக்கு உமணர்களின் வண்டி உவமையாகக் காட்டப்பட்டது.

தலைமகள் தலைவனுடன் அவனூருக்குப் போக உடன்பட்டாள். இதை அறிந்த தலைவன் மெல்லிய தன்மையுள்ள தலைவி பாலை நிலத்தில் எப்படி நடப்பாள் என்று எண்ணினான். நீரற்ற பாலைவனம்; நெருப்புப்போல சுடும் பாலைவனம் ; கல்லும் முள்ளும் நிரம்பிய குறுநெறி பொருத்திய பாலைவனம்; இத்தகைய அருநெறியிலே அவள்



நடக்கமாட்டாள். ஆதலின் தலைவியை அழைத்துச் செல்லாதிருப்பதே நலம் என்று எண்ணினான். இதை அறிந்த தோழி உம்முடன் சேர்ந்து வந்தால் தலைவிக்குப் பாலைவனம் துன்பந்தராது இன்பத்தையே தரும் என்று உரைத்தாள். தலைவியை அழைத்துச் செல்வதற்குத் தலைவனை உடன்படும்படி செய்தாள். அடியிலே தண்ணீர் தேக்கப்பட்டிருக்கும் குவளை மலர்கள் மேல் காற்று வீசினாலும் வாடிப்போக மாட்டா தலைவிக்காகத் தலை நிமிர்ந்து நிற்கும். உப்பு விற்கும் வணிகர்கள் வண்டியிலே எருது பூட்டிப் பாலை நில வழியிலே ஓட்டிச் செல்வார்கள். கவணைப் போன்ற நுகத்தடி பூட்டப்பட்ட எருதுகள் மிகவும் துன்பத்துடன் வண்டியை இழுத்துச் செல்லும். அந்த வண்டிகளை வரிசையாக நிறுத்தி வைத்திருப்பதுபோல பட்ட மரங்களின் கிளைகள் காணப்படும். நீரின்றி வருந்திய யானை அக்கிளைகளைப் பிளக்க முடியாமல் பிளப்பதற்கு ஏற்ற வலியில்லாமல் துதிக்கை மடித்துக் கொண்டு வருந்தும்.

இலக்கியப் பூங்கா

இத்தகைய பாலைவனமும், உம்முடன் இணைந்து வந்தால் தலைவிக்குத் துன்பம் தராது. இன்பத்தையே தருவதாகவிருக்கும். ஆதலால் நீர் தலைவியை அழைத்துப் போவதே நலமாகும் எனத்தோழி தலைவனுக்கு உரைப்பதாக புனையப்பட்ட பாடல் இது.

-காப்பியன்

# பிரபாகரனின்...

(IIபக்கத் தொடர்ச்சி)

அதேபோன்று அவ்வேளையில் பாதுகாப்பு மற்றும் வெளியுறவு அமைச்சராயிருந்த ரஞ்சன் விஜேரத்ன கூட பிரேமதாஸவுக்கு ஆலோசனை வழங்கினார். ஆனால், ''வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்றுமாறு சுதந்திரக் கட்சி மற்றும் ஜே.வி.பி ஆகிய தரப்புகள் நாட்டின் பொது மக்களூடாக அழுத்தம் தருகிறார்கள். அவர்களது வாயை அடைக்க வேண்டுமானால் நாட்டை ஸ்திரநிலையில் வைத்திருப்பது அவசியம்'' என எண்ணிய பிரேமதாஸ இந்திய இராணுவத்தைத் திருப்பி அனுப்ப நடவடிக்கை மேற்கொண்டார். இதன் மூலம் பிரபாகரனின் திட்டம் நிறைவேறியது. தொடர்ந்து சில காலத்தின் பின்னர் நாட்டில் மீண்டும் யுத்தம் உருவானது. ஆனால், இந்தியா எந்த வகையிலும் தலையிடாது மௌனம் காத்தது. கடைசியில் பிரேமதாஸ படுகொலையுறநேர்ந்தது.

## மஹிந்தவுக்குப் பாராட்டு

மஹிந்த ராஜபக்ஷ சுதந்திரகட்சி ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளராக நியமனமாகும் முன்னரே மஹிந்தவை பிரபாகரன் பாராட்ட எண்ணியிருந்தார். பொதுக்கட்டமைப்பு, இடைக்கால தன்னாட்சி அதிகார சபை, போர் நிறுத்த உடன்பாடு மற்றும் சமாதான நடவடிக்கைகள் என்பன குறித்துக் கடு[illegible]ாக விமர்சித்து மஹிந்த தன்னை தேசப்பற்றாளராகக் காட்டிக் கொண்டதெல்லாம் தாம் ஜனாதிபதித் தேர்தல் வேட்பா[illegible] நியமனம் பெறுவதற்கு முன்னராகும்.

போர் நிறுத்த உடன்பாடு, பொதுக் கட்டமைப்பு, இடைக்கால நிர்வாக சபை ஆலோசனை மற்றும் சமாதான நடவடிக்கைகள் யாவும் தமிழீழ இராச்சியத்துக்கான தமது பயணத்துக்கு ஏற்படுத்தப்படும் முட்டுக்கட்டைகளாகவே பிரபாகரனுக்குத் தோற்றின. இந்த முட்டுக்கட்டையைப் போட்டவர் ரணில் விக்கிரமசிங்கவே. இதற்குப் பிரபாகரனும் ஓர் அளவுக்கு பங்காளியாக இருக்க நேர்ந்தது. ரணில் உருவாக்கிய சர்வதேசவலைப்பின்னலில் பிரபாகரன் சிக்க நேர்ந்தமையினாலேயே பிரபாகரன் இத்தகைய முட்டுக்கட்டையைத் தமக்குத் தாமே ஏற்படுத்த வேண்டிய நிலை உருவாயிற்று. இச் சர்வதேச வலைப்பின்னலிலிருந்து வெளியேறும் வழி குறித்தே பிரபாகரன் அண்மைக் காலமாகக் கவனமெடுத்துச் செயலாற்றி வந்தார்.

2003 ஆம் ஆண்டில் அப்போதைய ஜனாதிபதி சந்திரிகா, ஐ.தே. கட்சி அரசின் வசமிருந்த மூன்று முக்கிய அமைச்சுப் பதவிகளைப் பறித்தெடுத்துக் கொண்ட வேளையில் தமக்கு எதிராக ரணில் பின்னியிருந்த சர்வதேச வலைப்பின்னலைச் சந்திரிகா மூலம் மாற்றிக்கொள்ளும் எண்ணத்தைப் பிரபாகரன் கொண்டிருந்ததாலேயே சந்திரிகாவின் அத்தகைய நியாயமற்ற அமைச்சுப் பதவிகள் பறிப்பு விடயத்துக்கு எதிராகக் குரல் கொடுக்க அவர் முன்வரவில்லை. தாம் 1987 இல் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை முறிவடையச் செய்யப் பிரேமதாஸவைக் கருவியாகப் பாவித்தமை போன்றே, இப்போது சமாதான நடவடிக்கைகளை முறிவடையச் செய்ய சந்திரிகாவை ஒரு கருவியாக ஜே.வி.பி. பயன்படுத்தக் கூடுமெனப் பிரபாகரன் எண்ணியிருந்தார். ஆனால், சந்திரிகா அவ்விதம் சமாதான நடவடிக்கைகளை முறித்துக் கொள்ளவில்லை.

சமாதான நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்லும் நோக்கில் அனர்த்தம் தொடர்பான பொதுக்கட்டமைப்பையும் சந்திரிகா உருவாக்கினார். ஆழிப்பேரலை அனர்த்த நிவாரணக் கட்டமைப்பை உருவாக்கி நடைமுறைப்படுத்துவதனூடாக இடைக்காலத் தன்னாட்சிஅதிகார அமைப்புக் குறித்தும் கவனம் செலுத்த முடியுமென்ற நிலையில் சந்திரிகா செயற்பட்டார்.

இந்த நிலையில் சந்திரிகா போகிறபோக்குச் சரியானதாயில்லை எனப் பிரபாகரன் உணர்ந்தார். இந்தப் போக்கைத் திசை திருப்புவதற்கு ஜனாதிபதித் தேர்தலே பொருத்தமானதென அவர் கருதினார். அது மட்டுமன்றி ஜனாதிபதித் தேர்தலில் சந்திரிகா போட்டியிட முடியாதென்பதையும் அவர் தெரிந்து வைத்திருந்தார். அதனால், ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களில் இருவர் மட்டுமே பெரும் முக்கியத்துவம் மிக்கவர்களென்பதையும் அவர் புரிந்திருந்தார். ஒருவர் அப்போதைய பிரதமர் மஹிந்த மற்றவர் எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க.

மஹிந்த போர் நிறுத்த உடன்பாடு, அனர்த்த நிவாரணக் கட்டமைப்பு, இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை மற்றும் சமாதான நடவடிக்கைகள் ஆகியவற்றுக்கு எதிர்ப்புத் தெரிவித்து வந்துள்ளார். ரணிலோ எவ்வாறாவது சமாதான நடவடிக்கைகளை முன்நகர்த்திச் செல்லும் நோக்கில் செயற்பட்டு வந்தவர். அது மட்டுமன்றித் தமது அம்முயற்சியில் சந்திரிகாவையும் சம்பந்தப்பட வைப்பதற்காக முயற்சித்து வந்தார்.

## பிரபாவின் எதிர்பார்ப்பு

பிரபாகரன் இவ்விருவரையும் தராசில் நிறுத்தி நிறுத்துப் பார்த்தார். 1987 ஆம் ஆண்டு இந்திய - இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்தான சமயம் ஜே.ஆரையும், பிரேமதாஸவையும் தராசிலிட்டு நிறுத்துத் தராதரம் அறிந்துகொண்டமைக்கு ஒப்பான சம்பவமாகும் இது. அன்று ஜே.ஆர். மூன்றாவது தடவையும் ஜனாதிபதித் தேர்தலில் நின்றிருந்தால் இந்திய- இலங்கை ஒப்பந்தம் தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கும். அவ்விதமன்றிப் பிரேமதாஸ பதவிக்கு வந்தமையால் இந்திய - இலங்கை ஒப்பந்தம் கைவிடப்பட்டு புதிய சமாதான முயற்சிகள் ஆரம்பமாகின. இம்முறை ரணில் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றிருப்பின் நோர்வேயின் சமாதான நடவடிக்கைகள் முன்னோக்கி நகர்த்தப்பட்டிருக்கும். மஹிந்த பதவிக்கு வந்ததால் புதிய சமாதான நடவடிக்கைகள் முற்றிலும் புதியதாக ஆரம்பிக்கக்கூடும். அதன்மூலம் மஹிந்தவும், விடுதலைப்புலிகளின் நோக்கத்தை அடைவதற்கான முட்டுக்கட்டை நிலையை அகற்றுவதற்குப் பிரபாகரனுக்கு உதவியளிக்க வேண்டியிருக்கும்.

மஹிந்தவைவிட அரசியல் ரீதியில் பிரபாகரனால் ரணிலைத் தோல்வியுறச் செய்ய இயலும். எனவேதான், பிரபாகரன் ரணிலைத் தோற்கடித்துள்ளார். இதனால், மஹிந்தவுக்கு எதிர்பாராத வெற்றி வாய்ப்புக் கிட்டியுள்ளது. மஹிந்த ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளராக நியமனமாவதற்கு முன்னர் தாம் எழுதிய பாராட்டைக் கடந்த மாவீரர் தின உரையின் போது பிரபாகரன் பொதுமக்களுக்கு வெளிப்படுத்தியுள்ளார். அதனைக் கருத்திலெடுத்த மஹிந்த தம்முடன் நேரடியாகப் பேச்சு மேற்கொள்ள முன்வருமாறு பிரபாகரனுக்கு அழைப்பு விடுத்துள்ளார். அதற்குப் பதிலளிக்கும் வகையில் மதி உரைஞர் அன்ரன் பாலசிங்கம், பிரபாகரனுடன் நேரடியாகப் பேச்சில் ஈடுபட வேண்டுமானால் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஈழ இராச்சியத்துக்கு வந்தாக வேண்டுமெனத் [illegible] இப்போது கூட பிரபாகரன் வெளியில் [illegible] அர்த்தமாகும்.

## கண்ணாடிக் கூண்டில் கோழையம் கூவுகின்றது

பசுமை நிறைந்த பச்சை வயல்
கனவுகள்... எம்
தேசத்தின் சுடராக
நாமிருந்தோம்...
நாமாக.
ஊழையிட்ட உறுமல்கள்
ஊரறியா ஊன்றின...
நாராய்க் கிழித்து உயிர் பறித்து...
குரல் நசித்து குடல் உலத்தி
குதறிக் குதப்பி...
இரத்தமும் குடித்தாய்

அப்பனையும் அம்மையையும்
சாக்கில் கட்டித்தூக்கி
தீ மூட்டினாய்...
அக்காவினதும் தங்கையினதும்
மார்பகங்களை
கிணற்றுக் கட்டில்
அடுக்கினாய் ...
அண்ணனையும் தம்பியையும்
நிலத்தில் புதைத்து
நெற்றில் தீர்த்தாய்...
மௌனித்து மரங்களானோம்.

களவேள்வியில் நிணநீர்
குடித்த பிசாசுகளுக்கு
தடக்கையோச்சி - இங்கு
தாயக வேள்வியில்
செந்நீர் குடித்த கயவர்களுக்கு
வெறியாட்டு
அலைபுரண்டு கரைமோதி
ஆயிரம் ஆயிரம்
உயிர்களைக் குடித்த வேளை
இரத்தக் கண்ணீர் சிந்தி
பசித்துப் பார்த்திருந்த போதும்
புசிக்க புட்டி நீட்டாத
புரணிகளுக்கு எங்கே
தமிழ் ஈனம் புரியும்?

வாயல்வெளியெங்கும்
மூச்சற்ற சடலங்கள்
முனைகின்றன வென்றெண்ணி
ஒய்யாரமும் ஓலமும் கொண்டு
கண்ணாடிக் கூண்டில்
'கோழையம்' கூவுகின்றது.
நாம் வெள்ளைத்துணி விரித்து
பிச்சை கேட்கவில்லை
விபச்சாரம் நடந்த
விலை பேசவில்லை
சமாதானம் என்று
சாத்திரம் சொல்லவில்லை
பேச்சு வார்த்தை என்று
பேரம் பேசவில்லை
தேர்தல் என்ற
தேர் இழுக்க வில்லை
களம் பல கண்டு
நிலம் வெடித்து
அக்கினி பீறிடுகையில்
சோதிப்பிழப்ப
சுடர் விடும்...
எம் மண் சிவக்க...
மீண்டும் மீண்டும்
விண்ணதிர முழங்குகின்றோம்
முரசறைந்து கூவுகின்றோம்
எங்கள் நிலம் எமக்கு வேண்டும்
எங்கள் நிலமே எமக்கு வேண்டும்.

அக்கினிக் குஞ்சு

## வரங்கள் தருவாயா?

என் உயிர் நட்பே!
உள்ளக்கிடக்கைகள்
உருகிவெளிவரும்போது
அவற்றை உதறிவிட முடியவில்லை
இதய ஏட்டினிலே
மீண்டும் உறவுப் பேனாவினால்
உயிரென்ற மைகொண்டு
உயில் எழுதுகிறேன்
உள்ளொன்று வைத்து
வெளியொன்று பேசும்
மனம் ஊனமான உறவுகளுடன் உறவாடி
உடைந்துபோன
உள்ளம் உன்னைப் போல
உன்னதமான உறவை எண்ணி மீண்டும்
உவகை கொள்கிறேன்...
நிம்மதிவேண்டி உன் நினைவுகளையே
சுவாசிக்கிறேன்
தோழியே!
இதயக்கருவறையில்
வைத்து நான் பூஜிக்கும் தெய்வம் நீ...!
நினைவெனும் மலர்களை
உறவென்ற நாரினால்
கவிமாலையாய்
தொடுத்து - உன்
கரங்களில்
சமர்ப்பிக்றேன்
கவலைகள் மறந்து
கனவுகள் மலர்ந்து
என்றும் உன்
கரங்கள் பற்றிட
வரங்கள் தருவாயா?

- யஸ்மினா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org